இலக்கியத்தில் சோதிடம்

முனைவர் தி. மகாலட்சுமி

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 0113.

இலக்கியத்தில் சோதிடம்

முனைவர் தி. மகாலட்சுமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**ILAKKIYATTIL JOTHIDAM**
Author	:	Dr. T. Mahalakshmi, Research Assistant, I.I.T.S., Chennai - 600 113.
Publisher	:	International Institute of Tamil Studies, C.I.T. Campus, T.T.T.I Post, Chennai - 600 113.
Publication Number	:	247
Language	:	Tamil
Edition	:	First
Date of Publication	:	November 1996
Paper Used	:	TNPL - 16 kg Creamwove
Size of the Book	:	1/8 Demy
Printing types used	:	11 pt
Number of Copies	:	1000
Price	:	Rs.65/-
Total Pages	:	9 + 309
Printers	:	Shri Vignesh Prints. Chennai - 33. Ph : 484 84 86
Binding	:	Paper Pack
Subject	:	Astrology in Literature

வெள்ளிவிழா வெளியீடு

முனைவர் ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-113.

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1979இல் சுவடியியல் பிரிவை அமைத்து, முதுகலைச் சுவடியியல் பட்டய வகுப்பையும் தொடங்கியது. ஆண்டுதோறும் பட்டயக் கல்வி பெற்ற மாணவர் உருப்பெற்றதுடன் சுவடிப் பதிப்பு நூல்களும் வெளிவரலாயின. அவ்வாறு நடத்தப்பட்டுவரும் சுவடியியல் வகுப்பில் ஒரு மாணவராகச் சேர்ந்தவர் முனைவர் **தி. மகாலட்சுமி** அவர்கள். அவருக்குச் சுவடிப் பதிப்பில் உள்ள ஆர்வமும், அவரது அயராத உழைப்பும், சுவடியியலுக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட திறமும் இன்று அவரை நிறுவனச் சுவடிப் பிரிவின் பொறுப்பாளராகத் திகழச் செய்தன. அவர் இதுகாறும் சோதிட நட்சத்திரமாலை, சித்த மருத்துவ மணிகள் போன்ற நூல்களைப் பதிப்பித்துள்ளார்.

சோதிடம் தொடர்பான ஆராய்ச்சி நூல்கள் தெளிவாக, ஆழமாக இல்லாத நிலையில் முனைவர் தி. மகாலட்சுமி அவர்கள் எழுதியுள்ள சோதிடவியல் என்ற ஆராய்ச்சி நூல் ஒரு முன்னோடியாக விளங்குகின்றது. சோதிடத்தையும் ஆராய்ச்சிக்கு உட்படுத்திப் பார்ப்பது ஓர் அரிய முயற்சியாகும். இதனைத் தொடர்ந்து **இலக்கியத்தில் சோதிடம்** என இவர் எழுதியுள்ள இந்த நூலில் காலக்குறிப்பு, வானியல் குறிப்பு, சோதிடர், சாதகப் பலன், நாட்குறித்தல் ஆகியன குறித்து இலக்கியத்தில் இடம் பெறும் பகுதிகள் மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன. மேலும் சோதிடமும் நாட்டுப்புறவியலும் என்ற இயலில் நாட்டுப் புறப்பாடல்கள், கதைப் பாடல்கள், பழமொழிகள் ஆகியவற்றின் துணைகொண்டு சோதிடத்தின் தாக்கத்தால் மக்களிடையே நிலவுகின்ற நம்பிக்கைகளைச் சுட்டிக்காட்டி அவற்றால் விளையும் நன்மை தீமைகளையும் நன்கு விவரித்துள்ளார். தமிழுலகம் மட்டுமன்றி அனைவரும் பயன்பெறும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இம்முயற்சியில் ஈடுபட்ட **முனைவர் தி. மகாலட்சுமி** அவர்களை மனமாரப் பாராட்டுகிறேன். திட்பமும் நுட்பமும் செறிந்த இவரது

ஆராய்ச்சித்திறன் போற்றுதலுக்குரியது. அவரது ஆய்வுப் பணி மேன்மேலும் சிறக்க வாழ்த்துகிறேன்.

சோதிடவியல், இலக்கியத்தில் சோதிடம் எனும் இரு நூல்களின் அச்சுப்படிகளைத் திருத்திச் செப்பம் செய்து உதவிய நண்பர் நடராசன் அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிறுவனச் செயல்கள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி - பண்பாட்டுத்துறை அமைச்சர் **முனைவர் மு. தமிழ்க்குடிமகன்** அவர்கட்கும், தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத்துறைச் செயலாளர் **வை. பழனிச்சாமி** இ.ஆ.ப. அவர்கட்கும் எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக.

இந்நூலினை வனப்பாக அச்சிட்டுத் தந்த ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ் அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி.

இயக்குநர்

என்னுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள் ஆகியவற்றுக்கு முன்னோடியான ஆய்வு நிறுவனமாகத் தனித்தன்மையுடன் செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனச் சுவடியியல் பிரிவு இலக்கியம், இலக்கணம், மருத்துவம் ஆகியவற்றில் பல்வேறு ஆய்வுகளை வெளிக்கொணர்ந்துள்ளது. அவ்வடிப் படையில் சோதிடவியல் என்ற நூலின் தொடர்ச்சியான 'இலக்கியத்தில் சோதிடம்' என்ற இவ்வாய்வு நூல் வெளிவருகிறது.

சுவடிகளைப் பதிப்பிக்கும் பணியை இந்நிறுவனம் மட்டுமன்றிப் பல அமைப்புகள் மேற்கொண்டிருந்த போதிலும் இன்னும் அச்சேறாமல் சுவடிக்குள்ளே முடங்கிக் கிடக்கும் நூல்கள் எண்ணிறந்தன. அனைத்துச் சுவடிகளும் பதிப்பிக்கப்பட வேண்டியவையே என்ற நிலையில் நோக்கும்போது சோதிடச் சுவடிகளும் பதிப்பிக்கப்பட வேண்டியவையே. இந்நோக்குடன் நட்சத்திரமாலை என்ற சோதிடச்சுவடியைப் பதிப்பித்து வெளியிட்டபோது அதற்கான ஆய்வுக்குறிப்புகளைத் திரட்டுவது கடினமான பணியாக இருந்தது. இதுவரை வெளிவந்துள்ள சோதிட நூல்கள் மட்டுமன்றி முறையான ஆய்வு நூல்கள் பல வெளிவரின், அவையும் சோதிடச் சுவடிப் பதிப்புகளுக்கு உறுதுணை புரியும் என்பதை உணர முடிந்தது. எனவே இந்திய முறையில் பலன் கூறுவதற்கு உயிர்நாடியாக விளங்கும் தசாபுத்திப் பலன்கள் என்ற சுவடிப் பதிப்பு நூலில் ஆய்வு நோக்கில் தருதற்குச் சோதிடக் குறிப்புகளைத் தொகுத்தபோது அவை பல நுட்பமான பன்முகச் செய்திகளைத் தன்னுள் கொண்டு பரந்து விரிந்து நிற்பதைக் காணமுடிந்தது. எனவே இக்குறிப்புகளைச் சோதிடவியல் என்ற தனிநூலாகத் தரமுனைந்தேன். இந்நூலும் தன்னளவில் கூடுதலாக அமைந்ததால் இதிலுள்ள இலக்கியக் கூறுகள்

பிரிக்கப்பட்டுச் 'சோதிடவியல்' எனவும், 'இலக்கியத்தில் சோதிடம்' எனவும் இருநூல்களாக வெளிவருகின்றன. இதன் தொடர் முயற்சியான தசாபுத்திப் பலன்கள் என்ற பதிப்பாய்வு நூல் விரைவில் வெளிவர இருக்கின்றது. சோதிட மூலநூல்கள் பல அழிந்து கொண்டிருக்கும் நிலை நிலவுவதால், இதுகாறும் அச்சில் வராத சோதிடச் சுவடிகள் எவையெவையென அறியப்பட்டு முதலில் அவையனைத்தும் வெளிவருதல் வேண்டும். சோதிட ஆய்வு நூல்கள் பல வெளிவரின், மருத்துவம் தெரியாதவர் மருத்துவச் சுவடியைப் பதிப்பிக்க முன்வருதல் போல் சோதிடம் தெரியாதவர் சோதிடச் சுவடியைப் பதிப்பிக்க முன்வர வாய்ப்பு ஏற்படும்.

சுவடிப் பதிப்புகளுக்குத் துணைபுரியும் என்ற குறுகிய எல்லையைக் கொண்டு எழவேண்டியவை மட்டுமல்ல சோதிடவியல் ஆய்வுகள். ஏனெனில் மக்கள் வாழ்க்கை முறைகளை, மரபுகளை, பண்பாடுகளை, நம்பிக்கைகளைத் தெளிவுபடுத்தும் வகையில் ஆய்வுகள் பல முன்பே எழுந்திருக்கின்றன. சூழல், தேவை கருதிப் பல்நோக்கு நிலைகளில் நடைபெறும் அனைத்து ஆய்வுகளும் மக்களைச் சென்றடைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. இருப்பினும் ஒரு மனிதனை, ஒரு கூட்டத்தை, ஓர் இடத்தைப் பற்றிய சமுதாயவியல் ஆய்வுகள் தோன்றிவிட்டதைப் பார்க்கும்போது மக்களின் வாழ்க்கைப் பயன்பாட்டில் ஓர் அங்கமாகச் சிறப்பிடம் பெற்று விளங்கும் இத்துறையில் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாததாகிறது.

மக்கள் வாழ்வுடன் இரண்டறக் கலந்து நிற்கும் சோதிடவியலைப் பற்றி முறையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத நிலையில் முதல் முயற்சியாக வெளிவரும் சோதிடவியல் என்ற நூலில் சோதிடத்தின் தோற்றம், வளர்ச்சி, வகைகள், இந்திய மேனாட்டுச் சோதிட முறைகள், சோதிடமும் அறிவியலும், சோதிடமும் மருத்துவமும், சோதிடமும் யோகமும், சோதிடமும் சமுதாயமும் என்ற பகுதிகள் தொகுத்தும், வகுத்தும், ஆய்ந்தும் தரப்பட்டுள்ளன. சில ஆய்வு முடிவுகள் நூலின்

இடையிடையே தரப்பட்டு, இனி மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுகளும் ஆங்காங்கே கோடிட்டுக் காட்டப் பெற்றுள்ளன. மேலுமிதில் மருத்துவத்திலும், யோகத்திலும் சோதிடம் எங்ஙனம் இணைந்து செயல்படுகின்றது, இவற்றின் பயன்பாட்டிற்குச் சோதிடம் எவ்வகையில் பயன்படுகிறது, சோதிடம் பொய்க்கக் காரணம், மக்கள் வாழ்வில் இது பெற்றுள்ள செல்வாக்கு, மக்களிடம் நிலவுகின்ற சோதிடம் தொடர்பான அனுபவக் கருத்துகள், சோதிடம் குறித்த மக்களது மனநிலை, இதன் செயற்பாட்டுச் செம்மைக் குறைவாலும், மக்களது அறியாமையாலும், விழிப்புணர்ச்சி இன்மையாலும் நிகழ்ந்து வருகின்ற பொய்மை, குறைபாடு, குழப்பம், பொருள் இழப்பு, கண்மூடித்தனமான, முரட்டுத்தனமான போக்குகள், சோதிடத்தில் ஆய்வு தேவை என்பன போன்ற பல செய்திகள் விளக்கம் பெறுகின்றன. இதனை அடுத்து வெளிவருகின்ற இலக்கியத்தில் சோதிடம் என்ற இந்நூலில் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சோதிடக் குறிப்புகள் தொகுத்து வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விரிவு நுழைவாயில் என்ற பகுதியில் இடம் பெறுகின்றது.

கோள்கள், நட்சத்திரங்கள், இராசிமண்டலம், சோதிடப் பலனறிதல் இவை தொடர்பான புராணக் கதைகள் முதலானவை குறித்த செய்திகளை இலக்கியங்கள், நாட்டுப்புறப் பாடல்கள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், வழக்குச் சொற்கள் ஆகியவற்றின் வழி முழுமையாகத் தொகுத்து இலக்கியங்கள் எழுந்த காலவரிசையில், பொருளடிப்படையில் இவை நோக்கப் படுதல் வேண்டும். இதன்வழிச் சோதிடம் தமிழகத்திலும், பிற இடங்களிலும் தோற்றம் பெற்று வளர்ந்த வரலாறு, வளர்ச்சிக்குப்பின் அடைந்த தேக்கம், மாற்றம், சோதிடத்திலுள்ள கணித, வானியல், அறிவியல் கூறுகள், இலக்கியங்களின் காலத்தை நிறுவுவதற்கான காலஆய்வு, மக்கள் வாழ்வியலில் சோதிடத்தின் ஆளுமை, இதிலுள்ள சீர்கேடுகள், சோதிடத்தை மக்களது வாழ்வியலிலிருந்து அகற்றுதல் இயலுமா, இம்முயற்சி தேவைதானா, சோதிடத்தைச் செம்மைப்படுத்தி நன்முறையில் இயக்க இயலுமா முதலியன முறையாக அறியப் பெறுதல் வேண்டும்.

இத்தகைய நோக்குகளைக் கொண்டு எழுந்த இந்நூல் மேலும் பல ஆழமான, அகலமான, பன்முகச் செய்திகளை வெளிப்படுத்தி, ஆய்வுப் பயன்பாட்டை மிகுவித்துச் சோதிட ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட வழிவகுக்கும் என்ற அவாவின் வெளிப்பாடாக அமைகின்றது.

இலக்கியத்தில் சோதிடம் என்னும் இவ்வாய்வு நூல் வெளிவருவதற்கு வாய்ப்பளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும், வாய்ப்பு நல்கித் தொடர்ந்து ஊக்கமளித்து உதவிய இந்நிறுவன இயக்குநர் முனைவர் ச.சு. இராமர் இளங்கோ அவர்களுக்கும், சோதிடஞ் சார்ந்த ஐயங்களைப் போக்கி, நூல் முழுமையடைய ஆர்வமுடன் துணைபுரிந்த எனது கணவர், சோதிட அறிஞர் ஸ்ரீபவி சந்திரசேகர் அவர்களுக்கும், நூற்பணி முழுமை அடையப் பல்லாற்றானும் உதவிய செல்வி ம. வெண்ணிலா அவர்களுக்கும், ஆய்வுப் பணியில் துணைபுரிந்த திரு த. பூமிநாகநாதன், திரு. பாலசீனிவாசன் ஆகியோருக்கும், தட்டச்சிற்குச் செல்லப் படியெடுத்துதவிய எனது தமக்கை மகள் செல்வி ம. ஜெயஸ்ரீ அவர்களுக்கும், நூல் படியைத் தட்டச்சு செய்துதவிய திரு வி. வாசுதேவன் அவர்களுக்கும், செம்மையாக அச்சிட்டு உதவிய விக்னேஷ் பிரிண்ட்ஸ் அச்சகத்தாருக்கும் எனது மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தி. மகாலட்சுமி

உள்ளடக்கம்

இயல் எண்	பொருள்	பக்கம்
	அணிந்துரை	iii
	என்னுரை	v
	நுழைவாயில்	1
1.	இலக்கியத்தில் காலக்குறிப்புகள்	7
2.	இலக்கியங்களில் வானியல் குறிப்புகள்	51
3.	இலக்கியத்தில் சோதிடமும் சோதிடரும்	112
4.	இலக்கியத்தில் சாதகமும் பலனும்	144
5.	இலக்கியத்தில் நாட்குறித்தல்	178
6.	சோதிடமும் நாட்டுப்புறவியலும்	238
	சுருக்க விளக்கம்	271
	இணைப்பு	274
	சொல்லடைவு	281
	துணைநின்றவை	302

நுழைவாயில்

தமிழர்தம் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் முதலான வாழ்வியல் நெறிமுறைகளை அறிவதற்குப் பெரிதும் துணைபுரிவது இலக்கியமே. இது வாழ்க்கையின் கண்ணாடியாகவும், காலத்தின் கண்ணாடியாகவும், வாழ்ந்த சமுதாயத்தின் வரலாறாகவும் விளங்குகிறது. தமிழர் எண்ணங்களின் நிதிக்குவியல்களான இவ்விலக்கியங்களில் மக்கள் பண்பாட்டை மட்டுமன்றி அறிவியல் எண்ணங்களையும் காணமுடிகிறது. வரலாறு, அறிவியல், நுண்கலைகள் முதலியன மனிதப் பண்பாட்டின் வெளிப்பாடுகளாக அமைகின்றன. மனித சமுதாயத்தின் படிநிலை வளர்ச்சிகளை இக்கலைகளின் துணைகொண்டு நம்மால் அறியமுடிகிறது. இவற்றையெல்லாம் நமக்குக் கொடுத்து, வகுத்துத் தரும் பெரிய ஊடகமாக வரிவடிவத்தில் இலக்கியம் அமைந்துள்ளது.

இலக்கியத்தின் கூறுகள் பல கலைகளாகப் பிணைக்கப்பட்டவை. ஆகவே இலக்கியம் என்பதை ஒரு கலைத் தொகுப்பு என்றோ, கலைகளின் உயிரோட்டமுள்ள கோப்பு என்றோ கூறுதல் மிகையன்று. படைக்கப்பட்ட காலத்தின் மக்கள், படைப்பாளன் இவர்களின் மனச்சுமைகள் அனைத்தும் அல்லது ஒரு குறித்தனவும் ஓரளவேனும் அதில் பதிவு செய்யப்பெற்றிருக்கும். சங்கம் தொடங்கி இன்று வரையிலான தமிழ் இலக்கியங்கள் மேற்சொல்லப்பட்ட கோட்பாடுகளுக்கு உட்பட்டே அமையப் பெற்றுள்ளது.

மனிதன் தனது வாழ்க்கையைச் செம்மைப்படுத்த, நெறிப்படுத்த, தேவைகளை எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யப் பருப்பொருட்களைப் பயன்படுத்துவதோடு நில்லாமல், கோள்களின் இயல்புகளைத் தனது வாழ்க்கையோடு இணைத்துப் பார்த்து அதன் அடிப்படையில் சோதிடத்துறை என்ற தனித்துறையை மக்கள் வாழ்வியலில் கலந்து நிற்கின்ற வகையில் படைத்துள்ளான்.

சோதிடம் என்பது மக்கள் அறிவியற் பயனால் பெற்ற ஒன்று. எனினும் இதனை அவ்வாறே மேற்கொள்ளாது உளவியற் பாங்கிலும் ஆக்கிக்கொண்டனர். ஆகவே இலக்கியம் என்ற கலைக் கோப்புக்குள் சோதிடக்கலை என்ற தாள்களின் தலையீடு ஆங்காங்கே விரவிக்கிடப்பதை இலக்கியத்தை உளவியற் பாங்கில் ஆய்கின்றவர் நுணுகிக் கண்ணுறக் காண்கிறோம். துறைதோறும் தொடர்புடைய அறிஞர் படைப்பாளிகளாகவும் திகழ்ந்ததால், அவர்கள் இலக்கியத்தில் சோதிடத்தையும் இணைத்துப் படைப்புகளை ஆக்கியுள்ளனர்.

எந்த ஒரு நிகழ்வின் தோற்றத்தினையும், வளர்ச்சி நிலையினையும் இலக்கியத்தின் கால வளர்ச்சியோடு நோக்கும்போது தெளிவாக அறிந்துகொள்ள இயலும். அவ்வகையில் சோதிடத்தின் தோற்றத்தினையும், வளர்ச்சி நிலையினையும் அறியத் தமிழ் இலக்கியங்கள் துணை புரிகின்றன. மக்கள் வாழ்க்கையில் நடைபெறும் சிறுசிறு நிகழ்வுகளுக்கும் சோதிடம் பயன்படுத்தப்பட்டுச் செல்வாக்குப் பெற்றிருந்த தன்மையை இலக்கியங்களின் வழி உணர முடிகின்றது. ஆயின் இலக்கியங்களில் அந்த அளவிற்கு இடம் பெற்றுள்ளதா என்பதைக் காணுதற்கியலவில்லை.

இறை அருளால் தீங்குகளை நீக்கிக்கொண்டு முடிவிலாப் பேரின்பப் பெருவாழ்வினை அடையலாம் என்ற கொள்கையை மக்களிடம் பரப்பிவந்த பக்தி இலக்கியக் காலக் கட்டத்தில்,நாள் என் செய்யும் கோள் என் செய்யும் ஈசர் அருள் இருந்தால் போதும் கோள்களின் அடிப்படை யில் வரும் தீங்குகள் நீக்கப்பட்டுவிடும் என்ற கொள்கை உருவானது. எனவே சோதிடம் மக்களிடையே சிறப்புற்றுத் திகழ்ந்திருப்பினும் இலக்கியங்களில் மறைக்கப்பட்டும் மறுக்கப்பட்டும் வந்துள்ளது. மறைமுகமாகப் பயன் படுத்துதலை விரும்புவதாலும், பயன்படுத்தவே விரும்பாத தாலும் மறைக்கப்படுதலும், மறுக்கப்படுதலும் படைப்பு களில் இன்றும் நிலவும் சூழ்நிலையாகவே உள்ளது.

சோதிடக்கலை பழந்தமிழர் வாழ்வோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்த காரணத்தினால்தான் இலக்கியங் களில் குறிபற்றியும், கோள் பற்றியும் கூறப்பட்டுள்ளன.

பழந்தமிழர் வாழ்வுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட சோதிடக்கலை வாய்மொழியாகவே பலகாலம் பேணிக் காக்கப்பட்டு வந்தது. இங்ஙனம் வாய்ச்சொல்லாக, கர்ணபரம்பரையாகப் போதிக்கப்பட்டு காலக்கிரமத்தில் பெரிய பாறைகளிலும், கல் தூண்களிலும், செப்புத் தகடுகளிலும், ஓலைச்சுவடிகளிலும் எழுத்துகளால் எழுதப் பெற்று[1] ஏட்டுருவம் கொண்ட எழுத்திலக்கியமாகத் திகழ்ந்ததோடு ஏட்டிலக்கியங்களில் இன்றியமையாத இடத்தினையும் பெற்றுள்ளது.

காலத்தால் முற்பட்டு விளங்கும் தொல்காப்பியத்திலும், சங்க இலக்கியங்களிலும் சோதிடத்தின் இன்றைய வளர்ச்சிபெற்ற நிலையினைக் காண இயலவில்லை என்றாலும் அவற்றின் கூறுகளைக் காண முடிகிறது. மேலும் இன்றைய வளர்ச்சிக்கான வித்துக்களை ஆங்காங்கே அவ்விலக்கியங்கள் தூவிச் சென்றுள்ளதையும் அறிய முடிகிறது. தொல்காப்பியத்தில் எதிர்வரக்கூடிய நன்மை தீமைகளை, வானியல் நிகழ்வுகளைக் கொண்டு அறிகின்ற தன்மையினைக் காணமுடிகிறது. சங்க இலக்கியங்களில் கோள்கள், நட்சத்திரங்கள், திதிகள் முதலான வானியல் செய்திகள் பரவலாகக் காணப்படுகின்றன. வானியல் குறிப்புகளாக மட்டுமன்றி இவற்றின் செயற்பாடுகளினால் புவியில் பூகம்பம், மழையின்மை, வறட்சி, பஞ்சம், மன்னனின் இறப்பு முதலானவை நிகழுமென்று முன்கூட்டியே பலன்களை அறிந்துகொள்ளும் நிலையினையும் அக்காலக் கட்டத்தில் காணமுடிகிறது. எனினும் சங்க இலக்கியங்களில் வானியல் குறிப்புகள் பரவலாக அமைய, காலம் பற்றிய செய்திகளும், பலனறிதலும் குறைவாகவே காணப்படுகின்றன.

காப்பியங்களில் வானியல் குறிப்புகளைக் காட்டிலும் பலனறிதல் மிகுந்து காணப்படுகிறது. இவற்றில் நிகழ் காலத்திலும், எதிர்காலத்திலும் நிகழக்கூடிய நன்மை தீமைகளைச் சோதிடத்தின் வழி அறிதல் என்ற நிலையினைப் பார்க்க முடிகிறது. மன்னர்கள் தம் அரசவையில் சோதிடர்களை நியமித்து, சிறுசிறு நிகழ்வுகளையும்

---

1. ஜோதிட ரஸார்ணவம், ப.45.

அவர்களின் ஆலோசனைகளுடனேயே நிகழ்த்தியிருக் கின்றனர். இச்சோதிடர் அரசவைச் சோதிடராக மட்டுமே பணிபுரிந்ததால், பலனறிதல் என்ற நிலை அன்றைய சமுதாயத்தில் மிக்கே இருந்திருத்தல் வேண்டும். தொடக் கத்தில் திருமணம் நிகழ்த்துதல், முடிசூட்டுதல், சாதகம் கணித்தல் என்ற முதன்மையான நிகழ்வுகளுக்கு மட்டும் பார்க்கத் தொடங்கி, நாளடைவில், பெரும்பாலான நிகழ்வுகளுக்கும் சோதிடம் பார்த்தல் என்ற நிலை ஏற்பட்டு இருக்கலாம்.

ஆழ்வார்களின் நாயன்மார்களின் நட்சத்திரம், திதி, மாதம், ஆண்டு (இணைப்பு.I) முதலியன சுட்டப் பெறுதலைப் பக்தி இலக்கியங்களில் விரிவாகக் காண முடி கின்றது. காலம் பற்றிய சோதிடக் குறிப்புகள் இவர்களின் காலத்தையும், இலக்கியங்களின் காலத்தையும் அறிதற்குப் பெரிதும் துணைபுரிகின்றன. சித்தர் இலக்கியங்களில் சோதிட விதிகளை அப்படியே எடுத்து ஆளுதல், சோதிடச் செய்திகளுக்கு ஒப்ப அமைதல், சோதிடக் குறிப்புகளோடு ஒன்றிணைதல் என்ற நிலைகளைக் காணமுடிகிறது.

சிற்றிலக்கியங்களில் வானியல் குறிப்புகள், காலக் குறிப்புகள், பலனறிதல் முதலான சோதிடச் செய்திகள் காணப்படுகின்றன. கயிலாச நாதர் சதகம், அறப்பளீசுர சதகம், அண்ணாமலை சதகம் முதலிய சதக இலக்கியங்களில் சோதிட விதிகள் பல இடம்பெற்றுள்ளன. மனிதகணம், இராட்சதகணம், தெய்வகணம் மூன்றுமறிவது எங்ஙனம் (71), குளிகன், இராகு காலம் (72), சென்ம நட்சத்திரம் வார, மாதப் பலன்கள் (73), ருது நட்சத்திர வாரப் பலன்கள் (74) முதலிய சோதிடச் செய்திகள் இடம்பெற்றிருத்தலைக் கயிலாசநாதர் சதகத்தில் காணமுடிகின்றது. மேலும் இந்நூலில் மனைநூல் தொடர்பான சோதிட விதிகள் பல இடம் பெற்றிருத்தலையும் பார்க்க முடிகின்றது.

இங்குத் தரப்பட்டுள்ள 'இலக்கியத்தில் சோதிடம்' என்ற பகுதியில் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள சோதிடக் குறிப்புகள் ஓரளவு தொகுத்து வகைப்படுத்தப் பட்டுள்ளன. சோதிடம் தொடர்பான ஓர் இலக்கியக் குறிப்பு பல கருத்துகளை உள்ளடக்கிய நிலை பலவிடங்களில்

காணப்படுகிறது. ஒரு செயலைச் செய்ய நாள் பார்த்ததாக வரும் குறிப்பில் சோதிடர் குறித்த சொல்லாட்சி இடம் பெறலாம்; காலம் பற்றிய குறிப்பு இடம்பெறலாம்; பலனறிதல் நாட்குறித்தல் என்ற நிலைகள் வெளிப்படலாம். எனவே இத்தகைய குறிப்புகள் வெளிப்படுத்தும் பன்முகச் செய்திகள், அவற்றின் பின்புலம் முதலியன தெளிவு படுத்தப்பட வேண்டும். இலக்கியத்திலுள்ள சோதிடக் குறிப்புகள் முழுமையும் தொகுத்து வகைப்படுத்தப்பட்டு பல நிலைகளில் ஆய்வுக்குட்படுத்தப்படும்போது மேலும் மக்கள் வாழ்வில் இதுபெற்றிருந்த செல்வாக்கு, இதனால் மக்களடைந்த நன்மை, தீமை, இடையூறு, குழப்பம், சிக்கல், பல இலக்கியங்கள் எழுந்த காலம், காலம் அறிதலிலுள்ள வளர்ச்சி நிலைகள், வரலாற்றுச் சான்றுகள், அறிவியற் செய்திகள் முதலான பல செய்திகளைத் தெளிவாக அறிதற்கியலும்.

மேலும், தமிழக வரலாற்றில் இடம்பெறத்தக்க பல புதிய, அரிய செய்திகள் இவற்றின்வழி கிட்டுவதோடு மக்கள் வாழ்வியலைப் பற்றிய தெளிவினையும், வாழ்வியலில் காலச் சூழலால் ஏற்பட்ட படிப்படியான வளர்ச்சி மாற்றங்களையும் அறிதற்கியலும். இன்றைய சமுதாயத்தில் நிலவும் சோதிடத்தின் தாக்கமும், அன்றைய சமுதாயத்தில் நிலவிய சோதிடத்தின் தாக்கமும் மக்களை எங்ஙனம் ஆட்டுவித்தன, செயல்படுத்தின என்ற ஒப்பாய்வுக்கு வழிவகுப்பதுடன், ஒப்பாய்வின் பயனாக இனி மக்கள் செயற்படவேண்டிய முறைகளையும் தெளிவுபடுத்த இயலும். மக்கள் பண்பாட்டில் சோதிடத்தின் பங்கு எத்தன்மைத்து என்பது தெளிவுபடுத்தப்பெறுதலோடு சோதிடத்தின் வளர்ச்சி, தேக்கம், மாற்றம் முதலான வற்றையும் அறிதற்கியலும்.

இலக்கியங்களின் பாடுபொருள் மக்கள் பிரச்சனையைச் சார்ந்துள்ளது. இப்பிரச்சனைகளுக்கு, நிரந்தரத் தீர்வுகளுக்கு வழிவகுக்கும் தன்மையை நோக்கி ஆய்வு செய்யப்பட்டால் சமுதாயம் முன்னேறும். சமூகவியல் நோக்கில் இலக்கியங்கள் ஆய்வுக்குட்படுத்தப்படும்போது ஆய்வுப் பயன் மக்களைச் சென்றடைந்து சமுதாய உயர்வுக்கு வழி

வகுப்பதாக அமையும். சோதிடத்தைச் சரியான முறையில் கையாளாததனால் தோன்றியுள்ள சிக்கல்கள் அடுத்த தலைமுறையினரைப் பாதிக்காத வகையில் நிரந்தரத் தீர்வுக்கு வழிவகுக்கும் போக்குகள் முறையாகத் தெளிவுபடுத்தப்பட இயலும்.

இலக்கியங்களிலுள்ள சோதிடச் செய்திகள் முழுமையாகத் தொகுக்கப்படுவதோடு, இன்னும் பதிப்பிக்கப்படாமல் இருக்கின்ற சோதிடச் சுவடிகளும் தொகுக்கப்படுதல் வேண்டும். பல்துறைச் சான்றோர் ஒன்றுகூடிப் பிழைகள் திருத்தியும், குழூஉக்குறிச் சொற்களுக்கு விளக்கம் தந்தும், வானியல் கணக்குகளைப் புரியவைத்தும் சோதிடப் பதிப்புகள் வெளிவருதல் வேண்டும். மக்களின் வாழ்க்கையை ஆட்டிப்படைக்கும் ஒன்றாகச் சோதிடம் திகழ்வதால் பல்வேறு அறிவியல் துறை அறிஞர் ஒன்றுகூடி ஒற்றுமையோடு, ஆய்வார்வத்தோடு, தொண்டு மனப்பான்மையோடு இத்தகைய பணியிலே முனைந்து ஈடுபடுதல் வேண்டும். இந்நிலை வருங்கால அறிவியல் ஆய்வுக்குப் பேருதவியாக இருப்பதோடு, உலக நாடுகளில் நடைபெறும் அறிவியல் ஆய்வுகளுக்கும், அவ்வாய்வுகளின் வழி பெறப்பட்ட பேருண்மைகளுக்கும் புதிய வாயில்களைத் திறந்து காட்டும்.

ஆய்வு என்பது உண்மையை—மெய்ப்பொருளைக் காண்பது. நுண்ணிதின் ஆழ்ந்து பார்ப்பது. நேர் எதிர் கருத்துகளைக் கணக்கிட்டுப் பயன்தரும் வழிப்பொருள் காண்பது. இதுவே நன்மை விளைவிக்கும். அவ்வகையில் சோதிட முழுமையை விரும்பி, அதில் நன்மை விளைய செய்யப்பட வேண்டியவை விளக்கம் பெறுதல் வேண்டும் என்ற நோக்கில் தொகுக்கப்பட்ட பல சோதிடக் கூறுகளின் பதிலிகள் இலக்கியத்தினின்று எடுக்கப்பட்டுக் கற்போருக்காக வகுத்துத் தரப்பட்டுள்ளன.

★ ★ ★

இயல் ஒன்று

இலக்கியத்தில் காலக்குறிப்புகள்

"காலம் பார்த்தே காலனும் செயல்படுவான்", "காலம் கனிந்துவரக், கல்லும் கரையும்", "காலம் கூடிவந்தால் கல்லும் கனியாகும்", "காலம் வந்தால் கப்பலும் வாங்கலாம்" எனும் மக்களின் அனுபவக் கூற்றுகள் காலத்தின் இன்றியமையா மையை எடுத்தியம்புகின்றன. சோதிடத்தில் காலக் கணிப்பு என்பது இன்றியமையாத ஒன்றாகக் கணித்துரைக்கப்பட்டு வருகின்றது. 'நன்மையும் தீமையும் காலத்தின் மாற்றமே' என்று நம்பும் அளவிற்குக் காலக் கணிப்பு இருந்து வருகிறது. காலம் பற்றிய குறிப்புகள் இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. அவற்றுள் சில இங்குச் சுட்டப் பெறுகின்றன. இலக்கியங்களில் வரும் காலக் குறிப்புகள் இலக்கியம் எழுந்த காலத்தை அறிதற்கு எங்ஙனம் உதவுகின்றன என்பதும் கூறப்பெறுகின்றது.

காலம் பற்றிய கொள்கைகள்

"காலம் என்பது கருத்தளவிலானது; நுண்மையானது; சலனமுடையது; மாறிக்கொண்டே இருக்கிறது; பொருள்களுக்கு இடையில் தூர இடைவெளியும் கால இடைவெளியும் ஒன்றை ஒன்று சார்ந்து உள்ளன; பிரபஞ்சமானது காலம், நீளம், அகலம், ஆழம் என்னும் நான்கு பரிமாணங்களைக் கொண்டது". இவை காலம் பற்றய பொதுக் கருத்துகளாகும்.[1]

"காலம் என்பது உண்மையானது; முழுமையானது; உணரத்தக்கது; துல்லியமானது; கணிக்கத் தக்கது; பிரிக்கத் தகாதது. இதன் இன்னொரு பெயர் 'அவகாசம்' என்பது. இதனைப் பௌதிக நிகழ்ச்சிகளாலோ புறத்தன்மையாலோ மாற்ற முடியாது. ஆனால் இதனைப் புறச் சலனங்களினால் நாள், மணி என்பது போல அளக்கலாம்". "இயற்கையான நாள், என்று கருதப்படும் காலம் என்னும் அளவானது,

---

1. தமிழ்ச் சோதிட நூல்களில் சாதகக் கணிப்பின் அடிப்படைகள், ப.23

உண்மையில் 24 மணி நேரமான சமமான காலமன்று - இவை அறிவியலார் ஐசக் நியூட்டன் கூறிய கருத்துகள்.''[2]

''காலம் என்பது சார்பியலானதே யன்றி, முழுமையானது அன்று. இது குறிநிலை இலக்கினைச் சார்ந்த ஒன்றேயாகும். விசும்பும் பொருளும் இல்லாவிடின் காலம் என்பதும் இல்லாமல் போய்விடும் - இவை அறிவியல் மேதை 'ஐன்ஸ்டீன்' என்பவரின் கருத்து.''[3]

அணுக்களுக்கு வெளியில் காலம் ஒன்று மட்டுமே உள்ளது. இது பொருளைச் சார்ந்திருக்கவில்லை. இவை 'காசெண்டி' என்னும் அறிவியலார் கூறிய கருத்து.[4]

பிரிக்கத்தக்க 'கண்டகாலம்' என்றும் பிரிக்கத்தகாத 'அகண்டகாலம்' என்றும் காலம் இருவகைப்படும். பிரிக்கத்தகாத அகண்ட காலத்தில் இறைவன் இருக்கிறான். இவை 'சூரிய சித்தாந்தம்' என்னும் நூலியற்றியவரும் பழங்காலத்தில் இந்திய வானவியலாளருமான 'பாஸ்கராச் சாரியார்' கூறிய கருத்து.[5]

சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலிய வானமண்டலப் பொருள்களின் ஆதிக்கத்தில் பூமியில் வாழும் மனிதர்களது வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் 'காலக்கணிதம்' என்னும் சோதிடம் கணித்துக் கூறுகிறது.

காலம் என்பதை இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்றாகப் பார்க்கிறோம். 'நொடிப் பொழுது முதல் ஊழிக்காலம் வரை' தமிழர் காலக் கணிப்புச் செய்துள்ளனர். அவ்வாறு நோக்கும்போது இலக்கியங்களிலும் காலம் கணிக்கப்பட்டு அதன் பலன்களும் அறியப்பட்டு வந்துள்ளன. ''ஓர் ஆண்டின் சித்திரை மாதம் பிறக்கும் கிழமை எதுவோ அதே கிழமையில் அவ்வாண்டு கார்த்திகை மாதமும் பிறக்கும். அந்த நாளின் மறுநாளில் மார்கழி பிறக்கும். மூன்றாம் நாள் புரட்டாசி, நான்காம் நாள் வைகாசி, ஆடி, தை ஆகியவை பிறக்கும். ஐந்தாம் நாள் மாசி, ஆறாம்

---

2. Relativity and Man, V. Smilga P.73. 3. இயக்கவியல் பொருள் முதல் வாதம், ப.110. 4. மேலது ப.110. 5. ஜாதக சாகரம், ப.18.

நாள் ஐப்பசி, ஏழாம் நாள் ஆனி, ஆவணி, பங்குனி ஆகிய மாதங்கள் பிறக்கும் என்ற நிலையான இக்கணித முறையினை உணர்த்தும் இலக்கியங்களும் தமிழில் உள்ளன. இதேபோல ஆண்டு அறுபதற்குரிய மாதம் வாரம், நட்சத்திரம், திதி, நாழிகை, அமாவாசை, பௌர்ணமிகளில் வரும் நட்சத்திரங்கள் போன்றவற்றையும் கணக்கிட்டுக் கூறுவது சதகநூல். வருட மறுபதுக்கு மாதம் பிறக்கும் நாள் (51), வருட மறுபதுக்கும் வார நட்சத்திரம் திதி நாழிகை பிறப்பு (52), கலியுகமுஞ் சாலிவாகன சகாப்தத் தொகையும் (53), மாதம் 12க்கும் நட்சத்திரமறிவது (54), வருடம் அறுபதுக்கும் பஞ்சாங்கப் பிறப்பு (55), மாதம் 12க்கும் அமாவாசை வருநட்சத்திரம் (56), மாதம் 12க்கும் பௌரணை வரு நட்சத்திரம் (57), நட்சத்திரத்தில் அமிர்த யோகம் (58), நட்சத்திரத்தில் மரணயோகம் (59), திதியிலமுதயோகம் (65), திதியில் சித்தயோகம் (61) எனக் காலக்கணக்கீட்டை விரிவாகப் பேசுகிறது கயிலாசநாதர் சதகம்.

காலக்கணக்கு அன்றாட வாழ்க்கைக்குத் தேவையானது என்பதால் வேதகாலத்தில் காலக்கணக்கும், வானவீதியில் பயணிக்கும் கோள்களின் நிலையும், அவற்றால் மனித வாழ்வில் வரும் நன்மை, தீமைகளும் ஆராயப்பட்டன. காலத்தை ஆண்டு, மாதம், வாரம், நாள், நாழிகை, விநாடி என்று துல்லியமாக வகுத்தனர். இதற்குத் துணைபுரிந்த பஞ்சாங்கம் என்பது காலக் கணக்கைக் காட்டுவதாகும். வானவெளியில் உள்ள சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், கோள்கள், இராசிகள் இவற்றின் போக்கை யொட்டிப் பஞ்சாங்கம் கணிக்கப்பட்டது. இப்பஞ்சாங்கம் வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம் என்னும் ஐந்து அங்கங்களைக் கொண்டது.

ஆண்டு வசந்தம், கிரிஷ்மம், வர்மம், சரத், ஹேமந்தம், சிசிரருதுக்கள் எனப் பருவங்களாகவும் பிரிக்கப்பட்டன. அவையே தமிழில் இளவேனில், முதுவேனில், மழை, முன்பனி, பின்பனி, இலையுதிர்காலங்களாகும். பஞ்சாங்கங்களில் ஆண்டு, மாதம், நாட்கணக்கை சௌரமானம், சௌராசாந்திரமானம், சாந்திரமானம் என மூன்று வகையாகக்

---

6. கயிலாசநாதர் சதகம், 51-52.

கணக்கிட்டனர். இவற்றுள் சூரியனைக் கொண்டு கணக்கிடுவது சௌரமானம், சந்திரனைக் கொண்டு, சூரியனைக் கொண்டு திருத்திக்கொள்வது சௌரசாந்திரமானம், சந்திரனைக் கொண்டு கணக்கிடுவது சாந்திரமானம்.

தமிழ்நாடு, கேரளா, வங்கம், அஸ்ஸாம், பஞ்சாப், அரியானா, ஒரிஸ்ஸா முதலிய இடங்கள் சௌரமான ஆண்டையும்; ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரம், உத்திரபிரதேசம், பீகார், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், வடமேற்கு இந்தியா முதலிய இடங்கள் சௌரசாந்திரமான ஆண்டையும் கடைப்பிடிக்கின்றன. சௌரமானக் கணக்கில் ஓர் ஆண்டு 365 நாட்களைவிட 6 மணி 9 நிமிடம் 9½ நொடி கூடுதலானது. தமிழ்நாட்டில் நடைமுறையில் பின்பற்றும் இங்கிலிஷ் அல்லது கிரிகேரியன் காலண்டரும் சௌரமானக் கணிப்பேயாகும். இம்முறையில் ஆண்டுதோறும் கூடுதலாக வரும் 5 மணி 48 நிமிடம் 46 நொடியைச் சரிக்கட்ட நான்கு ஆண்டிற்கொருமுறை பிப்ரவரியில் ஒரு நாளைக் கூட்டி 29ஆம் தேதியாகக் கொள்ளப்படுகிறது.

சாந்திரமான ஆண்டில் சுமார் 354 நாட்களே. எனவே இக்குறையைத் தவிர்க்க சில ஆண்டுகளுக்கொருமுறை அதிகமாகவும் ஒன்றைச் சேர்த்து, சௌர நட்சத்திர ஆண்டோடு பிணைப்பர். அப்படி அதிகமாதம் சேர்க்காமல் 12 சாந்திரமாதங்களாகவே ஆண்டைக் கணிப்பது சாந்திரமானம். இசுலாமியர்களின் ஹிஜிரா ஆண்டு இவ்வகையைச் சேர்ந்தது. இது சௌர ஆண்டைக் காட்டிலும் பதினொரு நாட்கள் குறைவாதலால், ரம்ஜான் முதலிய பண்டிகைகள் ஆண்டுக்குப் பதினொரு நாட்கள் முன்னதாக வரும்.

பழைமை, பழக்கவழக்கம், வரலாறு, பிரதேசக் காரணங்களால் நமது நாட்டின் பல பகுதிகளில் வெவ்வேறு ஆண்டுக் கணக்கு அல்லது சகாப்தங்கள் வழக்கத்திலுள்ளன. அவை சாலிவாகன சகாப்தம் (இன்று 1919ஆம் ஆண்டு), விக்ரம சகாப்தம் (இன்று 2053ஆம் ஆண்டு), வங்காள ஸம்வத்ஸரம் (1403), கலியுக ஆண்டு (5097), கொல்லம் ஆண்டு (1172), மகம்மதிய ஹிஜிரா (1417), சாக சகாப்தம் (1918), பார் ஹஸ்பத்திய ஆண்டு (60 ஆண்டு வட்டம்)

முதலியனவாகும். இவற்றுள் தமிழகத்தில் வழங்கி வருவது இந்த அறுபது ஆண்டு வட்டக் கணக்காகும். அண்மைக்காலத்தில் தமிழ் ஆர்வலர்கள், திருவள்ளுவராண்டு முறையைப் (இன்று 2017) பின்பற்றி வருகின்றனர்.

வேளாண்மை முதலியவற்றோடு தொடர்புபட்ட ருது அல்லது பருவ ஆண்டிலிருந்து சௌர நட்சத்திர ஆண்டு வேறுபட்டது. இதனால் ஆண்டுகள் செல்லச் செல்ல, அதே மாதங்களில் பருவங்கள் வேறுபடும். இதைப்பற்றி பாரதி தனது 'பஞ்சாங்கம்' என்ற கட்டுரையில் எழுதியது ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது. 'இப்போது தை மாதப் பிறப்பை உத்தராயணத்தின் தொடக்கமாக நாம் நினைப்பது தவறு. மார்கழித் திங்கள் எட்டாந் தேதியே உத்தராயணம் தொடங்கிவிட்டது. அன்றே சூரியன் தனது தெற்கெல்லை யிலிருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்டுவிட்டது. வஸந்த விஷுவானது மேட ராசியின் தொடக்கத்திலிருந்த காலத்தில் உத்தராயணம் தைமாதப் பிறப்பன்று தொடங்கிற்று. அதற்கப்பால் கணக்குத் தவறிவிட்டது. அயன விஷுக்களின் சலனத்தை அறியாமலோ, அறிந்திருந்தும் கவனியாமலோ ஸம்வத்ஸாரத்தின் பரிணாமத்தை 20½ நிமிடம் அதிகமாகக் கணித்து விட்டபடியால் அயன விஷு காலங்கள் ஆண்டு ஒன்றுக்கு 20½ நிமிடம் பின்னால் வருகின்றன. மேற்குறித்த நியமங்கள் ஏற்பட்டு இப்போது பல நூற்றாண்டுகளாகிவிட்டதால் புண்யகாலங்கள் 20, 22 நாள் பின்னால் சென்று நியமங்களும் பிரத்யக்ஷத்துக்கு விரோதமாயிருக்கின்றன. அயன விஷுக்களை நேராகத் தெரிந்து, பஞ்சாங்கத்தில் ஆண்டுப் பிறப்பைச் சரியான நாளில் வைத்தால் பருவக்கணக்கும் நேராகும்'. ஆயின் இன்றும் நம்முடைய பஞ்சாங்கங்கள் தைமாதப் பிறப்பையே உத்தராயணம் என்று காட்டி வருகிறது.

இந்திய அரசு இக்குறைபாடுகளை நீக்கக் காலண்டர் சீர்திருத்தக் குழு ஒன்றை அமைத்தது. அக்குழுவின் பரிந்துரைகளை ஏற்று, 1957 முதல் இந்திய அரசாங்கம் ராஷ்ட்ரிய அல்லது தேசியப் பஞ்சாங்கமொன்றை வெளியிட்டு வருகிறது. சாக சகாப்தமாக வெளிவரும் இப்பஞ்சாங்கம் ருது ஆண்டு முறையைக் கொண்டது.

ஆனால் சூரியன் வசந்த விஷுவில் நுழையும் நாளில் அதாவது மார்ச் 22ஆம் நாளில் ஆண்டுத் தொடக்கம். லீப் ஆண்டில் மார்ச் 21 முதல் நாளாகும். இப்பஞ்சாங்கம் 1996 மார்கழி ஏழாந்தேதியே உத்தராயணத் தொடக்கம் எனக் காட்டியிருக்கிறது.

புத்தாண்டு நாட்டின் பல பகுதிகளில் வெவ்வேறு நாட்களில் கொண்டாடப்படுகிறது. தமிழ்நாட்டில் ஏப்ரல் 13, கேரளத்தில் ஆகஸ்டு 17, மகாராஷ்டிரம், கர்நாடகம், ஆந்திரம் ஆகியவற்றில் ஏப்ரல் 14, பஞ்சாப், அரியானா, ஒரிஸ்ஸா ஆகியவற்றில் ஏப்ரல் 13, குஜராத், ராஜஸ்தானில் தீபாவளி நாள், உத்தரபிரதேசம், பீகார், மத்தியபிரதேசம் ஆகியவற்றில் செப்டம்பர் 28 என்றவாறு புத்தாண்டு பிறக்கிறது.

தமிழ் ஆண்டில் சாதாரணமாக 365 நாட்கள்; லீப் ஆண்டில் 366; ஒரு மாதத்திலுள்ள நாட்களின் எண்ணிக்கை 29இலிருந்து 32 வரை இத்தாது ஆண்டில் நாட்கள் 366.[7]

முன்பு கிருத்திகை முதல் நட்சத்திரமாக இருந்து பின்னர் அசுவினி முதலானதற்குக் காரணம் வராகமிகிரர் காலத்திற்குமுன்பு இரவு பகல் சமமாக முப்பது முப்பது நாழிகை இருக்கும் நாளன்று சூரியன் மேடராசியில் கிருத்திகை நட்சத்திரத்தில் நுழைவதைக் கொண்டு அது முதல் நட்சத்திரமாகக் கொள்ளப்பட்டது. இதனால்தான் மணிமேகலையில் விசாகம் 14 ஆவது நட்சத்திரமாகச் சுட்டப்பெறுகிறது. வராக முனிவர் தம்காலத்தில் இந்நிலை மாறி சூரியன் அசுவினியால் நுழைவதைக் கண்டறிந்து பழைய வழக்கத்திற்கு மாறாக அசுவினி முதலாக நட்சத்திரங்களை எண்ணும் வழக்கத்தைச் சோதிடத்தில் கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தினார். மணிமேகலையில் விசாகம் ஏன் 14ஆவது நட்சத்திரமாக முன்பு இருந்தது என்பதற்கு விளக்கம் தரவந்த உ.வே.சா. பின்வருமாறு கூறியுள்ளார்:

---

7. பஞ்சாங்கம் ஏன்? எதற்கு? எப்படி?, மு. ஸ்ரீனிவாசன்,

'அசுவினி முதலிய 27 நட்சத்திரங்களுள் பதினான்காவது நட்சத்திரம் சித்திரையாக இருக்க, அதனைக் கூறாமல் விசாகத்தைக் கூறக் காரணம், ஒவ்வொரு ஆண்டும் பகலையும் இரவையும் சமனாக முப்பது முப்பது நாழிகையாகவே பெற்ற இரண்டு விஷீவத்தினங்களுள் ஒன்றாகிய மேடாயனத்தில் சூரியனுக்கு எந்த நட்சத்திரத்தில் பிரவேசமுண்டாகிறதோ அதை நட்சத்திரத்தில் முதலாவதாகக் கூறுவது சோதிடநூல் துணிபு. ஆதலாலும் முன் ஒரு காலத்தில் சூரியனுக்குக் கிருத்திகாப் பிரவேசம் இருந்தபொழுது மேடாயனம் நேரிட்டிருந்ததென்றும் அதுபற்றிக் கார்த்திகையை முதலாகக் கொண்டு நட்சத்திரங்களை எண்ணி வந்தார்களென்றும், பழைய சோதிட நூல்களால் தெரிகின்றமையாலும், நட்சத்திரங்களின் நடுவிலுள்ளதை விசாகம் என்று கூறியது குற்றமன்றென்க. இப்படியே முன்னொரு காலத்தில் நட்சத்திரங்களைக் கார்த்திகை முதலாக எண்ணி வந்தனர் என்பது கிருஷ்ண யஜீர் வேத ஸம்ஹிதையாலும், கிருஷ்ண யஜீர்வேத பிராஹ்மணத்தாலும் தெரிகிறதென்பர். உச்சயினி நகரத்தில், சுக்கிரமார்க்கனுடைய அவைக் களத்திலிருந்த நவரத்தினங்களுள் ஒருவர் என்று சொல்லப்படுகிற வராகமிகிரர் ஜ்யௌ திஷிகர் தமது காலத்தில் மேடாயனத்தில் சூரியனுக்கு அசுவினி நட்சத்திரப் பிரவேசம் உண்டாகியிருத்தலை அறிந்து பழைய வழக்கத்திற்கு மாறாக, நட்சத்திரங்களை அசுவினி முதலாக எண்ணும் வழக்கத்தை வற்புறுத்தினமையின், இக்காலத்தில், நட்சத்திரங்கள் இங்ஙனம் எண்ணப்பட்டு வருகின்றன என்பர்' (மணி:11:42).

முதலில் கிருத்திகை நட்சத்திரமாக இருந்திருக்கிறது. இப்பொழுது நட்சத்திர வரிசையில் அசுவினி முதலிடம் பெறுகிறது. எனவே சோதிடத்தில் மாற்றங்களும் கணித்தறியப்பட்டு அதற்கேற்பச் சோதிடம் செயல்படுகிறது என்பது தெரிகிறது.

மாத்திரை

காலக் கணிப்பில் தமிழர்கள் நுண்ணறிவு பெற்றுத் திகழ்ந்தனர். கண் இமைக்கும் காலமும், கை நொடிக்கும்

காலமும் ஒரு மாத்திரை என்று மிகச்சிறிய கால அளவையும் அளவிட்டிருந்தனர். எழுத்துக்களின் மாத்திரை வகுக்கு மிடத்து மாத்திரைகளின் அளவை,

"கண் இமை நொடிஎன அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட வாறே" (தொல்.7)

என்ற நூற்பா விளக்குகின்றது.

தொல்காப்பியர் எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவைக் குறிக்குமிடத்து மாத்திரை என்பதற்கு 'அளபு' என்னும் பெயர்களைப் பயன்படுத்தியுள்ளார். செய்யுளுக் குரிய ஓர் உறுப்பாகவும் 'மாத்திரை' என்பதனைப் பொருளதி காரத்தில் செய்யுளியலிலே (11) குறிப்பிட்டுள்ளார்.

மாத்திரை என்பதனை அளவு என்னும் பொருளில் சங்க இலக்கியம் முதலியனவும் குறித்துள்ளதை,

"முலைக்கோள் விடா மாத்திரை" (பொருந. 14)
"கேட்டல் மாத்திரை அல்லது, யாவதும்
காண்டல் செல்லாது யாண்டு பலகழிய" (புற.216:1-2)

என்ற அடிகள்வழி அறிய முடிகின்றது.

மிக விரைவில் நிகழும் செயலை மாத்திரை அளவில் நிகழ்ந்ததாக உரைத்தலை,

"மாத்திரைக்குள் அருளு மாற்பேறரே" (தேவா. 5:60.3)
"நொடிப்பது மாத்திரை நீறு எழக்கனை நூறினார்"
(தேவா. 7:44)

என்று கூறுவதிலிருந்து அறியமுடிகின்றது.
மாத்திரைகள் என்பதனை, நொடி என வழங்குதலை,

"நொடிதரு பாணிய பதலையும்" (மலைபடு. 11)
"மாத்திரையைச் சொல்லும் தாளத்தையுடைய
ஒருகண் மாக்கினை" (மலைபடு. 11.நச். உரை.)

"நொடி வரையின் மூலஎரி செய்து" (தேவா. 3:69.2)

"நொடியாம் அளவும் எய்தான்" (பெரிய.திரு. 5:10.8)

என்ற வரிகளிலிருந்து தெளிவாகிறது.

''குணம் என்னும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது'' (குறள். 29)

''கணம் படிந்துஒத்தி கங்குலும் பகலும்
கருத்தினால் கைதொழுது எழுவேன்'' (தேவா. 7:14:8)

இவ்விடங்களில், 'கணம்' என்பது மாத்திரை என்னும் சிறிய கால அளவையை ஒத்துக் காணப்படுகிறது. 'மாத்திரை' என்ற கால அளவு சோதிடர் கணக்கில் பெரும்பாலும் கருத்தில் கொள்ளப்படுவதில்லை.

கலை

மாத்திரை போன்றே நுட்பமான சிறு கால அளவைத் 'துடி', 'கலை' என்பர்.

'துடியும் கலையும்' தொடர் கால நுட்பம் (தெய்வப் பெயர்த் தொகுதி) என்று திவாகரம் எடுத்தியம்புகிறது. மாத்திரை, அளவு, நொடி, கணம் முதலான பல்வேறு பெயர்கள் இலக்கியங்களில் காணக்கிடக்கின்றன என்றாலும் சோதிடர் காலத்தைக் குறிக்க நாழிகை, நேரம், மணி என்ற சொற்களையே மிகுதியும் பயன்படுத்தி வருகின்றனர்.

நாழிகை

நாழிகை என்பது மாத்திரையைவிடவும் சற்றுப் பெரிய கால அளவை. இதுவே பொழுதை அளவிடும் சிறிய மூல அளவை. 'அல்லும் பகலும் அறுபது நாழிகையும்' என்பது பழமொழி. இன்று நேரம், மணி என்று குறிப்பிடுவனவற்றை, அன்றைய தமிழர் நாழிகையாகக் குறிப்பிட்டுள்ளனர். இன்று 2½ நாழிகை 1 மணி என்று கணக்கிடுகின்றனர். எனவே அன்று ஒரு நாளினை 60 நாழிகையாக வகுத்துள்ளனர். இதனை வெயில், விண்மீன் முதலானவற்றைக் கொண்டு அன்று கணக்கிட்டுள்ளனர். இன்று இக்கணக்கு அறிவியலின் வளர்ச்சி காரணமாகக் கருவிகள் மூலமாகக் கணக்கிடப் படுகிறது. இன்று பல புதிய கருவிகள் இந்நேரம் குறித்தறியப் பயன்படுகின்றன.

கடிகை

நாழிகையை அளவிடும் கருவியைக் 'கடிகை' என்று குறிப்பிட்டனர். 'யாண்டும் மதியும் நாளும் கடிகையும்' (29.1) என்ற சிலப்பதிகார அடிகளால் இதனை அறியலாம். காலத்தைக் கணக்கிடும் இக்கருவியைக் 'கடிகை' என்றும் 'ஆரம்' என்றும் அழைத்துள்ளனர். இக்கால வழக்கில் இச்சொல் மருவிக் 'கடிகாரம்' என்று வழங்கப்பட்டு வருவதாக டாக்டர் உ.வே.சாமிநாதையர் கூறுகின்றார். 'கடிகை வாள் ஆரம் மின்ன' (சீவக.2808). பெருங்கதையில் கடிகை ஆரத்தைக் கழுத்தில் அணிந்திருந்த செய்தியினை,

''கடிகை ஆரம் கழுத்தில் மின்ன'' (38.123)

என்ற வரி சுட்டுகிறது.

'காலன் நின்றிசைக்கு நாட்கடிகை கூறவே' எனக் கடிகை பற்றிக் கம்பராமாயணத்தில் (ஆரணி.570) காணப்படுகிறது. 'நின் குறுநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப' (58) என்று முல்லைப்பாட்டில் 'கன்னல்' வழி நேரம் உணர்ந்தமை சுட்டப்படுகிறது. நச்சர், முல்லைப்பாட்டு உரையில், கிடாரத்து நீரிலே காண்கின்ற நினது நாழிகை வட்டிலிற் சென்ற நாழிகை இத்தனையென்று சொல்லுகையினாலே, என்றியம்பி, கிடாரம் நீர் பெய்து வைக்கும் ஒருவகைப் பாத்திரம். இது கடாரம் என்று வழங்கும் என்று எழுதுகின்றார். நாழிகையை அளவிட்டுக் கூறும் ஒரு பாத்திரம் என்றதொரு கருத்து கம்பன் உரையிலும் அமைகின்றது (கன்னல் - நாழிகையை அளவிட்டுக் கூறும் கரகம் போன்ற ஒரு பாத்திரம்). அது முதலாகு பெயராய் அளவிடும் நாழிகைக்கு வழங்குவது (சுந்தர.351). எனவே, 'கன்னல்' என்பது ஒரு பாத்திர வகை என்பதும், அதனுள் அமையும் 'குறுநீர்' கொண்டு நேரத்தை அளப்பர் என்பதும் புலனாகிறது. மேலும் இக்குறுநீர்க் கன்னல் 'நாழிகை வட்டில்' என்றும் சுட்டப்பட்டது.

நாழிகையைக் கன்னல் என்றும் கூறியுள்ளனர். இதனைக் 'கன்னல் மூன்றும் களப்பட' (கம்ப.சுந்.351) என்ற அடியின் மூலம் அறிய முடிகின்றது.

நாழிகை வட்டிலினைப் பிற நாட்டவரும் பயன்படுத்தியுள்ளனர் என்பதை Hour Glass என்ற சொல் வரலாறு உணர்த்துகிறது.[8] நாம் நீர்க்கடிகை, மணற்கடிகை

8. Encyclopedia Britannica 11.P. 754

முதலானவற்றைக்கொண்டு நேரத்தை அளவிட, அவர்கள் மண் அல்லது சில நேரங்களில் பாதரசத்தைக் கொண்டு கணக்கிட்ட நிலையினைக் காணமுடிகிறது.

காட்டுத் துரும்பு கொண்டு வெயிலில் நாழிகை அளவிட்ட நிலையினை,

''காட்டுத் துரும்பு எடுத்துக் கண்டம் பதினாறு ஆக்கி
நீட்டில் கிடந்தது போக நின்றது நாழிகையாம்''

என்ற பாடல் காட்டுகின்றது. விரற்கடை என்பது ஒரு கண்டம். பதினாறு விரல்கடை அளவு துரும்பு (வைக்கோல் அல்லது புல்) எடுத்து வெயிலில் நிறுத்த வேண்டும். அத்துரும்பை எந்த இடத்தில் மடித்து வெயிலில் நிறுத்தினால் நிற்கும் பகுதியின் நிழல், கிடக்கும் பகுதியின் முனையுடன் சரியாய்ப் பொருந்துமோ அவ்வாறு அமைத்துக் கொள்ள வேண்டும். தரையில் கிடந்த துரும்பினை விட்டுவிட்டு நின்ற துரும்பின் கண்டம் எத்தனை என்று பார்த்து அதனை நாழிகையாகக் கணக்கிட வேண்டும். ஒரு நாழிகை 24 மணித்துளிகள் என்ற நிலையில் மணியை அளவிட வேண்டும். காட்டாக 7½ விரற்கடை என்றால் மூன்று மணி நேரம். காலைப் பொழுதாயின் சூரிய உதயத்திலிருந்து மூன்று மணியைக் கூட்ட நேரம் காலை ஒன்பது மணி. மாலையாயின் சூரியன் மறையும் நேரத்திலிருந்து மூன்று மணி நேரத்தைக் கழிக்கச் சரியான நேரம் தெரியவரும். இம்முறை அண்மைக்காலம்வரை இருந்ததாகத் தெரிகிறது. அதனைப் போன்று, தான் நிற்கத் தன் நிழல் விழும் இடத்தை அளந்து, அதனை நாழிகைகளாகக் கணக்கிட்டு நேரம் கண்டுபிடிக்கும் முறை இன்றும் கிராமப்புறங்களில் காணப்படுகிறது. இத்தகைய காலம் கணிக்கும் முறைகள் தமிழர் தம் நுண்ணறிவுத் திறனுக்குச் சான்றாக அமைகிறது.

நாழிகைகள் சேர்ந்து 'நாள்' என்னும் கால வரையறை உருவாகிறது (சிலப்.27:1). இதனை 'நாழிகையும் பல ஞாயிறு ஆகி' (8:107:7) என்று தேவாரம் கூறுகிறது. நாழிகைகள் சேர்ந்து யாமம் எனும் கால அளவை உருவாதலை,

''ஊழியும் யாண்டு எண்ணி யாத்தன; யாமமும்
நாழிகையானே நடந்தன'' (நான். 71)

என்ற அடி உணர்த்துகிறது. இதுபோன்று நாழிகை பற்றிய பல குறிப்புகளைப் பிற இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது. (தேவா.7:97.10; திருவாய்.2:7.4; பெரியதிரு 5:8.9; 8:5.6; 9:5.3; பெரியா.3:1.10; 4:1.8; திருவிரு.16).

முழுத்தம் (முகூர்த்தம்)

இலக்கியத்தில் 'முழுத்தம்' எனக் கூறப்படுவது முகூர்த்தம் என்பதையே குறிக்கின்றது. அதாவது குறித்த ஒரு பொழுதையே 'முகூர்த்தம்' என்பர். இது 3½ நாழிகை அல்லது 1½ மணி அளவு கொண்டது. இந்தக் கால அளவு தமிழ்ப் பேரகராதியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''முழுத்தம் ஈங்கு இது'' (சிலப்.26:28-30)
''மூழ்த் தத்தினுள்ளே'' (சீவக.165)

என்பனவற்றில் முகூர்த்தம் என்ற சொல் 'முழுத்தம்', 'மூழ்த்தம்' என்று வழங்கப்பட்டுள்ளது. மகாபாரதம் முகூர்த்தம் என்ற சொல்லாட்சியையே சிலவிடங்களில் தருகின்றது.

''செழுஞ்சுட ருச்சி யெய்திச்.சிறந்ததோர் முகூர்த்தந்
தன்னில்'' (1:2.76)
''முன்னா ளருக்கன் வேலை முழுகிய முகூர்த்தந்
தன்னில்'' (1:2.78)
''கோள்களி னிலையாற் றீமை கொண்டன முகூர்த்தம்
தன்னில்'' (1:2.80)

'முழுத்தம்' என்பதும், 'ஓரை' என்பதும் ஒரே பொருளைக் குறித்து வழங்கப்பட்டு வரும் சொற்களாகும்.

''மங்கலப் பெருங்கணி வகுத்த ஓரையான்'' (சீவக.2411)
''ஊழி னன்றியும் உறுவினை ஓரையின் முடிப்பான்''
(மேலது. 12:4)

ஒருசில இடங்களில் 'ஓரை' நட்சத்திரம் பொருந்திவரும் முகூர்த்த காலத்தைக் குறிக்கின்றது.

''மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை'' (தொல்.கள.44)
''இரேவதி வியாழ ஓரை'' (சீவக.3:14)

யாமம்

ஓர் இரவின் கால் கூறு 'யாமம்' என்று இலக்கியங்களில் வழங்கப்படுகின்றது. மதுரை மாநகரில் இரவின் ஒவ்வொரு யாமத்தும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை எடுத்தியம்பும் வகையில் மதுரைக் காஞ்சிப்பாடல் வரிகள் (615-686) அமைந்துள்ளன. அத்துடன் முதல் யாமத்தை, 'முந்தை யாமம்' (620) என்கிறது. முந்தைய யாமம் சென்றபின் மக்கள் தம் தொழில் முடித்து படுக்கைக்குச் செல்லுதலையும் தெரியப் படுத்துகின்றது. இரவின் நடுப்பகுதி 'அரைநாள்' (பெரும்.111), நடுநாள் (முல்லை.50) என்று கூறப்படுகிறது. 'ஒருதிறம் சாரா அரைநாள் அமையத்து' (நெடு.74) என்பதில் பகலின் நடுப்பகுதியும் அரைநாள் என்று கூறப்படுகிறது. மூன்றாம் யாமத்தில் ஊர்க்காப்பாளர் துயிலின்றிக் காவல் புரிந்தனர் என்பதை, 'மற்றை யாமம் பகல் உறக்கழிப்பி' என்னும் வரி மூலம் அறிய முடிகின்றது. இடையாமத்து ஊர்க்காப்பாளரை 'யாமங் கொள்பவர்' (37:9) எனப் புறநானூறு கூறுகிறது. மூன்றாம் யாமம் கழிந்ததும் மக்கள் துயிலுணரத் தொடங்கி விடுகின்றனர். இது இரவின் கடை யாமம் எனப்படுகிறது.

வைகறை

கடையாமத்தின் இறுதியே வைகறைப் பொழுதாகும். 'வைகறை யாமம் துயில் எழுந்து' என்று ஆசாரக்கோவை (4) கூறுகிறது. மக்கள் வைகறையில் துயிலெழுவதற்கு உதவியாக, வைகறை நெருங்கிவிட்டது என்பதனைக் கோழிகள் கூவி அறிவிக்கின்றன.

> ''பொழிமயிர் வாரணம் வைகறை இயம்ப'' (673)

என்று மதுரைக்காஞ்சி எடுத்தியம்புகிறது. மேலும் இந்நூல், 'இரவுத் தலைப்பெயரும் ஏம வைகறை' (686) என்றும் குறிப்பிடுகிறது. இதன்பின் காலைப்பொழுது தோன்றுவதை

> ''வைகறை யாமம் வாரணம் காட்ட
> வெள்ளி விளக்க, நள்இருள் கடிய'' (6:116-117)

என்று சிலம்பு எடுத்தோதுகின்றது.

சிறுபொழுது

பகல், இரவுப் பொழுதுகளின் சிறு கூறுகள் 'சிறுபொழுது' எனக் கூறப்படும். ஒரு நாளினை ஆறு சிறு பொழுதுகளாகப் பிரித்திருந்த நிலையினைத் தொல்காப்பியம் சுட்டுகிறது. அவை மாலை, யாமம், வைகறை, விடியல், எற்பாடு, நண்பகல் என்ற ஆறு பிரிவுகளாகும் (பொருள்.6, 8, 9). இன்று எற்பாடு தவிர பிற சொற்கள் வழக்கில் காணப்படுகின்றது.

''காலையும் பகலும் கையறு மாலையும்
ஊர் துஞ்சு யாமமும் விடியலும் என்று இப்
பொழுது இடைதெரியின் பொய்யே காமம்'' (குறுந்.30)

என வரும் பாடலில் ஐவகைச் சிறுபொழுதுகள் இடம் பெற்றுள்ளன. பகலும் இரவும் சங்கப் பாடல்களிலும், பிற்பட்ட பாடல்களிலும் பரவலாகக் காணப்படுகின்றன. காலை முதல் மாலை வரை உள்ள காலத்தைப் 'பகல்' என்கிறோம். இது சூரியன் புலப்படும் காலம். எனவே இதனைப் 'பகலை ஆக்குவோன்' என்னும் பொருளில், 'பகலவன்' என்றும் கூறுவர். இங்ஙனமே இரவின் இருளை நீக்கி ஒளி செய்கிறான் சந்திரன்.

''பகற்செய்யும் செஞ்ஞாயிறும்
இரவு செய்யும் வெண்திங்களும்'' (மதுரைக்.7-8)

என்ற அடிகள் மூலமாகப் பகல், இரவுப் பொழுதுகளுக்குக் காரணமாகச் சூரியனும் சந்திரனும் அமைகின்றன என்பதை அறிய முடிகிறது.

அந்தி

பகற் பொழுதிற்குரிய காலை, நண்பகல், மாலை என்னும் முப்பகுதிகளும் கூறப்பட்ட இடங்கள் இலக்கியங் களில் காணப்படுகின்றன. பொதுவாக, 'அந்தி' என்ற மாலைப் பொழுதைக் குறிப்பிடுதலேயன்றி, காலை, நண்பகற் பொழுதுகளையும் 'அந்தி' என்று இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன. இங்கே 'அந்தி' என்பது இருபொழுதுகள் சந்திக்கும் காலத்தைக் குறிக்கின்றது.

> ''காலை அந்தியும் மாலை அந்தியும்'' (புற.34:8)
> ''நண்பகல் அந்தி நடைஇடை விலங்கலின்'' (பொருந.46)

இவற்றுள் 'காலை அந்தி', 'மாலை அந்தி' என்பன இரவும் பகலும், பகலும் இரவும் சந்திக்கும் பொழுதுகளாகும். தற்காலத்தில் மாலையும் இரவும் சந்திக்கும் பொழுது மட்டுமே அந்தி என்று கூறப்படுகிறது.

நாள்

சூரிய உதயத்தை இலக்காகக் கொண்டு, பூமி ஒரு தடவை சுழலும் காலத்திற்குச் 'சூரியமான நாள்' என்று. பெயர். 'சராசரி சூரியமான நாள்' என்பது 24 மணி நேரம். ஒரு குறிப்பிட்ட நட்சத்திரத்தை இலக்காகக் கொண்டு, பூமி ஒருமுறை சுழலும் காலத்திற்கு 'நட்சத்திரமான நாள்' என்று பெயர். சராசரி நட்சத்திரமான நாள் = 23 மணி 56 நிமிடம். நாட்கள் முதலில் கோள்களின் பெயராகச் சுட்டப்பட்டு (சம்.தேவா.2:85:1) பின்னர் நாட் பெயர்களாகச் சுட்டப்பெற்றிருக்கின்றன.

> ''நாள்என ஒன்றுபோல் காட்டி'' (குறள்.334)
> ''ஒருநாள் எழுநாள் போல்செல்லும்'' (மேலது.1269)

என வருபவை பகல் இரவு சேர்ந்த காலப் பகுதியை 'நாள்' எனக் குறிப்பிடுகின்றன. பகலும் இரவும் மாறி மாறி வருகின்றன என்பதனை,

> ''இன்பமும் இடும்பையும் புணர்வும் பிரிவும்
> நண்பகல் அமையமும் இரவும் போல
> வேறுவேறு இயல ஆகி, மாறு எதிர்ந்து
> உளஎன உணர்ந்தனை ஆயின்'' (அக.327:1-4)

என்றஅடிகள் காட்டுகின்றன.

> ''நாள் போல் கழியல ஞாயிற்றுப் பகலே'' (புற.65:12)
> ''தினைமுதிரும் நாளில் மலரும் வேங்கை மரம்''

> ''நக்காங்கே யெயிறுடைந்த நறவ
> முல்லை நாள் வேங்கை'' (சீவக.1227)

என்பனவும் நாள் பற்றிய குறிப்புகளாக அமைகின்றன. நாள் என்ற சொல்லாட்சியைக் காட்டிலும் சங்கப் பாடல்களில்

இப்பொருள் அமைந்த 'வைகல்', 'பகல்' எனும் சொற்கள் மிகுதியும் பயின்று வந்துள்ளன.

வைகல் என்பது தங்குதல் கழிதல் என்றும், 'பகல்' என்பது பகுத்தல் என்றும் பொருள் தருகின்றன. தங்குதலும் ஒளியும் இருளும் அகலுதலும் கருதி, 'வைகல்' என்று பொழுதைப் பகுக்க வேண்டும் என்ற கருத்தில் 'பகல்' என்று வழங்கும் வழக்குத் தோன்றியிருத்தல் வேண்டும்.

''வைகல் வைகல் கைகவி பருகி'' (பொருந.158)
''வைகலும் வைகல் வரக்கண்டு'' (நால.4:9)

மேலும், இந்நாள் என்பது திங்களின் அங்கமாகவும் இருக்கிறது. ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியைப் பாராட்டிப் பேசும்பொழுது, ''ஒருநாளில் எட்டுத் தேரைச் செய்யும் தச்சன் ஒரு மாதம் கொண்டு செய்த தேர்ச்சக்கரத்தை ஒத்த வலிமை உடையவன்'' என்று அவனைப் பாராட்டுகிறார் (புற.87:2.4). இரவுப் பொழுது நீங்கிச் (சிலப்.17:5.10), சூரியன் உதிக்கக்கூடிய காலமே ஒரு நாளின் தொடக்கமாக அமைகிறது. மேலும், பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கு உரிய காலமாகப் பகற்பொழுது இருந்திருக்கிறது. நாட்காலை, நாட்சோறு, நாள்மோர், நாட்பலி, நாளிருக்கை என வருவன இதனைத் தெளிவுபெறச் செய்யும்.

''ஒருநாள் செல்லலாம் இருநாள் செல்லலாம்
பலநாள் பயின்று பலரோடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ'' (புற.101:1-3)

''ஒருநாள் வாரலன், இருநாள் வாரலன்
பல்நாள் வந்து பணிமொழி பயிற்றி'' (குறுந்.176:1-2)

என்ற அடிகள் நாள் என்பது பகல் பொழுது தொடங்கி இரவின் இறுதிவரை உள்ள பொழுதே என்பதைச் சுட்டுகின்றன.

நாட்கணக்குத் தெரிவதற்குச் சுவரில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கோடாக இட்டு அவற்றை எண்ணி வந்தனர் என்றும் தெரிய வருகிறது. சுவரில் நாட்கணக்கு

எழுதப்படுவதை, 'நாள் இழை நெடுஞ்சுவர்' (அக.*61:4*) என்ற அடியில் காணமுடிகிறது. தலைவனைப் பிரிந்துறை மகளிர், சுவரில் தாம் இழைத்த கோடுகளை எண்ணி, அவன் சென்ற கால இடையீட்டை நினைந்து, வருந்தி நிற்கும் நிலையையும் சங்கப்பாடல்கள் குறிப்பிட்டுள்ளன (குறுந்.*358:1-4*; அக.*289:9-11*; நால. *40:4*).

வாரம்

ஞாயிறு முதல் சனி வரையிலான ஏழு நாட்கள் கொண்ட ஒரு வாரம் என்ற கால அளவு சங்ககாலத்தில் காணப்படவில்லை. ஆனால் ஒன்றுக்கு ஏழு என்னும் ஒரு வழக்கு சங்கப்பாடல்களில் காணப்படுகிறது.

> ''எழுகளிறு மிதித்த ஒருபழம் போல'' (குறுந்:24:24)
> ''ஏழ்ஊர்ப் பொதுவினைக்கு ஓர்ஊர் யாத்த
> உலை வாங்கு மிதிதோல்'' (மேலது:172:5-6)

இவ்வரிகளில் எழு என்பது பல என்னும் பொருள்பட விளங்குகிறது. சிலப்பதிகாரத்தில் வாரம் என்ற சொல் இடம் பெற்றிருந்தாலும் ('வெள்ளி வாரம்' *23:133-137*), கிழமை என்ற பொருளிலேயே எடுத்தாண்டுள்ளது. அருணாசல புராணமும் (*9:22*) இப்பொருளையே தருகின்றது. ஞான சரநூல் சாஸ்திரத்திலுள்ள '**பக்கங் கரணம் யோகம் வாரம்**' (*1*) என்ற அடி, வாரம் என்ற பிரிவைக் காட்டுகிறது. நவ கோள்கள் என்று கோள்கள் ஒன்பதாகக் கூறப்பட்டாலும் அவற்றில் இராகு கேது நீக்கப்பட்டு எஞ்சியுள்ள ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்ற ஏழு கோள்களும் வாரப் பெயர்களாக வழங்கப்படுகின்றன. ஏழு கோள்களின் பெயரே நாட்களுக்குப் பெயராகி அவை சேர்ந்து வாரமாகியுள்ளது.

சம்பந்தர் தாம் பாடிய கோளறு பதிகத்தில்,

> ''ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
> சனி பாம்பு இரண்டும் உடனே
> ஆசு அறும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
> அடியார் அவர்க்கு மிகவே'' (2:85.1)

என நவ கோள்களைக் கூறுமிடத்து ஞாயிறு முதலாக எண்ணுதலைக் காணலாம்.

''இன்றையது அன்று கேண்மை
எமர்நுமர் எழுவர் காறும்
நின்றது கிழமை நீங்கா
வச்சிர யாப்பின் ஊழால்'' (சீவக.544)

ஊழின் காரணமாக எம்முடைய ஏழு தலைமுறைகளுக்கும், உம்முடைய ஏழு தலைமுறைகளுக்கும் இருந்த தொடர்பு தொடர்ந்து வந்து நீங்காது நிலைபெற்றுள்ளது என்று கூறும்போது வாரத்தின் ஏழு நாட்கள் ஏழு தலைமுறைகளுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

'கோளுடைக் கிழமை ஒப்பாய்' எனும் சிந்தாமணித் தொடருக்குப் பதிப்பாசிரியர் உ.வே. சாமிநாதையர் விளக்கம் தரும்பொழுது, கோளுடைக் கிழமையாவது ஞாயிறு முதலாகிய கிழமைகள் ஏழு; கோளுக்கும் அவற்றிற்கும் மிக்க உரிமை உண்டு என்பர்.

திருநாவுக்கரசர், 'இறைவன் ஏழு கிழமையாகவும் உள்ளான்' என்று புகழ்வதை,

''குருகுஆம், வயிரம்ஆம், கூறும் நாள்ஆம்
கொள்ளும் கிழமைஆம் கோளே தான்ஆம்'' (தேவா.6:15.1)
''கொள்ளும் கிழமை ஏழ்ஆனாய் போற்றி'' (தேவா.6:56.6)

என்ற அடிகள் காட்டுகின்றன.

திதி பக்கம்

சூரியனிலிருந்து சந்திரன் இடைப்பட்ட ஒவ்வொரு 12 பாகை தூரத்திற்கும் 'திதி' என்று பெயர். இந்தத் தூரம் 180 பாகைக்குட்படுமானால் வளர்பிறையாகும். 180 பாகைக்கு மேற்படுமானால் தேய்பிறையாகும். பிரதமை முதல் பௌர்ணமி வரை வளர்பிறையில் 15 திதிகளும் அப்படியே பிரதமை முதல் அமாவசை வரை தேய்பிறையில் 15 திதிகளும் உள்ளன. பிறை தோன்றி வளரும் வளர்பிறையைச் 'சுக்கில பட்சம்' என்கிறோம். முழுமதிக்குப் பின் தேய்ந்துவரும் தேய்பிறையைக் 'கிருஷ்ண பட்சம்' 'அமரபட்சம்' என்கிறோம். திங்களானதும் நிறைமதி நாளைத் தவிர பிறநாட்களில் மாற்றம் பெற்றுவரும் இயல்பினை உடையது.

"பிறை பிறந்தன்ன பின்ஏந்து கவைக்கடை" (பெரும்.11)

என்பது முதற்பிறை பற்றிய குறிப்பாகவும்,

"தொழுது காண்பிறை" (குறுந்.178:5)

என்பது இரண்டாம் பிறை பற்றிய குறிப்பாகவும்,

"ஒண்இழை மகளிர் உயர்பிறை தொழூஉம்
புல்லென் மாலை" (அக. 239:9-10)

என்பது மூன்றாம் பிறை பற்றிய குறிப்பாகவும்,

"எண்-நாள் திங்கள் வடிவிற்று ஆகி,
அண்-நா இல்லா அமைவரு வறுவாய்" (பெரும்.11-12)
"எண்-நாள் திங்கள் அனைய கொடுங்கரை" (புற.118.2)

என்பன எட்டாம் பிறை பற்றிய குறிப்புகளாகவும் இலக்கியங்களில் இடம் பெறுகின்றன.

"குடமுதல் தோன்றிய தொன்று தொழுபிறையின்
வழிவழி சிறக்க நின்வலம்படு கொற்றம்" (மதுரைக். 193-194)
'சிறுகோட்டுக் குழவித் திங்கள்' (பெரும்.383-384)

என்பன வளர்பிறை பற்றிய குறிப்புகளாக இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. வெண்மதியம் பதினைந்துநாள் முறையே வளர்ந்து முழு நிலவாக மாறிவிடுவதனை,

"மாக விசும்பின் வெண்திங்கள்
மூ-ஐந்தான் முறைமுற்ற,
கடல் நடுவண் கண்டன்ன" (புற.400:1-3)

என்ற பாடலடி காட்டுகிறது.

பிறையின் இருகோடும் (முனையும்) பொருந்தி வட்ட வடிவம்திருந்திக்காணப்பெறுவது நிறைமதி எனப்பெறுகின்றது.

"கோடு கூடு மதியம் முழுநிலா விளங்கும்" (புற.67:4)
"மணிநிற மைஇருள் அகல, நிலாவிரிவு
கோடு கூடு மதியம் இயலுற்றாங்கு" (பதிற்.31:11-12)

நிறைமதி நாளில் மிகுதியான விழா நடைபெறுவதால் பூர்ணிமாந்த முறையில் திங்களின் நிறைவையும், அடுத்த திங்களின் தோற்றத்தையும் கொண்டாடும் நோக்கமாக இருந்திருத்தல் கூடும்.

'உவாப் பதினான்கு' என உம்மைத் தொகையாக வழங்கப்பெறும் ஒரு பழந்தொடர் உவாவும் பதினான்கு திதியும் சேர்ந்தது பதினைந்து நாள் கொண்ட பக்கம் என்னும் பொருளை உணர்த்துகின்றது. 'அட்டமியும் ஏனை உவாவும் பதினான்கு' (47.1) எனும் ஆசாரக்கோவை அடியும் இதனை உணர்த்தி நிற்கின்றது.

இந்த உவா எனுஞ்சொல் சங்க இலக்கியத்தில் பயின்று வருதலை,

''உச்சி நின்ற உவவுமதி கண்டு'' (புற.2)
உவவுமதி உருவின் ஓங்கல் வெண்குடை'' (புற.8)

என்ற அடிகளில் காணமுடிகிறது. 'உவா' என்னுஞ்சொல் நிலா, யானை, கடல் முதலியவற்றைக் குறிப்பதாக உள்ளது. பண்டைத் தமிழர் பெரும்பாலும் நிலாவை 'உவவு' என்றும், உவா என்றும் அழைத்தனர். அக்காலத்தில் பௌர்ணமி, அமாவாசை என்ற சொற்கள் வழக்கில் இல்லை. முழுநிலா நாளை 'வெள்ளுவா' அல்லது 'வெள்ளுத்த உவா' என்றும் அமாவாசையைக் 'காருவா' அல்லது 'கறுத்த உவா' என்றும் தமிழர் அழைத்தனர். 'உவா' எனும் சொல் இலக்கியத்திலும் கல்வெட்டிலும் காணக் கிடக்கின்றன. பண்டைக் காலத்தில் பள்ளிச் சிறுவர்களுக்கு வெள்ளுவா, காருவா நாட்களில் விடுமுறை விடப்பட்டன. விடுமுறை நாளை 'வாவு' என்றும் உவாநாள் என்றும் அழைத்தனர். வாவு என்பது உவவு அல்லது உவா என்பதன் திரிபு என ஆராய்ச்சிப் பேரறிஞர் மயிலை சீனி. வேங்கடசாமி குறிப்பிடுகிறார். இன்றைக்கு விடுமுறையைக் குறிக்க ஆங்கிலத்தில் வழங்கும் 'லீவு' என்ற சொல் 'வாவு' எனுஞ் சொல்லை அடியொற்றி வழங்கியிருக்கலாம்.[9] சிலம்பில் பௌர்ணமியில் சந்திரன் 'உவவுற்ற திங்கள்' (சிலப்.7:52) என்று கூறப்படுகிறது.

வளர்பிறையும் தேய்பிறையும்

பிறை தோன்றிப் பதினைந்தாம் நாள் நிறைவு பெறும் வரை உள்ள பகுதியே வளர்பிறை. இப்பிறைகள் திங்களின் இயற்கைக் கலையாகிய ஒற்றைக் கலையுடன் சேர்ந்து,

9. உவாஏர், ப. வேங்கடேசன், ப.68.

பதினாறு கலைகளோடு கூடிய நிறைமதியாகத் தோற்றமளிக்கும். பின் இப்பதினாறு கலைகளோடு கூடிய மதி தேய்ந்து வரும். நிறைமதியை அமரர் உணவாகக் கொள்ளுதலினால் தேய்கிறது என்பது ஒரு புராணக் கொள்கை. இதுவே தேய்பிறைப் பக்கம்.

''அணிநிழல் வயங்கு ஒளிஈர் எண்தீம்கதிர்
பிறைவளர் நிறைமதி உண்டி
அணிமணிப் பைம்பூண் அமரர்க்கு முதல்வன்நீ'' (பரி.3:51-53)

வளர்பிறைப் பக்கம் 'அலர்தரு பக்கம்' முற்பக்கம் என்றவாறும், தேய்பிறைப் பக்கம் 'வழியது பக்கம்' பிற்பக்கம் என்றவாறும் சுட்டப்பெறும். நிறைமதி உவா 'பெரும்பக்கம்' எனவும் அமாவாசை நாள் 'இருள் உவா' எனவும் கூறப்படும். வையையில் நீர் மிகுதலுக்கும், குறைதலுக்கும் வளர்பிறை, தேய்பிறைகளில் மதியின் நிலைமையை ஒப்புமை காட்டும் பரிபாடலில் *(11:31-39)* இக்குறிப்புகள் காணப்படுகின்றன. பெருகுதலுக்கும், சுருங்குதலுக்கும் வளர்பிறை, தேய்பிறைகள் உவமம் காட்டப்படுதலை மதுரைக்காஞ்சி *(193-194)* குறிப்பிடுகின்றது.

திதி

திதி என்பதே இப்போது தேதியாகத் திரிந்துள்ளது.[10]

''சிவமுற முகூர்த்தம் வாரந் தினந்திதி'' (மகா.1:2.67)

என்ற வரியில் *'திதி'* என்ற சொல்லாட்சியைக் காண முடிகின்றது. மேலும், பௌர்ணமி, அட்டமி, ஏகாதசி, பிரதமை, அமாவாசை முதலிய திதிகளைப் பற்றிய குறிப்புகளைக் கீழ்க்கண்ட வரிகளில் காணமுடிகிறது.

''உவாத்திதி'' (ஆசார.43)
''அட்டமியும் ஏனை உவாவும் பதினான்கும்'' (ஆசா.47.1)
''அழகர் அட்டமி ஞான்று'' (சிலப்.23.134)
''பண்ஆர் பதினொன் கணங்கள்தம் அட்டமிநாள்''
''தீர்த்தம் ஆம் அட்டமிமுன் சீருடை ஏழுநாளும்'' (அப்.தேவா.4:50.2)
''ஆவணிரோ கிணி நாளி லமரபட்சத்
தஷ்டமியிற் சசியுதிக்கும் வேளை தன்னில்'' (அ.ச.77)
(அமரபட்சத்தஷ்டமி - தேய்பிறை அட்டமி)

---

10. *தினமணி, ப.III, ஏப்ரல் 123, 1996.*

"அரிதிவச மாமேகா தசி நன்னாளை" (எம்.சத.49:1)
"உவாக் கதிர் திங்கள் அம்மென்
கதிர்விரித்து உடுத்தது ஒத்தான்" (சீவக.12:67)
'இரண்டு உவாவும் அட்டமியும்' (மேற்படி.6:136)
'சயை பக்கம்' (மேலது.590)

(திருதியை, அட்டமி, திரியோதசி என்பனவற்றில் திருதியை 'சயை பக்கம்' என்று சொல்லப்பட்டுள்ளது). திருதியை, அட்டமி, திரியோதசி என்னும் திதிகள் சிந்தாமணியில் (1599) இடம் பெறுகின்றன.

"அட்டமியில் ஓதினால் ஆசானுக்கு ஆகாது
சிட்டருக்குப் பன்னான்கு தீதாகும் - கெட்டஉவா
வித்தைக்கு நாசம்ஆம் வெய்ய பிரதமையில்
பித்தரும் பேசார் பிழை" (பெருந்.258)
"குகுவுங் கிரகணமுங்' (த.பா.தி.150)
(குகு - அமாவாசை)

என்பன அட்டமி, ஏகாதசி, பிரதமை, திருதியை, அமாவாசை என்னும் திதிப்பெயர்களாகவும், உவாவும், பதினான்கு திதிகளும் பற்றிய குறிப்புகளாகவும் வருகின்றன. கம்பராமாயணம் யுத்த காண்டத்தில் அமாவாசை முதலான 'திதி' பற்றிய குறிப்புகள் வருகின்றன. நிறைமதி, குறைமதி (38) எனப் பௌர்ணமியும், அமாவாசையும் ஞானசரநூல் சாஸ்திரத்தில் சுட்டப்பெறுகின்றது. அட்டமி திதியைப் பட்டினி இருத்தற்குரிய நாட்களுள் ஒன்றென்பர் சைனர்; அட்டமியில் பகலில் உண்ணலாகாதென்பர் தரும நூலுடையார் (மணி.402).

"திதியே பக்கம்"
"பக்கம் முதலது நத்தை ஆகும்"
"பத்திரை என்பது இரண்டாம் பக்கம்"
"மூன்றே சயை பக்கம்"
"நான்கே இருத்தை"
"ஐந்தாம் பக்கம் பூரணை ஆகும்"

என்று திவாகரம் தெய்வப் பெயர்த் தொகுதி திதி பக்கங்களின் இயல்புகளைக்கூறுகிறது. பிங்கல நிகண்டின் இரண்டாவது தொகுதியான வானவர் வகையில் இச்சூத்திரங்கள் அப்படியே எடுத்தாளப் பெற்றுள்ளன.

இதுகாறும் சுட்டிய நாள், கிழமை, பக்கம் என்ற காலப்பிரிவுகளை ஒருங்கே குறிக்கும் வகையில் அமைந்த சீவகசிந்தாமணிப் பாடல் ஒன்று காணக்கிடக்கின்றது.

"நானக் கிடங்கு ஆடைநகர் நாகத்திடை நன்பொன்
வான் நக்கிடு மாட்சியது ஓர்மண்டபம் செய்கென்ன
மீனத்திடை நாள்கிழமை வெள்ளிசயை பக்கம்
கானத்திடை வேங்கைஎழக் கண்ணினர்கள் அன்றே" (590)

யோகம்

இது கோள்களின் சேர்க்கையைக் குறிக்கிறது. இது விஷ்கம்பம் முதல் வைத்ரிதி முடிய 27 யோகங்களாகும்.

கரணம்

என்ற பாடல் காட்டுகிறது. 'பொருந்த வானுறை நாள்களை நாடொறும் புணர்வோன்'' என்பதில் நட்சத்திரங்களின் கணவனான சந்திரன் ஒவ்வொரு நாளும் அந்தந்த நாளுக்குரிய நட்சத்திரத்தைக் கூடுவான் என்ற குறிப்பு வருகிறது. ''நாள் நிரைத்து அநேக தாரகா கணமாம் நவமணியுடன் நவவிதங் கொள் கோள்நிரைத்து ஈரேழ் புவனமும் வலஞ்செய்'' என்பதில் நட்சத்திரம், கோள்கள் பற்றிய குறிப்பு வருகிறது.

திவாகரம், பிங்கலம் என்னும் நிகண்டுகள், அசுவினி முதல், இரேவதி ஈறாக இருபத்தேழு நட்சத்திரங்களுக்கும்

உரிய பெயர்களைத் தெய்வப் பெயர்த் தொகுதியிலும், வானவர் வகையிலும் குறிப்பிட்டுள்ளன.

மீன்கள்

ஓர் அண்டம் என்பது சுமார் பத்தாயிரம் கோடி சூரியன்கள் அல்லது நட்சத்திரங்களைக் கொண்டது. இப்படிப்பட்ட நட்சத்திரங்கள் அடங்கிய அண்டங்களின் கோடானுகோடியின் தொகுப்பே பிரபஞ்சம் எனப்படுகிறது.

இலக்கியங்களில் சோதிடத்தில் கூறப்படும் 27 நட்சத்திரக் கூட்டங்களைத் தவிர, வானிலுள்ள ஆயிரக் கணக்கான விண்மீன்களைப் பற்றியும், சில தனித்த விண்மீன்களின் பெயர்களைப் பற்றியும் வருவதைக் காணமுடிகின்றது.

விண்மீன்கள்

''மீன்..... வானத்து'' (புற.109:9-10)
''வான்மீன் பலபூப்பின்'' (புற.129:7)
''வானத்து வயங்கித் தோன்றுமீன்'' (புற.367:15)

இங்ஙனம் 'எறிகடல் ஏழின் மணல் அளவாக' (திரு.229) விண்மீன்கள் இருப்பினும் 27 விண்மீன்களே நாள்மீன்களாகக் கொள்ளப்பட்டன.

சில விண்மீன்கள் சிலபோது பூமியின் ஈர்ப்பால், பூமியின் வளிமண்டலத்தில் நுழையும்போது வேகமாக வளிமண்டலத்தோடு மிக்க உராய்வு விசை ஏற்படுவதால் தீப்பற்றிக் கொள்ளும். இதனால் வால்மீன் எரிமீன் ஆகிவிடும்.

வீழ்கொள்ளி

வீழ்கொள்ளி, உற்கம், எரிமீன் என அழைக்கப்படும் விண் வீழ்கொள்ளி விண்ணில் சடப்பொருள்களின் சிறு துகள் பறந்து வருவதாலும் உண்டாகின்றன என்றும் கூறப்படுகிறது. இவை விண்ணில் ஒரு நொடிக்கு 45 மைல் வேகத்தில் செல்கின்றன. பூமியிலிருந்து 50 முதல் 100 மைல் தொலைவில் ஒன்றுடன் ஒன்று உராய்வதால் இவை எரிகின்றன. இக்காட்சியே வீழும் கொள்ளிபோல் தோற்றமளிக்கின்றது. அரிதாக Metecrites எனப்படும் பேருருவுடைய பொருள்கள் தரையைத் தொடுகின்றன.

வால்மீன்கள், எரிமீன்கள், எரிகற்கள் சோதிடத்தில் உபகோள்கள் அல்லது குளிகாதியர்கள் எனப்படுகின்றன. பெரும்பாலும் எரிமீன்கள் விண்ணிலே எரிந்து சிறு துகள்களாகிவிடுகின்றன. இவ்விதம் எரிகொள்ளிகள் விண்ணில் தென்படுவது, கெட்ட நிகழ்ச்சிகளின் முன்னறிவிப்புகள் எனப் பண்டைத் தமிழர் நம்பினர்.

நான்கு பக்கத்திலும் விண்வீழ் கொள்ளி அவலமிகு செயல் நிகழ்வைக் குறிக்குமென நம்பியதை,

''திசையிரு நான்கு முற்க முற்கவும்
கனலினரியன காணா'' (புற.41:45)

என்ற அடிகள் வெளிப்படுத்தி நிற்கின்றன. வியாழன், சனி, வெள்ளி, செவ்வாய், சந்திரன் போன்ற கோள்களின் இயக்கத்தினால் எரிமீன் பாதையில் தடங்கல் ஏற்படுகிறது. அவை திசை திருப்பப்படுவதால் பூமியிலோ, சந்திரனிலோ, மற்ற கோள்களிலோ விழுந்து பெரும் நாசத்தை விளைவிக்கின்றது. தம் ஒளி கெடாதிருக்க வேண்டுவோர் மின்னல், எரிமீன் முதலியவற்றைக் காணுதல் கூடாது என்பதனை,

''மின்னொளியும் வீழ்மீனும் வேசையர்கள் கோலமுந்
தம்ஒளி கெடாதிருக்க வேண்டுவேண் நோக்கார் பகற்கிழவோன்
முன்னொளியும் பின்னொளியும் அற்று'' (ஆசா.51)

என்ற பாடல் காட்டுகின்றது. இதில் எரிமீன் பற்றிய குறிப்பு வருகின்றது. இவை குறித்த காலத்தில் மிக்க வலுவுடன் காட்சி தருபவை. இக்கற்களைப் பார்க்க நேரிட்டால் நினைவாற்றல் குறைவு ஏற்படும் என்று மக்கள் நம்புவதால் அங்ஙனம் பார்க்க நேர்ந்தால் உடனே நீர்நிலைகளைச் சென்று காண்பர்.

வால் நட்சத்திரம்

சூரியக் குடும்பத்திலுள்ள கோள்களைப் போலவே, வால்மீன்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன. எனவே, அவை ஞாயிறு குடும்பத்தோடு சேர்க்கப்படுகிறது. விண்வீழ் கொள்ளி போன்ற வால் வெள்ளியும் தீய பலன்களைத் தரும் என மக்கள் நம்பினர். வால்வெள்ளி, வால்நட்சத்திரம், தூமகேது, தூமம் எனவும் கூறப்படுகிறது. பல கோடி

மைல்களுக்கு அப்பால் உள்ள விண்மீன்கள் ஒளிச் சிதறல் காரணமாக நமது கண்ணுக்குப் புலப்படுகின்றன. சில நேரங்களில் கோள்களுக்கு இடையே ஏற்படும் ஈர்ப்பு விசை காரணமாக இடம் பெயர்ந்து விண்வெளிப் பாதையில் விலகிய கோள் அதிவேகமாக விரைந்து வரக்கூடும். இவற்றைத்தான் 'வால்மீன்' அல்லது 'வால்நட்சத்திரம்' என்று கூறுகிறோம். சிதறிய அமைப்போடு கூடிய இக்கோள் நெடிய வால் போல் காட்சி தரும். இதற்குக் காரணம் புவிஈர்ப்பு விசையோடு அது சுற்றுவதே. வால்மீன்கள் சூரியனை நெருங்கும்போது வெப்பம் காரணமாய் விரிவடைவதாலும் வால்மீன் என அழைக்கப்படுகிறது. வால்மீன்கள் வெப்பநிலை மீட்சியில் விசைக்கு மேற்படும்பொழுது வெடித்துச் சிதறுகிறது.

தூமகேதுக்களைத் திவ்யம், பௌமம், அந்தரிசம் என மூவகைப்படுத்தி ஆயிரக்கணக்கான தூமகேதுக்கள் உள்ளதாகக் கருதினர். இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட வால்மீன்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. பொதுவாகத் தூமகேதுக்கள் பலவாறாகக் காணப்பட்டாலும் அவை யாவும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை. வடதிசையில் தோன்றும் தூமகேதுக்களினால் நன்மை உண்டு. மூன்றுவிதமான நிறத்தில் மூன்று தலையுடன் தோற்றமளிக்கும் ஒரு தூமகேது எந்தத் திக்கில் வேண்டுமானாலும் தோற்றமளிக்கும் என்றும், இதனால் மிகப்பெருங் கேடுகள் உலகில் உருவாகும் என்றும் கூறியுள்ளனர்.

வால்நட்சத்திரத்தின் தோற்றக் காலத்தில் பிறந்தவர்கள் ராஜ யோக அமைப்பினைப் பெற்றிருப்பினும் இவர்களுடைய நற்பலன்கள் குறையும் வாய்ப்பு ஏற்படும். மேலும், 'பாவ குதூகலம்', 'முகூர்த்தப்பதவி' முதலிய நூல்களில் தூமகேதுவின் தோற்றக் காலத்தில் நற்செயல்களைச் செய்யக் கூடாது எனக் கூறுகின்றனர். சோதிடத்தில் தூமகேது எனப்படும் இவற்றின் காலம் நாள்தோறும் சகுனப்படி பஞ்சாங்கத்தில் குறிக்கப் பட்டிருக்கும். இவை வாழ்நாளை நிர்ணயிக்கும் தன்மையின. சூரியக் குடும்பத்தின் தன்மையையும், உயிரின இரகசியத் தையும் அறிய வால்மீன்கள் பெரிதும் உதவுகின்றன.

இவ்வால்வெள்ளி பல நூற்றாண்டுகளுக்கு ஒருமுறை கதிரவனைச் சுற்றி வந்து கொண்டிருக்கின்றது. இதன் தோற்றம் உலகிற்குப் பெருந்தீங்கு விளைவிக்கும் என்பதை,

"அகன் ஞாலம் பெரிது வெம்பினும்
மிகவானுள் எரி தோன்றினும்
குளமீனொடுந் தாட்புகையினும்" (புற.396)

என்ற அடிகள் குறிப்பிடுகின்றது. 'மைமீன் புகையிலும் தூமம் தோன்றினும் (புற.17) என்ற அடியும் 'கரியவன் புகையினும் புகைக்கொடி தோன்றினும்' (சிலப்.10:102.3) என்றவடியும் இதனை மெய்ப்பிக்கின்றன.

கண்ணன் பிறந்தபொழுது வால் நட்சத்திரம் தோன்றக் கம்சன் கலங்கினான் எனப் 'பாகவதம்' கூறுகிறது.

பாண்டிய நாட்டில் வால் நட்சத்திரம் தோன்றியபொழுது கொடிய பஞ்சம் ஏற்பட்டதாகவும், அதன் காரணமாகப் பாண்டிய மன்னன் தன் அவையில் இருந்த புலவர்களை யெல்லாம் பிற நாடுகளுக்குச் சென்றுவிட்டு, நாட்டின் பஞ்சம் நீங்கிய பிறகு மீண்டும் வாருங்கள் என்று கூறியதாகவும் ஒரு குறிப்பு இறையனார் களவியல் உரையில் காணப்படுகிறது.

அமெரிக்க நாட்டைச் சேர்ந்த 'பூட்ஸ்' சகோதரர்கள் அண்மைக்காலத்தில் ஒரு வால் நட்சத்திரத்தைக் கண்டு அதற்கு அவர்கள் பெயரையே சூட்டியுள்ளனர். பொதுவாக வால்மீன்களின் பெயர்கள், அவ்வால்மீன்களைக் கண்டுபிடித்தவர்களின் பெயர்களாலேயே வழங்கப்படுகின்றன.

வடமீன் (அருந்ததி)

வானத்து வடவயின் விளங்கும் ஏழு முனிவருள் வசிட்ட முனிவரின் பத்தினி அருந்ததி. அருந்ததி, சாலினி என்று குறிப்பிடப்படுகின்ற இவ்வடமீனானது பெண்களின் கற்போடு தொடர்புபடுத்தப்பட்டு மக்களால் வழிபடும் தன்மையுடையதாகக் காணப்படுகிறது. இது கற்புக்கரசி நட்சத்திரமாக விளங்குவதாகக் கருதப்படுகிறது. திருமண மானதும் புதுமணமக்களை அருந்ததி நட்சத்திரத்தைப் பார்க்கச் செய்கின்ற 'அம்மி மிதித்து அருந்ததி பார்த்து' என்ற வழக்கு

இன்றும் நம்நாட்டில் நிலவி வருகிறது. இதனைக் குறித்த இலக்கியச் செய்திகள் பல காணப்படுகின்றன.

"வடமீன் விளங்குஆல் உறைஎழு மகளிருள்
கடவுள் ஒருமீன் சாலினி" (பரி.43-44)
"பெருநல் வானத்து வடவயின் விளங்கும்
சிறுமீன் புரையும் கற்பின், நறுநுதல்" (பெரும்.302-3)
"இருண்டு தோன்று விசும்பின் உயர்நிலை உலகத்து
அருந்ததி அனைய கற்பின்" (ஐங்.442:3-4)
"வடமீன் புரையும் கற்பின் மடமொழி" (புற.122:8)
"வடமீன் போல் தொழுது ஒத்த வயங்கிய கற்பினாள்" (கலி.2:21)
"விசும்பு வழங்க மகளிருள்ளும் சிறந்த செம்மீன்
அனையள் நின்தொல் நகர்ச்செல்வி" (பதிற்.31:27-28)
"சாலி ஒருமீன் தகையாளை" (சிலப்.1:51)
"தீதிலா வடமீனின் திறம் இவள்திறம்" (சிலப்.1:27)
"அங்கண் உலகில் அருந்ததி அன்னாளை" (சிலப்.1:63)

எழுமீன்

விண்ணில் காணப்படும் ஏழு நட்சத்திரங்கள் அடங்கிய நட்சத்திரத் தொகுதிக்குச் 'சப்தரிசி மண்டலம்' என்று பெயர். சப்தரிசிகள் என்று கூறப்படுகின்ற ஏழு ரிசிகளின் மனைவியர் சிவபெருமானைக் கண்டு மையல் கொள்ள, அதனால் சினங்கொண்டு ரிசிகள் எழுவரும் சிவன்மீது போர் தொடுக்கின்றனர். சிவன் அவர்களை அழித்து, பின் அவ்வெழுவரையும் ஏழு நட்சத்திரத்தினைக் கொண்ட சப்தரிசி மண்டலமாக விண்ணில் விளங்க அருள் செய்தான் என்ற புராணக்கதை ஒன்று மக்களிடையே நிலவி வருகிறது.

"மைஅற விளங்கிய மணிநிற விசும்பில்
கைதொழு மரபின் எழுமீன் போல" (நற்.231:1-2)

என்னும் பாடல் அடிகளுள் எழுமீனின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

அகத்தியன்

அகத்தியன் என்னும் நட்சத்திரம்தான் தற்போது இருக்கும் இடத்திலிருந்து மிதுன ராசிக்குச் செல்லுவதாக ஒரு குறிப்புப் பரிபாடலில் வருவதனை,

"பொதியில் முனிவன் புரைவரை கீறி
மிதுனம் அடைய" (11:11-12)

என்ற அடிகள் காட்டுகின்றன.

சோதிடச் செய்திகளைத் தாங்கிய நட்சத்திரக் குறிப்புகள் தமிழ் இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. சோதிடத்தில் நட்சத்திரங்கள் சிறப்பிடம் பெறுவதால் இவை இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள இடங்கள், எந்தச் சூழ்நிலையில், எக்கருத்தினை வெளிப்படுத்த இடம் பெற்றுள்ளன என்பன போன்றவை முழுமையாக ஆய்வுக்குட்படுத்தப்பெறின் மன்னர், மக்கள் ஆகியோர் வாழ்வியலில் சோதிடம் பெற்றிருந்த இன்றியமையா இடத்தினையும், மக்கள் பண்பாட்டிலுள்ள சில ஒழுகலாறு களையும் அறிய இயலும்.

இராசி மண்டலம்

இராசி மண்டலம் என்பது நீள்வட்ட வடிவில் வானத்தில் கீழ்மேலாக விரிவடைந்திருக்கும் பகுதியாகும். இதனுள் 27 நட்சத்திரங்களும் 12 இராசிகளும் அடங்கியிருக்கின்றது. வானத்தில் இது நீள்வட்ட வடிவில் காணப்பட்டாலும் சோதிடத்தில், வசதி கருதி சதுர வடிவில் 'கிரகச் சக்கரம்' அல்லது 'இராசிக் கட்டம்' என்ற பெயரில் பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வோர் இராசியும் அந்த இராசியுள்ள நட்சத்திரக் கூட்டங்களின் சேர்க்கையால் ஏற்படும் உருவ அமைப்பினைப் பெயராய்ப் பெற்றிருக்கின்றன. காட்டாக மேடராசியில் இருக்கும் அசுவினி, பரணி, கார்த்திகையின் முதல் பாதம் என்ற மூன்று நட்சத்திரக் கூட்டங்களின் கூட்டு வடிவம் ஓர் ஆட்டின் உருவத்தைப் போல் அமையப் பெறுவதால் மேடராசியின் குறியீடு 'ஆடு' எனப்படுகின்றது.

தமிழ்ப் படைப்புகளுள் 12 இராசிகள் பற்றிப் பரிபாடலிலும், இராசி மண்டலம் பற்றி நெடுநல் வாடையிலும் குறிப்புகள் காணக்கிடக்கின்றன. "ஆறு இருமதியினும் காருக வடிப்பயின்று" (26:25) என்று சிலப்பதிகாரத்தில் வரும் அடியில் ஆறு இருமதியினும் என்பது இராசி பன்னிரண்டிலும் என்ற பொருளைத் தருகிறது.

பகல் இரவுக் காலங்கள் ஆகாய முதலாக ஆறு ஆறு நாழிகைகளாக உள்ளன. இராசியும் முப்பது கலைகளாக வரும். ஆண்டுக்குக் கலைகள் முந்நூற்றறுபது. இதை வகுத்துப் பார்க்கச் சூரியன் செல்லும் பன்னிரண்டு இராசிகள் விளங்கும் என்பதனை,

''வந்திடும் ஆகாசம் ஆறது நாழிகை
வந்திடும் அக்கரம் முப்பதி ராசியும்
வந்திடு நாளது முந்நூற் றறுபதும்
வந்திடு ஆண்டு வகுத்துரை யவ்வியே'' (1268)

என்ற திருமந்திரப் பாடல் சுட்டுகின்றது. இச்சூரியன் செல்லும் வீதி மூன்று வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது என்பதனை இந்நூல்,

''அவ்வின மூன்றுமவ் வாடாது வாய்வருஞ்
செவ்வின மூன்றுங் கிளர்தரு வேரதாஞ்
சவ்வின மூன்றுந் தழைத்திடுந் தண்டதாம்
இவ்வின மூன்றும் இராசிக ளெல்லாம்'' (1269)

என்ற பாடலில் உணர்த்துகின்றது. இச்செய்தியினைப் பரிபாடல் வரிகளிலும் காண முடிகிறது. (11:1-3). இடபவீதி, மிதுனவீதி, மேடவீதி என்ற 12 இராசிகளும் மூன்றாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வீதிக்கும் 4 இராசிகள் அடங்குகின்றன என்பது இவற்றில் சுட்டப் பெறுகின்றன. வானில் அமைந்துள்ள இராசிகளின் வடிவ அமைப்பினைக் கூர்ந்து நோக்கி அதற்கொப்பக் கற்பனை நயத்துடன் இலக்கியங்களில் பல காட்சிகளை அமைத்துள்ளனர். தற்குறிப்பேற்றவணியாக அமைந்துள்ள அவை எண்ணுந் தோறும் சுவை மிக்கதாகத் திகழ்கின்றன. அவற்றுள் சில இங்குத் தரப்பட்டுள்ளன.

திருமலைச் சாரலில் பசியுடன் புலியொன்று திரிந்து கொண்டுள்ளது. அது வானத்தில் ஆட்டுக்கிடா வடிவுள்ள மேட இராசியைப் பார்த்துச் சீறுகின்றது என்பதனை,

''வாடப் பசித்த வரியுழுவை வாலாட்டி
மேடத்தைப் பார்த்துறுக்கும் வேங்கடமே'' (திருவேங்.16)

என்ற பாடல் காட்டுகின்றது.

கடக ராசி

மலையில் குரங்குகள் குதித்து விளையாடுகின்றபோது மலைமுகட்டில் நண்டு வடிவமான கடக ராசி பொருந்தி வர அதனைக் கண்டு அஞ்சியோடிய காட்சியை,

''தாவி வரும் வானரங்கள் தண்குவட்டில் கற்கடகம்
மேவிவரக் கண்டோடும் வேங்கடமே'' (மேலது.17)

என்ற பாடல் காட்டுகின்றது.

சிம்ம ராசி

பிடி களிற்றிடம் கோபித்துக் கொண்டு அதனிடம் வெறுப்புக் காட்டி நிற்கின்றது. இது வானத்தில் தற்செயலாக சிங்க வடிவமான சிங்கராசியைக் காணுகிறது. உடனே பிடி அஞ்சி அச்சமிகுதியால் ஊடலை மறந்து, ஓடி ஆண் யானையைத் தழுவுகின்றது என்பதனை,

''ஒண்சிந்து ரத்தைவெறுத் தூடும் பிடிவேழம்
விண்சிங்கம் கண்டணைக்கும் வேங்கடமே!'' (மேலது.18)

எனக் காட்டும் இவ்வடிகளில் சிம்ம ராசி பற்றிய குறிப்பு வருகிறது.

கன்னி ராசி

இராசி மண்டலம் அழகிய மணவாளதாசர் என்ற பிள்ளைப் பெருமாள் அய்யங்காரின் கற்பனையில் பலவிதமாகச் செயல்படுகின்றது. மலையின்மீது ஓங்கி வளர்ந்துள்ள மூங்கிலுக்கு நேரான பெண் வடிவமான கன்னியாராசி வருகின்றது. இக்காட்சி கழைக்கத்திபோல் தோற்றம் அளிக்கின்றது என்பதனை,

''மாதுமடக் கன்னிகழை வந்தணுகுக் கம்பத்தின்
மீதுநடிப் பாளொக்கும் வேங்கடமே'' (திரு.19)

என்றவாறு சுட்டுகின்றார்.

துலா ராசி

வானத்தில் நிறை கோல் வடிவமான துலாராசி காணப்படுகின்றது. மலைக் குறவர்கள் அதைக்கொண்டு

தாம் திரட்டி வைத்திருக்கும் இரத்தினக் கற்களை எடை போடுகின்றனர் என்று காட்டத் திவ்வியகவி,

> "மன்னு குடிக்குறவர் வானூர் தூலத்திடையே
> மின்னு மணிநிறுக்கும் வேங்கடமே" (திரு.20)

என்ற அடிகளைப் பயன்படுத்துமுகனாய் துலாராசி பற்றிய குறிப்பினைத் தருகிறார்.

தனுசு ராசி

தினைப் புனத்தைக் காக்கின்ற குறவர்கள் தண்மதியில் கலங்க, தோற்றமாக இயங்கும் மான் வடிவத்தைக் காண்கின்றனர். அதைத் தினைப்புனத்தை மேயவரும் மான் எனக் கருதுகின்றனர். உடனே வானத்தில் வில் வடிவமாகக் காணப்பெறும் தனுசுராசியைக் கைவில்லாகக் கொண்டு அம்பு எய்ய முயலுகின்றனர் என்பதை,

> "கொல்லைக் குறவர் குளிர்மதிமா னைக்ககன
> வில்லைக் குனித்தெய்யும் வேங்கடமே" (திரு.21)

என்ற அடிகள் காட்டுவதன் வழி தனுசுராசி பற்றிய குறிப்புப் பெறப்படுகின்றது.

சூரியன் டிசம்பர் மாதம், அதாவது மார்கழித் திங்களில் தனுசுராசியில் நிற்கும் என்ற கணிதவியல் நிலையினை,

> "தீபம் உற்று மேல்உலவு செஞ்சுடர்
> சாபம் உற்றழி சாபம் தீர்த்துஎமை
> ஆபத்து இனை அளிப்ப தாய்மடி
> தாப தத்து எழீஇ தரையில் தோன்றினான்" (தேம்.10:97)

> "மாதம் மார்கழி வைக லையைந்தாய்
> ஏதிலா நிசிக்கி ருத்தை மூவைந்தாய்
> ஆதி நாளென ஆதி நாதனைக்
> காதல் நாயகி களிப்பில் நல்கினாள்" (தேம்.10:96)

என்ற பாடல்கள் காட்டுகின்றன.

மகர ராசி

ஒரு மூங்கில் வானுற ஓங்கி வளர்ந்து நிற்கின்றது. அதற்கு நேராகச் சுறாமீன் வடிவமான மகரராசி வந்து தங்கும்போது அது மன்மதனது கொடிமரம் போல் காட்சி அளிக்கின்றது என்பதனை,

"தேன் ஏறித் தேன்வைக்கும் திண்கழைமேல் விண்மகரம்
மீன்ஏறி வேள்கொடியாம் வேங்கடமே" (திரு.22)

என்ற அடிகள் காட்டுகின்றன. மன்மதன் சுறாமீன் வடிவத்தைக் கொண்ட கொடியை உடையவன்; அதனால் அவனுக்கு வடமொழியில் 'மகரத்வஜன்' என்றும், தென்மொழியில் 'சுறவக்கொடியோன்' என்றும் பெயர்கள் உண்டு.[8]

கும்ப ராசி

திருவேங்கடமலையில் மரக்கொம்பொன்றில் தேன்கூடு கட்டப் பெற்றுள்ளது. வானத்தில் செல்லுகின்ற பிறைச் சந்திரனது வளைந்த வடிவமான கொம்பு அத்தேனிறாலில் பட்டு அது உடைகின்றது. அதிலிருந்து ஒழுகும் தேன் வானத்தில் அதற்கு நேராகக் கீழே வந்து பொருந்திக் குடவடிவமான கும்பராசியில் நிறைகின்றது என்பதனை,

"ஒள்கொம்பில் தேன்இறால்
ஊர்மிறைக்கோட் டாலுடைந்து
விண்கும்பம் வாய்திறக்கும் வேங்கடமே" (திரு.23)

என்ற அடிகள் காட்டுகின்றன.

மீன ராசி

சூரியன் மீனராசிக்கு வரும் காலம் பங்குனித் திங்கள் என்பதனை,

"மாசறு துறவோர் அன்ன வடதிசை உள்ளி வெய்யோன்
காசறு மீனம் உற்றுக் களித்தப் பங்குனிநாள்" (தேம்.7:1)

என்ற அடிகள் காட்டுகின்றன.

அழகிய மணவாளதாசர் தம்முடைய திருவேங்கட மாலையில், 12 இராசிகளில் மேடம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு மகரம், கும்பம் ஆகிய எட்டு இராசிகளைத் திருவேங்கடமாலையின் கற்பனைத் திறனைக் காட்டும் போக்கில் பயன்படுத்துகின்றனர். இதன்வழி இவரது வானியல் அறிவும் அழகுற வெளிப்படுத்தப்படுகின்றது.

---

8. தமிழில் அறிவியல் அன்றும் இன்றும், ப.16.

கோள்களும் நட்சத்திரங்களும் இயங்கும் வீதிகளைக் குறித்துப் பிங்கல நிகண்டு கூறும் செய்திகள், இராசிகள் பற்றிய தெளிவை ஏற்படுத்துவனவாக அமைகின்றன.

''மேடவீதி, இடபவீதி மிதுனவீதி எனஒரு மூன்றே,
அவைதாம் இருசுடர் முதலிய இயங்கு நெறியே'' (பிங்.2:182)
''இடபம், சிங்கம், மிதுனம், கடகம்
இணைய நான்கும் மேடவீதி'' (பிங்.2:283)
''மீனம், மேடம், கன்னி, துலாமும்
ஆன இடபவீதிக்கு அமைந்தன'' (பிங்.2:184)
''வில்லு, மகரம், குடமே, விருச்சிகம்
சொல்லிய மிதுன வீதித் துறையே'' (பிங்.2:185)

இவற்றுள்,

''சொன்ன இராசி தொகுத்த மாதங்கள்
மன்னிய கதிர்முதல் கோள்வரு நெறியே'' (பிங்.2:186)

முற்கூறிய மூன்று இராசிகளுள் இடபம் முதல் விருச்சிகம் ஈறாகத் தொகுத்த மாதங்களில் சூரியன் முதலிய கோள்கள் வரும் என்பது குறிக்கப்பட்டுள்ளன.

அண்டத்திலுள்ள ஒன்பது கோள்களையும் 27 நட்சத்திரங்களையும், சூரிய சந்திர கதிக்கு ஏற்ப, அவற்றின்கண் நிகழும் பரிவர்த்தனைகளையும் எண்ணிப் பார்த்து இலக்கிய உவமைகளாகத் தந்துள்ள பாங்கு போற்றத்தக்கதாகக் காணப்படுகின்றது. இலக்கியங்களில் பரணி, சித்திரை, உரோகிணி, கார்த்திகை போன்றவை பரவலாகப் பயன்படுத்தப்பட்டும், திருவாதிரை, திருவோணம், பூசம், உத்திரம், உத்திரட்டாதி முதலிய விண்மீன்கள் சமயச் சார்போடு தொடர்புபடுத்தப்பட்டும் பேசப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இலக்கியத்தில் மெருகூட்டி மிகைப்படுத்திக் கற்பனை கலந்து செய்திகள் கொடுக்கப்பட்டிருந்தாலும், நுணுகி நோக்குகிறபோது அக்கால மக்கள் உணர்ந்திருந்த வானியல் செய்திகள் முழுமையாக வெளிப்படுகின்றன. அவை அனுபவத்தின் வழி பயன்படுத்தப்பட்டு இருந்ததால்தான் அவை பற்றிய குறிப்புகளை இலக்கியத்திலும் காண முடிகின்றது. எனவே, வானியல் நிகழ்வுகளை இயற்கைக்கண் கொண்டு மட்டும் நோக்காது, அறிவியல் வழி நின்று, வானியல் நோக்கிலும் கூர்ந்து நோக்கியிருப்பது

படைப்பாளர்களின் உள்ளத்தில் அவர்களுக்கிருந்த வானியல் அறிவினைப் புலப்படுத்துகின்றது. உணர்ச்சி நிலையில் இருந்து உயர்ந்து, உணர்வு நிலைக்கு வந்து, அவற்றைத் தம் வாழ்க்கையில் உயிரோட்டமாக ஊடாடவிட்ட வகைகளை இலக்கியத்தில் படைத்திருப்பது, வானியல் பற்றிய அறிவு வளர்ச்சியின் படிநிலைகளை உணர்த்துவனவாய் உள்ளன. இலக்கியத்திலுள்ள வானியல் குறிப்புகள் முழுமையாகத் தொகுக்கப்பெறின் அவை அறிவியல் உண்மைகள் பலவற்றை வெளிப்படுத்துவதோடு அறிவியல் கண்டுபிடிப்புகள் கூறும் உண்மைகளை அறுதியிட்டு நிறுவுவதற்கும் துணைபுரியும்.

★ ★ ★

இயல் மூன்று

இலக்கியத்தில் சோதிடமும் சோதிடரும்

வானியல் நிகழ்வுகளைக் கூர்ந்து நோக்கி, அதனைத் தங்கள் இலக்கியங்களில் எடுத்தாண்டுள்ளதோடன்றி, மக்கள் வாழ்வியலில் இடம்பெற்றுள்ள சோதிடவியல் செய்திகளைப் பற்றியும் இலக்கியங்களில் பரவலாகக் காணமுடிகின்றது. பழந்தமிழர் வாழ்க்கையில் மக்களை மேம்பாடடையச் செய்கின்ற நல்ல பழக்கவழக்கங்கள் பல நிலவிவந்தன. ஆதலால் அவர்தம் வாழ்க்கையில் தீங்குகள் நேராவண்ணம் நற்செயல்கள் பலவற்றைச் செய்து முன்னேற்றம் கண்டனர். இவற்றின் உட்பொருளை அறியாது மூடப்பழக்க வழக்கம் என்றும், நம்பிக்கை என்றும் கருதி ஒதுக்கிவிட்டுப் பலன் ஏதும் இல்லாத வெற்று ஆடம்பரங்களை அடிப்படையாகக் கொண்ட பழக்க வழக்கங்களை இக்கால மக்கள் பயன்படுத்தி வருகின்றனர். ஆதலால் அவர்தம் தூய பண்பாடு கெட்டு, பல்வேறு விதமான உடலியல், உளவியல் துன்பங்களுக்கு ஆளாகின்றனர்.

அறிவியல் அடிப்படையிலான உண்மைகளைத் தன்னுள் கொண்டு, மக்கள் வாழ்வியலைத் திறம்பட நடத்திச் செல்வதற்கான விழிமுறைகளைக் கூறும் ஆற்றலுடைய சோதிடக்கலை பற்றியும், அக்கலையில் பெருஞ் சிறப்புடையவராய்த் திகழ்ந்து வந்த சோதிடர்தம் இயல்பு பற்றியும் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள செய்திகள் இங்கு விளக்கம் பெறுகின்றன.

சோதிடம்

சோதிடத்தைப் பற்றிய சிந்தனை மிகப் பழங்காலம் தொட்டே நம் நாட்டில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டுச் சித்தர்கள் தோற்றுவித்த சோதிடக் கலையைப் பல தமிழ் மன்னர்கள் போற்றிப் பாதுகாத்து வந்துள்ளனர். பனை ஒலையில் எழுதப்பட்ட நிலையில் இருந்த சோதிடக்கலை இன்று கணிப்பொறி மூலம் கணித்துச் சொல்லுகின்ற அளவு வளர்ந்துள்ளது.

சோதிடம் - சொல்லும் பொருளும்

சோதி என்பது ஒளி, கிரகணம், தீபம், தீ, சூரியன், நட்சத்திரம் என்னும் பொருள்களையுடையது. சோதிடம் என்பதற்கு நாள், ஓரை, நிமித்தம், பஞ்சாங்கம், சாதகம் என்னும் பொருள்களை லெக்சிகன் (ப.1667) தருகிறது. வானத்தில் சோதியாய் நமக்குப் புலப்படுகின்ற, அண்டங்களால் உண்டாகின்ற நன்மை, தீமைகளைப் பற்றி, முன்கூட்டித் தெரிவிப்பது[1], சோதித்துத் திடப்படுத்துவது[2], நட்சத்திரங் களின் தூது[3], நேத்திரமென்னும் கண்ணொளி[4], அறிவைத் தரும் ஒளி என்ற பல பொருள்களும் சோதிடம் என்பதற்குச் சுட்டப்பெறுகின்றன. 'நாராயணீயம்' என்பது வேதங்கள் ஆறனுள் ஒன்றாகிய சோதிட நூலைக் குறிக்கிறது (மணி.473).

'சோதிடம், கணிதஸ்கந்தம், சங்கிதாஸ்கந்தம், (ஹோராஸ்கந்தம்), சாதகஸ்கந்தம் என மூவகைப்படும்; அவற்றுள் பஞ்சாங்கம் கணிக்கும் விதத்தைக் கூறுவது கணிதஸ்கந்தம்; சகல திரிகைகட்கு நன்னாள், தீயநாட்களைக் கூறுவது சங்கிதாஸ்கந்தம்; கோள்களைப் பற்றிய பலாபலன்களை, யோகங்களைக் கூறுவது சாதகஸ்கந்தம்' என்று அபிதான சிந்தாமணி சோதிடம் என்பதற்குப் பொருள் கூறுகின்றது. மேலும் இந்நூல் கிரகங்களின் சஞ்சாரஞ் சொன்ன கணித நூல் என்ற பொருளையும், சோதிடம் என்பதற்குத் தருகிறது (ப.754).

கணித ஸ்கந்தம், சாதக ஸ்கந்தம், ஹோரா ஸ்கந்தம் என மூன்று வகைப்படும் (மணி. பக்.514) எனச் சொற்பொருள் விளக்க நிலையில் சோதிடக் கருத்துகளை உணர்த்துவதோடு சோதிட நூலோர், 'சோதிட வார்த்தை', 'சோதிட்டாங்கம்' (சிலப். பக்.663) எனச் சொல்லகராதி மூலமும் இக்கருத்துகள் விளக்கம் பெறுகின்றன.

---

1. சாதக கணிதம், சி.ஜி. ராஜன், ப.7. 2 V.G.P. Seminar on Astrology, P.41. 3. பிரஸன்ன சோதிடம், ஆ. சிவபாதம், ப.21. 4.V.G.P Seminar on Astrology, P.41.

சோதிடத்தைப் பண்டைத் தமிழர் ‘கணி’ (கணிதம்), ‘கணியம்’ என்னும் பெயர்களால் குறித்தனர். கணி என்பதற்கு கணிப்பவன், சோதிடம் என்று கழகத் தமிழகராதி (ப.267) பொருள் தருகின்றது. எனவே கணி என்பது சோதிடத்தையும் சோதிடரையும் குறிக்கின்றது. சோதி சாஸ்திரம், சோதிநூல் என்றும் சோதிட நூல்கள் குறிக்கப்பெறுகின்றன.

சோதி என்ற ஆன்மா, இடம் என்ற உடலில் எவ்வளவு நாள் தங்கி வாழ்க்கை விளையாட்டை விளைவிக்கிறது என்பதை அறியும் கலையே சோதிடக்கலை. சோதிடத்தின் மூலம் நடந்த, நடக்கின்ற, நடக்கப்போகிற நிகழ்ச்சிகளை ஓரளவு தெரிந்துகொள்ள முடிகிறது. எந்தெந்தக் கா்ரியத்தை எந்தெந்த நேரத்தில், எந்தெந்த முறைப்படி செய்ய வேண்டும்; அதனால் என்னென்ன பலன்கள் கிட்டும் என்பதைத் தெரிவிக்கிறது சோதிடம். அதுபோல் இன்னின்ன காலத்தில், இன்னின்ன செயலை, இன்னின்ன முறைப்படி செய்தால், இன்னின்ன பலன்கள் நமக்கு நடைபெறுகிறது என்பதையும் தெரிவிக்கிறது. பழங்காலத்தில் உலகம் முழுவதும் நலமுடன் இருக்கச் செய்ய வேண்டிய வேள்வி, பூசை, தவம் போன்றவை செய்ய ஏற்றதான கால நேரங்களையெல்லாம் தேர்ந்தெடுப்பதற்கான நேரத்தை அறிய உதவியது சோதிடக்கலை. கிரகணம் முதலியவற்றைச் சரியாக நிர்ணயிக்க முடிவதால் சோதிடத்திற்குச் ‘சித்தாந்தம்’ என்ற பெயருமுண்டு.

ஒருவர் பிறக்கும்போது உள்ள கோள்நிலை அவனுடைய வாழ்க்கை முறைகளை முழுவதுமாகத் தீர்மானித்துவிடுகின்றது. அதன் பின்னர் மாறிவரும் கோள்நிலையைக் கவனித்து, அவனுடைய அன்றாட வாழ்க்கை முறைகளை முன்கூட்டியே அறிந்துகொள்ளவும் சோதிடம் உதவுகிறது. உலகில் பிறக்கின்ற ஒவ்வோர் உயிரின் வாழ்வியல் வழிமுறைகளை அணுஅணுவாக ஆராய முடியும் என்பதே சோதிடத்தின் கருப்பொருள். இந்த மனிதன் இப்படி இருப்பான், இப்படிச் செயல்படுவான், இப்படி இயங்குவான், இப்படி வாழ்வான் என்று யூகிக்கவும், யூகித்ததைச் சோதிக்கவும் சோதிடம் உதவுகிறது.

சோதிடர் சோதிடம் பற்றிய செய்திகளை எழுத்தில் எழுதி வைக்காமல் வாய்மொழியாகக் கூறிச்சென்றதால், சோதிடச் செய்திகள் பல மறைந்துவிட்டன.

'அறம், பொருள், இன்பம், வீடு பெறுமாறு சொன்ன நூற்களும், அவை சார்பாக வந்த சோதிடமும், சோதினமும், வக்கின கிரந்த மந்திர வாதமும், மருத்துவ நூலும், சாமுத்திரியமும், ஆடைநூலும், அணிகல நூலும், அருங்கல நூலும் முதலியவற்றின் மறைபொருளுபதேசமும்' என்று குறிப்பிடும் யாப்பருங்கல விருத்தி எனும் தமிழிலக்கண நூலின்வழி பல தொழில்களைக் கற்பிக்கும் பல கருவி நூற்களுள் சோதிட நூலும் ஒன்றாகப் பண்டைத் தமிழகத்தில் இருந்தது என்பது புலனாகிறது.[5]

சங்ககாலம் தொடங்கி இன்று வரையுள்ள இலக்கியங்கள் பலவற்றிலும் சோதிடத்தைப் பற்றிய செய்திகள் பல கிடைக்கின்றன.

"சொற்பெயர் நாட்டம் கேள்வி நெஞ்சமென்
றைந்துடன் போற்றி அவை துணையாக"

என்பது பதிற்றுப்பத்து கூறும் செய்தி. பல்யானைச் செல்கெழுகுட்டுவன் விரும்பிய வேள்வியை, சொல்லிலக்கண நூலும், பொருள் இலக்கண நூலும், சோதிட நூலும், வேத நூலும் இவற்றை அடக்கிய நெஞ்சமும் ஆகிய ஐந்தையும் போற்றிய முனிவர்கள் செய்து முடித்தனர் என்ற இக்குறிப்பினால் கற்க வேண்டிய நூல்களுள் ஒன்று சோதிட நூல் என்பது சங்க காலத்திலேயே நிலவி வந்த கருத்து என்பதை உணரமுடிகிறது. 'நாட்டம்' என்ற சொல்லால் சோதிட நூல் குறிக்கப்பெற்றமையும் தெரிகிறது.

"சத்தமுஞ் சோதிடமு மென்றிங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையாரில்" (நால. 52)

என்ற அடிகள் சோதிடத்தை எதிர்க்கும் வகையில் அமைந்துள்ளன. சோதிடம் இழிநூலாகக் கருதப்பட்டு இதன்பால் ஈடுபாடுள்ளவர்கள் பித்தர்களாகக் கருதப்பட்ட நிலை தெரிகிறது.

5. தமிழகம், ந.சி. கந்தையாபிள்ளை, ப.158

"சோதிடங் கொண்டி தெம்மைக் கெடுவித்தது" (திருக்கோ. 138)
"சோதிடம் பார்த்துரைப்பிர் புரிநூல் உத்தமரே" (திருவருட்பா. 1676)
"சோதிடம் பொய்யாது மெய்யென்ப தறிவரிய சூழ்கிரகணம் சாட்சிஆம்"
(அறப்.சத.5)

என்ற சான்றுகள் சோதிடம் என்ற சொல்லாட்சி பிற இலக்கியங்களிலும் வருவதைக் காட்டுகின்றது. காலத்தைக் கோள்களின் வழி கணக்கிட்டுக் கூறிய சோதிட நூலைக் காலக் கணிதம் என்று கூறியதைக் 'காலக்கணிதம்' (சிலப்.5.44), 'காலக் கணிதமுங் கலைகளின் றுணிவும்' (மணி 2:18-3) என்ற அடிகள் காட்டுகின்றன. சோதிடச் செய்திகள் சதக இலக்கியங்கள் சிலவற்றில் விரிவாக இடம்பெற்றுள்ளன. தரித்திரயோகம் (62), மரணயோகம் (63), நட்சத்திரத்திற்கும் நாளுக்கும் பகை (64), கிரகச்சுற்றும் அவற்றினாட்சி நிலையும் (69), மனுஷகண முதலிய மூன்று மறிவது (71), குளிகனிராகு காலம் (72), கெற்போட்ட நாள் (95) என்ற பல சோதிடக் கூறுகளைக் கயிலாசநாதர் சதகம் கூறுகிறது.

சோதிடம் முன்னூறு என்று அகத்தியர் கூறுவதனை,

"நாடியாம் கிரந்தமது யெண்ணா யிரந்தான்
நலமான சிற்பி நூலாயிரந்தான்
ஆடியே ஜோசியமு முன்னூறாகும்
அப்பனே மாந்திரீக மறுநூ றாகும்" (அகத்தியர், 12000, பா.473)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன.

சோதிடர்

சோதிடக்கலை மன்னர் முதல் மக்கள் ஈறாகப் பலரையும் சென்றடையச் சோதிடர் உறுதுணையாகத் திகழ்ந்தனர். இவர்கள் சோதிடம் மட்டுமன்றி சோதிடமல்லாத பல்வகைத் தொழில்களைப் புரிந்துவந்துள்ளனர். மன்னர் களுள் சிலரும் சோதிட அறிஞராக இருந்திருக்கின்றனர். பொருளுக்காகச் சோதிடத் தொழிலை மேற்கொள்ளுதல் என்ற நிலையிலிருந்து அக்காலச் சோதிடர் மாறுபட்டு ஆர்வத்துடன் சோதிடவியலிலுள்ள உண்மைச் செய்திகளை உள்ளது உள்ளவாறே எடுத்தியம்பி வந்துள்ளனர். எனவேதான் அக்காலத்தில் சோதிடக்கலை தவறுதல் இல்லாத பலன்களைக் கூறும் திறம்பெற்று விளங்கியதுடன்

இன்றுவரை நிலைபெற்று விளங்குகின்ற உயிர்ப்பு ஆற்றலைப் பெற்றுத் திகழ்கின்றது. இத்தகு பெருமைமிகு சோதிடர் பழங்காலம் முதல் இன்றுவரை எவ்வாறெல்லாம் அழைக்கப்பட்டனர் என்பதைக் காணுதல் சிறப்புடைத்து.

அறிவன்

சோதிடரைக் குறிக்கின்ற சொல்லாகப் பல சொற்கள் பிற்கால இலக்கியங்களில் வழங்கப்பட்டு வந்தாலும் அறிவன், கணி என்ற சொற்களே நமக்குக் கிடைக்கின்ற சொற்களுள் காலத்தால் முற்பட்டவையாகக் காணப்படுகின்றன. தொல்காப்பியத்தில் அறிவன் என்ற சொல் சோதிடரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டதைப் பின்வரும் நூற்பாவினால் அறியமுடிகிறது.

''மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயம்
நாவிரு வழக்கில் தாபதப் பக்கமும்
பாலறி மரபில் பொருநர் கண்ணும்'' (புறத். 16)

இறப்பும், நிகழ்வும், எதிர்வும் என்னும் மூவகைக் காலத்திலும் வழங்கும் நெறியான் அமைந்த முழுதுணர்வுடை யோன்; அதாவது இல்லற வாழ்க்கையைத் துறந்து தவம் செய்யும் முனிவர் என்பர் நச்சினார்க்கினியர்.[6] இளம்பூரணர் அறிவன் என்பது கணிவனைக் குறிக்கும் என்பர்.[7] இதுவன்றி வேறுசில தொல்காப்பிய நூற்பாக்களும் அறிவரைக் கூறுகின்றன.

''தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவன்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப'' (தொல். பொரு.கற்.52)
''பாணன் ....,யாணஞ் சான்ற அறிவர் கண்டோர்
...... தொன்னெறி மரபிற் கற்பிற் குரியர்'' (தொல்.பொரு.செய்.82)
''பார்ப்பார் அறிவர் என்றிவர் கிளவி'' (மேலது.498)

இவை அறிவர் என்பவர் இல்லற வாழ்க்கையில் இருக்கும் கணிவர் என்றும், இவர்கள் கணவன் மனைவியருக்குள் ஊடல் நிகழ்ந்தால் அவர்களுக்கு அறிவுரை கூறி இல்லற நெறியில்

6. தொல்காப்பியம், புறத்திணையியல், நச்சர் உரை, ப.208,
7. மேலது, இளம்பூரணருரை, ப.114.

நிறுத்தினர் என்றும் காட்டுகின்றன. இத்தன்கண் திருமணம் நடக்கக்கூடிய நாளைக் கணித்துக் கூறினர் என்பதை,

"நெறியறி செறிகுறி புரிதிரி பறியா அறிவனை முந்துநீஇத்
தகைமிகு தொகைவனை யறியுஞ் சான்றவர்" (39)

எனக் குறிஞ்சிக் கலிப்பாடல் குறிப்பிடுகின்றது. இவற்றால் சோதிடர் தொல்காப்பியர் காலத்திலும், சங்ககாலத்திலும் அறிவன், அறிவர் என்ற சொற்களால் குறிக்கப்படுவதும் இவர்கள் முனிவர்களாயும் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டவர்களாகவும் இருந்தனர் என்பதும் தெரிய வருகிறது.

குமரிக்கண்டத்தில் வாழ்ந்த மக்களுக்கு 'அறிவுக்கண்' என்றொரு மூன்றாவது கண் இருந்ததாகவும் இதன் வழி முக்காலத்தையும், பிறர் எண்ணங்களையும், தொலை நிகழ்ச்சிகளையும் அறிய முடிந்ததாகவும் ஆசிரியர் 'கார்வே' குறிப்பிடுகின்றார்.[8]

அறிவுக்கண் கொண்ட குமரிக்கண்டத்து மக்களே தொல்காப்பியர் குறிப்பிடும் 'அறிவர்' ஆக இருத்தல் கூடும். இருவகை மக்களுக்கும் புலன் உணர்தல், முக்காலம் அறிதல், தொலைவிணர்தல் ஆகியன கைவரப்பெற்றுள்ளன. 'அறிவுக்கண்' பெற்ற அறிவர் மரபு சங்க காலத்தில் முக்கட் வழிபாடாக மலர்வதை,

"பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட்செல்வர் நகர்வலஞ் செயற்கே" (புற.6)
"ஞால நாறு நலங்கெழு நல்லிசை
நான்மறை முதுநூன் முக்கட் செல்வ
னால்முற்றங் கவின்பெறத் தைஇய
பொய்கை சூழ்ந்த பொழின்மனைமகளிர்" (அக.181)

என்ற பாடல்களின் வழி அறியமுடிகிறது. முக்கட்செல்வர் என்பது நெற்றிக் கண்ணுடன் கூடிய மூன்று கண்களுடைய இறைவன். சங்க காலத்திற்குப் பின் சிலம்பில், முக்கட்

8. குமரிக்கண்டம் அல்லது கடல்கொண்ட தென்னாடு, க.அப்பாதுரை (மொ.ஆ.), ப.33.

செல்வர் வழிபாட்டு முறை, 'நுதன்விழி நாட்டத் திறையோன்' (14:7) எனும் பெயரில் தொடர்கின்றது. பின்னர் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் திருமூலர் காலத்தில் நந்தி வழிபாடாக (திரு.36) உருமாறி, அவருக்குப்பின் பதினெண் சித்தர்களின் வழிபாடாகி (அழுகணி சித்தர் பாடல்.21, ஞானரத்தினக் குறவஞ்சி, 58) கடந்த நூற்றாண்டில் வள்ளலார் பாடல்களிலும் இடம்பெற்றிருத்தலைக் காணமுடிகிறது.

குமரிக்கண்டத்து அறிவுக்கண், தொல்காப்பியர் குறிப்பிடும் அறிவர், சங்க இலக்கியம் கூறும் 'முக்கட் செல்வர்', சிலம்பு குறிப்பிடும் 'நுதல்விழி நாட்டத்திறையோன்', திருமூலர் வழிபடும் 'நயனங்கள் மூன்றுடை நந்தி', பதிணென் சித்தர் பாடல்களின் பரவலாகப் போற்றப்படும் 'புருவநாடு' பற்றிய செய்திகள் – இவை அனைத்தையும் நோக்கும்போது பின்வரும் தெளிவினைப் பெறமுடிகின்றது.

"புலன் உணர்வுகளை அறிந்து முக்காலத்தையும் உணர்த்தவல்ல உயர்ந்த ஞானிகள், குமரிக்கண்டத்தின் காலத்திலிருந்தே தமிழகத்தில் காலந்தோறும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்கு நெற்றிக்கண் உண்டு. அதனை அறிவுக்கண் என்றும் கருதலாம். இதன்வழி புலனையும் உணர்ந்து காலத்தையும் அறியும் உயரிய நிலையை எய்தினர். அறிவுக்கண் கொண்டவர்களாதலால் இவர்களைப் பாமரர் வணங்கி இருத்தல் கூடும். தொல்காப்பியனார் காலத்துக்கு முன்பே குமரிக்கண்டத்தில் 'முக்கட்செல்வர்' என்பது அறிவர் மரபில் தோன்றிய முதல் அறிவராகக் கொள்ளலாம். சித்தர்கள் காலத்தில் 'முதல் அறிவரே' முதல் சித்தராகத் திரிபாகி இருத்தல் வேண்டும். குமரிக்கண்டத்தின் பெருவழக்கில் நிலவிய முக்கட் செல்வர் வழிபாடு சங்ககாலத்திலும், சிலம்பின் காலத்திலும் அதே பெயரில் நிலவியது. பின்னர் சிவவழிபாடாகச் சமயச் சடங்குகட்கு உட்பட்டதாக மாறிவிட்டது.[9]

கணி

சோதிடத்தைப் பண்டைத் தமிழர் 'கணி' (கணிதம்), 'கணியம்' என்னும் பெயர்களால் குறித்தனர். சோதிடத்தொழில்

---

9. தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம், பக்.56,57

புரிந்தாரைக் 'கணி', 'கணிகள்', 'கணியன்', கணியான், கணிவன் என்றழைத்தனர். கணி என்பதற்குக் 'கணிப்பவன்', 'சோதிடம்' என்று கழகத் தமிழகராதியும் (ப.267), சோதிடன் என்று செந்தமிழ் அகராதியும் (ப.137), சோதிடம் என்று சங்க இலக்கியப் பொருட்களஞ்சியமும் (தொகுதி -2 ப.95) பொருள் தருகின்றன. எனவே கணி என்பது சோதிடத்தையும் சோதிடரையும் குறிக்கின்றது.

சங்க இலக்கியங்கள், சங்க மருவிய கால இலக்கியங்கள் சோதிடம் என்ற பொருளில் 'கணி' என்ற சொல்லைக் கையாண்டுள்ளன என்பதை,

''கணிவாய்ப் பல்லி'' (அக: 151:11-15)
''காரரும்பு அவிழ்ந்த கணிவாய் வேங்கை'' (நற்.373:6-8)
''பன்னாளும் நின்ற விடத்தும் கணிவேங்கை'' (பழ.120)

என்ற அடிகள் காட்டுகின்றன. இவற்றில் கணித்துக் கூறும் சிறப்புப் பண்பின் அடிப்படையில் அஃறிணை உயிரினங்களான வேங்கை மரமும், பல்லியும் சோதிடராக உவமிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது பல்லி வாயினால் எழுப்பும் ஒலி நிகழப் போவதை முன் உணர்த்தியதால்பல்லி கணியெனப்பட்டது. திணைமுற்றும் காலத்தை வேங்கை அரும்பு தோன்றி முன் உணர்த்தலின் வேங்கை கணியெனப்பட்டது. கணிமேதாவியார், கணியன் பூங்குன்றனார், கணிபுன்குன்றனார். பக்குடுக்கை நன்கணியார் போன்றோர் சோதிடக் கலையில் சிறந்திருத்தல் கூடும் என்பதை அவர்தம் அடைமொழிகள் காட்டுகின்றன. ஆனால் இவர்களது சோதிட அறிவு புலப்படும்படியான பாடல்கள் கிடைக்கப்பெறவில்லை.

பெருங்காப்பியங்கள், சிறுகாப்பியங்கள், இலக்கண நூல்கள், பக்தி இலக்கியங்கள், புராணங்கள் சோதிடரைக் குறிக்கக் 'கணி' என்ற சொல்லைப் பரவலாகக் கையாண்டுள்ளன.

''கணியெடுத் துரைத்தான்'' (மணி. 24:59)
''கணிபுனை பவளத் திண்காழ்'' (*சீவக.* 113)
''கணிபுகழ் காளை கொண்டு கடலகம் வளைக்க லுற்றான்''
(*சீவக.*722-230)
''பெருகுங் கணியிற் கணிபேசிய பேதி னாளிற்'' (*சீவக.*1062:3)

"கணியெடுத் துரைப்பக்" (சீவக. 1280); கணி (308; 1344; 1062; 1451; 1491; 1686; 2373; 2386;1686;1451)
"கணிபுனைந் துரைத்த" (சீவக. 1344)
"கண்ணரியுரைப்பான் கணி" (தொல்புறத்.16, இளம் உரை.மே.பா.114)
"கணிவேளையிது வென்றான்" (சூளா.8272)
"கணிவன் புகழ் கிளந்தன்று" (புற.வெ.பு.8.20, உரை:ப.82)
"கணிமொழிந்த நாளிற்" (நள. 1;172)
"நாளை அறிவிக்கும் வேங்கை" (கந்த.வள்.திரு.பட.148)

அரசர்கள் நல்லோரைகளிலும் நற்சகுனங்களிலும் ஆழ்ந்த நம்பிக்கையுடையவராய் இருந்தமையால் சோதிடரைத் தமது அவையில் நிரந்தரமாக வைத்திருந்தனர். இவர்கள் அரசவையில் இன்றியமையாத அலுவலர்களில் ஒருவராய் இருந்தனர். அரசவையில் நிரந்தரமாக இருந்த சோதிடர் கணி எனவும், தலைமைச் சோதிடர் பெருங்கணி எனவும் கூறப்பட்டனர். அரசு காரியங்களுக்குப் பொருத்தமான காலத்தைக் கணித்துக் கூறுதல் இவர்களது பணி. இவர்கள் குறித்த நாளும், நல்லோரையும் அரசர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவற்றிற்கேற்ப அரசர்கள் செயலாற்றினர். அரசர்கள் தங்களுக்கு மட்டுமாக, அதாவது அரசுக்கும் தன் குடும்பத்துக்கும் மட்டுமே ஆஸ்தான சோதிடர்களை வைத்திருந்தனர். இச்சோதிடர் வேறு எவர்க்கும் சோதிடம் கூற மாட்டார்கள். அரசர்கள் அச்சோதிடர்க்கு நல்ல வாழ்க்கை வசதிகளைச் செய்து கொடுத்திருந்தனர். எனவே தங்களின் ஆராய்ச்சியை நல்ல முறையில் மேற்கொண்டு பலன்கள் கூற முடிந்தது. இச்சோதிடர் அரசனுடன் உடனுறையும் சுற்றத்தாருள் ஒருவராவர். அரசனுடைய அவையில் பெருங்கணிகள் பெருமதிப்புடன் இருந்தனர்.

கண்ணகிக்குக் கோயில் கட்டச் சேர மன்னன் செங்குட்டுவன், அரண்மனைச் சோதிடப் பெருங்கணி, அறக்களத்து அந்தணர், கட்டடக்கலை அறிஞர், சிற்பக்கலை வல்லுநர் ஆகியோருடன் சென்றதை,

"பொன்அணி புதுநிழல் பொருந்திய நங்கையை
அறக்களத்து அந்தணர், ஆசான் பெருங்கணி
சிறப்புடைக் கம்மியர் தம்மொடும் சென்று
மேலோர் விளையும் நூல்நெறி மாக்கள்" (28:221-224)

என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. மேலும், இந்நூலில்,

"ஆசான் பெருங்கணி யறக்களத் தந்தணர்
காவிதி மந்திரக் கணக்கர் தம்மொடு" (22:8-9)
"ஆசான் பெருங்கணி, அருந்திறல் அமைச்சர்
காவித தானைத் தலைவர் தம்மொடு குழீஇ" (26:3-4)

என்ற அடிகளில் 'பெருங்கணி' பற்றிய குறிப்பு வருகின்றது.

சீவக சிந்தாமணியும், பெருங்கதையும் பெருங்கணி நல்ல முகூர்த்தம் குறித்துக் கொடுத்ததை,

"மங்கலப் பெருங்கணி வகுத்த வோரையால் வாழ்த்தினர்"
(சீவக.2411:34)
"வெற்றவேந்தன் கொற்றப் பெருங்கணி கூறிய முழுத்தங்
குன்றுதலின்றி" (பெருங்.244-45)
"பெருங்கணி வகுத்த நன்னா ளிதுவெனப்" (பெருங். 2:2.24-25)

என்ற பாடலடிகளில் கூறுகின்றன. இக்கணி, கணிமகன் எனக் குறிக்கப்படுதலை,

"செவ்வகை யுணர்ந்தோன் சேனைக் கணிமகள்
கோசிக னென்றவன் குறிப்பெயர் கூறி" (பெருங். 1:36.199-200)

என்ற அடிகள் காட்டுகின்றது.

இலக்கியங்களில் சோதிடரைக் குறிக்கும் இக்கணி என்ற சொல் வழக்கில் சோதிடரையும், சோதிட மரபில் வந்த கணியான் இனத்தவரையும் குறிக்கிறது. திருநெல்வேலி, செங்கோட்டைப் பகுதி மக்கள் நெற்களஞ்சியங்களில் வந்து குறி கூறி நெல் பெற்றுச் செல்லும் சோதிடரை 'வள்ளுவக் கணியான்' என்கின்றனர். கணியான் இனத்தவருள் தமிழகக் கணியான், கேரளக் கணியான் என இருபிரிவுகள் உள்ளனர்.[10] கணியான் இனத்தவரோடு 'கணியான் ஆட்டம்' எனும் கலையும் பின்னர் இவர்களுடன் இணைந்துவிட்டதால் இன்றும் கணியான் இனத்தவர் இக்கலையில் ஈடுபட்டுள்ளனர்.

'தமிழகக் கணியான் இனத்தவர் குமரி, நெல்லை மாவட்டத்திலுள்ள கணியான்விளை, கணியாகுளம், கணியான் திரடு, பச்சேரி போன்ற ஊர்களில் வாழ்ந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் இவ்வூர்களில் கணியான் இனத்தவர் எவரும் இன்று இல்லை. இவ்வினத்தவர் வ.உ.சி. மாவட்டங்

10. கணியான் ஆட்டம், ப.52

களில் 42 ஊர்களில் வாழ்ந்து வருகின்றனர். இம்மாவட்டத்திலுள்ள தச்சநல்லூர், பழையபேட்டை, வடக்கன்குளம், ஸ்ரீவைகுண்டம் போன்ற ஊர்களில் மிகுதியான குடும்பங்களும், நான்குநேரி, ராஜபதி போன்ற ஊர்களில் ஒரிரு குடும்பங்களுமாக வாழ்ந்து வருகின்றனர். இவ்வினத்தவரின் எண்ணிக்கை ஏறத்தாழ ஆயிரம் இருக்கும்'.[11] கணியம்பாடி, கணியனூர், கணியாகுறிச்சி, கணியூர் போன்ற தமிழ்நாட்டிலுள்ள பல ஊர்ப்பெயர்கள் கணியானை நினைவூட்டுகின்றன.

கணியான் இனத்தவர்களின் முன்னோர் கேரள மாநிலத்தைச் சார்ந்தவர்களென்றும், இவர்கள் சோதிடத்தில் புகழ் பெற்றவராகவும், மந்திரவாதிகளாகவும் இருந்தனர் என்றும் கூறப்படுகிறது. கேரளக் கணியான் இனத்தவர் சோதிடக் கலையையே தங்கள் முதன்மைக் கலையாக - தொழிலாகக் கொண்டுள்ளனர். இவர்களின் சோதிட வன்மையை 13ஆம் நூற்றாண்டில் கேரள நாட்டிற்கு வந்த மார்க்கோபோலோ என்னும் அறிஞரும், 16ஆம் நூற்றாண்டு அறிஞரான பார்ப்போஸா என்பவரும் குறிப்பிடுகின்றனர்.[12] இக்கணியான் இனத்தவர் திருமணம் நிச்சயம் செய்வதில் பெரும்பங்கு வகிக்கின்றனர். இவர்கள் இக்கலையை இறைவன் தம்மினத்திற்குத் தந்த கலையாக, தொழிலாகக் கருதும் நிலையுள்ளது. எனவே சோதிடம் கூறுவதற்குக் குறிப்பிட்ட அளவு பொருள் வேண்டுமென இவர்கள் கேட்டுப் பெறுவதில்லை.

'கேரளாவில் சோதிடத்தில் வல்லுநர்களாக இருந்த நம்பூதிரிப் பிராமணர்களிடமிருந்து கணியான் இனத்தவர் இக்கலையைக் கற்றுக்கொண்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் இவ்வினத்தவர் சோதிடத் தொழிலில் மேன்மையுற்றிருந்த பிராமணன் ஒருவனுக்கும், கந்தர்வப் பெண்ணொருத்திக்கும் பிறந்ததால்தான் சோதிடத்திறமை தம்மினத்திற்கு வந்தது என இவ்வினத்தார் நம்பிக்கை கொண்டுள்ளனர். இவ்வாறல்லாமல் பிராமணச் சோதிடரே

---

11. மேலது, ப.67. 12. Castes and Tribes of South India, Thurston, Vol.IV-P.184).

தங்கள் தகுதியிலிருந்து குறைந்து குறைந்து நாளடைவில் 'கணியானாக' மாறிவிட்டனர் என்ற கருத்தும் உள்ளது.[13] பிராமணச் சோதிடர்களே தங்கள் தகுதியிலிருந்து குறைந்து கணியனாக மாறிவிட்டனர் என்பதைக் காட்டிலும், வள்ளுவ இனத்திலிருந்து கணியான் இனம் தோன்றியிருக்கலாம் என்றும் தோன்றுகிறது.

கேரளாவில் மலபார்ப் பகுதிகளில் வாழ்ந்துவரும் கணியான் இனத்தவர் தங்களைத் தமிழ்நாட்டு வள்ளுவக் கணியானோடு இணைத்துக் கூறி வருகின்றனர். தமிழகத்தில் பழங்காலந்தொட்டு கணியத் தொழிலைச் செய்து வாழ்ந்துவந்த இனத்திற்கு 'வள்ளுவ இனம்' என்று பெயர். வள்ளுவ சாத்திரம் என்பதற்குச் சோதிடம் எனவும், வள்ளுவப்பண்டாரம், வள்ளுவப் பறையன் என்புதற்கு வள்ளுவ சாதியிற் குறி சொல்வோன் என்றும் தமிழ் லெக்சிகன் பொருள் தருகின்றது.[14] 'வள்' என்பது கூர்மை என்னும் பொருள் குறிப்பது. வள்ளுவன் என்பவன் கூர்மதியன் ஆவான். 'வள்ளுவசாதியார், 'நந்திவாசகம்' என்ற சோதிடச் சொற்களை மனனம் செய்திருக்கின்றனர். இவை ஒவ்வொரு குடும்பத்திலும் தகப்பனாரால் மூத்த மகனுக்கு மட்டுமே சொல்லிக் கொடுக்கப்படுகின்றன. மற்றவர்கள் வேறு தொழில்களைப் பார்த்துக்கொள்ள வேண்டும். வள்ளுவர்கள் வாக்குப் பலிதம் உள்ளவர்கள் என்பர். எனவே கிராமங்களில் வாழ்பவர்கள் வள்ளுவர்கள் சொல்வதனைத்தையும் வேதவாக்காகக் கருதுகின்றனர்.[15]

எனவே வள்ளுவ இனத்தாரில் மூத்த மகனைத் தவிர்த்த பிறர் வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். கோயிலில் பூசை செய்வோர் வள்ளுவப் பண்டாரம் என்றழைக்கப் படுகின்றனர். அவர்களுள் குறி சொல்வோரும் இருந்து வருகின்றனர். எனவேதான் கோயில் பூசாரியிடம் சோதிடம் கேட்கும் பழக்கம் இன்றும் கிராமங்களில் நிலவி வருகிறது. ஏனெனில் குறி கூறும் இவர்கள் தாமறிந்த சோதிடச் செய்திகளையும் மக்களுக்குக் கூறத் தொடங்கி நாளடைவில் சோதிடமும் கூறுபவராகிவிடுகின்றனர்.

---

13. கணியான் ஆட்டம், பக்.75,76, 14. தொகுதி-6, ப.3552. 15. தமிழ்நாட்டு மக்களின் மரபும் பண்பாடும்,சோமலெ.ப.89.

'திருவள்ளுவர் வள்ளுவக்குடி என்னும் முதுகுடியில் பிறந்தவர். இத்தகைய சாதியில் பிறந்தவர் குறளைப் படைக்கும் தரம் எய்திருக்க முடியுமா என்று ஐயுறுவது மேல்வர்க்கப் பார்வையின் ஊனமே. அதுவே அவர் புலைச்சிக்கும் பார்ப்பானுக்கும் பிறந்தார் எனும் கட்டுக்கதைக்குக் காரணமாகலாம் என்பர் டாக்டர் எஸ்.இராமகிருஷ்ணன்.[16]

வள்ளுவர் என்பார் பறையருள் குருமாராய்க் குறி சொல்லிப் பிழைக்கும் ஒரு வகுப்பார். இச்சொல் 'வள்' என்னும் முதனிலையில் பிறந்தது. கோல் வினைஞர் என்னும் பொருட்டாம். 'வள்பு' என்பது தோலில் செய்த வாரைக் குறிக்கும். வாரினால் இறுக்கிக் கட்டப்படும் பறையறிவிக்கும் வினையினைச் செய்வோர் வள்ளுவர். இங்ஙனம் பறை அறிவித்தல் தொழிலுடையோர் பண்டைக் காலத்து பறையராயினது பற்றி அவர்க்கு வள்ளுவர் என்றும் பெயர் வழங்கியது. அவர் தம்முள் ஒரு சாரார் பிறர் தமக்கு நேரிடும் ஊழ்வினைப் பயன்களை நன்கறிந்து உரைக்கும் அவ்வினையும் பின் நேர்வதனைப் பறைசாற்றி அறிவிக்கும் தொழிலோடு ஒப்புமை உடையதான அவர்க்கே பின் அப்பெயர் சிறப்பு வகையான் உரிமை உடைத்தாயிற்று எனவும் துணியப்படும். கல்வியறிவு சிறிதுமில்லாப் பறையருக்குள் கோள்நூல் புலமை நிரம்பிப் பிறர் வினைப்பயன்களை அளந்துரைக்கும் வள்ளுவர் அவரின் வேறால் அவர்க்குக் குருமாராய் அமைந்து பாராட்டப்பெறுதல் இயற்கையே. இப்பெற்றியரான வள்ளுவரில் ஒரு நன்மகனால் எடுத்து வளர்க்கப்பட்டது கொண்டு வள்ளுவர் எனப் பெயர் பெறுவாராயினர் என்பார் மறைமலை அடிகளார்.[17] 'செய்தி வள்ளுவன்' (செய்தி வள்ளுவன் பெருஞ்சாத்தன்) என்னும் புலவர் பெயர், திருவள்ளுவர், வள்ளுவ குடியில் பிறந்தவர் என்ற கருத்துக்கு அரண் செய்தமைகிறது என்பர் ந. சஞ்சிவி.[18]

எனவே வள்ளுவர், வள்ளுவர் குடியில் பிறந்தவர், அல்லது வள்ளுவ இனத்தவர்க்குக், குருமாராய் விளங்கிய

---

16. திருக்குறள் ஒரு சமுதாயப் பார்வை, ப.12. 17. வள்ளுவர்கள், டாக்டர் சு. சண்முகசுந்தரம், ப.72. 18. சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், ப.45.

வள்ளுவர் ஒருவரால் வளர்க்கப்பட்டவர் என்ற கருத்துகள் தமிழ்நாட்டுப் பழந்தமிழ்க் குடிகளுள் ஒன்று வள்ளுவர்குடி என்பதை அரண்செய்கின்றது.

வள்ளுவர் திருக்குறள் இயற்றிய காலத்தே அதனோடு சோதிடம் முதலிய தூய நூல்கள் சிலவற்றைச் செய்தாரெனப் புலவர் புராணம் கூறுகிறது.[19] இச்செய்தி திருவள்ளுவர் என்ற பெயர் வள்ளுவ இனத்தோடு தொடர்புடையது என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் அமைகின்றது.

இவ்வள்ளுவ குடியினர் குறுநில மன்னராய் இருந்தனர் என்ற கருத்தும் நிலவுகின்றது. சங்க காலத் தமிழகத்தில் பாண்டி நாட்டு மேற்குப் பகுதியில் சூழவுள்ள நாட்டை வள்ளுவர் என்ற வேந்தர் குடியினர் ஆட்சிபுரிந்தனர். ஔவையார் காலத்தில் அந்நாட்டை நாஞ்சில் வள்ளுவன் என்ற வேந்தன் ஆட்சி புரிந்தான் எனச் சங்கத் தொகை நூல் கூறுகிறது. புறநானூற்றில் ஒரு பாட்டு திருக்குறளை அறம் என்று கூறுவதால் வள்ளுவர் அவனுக்கு முன்னோராதல் வேண்டும். அதற்கேற்ப மன்னன் வள்ளுவர் என்ற பெயரையே கொண்டிருக்கிறான். பிற்காலத்தே வள்ளுவர் குடி தளர்ந்து போயிற்று. அவ்வள்ளுவர்கள் மேலை மலையாள நாட்டுக் கோயில்களில் கோயில் காரியம் பார்க்கும் பெருமக்களுள் ஒருவராக இருந்தனர். இதனை மலையாள நாட்டுப் பொன்னானி வட்டத்துச் சுகபுரம் என்னும் ஊரிலுள்ள கல்வெட்டொன்று (5.I.I.Vol.V.No.775) "சொகிரத்துப் பருடையாகும்... இராய சேகராயின வள்ளுவரும் கூடிச் செய்த கச்சமாவது" என்று கூறுகிறது. இது வள்ளுவர்களை 'இராய சேகரென்பதால், வள்ளுவரில் ஒருசிலர் மேலைநாட்டில் அரசுரிமை நீங்கிலும் தொன்மைச் சிறப்பு தோன்றக் கோயில் காரியம் பார்த்து வந்தனரென அறிகின்றோம்.

இக்கல்வெட்டிற் போலவே பொன்னானி வட்டத்துப் புக்காட்டூரிலுள்ள கல்வெட்டொன்று (A.R.N.349 of 1924) புக்காட்டூர்ச் சபையோரும், பிராமணரும், கோயிலதிகாரிகளும், வள்ளுவர்களும் கோயிலில் விளக்கெரிக்க உடன்பட்ட

19. தெய்வப் புலவர் திருவள்ளுவர், ப.54

செய்தியைக் கூறுகிறது. இக்கல்வெட்டுக்கள் காலத்தால் 12ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டன. ஆதலால் சங்க காலத்துக்கும் இக்கல்வெட்டுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் இவ்வள்ளுவர்கள் இருந்த நிலை தெளிவாக்கப்படுதல் வேண்டும். மணிமேகலையில் காவிரிப்பூம் பட்டினத்தில் நடந்த இந்திரவிழாவை நகரத்தார்க்கு அறிவிக்கும் பணியை வள்ளுவன் ஒருவன் செய்த செய்தி காணப்படுகிறது.

''வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னற்
குள்படு கருமந் தனவர்க் கொன்றும்'' (திவாகரம்)
''வள்ளுவர் முரச மூதூ ரறைகென வருளினானே'' (சீவக. 2149)
''முரசெறி வள்ளுவ முதயனைத் தரீஇக்'' (பெருங். 1.47:156)
''திருக்கையுள்ள வள்ளுவனைப்
பெருக்க முரசடியு மென்பார்''[20]

என்ற அடிகளும் வள்ளுவர் குடி முரசறையும் தொழில் புரிந்தமையைக் காட்டுகின்றது. இவ்வாற்றல் வள்ளுவர்கள் பழங்காலத்தே அரசரைச் சேர்ந்தொழுகும் பெருங்குடி மக்களாக விளங்கினர் என்பது தெரிகிறது. ''சங்க காலத்தே குறுநில மன்னராயிருந்த வள்ளுவர்கள் பின்னர் அரச வாழ்விழந்து தமிழ் வேந்தர்பால் அரசரைச் சேர்ந்தொழுகும் அரசியற் சுற்றத்தாருள் ஒருவராக வாழ்ந்தனரெனவும், பின்னர் பெருங்கோயில்களில் 'கோயில் காரியம்' பார்க்கும் பெருமக்களாக விளங்கினரெனவும் அறியவேண்டும்'' என்கிறார் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை.[21]

குறுநில மன்னராய், அரசுப் பணியாளராய், கோயில் பணியாளராய் இவ்வள்ளுவ இனத்தினர் இருந்திருக்கின்றனர். வள்ளுவ இனத்தாரில் மூத்த மகனைத் தவிர பிறர் வேறு தொழில்களில் ஈடுபட்டிருக்கின்றனர். குடும்பக் கட்டுப்பாடு இல்லாத அக்காலத்தில் பிள்ளைகளை மிகுதியாகப் பெற்றதால் சோதிடத் தொழில் புரிந்தவர்களைக் காட்டிலும் பிற தொழிலில் ஈடுபட்டவர்களே வள்ளுவ குடியில் மிகுதியாக இருந்திருக்கின்றனர்.

சோதிடர் 'வள்ளுவர்' என்று இலக்கியங்களில் சுட்டப்பட்டதனை,

''வாய்ந்த வந்நிரை வள்ளுவன் சொனான்'' (சீவக.419)
''திருநாள் படைநாள் கடிநா ளென்றிப்

20. புதுவூர் சக்கரவர்த்தி அம்மானை, ப.122, 21. தெய்வப் புலவர் திருவள்ளுவர், ப.14

பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச் சேகை வள்ளுவ முதுமகன்'' (பெருங்.2:2.32-33)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன.

கணியத் தொழில் செய்த வள்ளுவ இனம் சமுதாயத்தில் பெரிதும் மதிக்கப்பட்டும் சிறந்தும் விளங்கியது. பிற்காலத்தில் வந்தேறிய வடமொழியாளர் அக்கலைத் தொழிலைத் தம்முடையதாக்கிக் கொண்டதோடன்றி வள்ளுவ இனத்தைத் தாழ்வடையச் செய்தனர். நாளடைவில் வள்ளுவர் தம் சிறப்புக் குன்றித் தம் சோதிடத்தொழிலைப் பேண இயலாதவராயினர்.[22] இன்றும் இவ்வள்ளுவ இனத்தவர் பள்ளர், பறையர் இனத்தவர்களுக்குரிய குருமாரா கவும், பூசாரியாகவும், மருத்துவராகவும், சோதிடராகவும் பணிபுரிகின்றனர். தமிழ்நாட்டில் இவ்வினத்தவர் களத்து மேட்டிற்கு வந்து குறி கூறி நெல் பெற்றுச் செல்கின்றனர். இவ்வினத்தவர் கொல்லமாண்டு 350இல் கேரளப் பகுதிக்குக் குடியேறியபோது 'தங்களையும் கணியான் இனம்' என்று குறிப்பிட்டுக்கொண்டனர்.[23]

தமிழகக் கணியான்களிடையே செய்தொழில் அடிப்படையில் குடைகட்டிக் கணியான், பறைக்கணியான் என்ற இரு பிரிவுகள் உள்ளன. சோதிடம் கூறுதல், குடை, கூடை செய்தல், மந்திரம், பேயோட்டுதல் ஆகியவற்றைத் தொழிலாகக் கொண்ட குடைகட்டிக் கணியான் இனத்தவர் பறையை இயக்கும் தொழில்புரியும் கணியானைத் தாழ்வாகக் கருதுகின்றனர். குடைகட்டிக் கணியான் இனத்தவர் பறைக்கணியானுடன் திருமண உறவு கொள்வது இல்லை. ஆனால் கணியான் இனத்துடன் வாழும் பிற இனத்தவர் கணியான் இனத்தையே தாழ்வாகக் கருதுகின்றனர். தமிழகக் கணியான்களிடம் இன்று சோதிடம், ஆட்டக்கலை ஆகியன மட்டுமே உள்ளன. வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில் வாழும் கணியான் குடைகட்டிக் கணியான் பிரிவைச் சார்ந்தவர்கள்.

இதுகாறும் கூறியவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது 'கணி' என்ற சொல் கணித்தல் என்ற அடிப்படையில்

---

22. ஆயகலைகள் அறுபத்து நான்கு, ப.178, 23. Castes and Tribes of South India, Vol.IV.P.186

உருவாகியுள்ளது. இக்கணித்தலைச் செய்பவர் 'கணியான்' என்று கூறப்பட்டு வருகின்றனர். வள்ளுவ இனத்தினர் சோதிடத் தொழிலை மேற்கொண்டதால் 'வள்ளுவக்கணியான்' என்று கூறப்பட்டிருக்கின்றனர். பின் இவர்கள் 'வள்ளுவன்' என்று சொன்னாலே சோதிடர் என்ற பொருளுணர்த்தும் சிறப்புத் தகுதியைப் பெற்றிருக்கின்றனர். எப்படி வள்ளுவக் கணியானிலிருந்து கணியான் விடப்பட்டதோ அதேபோல் வள்ளுவக் கணியானிலிருந்து 'வள்ளுவர்' விடப்பட்டுக் 'கணியான்' என்று அழைக்கப் பட்டிருக்கின்றனர். இங்ஙனம் 'கணியான்' என்று கூறப்பட்டவர்களிடமிருந்து இன்று தமிழகத்திலும் கேரளத்திலும் வாழ்ந்துகொண்டிருக்கும் 'கணியான்' இனம் உருவாகியிருக்கிறது.

'பால ஜோசியம் விருத்த வைத்தியம்' என்ற பழமொழி, முயன்று கற்றால் விரைவில் அனைவராலும் மேற்கொள்ளக் கூடிய தொழில் சோதிடம் என்றுணர்த்துகிறது. இத்தகு சோதிடத்தை அந்தணரும் பிற இனத்தவரும் பயின்று, அதையே தொழிலாக மேற்கொண்டபோது அவர்களும் கணியான் என்ற சிறப்பைப்பெற்றிருக்கின்றனர். எனவே 'கணி' எனும் சொல் பெரும்பாலும் சோதிடத்தையே பொருளாகக் கொண்டுள்ளது. சோதிடக் கலையில் சிறந்து விளங்குபவன் என்ற பொருளில் 'கணி' என்ற சொல்லை அடிப்படையாகக் கொண்டே கணியான் என்ற பெயர் உருவாகியுள்ளது.

கணியன் பூங்குன்றனார் காலத்தும், அவர் காலத்துக்கு முன்தோன்றி இருந்து வந்தனவுமான பல கணியக் கலை நூல்கள் கணியத் தொழிலுக்கென்றே இயற்றப்பெற்றன. இவை கணியர்களுக்கு மட்டுமே பயனளிப்பனவாய் இருந்தன. பிறர் இவற்றைப் பயின்று பொருளுணர்ந்து மகிழமுடியாத நிலையும் இருந்தது. கணியர்கள் பயன்படுத்திவந்த இந்நூல்கள், காலச் சூழ்நிலையால் கணியர் தாழ்த்தப்படவே மறைந்தொழிந்தன.

சோதிடர்

அறிவன், கணி என்ற தமிழ்ச்சொற்கள் பழந்தமிழில் இருக்கக் காப்பியக் காலந்தொட்டுச் சோதிடர் என்ற சொல்

தமிழ் இலக்கியத்தில் வழங்கப்பட்டிருப்பதைக் காண முடிகிறது. சோதிடவர், சோதிடர், சோதரி,[24] சோதிட்கர்[25] என்ற சொற்களாலும் சோதிடர் சுட்டப்படுகின்றனர். மாடத்து இட்ட நறும்புகை சோதிடர் விமானத்தையும் கடந்து அப்பால் சென்றது என்பதை,

> "அண்ணரும் பேர்அழல் ஆக்கிய கமழ்புகை
> மாதிரத்து இயங்கும் சோதிடர் விமானமும்
> வாசம் ஊட்டும் வகையிற்று ஆகி" (பெருங்.2:18.49-5.)

என்ற அடிகளால் அறியமுடிகின்றது. கணியன் என்ற சொல்லாட்சியைப் போலவே 'சோதிடர்' என்ற சொல்லாட்சியும் இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகிறது.

> 'சோதிடர் உதயா
> ரூடக் கவுப்புக்களில் தப்பின்றாகச் சாதகத்தை
> நினக்கேயுரிய முறைமையாற் செய்தா ராதலின்" (சீவக.1686-31)
> "சோதிட நூலார் இங்ஙனம் கூறுப" (சீவக.532. உரை)
> "தூமான் பவணர் வியந்தார்
> சோதிடர் கற்பருப்பால்" (நீல. 87)
> "அந்தர வாழ்க்கையர் சோதிடர்"
> தாங்களு மைவகையர்" (நீல. 89)
> "சுடர்பவருஞ் சோதிடரே" (சூளா. 11:206)
> "சோதிட வருடனே கூட்டி நல்ல நாளிலே
> குடையைப் புறவீடு விட்டான்" (பு.வெ.48. உரை.ப.34)

முறையாக அறிவன், கணி என்ற சொல் வழங்கப்பட வேண்டிய பொருளுக்குச் சமுதாயச் சூழலில் பிறமொழி, பிறமதத் தாக்கங்களின் காரணமாகச் சோதிடர் என்ற சொல் வழங்கப்பட்டு இருக்கிறது.

பஞ்சவர்

சோதிடரைக் குறிக்கும் வகையில் 'பஞ்சவர்' என்ற சொல்லும் காப்பிய காலத்தில் நிலவிவந்திருக்கிறது.

பன்னிரண்டு மாதமும் கோள்கள் நிற்கும் நிலையினை நன்கு கற்ற கணிதநூல் வல்லுனர் அக்கணித நூலுக்குரிய திதி, வாரம், நாள், யோகம், கரணம் என்னும் ஐவகை உறுப்புகளின்

---

24. தமிழ் லெக்சிகன், தொகுதி-3, ப.1669. 25. சீவக. 600, நச்சர்.உரை,ப.295.

இலக்கணங்களையும் அறிந்திருந்தனர். அவர்கள் பஞ்சாங்கம் கூறுவோர் எனப்பட்டனர். மேலும் ஆட்சி, உச்சம், பகை, நீச்சம், சமம் என்ற ஐந்து நிலைகளையும் நுட்பமாய் அறிந்து கூறும் திறம் பெற்றிருந்தனர். இதனை,

> ''ஆறிரு மதியிலும் காருக வடிப்பயின்று
> ஐந்து கேள்வியும் அமைந்தோன் எழுந்து'' (சிலப்.26:25-26)

என்ற அடிகளால் அறியலாம்.

சோதிடர் பஞ்சவர் என்று குறிக்கப்பட்டதைச் சீவக சிந்தாமணி,

> ''முகிற்றலை, மதிய மன்ன முழுமணி மாடத்திட்ட
> அகிற்புகை தவழ்ந்து வானத் தருவிசும் பறுத்துநீண்டு
> பகற்கதிர்ப் பரப்பிற் றாகிப் பஞ்சவர் விமான மூட்டிப்
> புகற்கரு மமரர் கற்பம் புக்கயா வுயிர்த்த தன்றே'' (600)

என்ற பாடல் தருகின்றது. 'பஞ்சவர்' என்பவர் சந்திரன், சூரியன், மற்றைக் கோள்கள், 27 நட்சத்திரங்கள், தாரகைகள் என ஐந்து வகையினர் என்பர் நச்சினார்க்கினியர்.

பஞ்சவர் என்பவர் இவ்வைந்து வகையினரே என்பதைச் சூளாமணியும்,

> ''சந்திரருஞ் சூரியரும் தாரகையு நாண்மீனும்
> வெந்திறல் கோட்களுமா மெனவிளங்கு விசும்பறா
> மந்திரத்தை வலஞ்சூழ்ந்து வருபவரு நிற்பவருஞ்
> சுந்தரஞ்சேர் மணிமுடியாய் சுடர்வஞ் சோதிடரே'' (2026)

என்ற பாடல்வழி காட்டுகின்றது. இதனையே நீலகேசியின் தருமவுரைச் சருக்கமும் (89) கூறுகிறது.

பஞ்சவர் என்பதற்கு ஐந்து வகைச் சோதிடர் என்ற பொருள் பொருத்தமுடையதாகவே தெரிகிறது. இருப்பினும் திதி, வாரம், நாள், யோகம், கரணம் ஆகிய ஐந்து கேள்விகளை அறிந்திருந்ததனாலும், சோதிடர், பஞ்சவர் என்று பெயர் பெற்றிருத்தல் கூடும். பஞ்சாங்கம், பஞ்சாங்க அய்யர், பஞ்சாங்கக்காரர் போன்றனவும் இதனை அடியொற்றினவே.

நாழிகைக் கணக்கர்

ஒரு நாட் பொழுதில் ஒரையைக் கணக்கிடும் சில்லறை அதிகாரிகள் நாழிகைக் கணக்கர் எனப்பட்டனர்.[26] நாழிகைக் கணக்கர் என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் 'கணிகள்' என்றே பொருள் கூறுவர். மேலும், இவர் நாழிகை கூறும் கணிகள் கடிகையாரென்றும் (சீவக. 1342) கூறப்படுவர் என்பர்.

நாழிகைக் கணக்கர் என்ற சொல் நாழிகையைக் கணக்கிட்டுக் கூறுபவர், சோதிடர் என்ற இருவேறுபட்ட தொழிலைச் செய்கின்றவர்க்குமுரிய சொல்லாகக் காணப்படுகிறது. சோதிடர் நாழிகைக் கணக்கீடு பற்றிய முழுமையான அறிவுத்திறம் பெற்றவராகத் திகழ்ந்துள்ளனர். நாழிகையைக் கணக்கிட்டுக் கூறுபவருள் ஒருசிலர் சோதிட அறிவினையும் பெற்றவராகத் திகழ்ந்திருக்கலாம். ஆயின் நாழிகைக் கணக்கிடும் தொழிலை மேற்கொண்டவர்கள் அனைவரும் சோதிடராக விளங்கினர் என்று கூறுதற் கியலாது. இந்நாழிகைக் கணக்கிடு தொழிலை ஊர்க் காவலர்கள் செய்துவந்துள்ளனர் என்ற செய்தியும் இக்கருத்தினை அரண் செய்வதாகக் காணப்படுகிறது. நச்சினார்க்கினியர் நாழிகைக் கணக்கர் என்ற சொல்லுக்குக் 'கணிகள்' என்று பொருள் கூறினாலும் அது சோதிடர்தம் நாழிகைக் கணக்கிடும் அறிவினைப் புலப்படுத்தும் வகையில் அமைந்த காரணப் பெயராகவே இருக்கவேண்டும்.

ஒரு நாளின் பொழுதை எங்ஙனம் கணக்கிட்டனர் என்பதற்கான சில சான்றுகள் சங்க இலக்கியப் பாடல்களில் கிடைக்கின்றன. நாளில் ஒரை கணக்கிட வட்டிலைப் பயன்படுத்தினர். நாழிகைக்கணக்கர் அல்லும் பகலும் விழித்திருந்து மணிக்கணக்கை ஆய்ந்து கண்டனர். இவர்கள் அரசனுக்கு நாழிகைக்குக் கவி சொல்லுவர்.

இவர்கள் நேரம் அளந்து கணக்கிட்ட முறைமை மிகச் சுவையானதாகவும், இவர்கள் நுண்மான் நுழைபுலத்தினை அறியும் சான்றாகவும் திகழ்கின்றது. மேலும் நாழிகைக் கணக்கர் நாழிகை சொல்லுதலை,

---

26. சங்ககால வாழ்வியல், ந. சுப்பிரமணியம், ப.130

"பூமென் கணையும் பொருசிலையும் கைக்கொண்டு
காமன் திரிதரும் கருவூரா - யாமங்கள்
ஒன்றுபோ யொன்றுபோய் ஒன்றுபோய் நாழிகையும்
ஒன்றுபோய் ஒன்றுபோ யொன்று"[27]

என வரும் பழைய வெண்பா உணர்த்துகின்றது.

காவலர் - ஊர்க் காவலர் இவர் நாழிகை வட்டிலை நோக்கி நாழிகையைக் கணக்கிட்டு அறிவிப்பர். ஒரு பாத்திரத்தில் நீரை நிரப்பி அதிலிருந்து நீர் சொட்டும் கால அளவைக் கொண்டு பொழுதை அறிதல். ஊர்க்காவலர் என்று அழைக்கப்படும் இந்நாழிகைக் கணக்கரின் இராப்பொழுதின் ஒவ்வொரு நொடியையும் கணக்கிட்டு ஆராயக்கூடிய பணியானது கடினம் என்பதை உணர்த்து முகத்தான்,

"பழமழை பொழிந்தெனப் பதன்அழிந்து உருகிய
சிதட்டுக்காய் எண்ணின் சில்பெயர் கடைநாள்
சேற்றுநிலை முனைஇய செங்கட் காரான்
நள்ளென் யாமத்து ஐயெனக் கரையும்
அஞ்சுவரு பொழுதி னானும் என்கண்
துஞ்சா வாழி தோழி காவலர்
கணக்குஆய் வகையின் வருந்திஎன்
நெஞ்சுபுண் உற்ற விழுமத் தானே" (261)

என்ற குறுந்தொகைப் பாடல் அமைகின்றது.

"பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள்
தொழுதுகாண் கையர் தோன்ற வாழ்த்தி,
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்! நின்
குறிநீர்க் கன்னல் இனைத்து என்று இசைப்ப" (முல்.55-58)

என்று நாழிகை அளந்தறிவாரைப் பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. இதில் நாழிகைக் கணக்கிடுவோர் பொழுது அளந்து அறியும் பொய்யா மாக்கள் எனச் சுட்டப்படுகின்றனர்.

"கோமகன் கோயில் குறுநீர்க் கன்னலின்
யாமம் கொள்பவர் ஏத்தொலி அரவமும்" (மணி.7:64-65)

என்ற பாடலடிகள் 'யாமம் கொள்பவர்' என்று நாழிகைக் கணக்கர் சுட்டப்பட்டுள்ளதைக் காட்டுகிறது.

---

27. சிலப்பதிகாரம், 3.:49, அடியார்க்கு நல்லாருரை, மேற்கோள், ப.157.

மதுரைக்காஞ்சி நாழிகையைச் சொல்வோர் நாழிகையைச் சொல்ல என்று கூறுமுகத்தான், வேதாளிகரொடு நாழிகை யிசைப்ப (671) என்கின்றது.

இவர்கள் 'கன்னல்' வழி நேரம் உணர்ந்தமையை,

''குறுநீர்க் கன்னல் எண்ணுநர் அல்லது
கதிர்மருங்கு அறியாது அருசு வரப்பாஅய்
தளிமயங் கின்றே தன்குரல் எழிலி'' (அக.43:6-8)
''குறுநீர்க் கன்னலின் யாமம் கொள்பவர்'' (மணி.76:4-6)

என்ற பாடல் கூறுகின்றது.

இந்நாழிகைக் கணக்கர் ஒவ்வொரு நொடியையும் கணக்கிட்டு ஆராய்பவர்களாகப் பணிபுரியினும், கணித நூலறிவு மிக்க அவர்கள் அனைவரும் அடிப்படையில் சோதிட அறிவைப் பெற்ற சோதிடராக விளங்கினர் என்று கூறுதற்கியலாது.

நிமித்தகர்

போர் நிகழ்ச்சிகளின்போதும், பிற முயற்சிகளில் ஈடுபடும்போதும் பல்வகையான நிமித்தங்கள் பார்த்தல் வழக்கம். இவற்றுள் நாள் நிமித்தம் பார்த்தலுக்கு வானியலறிவும், புள் நிமித்தம் போன்ற பிற நிமித்தங்கள் பார்த்தலுக்கு உள்ளுணர்வு, பகுத்தறிவு, அனுபவ அறிவு போன்றனவும் துணை புரிகின்றன.

என்ற பாடல் சோதிடர் கூற்றுப்படி செயல்பட்டமையைக் காட்டுகிறது. எதிர்கால நிகழ்வுகளைத் துல்லியமாகக் கூறும் ஆற்றலுடைய சோதிடர் நிறைக்குள்ளே காரியென்னும் பறவை புகுந்து அழித்தலால் நீங்கள் விரைந்து சென்று காவல் தொழிலை மேற்கொள்ளுங்கள் என்று கூற, அவர் சொற்கேட்ட உடனே வீரர்கள் விரைந்து முனைப்புடன் சென்றனர் என்று பாடல் குறிப்பு காணப்படுகிறது. சோதிட விதிமுறைகளைக் கொண்டு தற்போது நிகழவிருப்பதைக் கூறுகின்ற ஆற்றல் படைத்தவர்களாகச் சோதிடர் திகழ்ந்தனர் என்பதும், அவர்கள் கூறியதைக் கேட்ட உடனேயே செயல்படத் தொடங்கினர் என்பதும், அவர்களது செல்வாக்கும், சோதிடப் பலன்கள் சரிவர நிகழாமல் போயிருப்பின் இதுபோன்ற நிகழ்வுகள் இலக்கியத்தில் ஆழமாக இடம் பெற்றிருக்க முடியாது என்பதும் இதன்வழி பெறப்படுகின்றது.

இராமன் கானகத்திற்குப் புறப்பட்ட நாள், பதினான்கு ஆண்டுகள் கானகத்தில் இருந்துவிட்டு மீண்டும் அயோத்தி திரும்பிய நாள், பட்டாபிசேகம் நடந்த நாள் ஆகியவற்றைச் சோதிடர் கணித்தமைக்கான குறிப்புகள் இராமாயணத்தில் காணப்படுகின்றது. இராமனது சாதகப் பலன்களைக் கணித்துச் சோதிடர் இராமன் பிறந்ததால் இனி உலகம் துன்பம் இல்லாததாயிற்று என்று கூறினர் (பால.288). காட்டிற்குச் சென்ற இராமன் எப்பொழுது இங்கு வந்து தங்குவான் எனச் சோதிடத்தில் திறமை பெற்ற வாக்குநலம் உள்ள புலவர்களை அழைத்துப் பரதன் வினவ, பதினான்கு ஆண்டுக் காலம் கழிந்த பிறகு வருவான் என்று சோதிடர் கூறினர் என்பதை,

"யாண்டு வந்திங் கிறுக்குமென் றெண்ணினான்
மாண்ட சோதிட வாய்மைப் புலவரை
ஈண்டுக் கூய்த்தரு கென்னவந் தெய்தினார்
ஆண்ட கைக்கின் றறுதியென் றாரரோ" (497)

என்ற பாடல் வரிகள் காட்டுகின்றது. மிதிலையிலிருந்து தசரதர் புறப்பட்ட பொழுது (கம்ப. பரசு. 6) அவருக்கு ஒரு கணி நிமித்தம் சொன்னதாகத் தெரிகிறது என்று நச்சர் சீவக சிந்தாமணிக்கு உரை (45-417) கூறும்போது கூறுகின்றார். கோச்செங்கட் சோழ நாயனார் புராணத்திலுள்ள,

"கழையார் தோளி கமலவதி தன்பாற் கருப்ப நாணிரம்பி

விழைவார் மகவு பெறவடுத்த வேலையதறிற் காலமுணர்
பழையா ரொருநா ழிகைகழித்துப் பிறக்கு மேலிப் பசுங்குழவி
யுழையார் புவன மொருமூன்று மளிக்கு மென்ன வொள்ளிழையார்"
(பெரிய.4205)

என்ற பாடல் குழந்தை பிறக்கும் நேரத்தை ஒட்டி அதன் வாழ்க்கைப் பயன்களை நிச்சயித்துச் சாதகப்பலன் கூறும் நிலையினை வெளிக்காட்டுகின்றது. இதில் ஒரு நாழிகை (24 நிமிடம்) கால வித்தியாசம் வாழ்வின் வாழ்வாங்கு வாழும் முறையின் மாபெரும் மாறுபாடு (தலைவிதி மாற்றம்) சொல்லப்படுகிறது. அதே புராணத்தில் இதே செய்தியினை,

"மதியணி புனித னன்னாள் மங்கல வணியாற் போற்றி" (278)
"அருக்கன்-முதற் கோளனைத்து மழகிய உச்சங்களிலே,
பெருக்கவலி யுடனிற்கப் பேணியநல் லோரையெழத்
திருக்கிளரும் ஆதிரைநாள்" (192)

என்ற பாடலடிகளில் காணமுடிகிறது.

ஒருவர் பிறந்த நாளில் செவ்வாய் விருச்சிகத்தில் சேர்தல் தீது என்று பெருங்கதை (பக்.1027) கூறுகிறது.

ஒவ்வொரு நாளும் அருணாசல மலையை வலம் வந்தால் என்ன பலன் கிடைக்குமென அருணாசல புராணம் கூறுகிறது; ஞாயிறு - நினைத்த காரியம் நடக்கும்; திங்கள் - இந்திரன் போல் ஏழுலகாண்டு இறைவனை அடைவர்; செவ்வாய் - தங்களுக்குண்டாகிய கூன், தரித்திரம் நீங்கி ஏழு பிறப்பிலிருந்து விடுபடுவர்; புதன் - நான்கு வேதம், ஆறு சாத்திரம், 64 கலைகள் ஆகியன தெரிந்து நெருங்கின தேவர் களாவர்; வியாழன் - தேவர் முனிவர்களுக்கு எசமானர் களாவர்; வெள்ளி - இலக்குமியைச் சேரும் விட்டுணு பதத்தைச் சேருவர்; சனி - 9 கோள்களும் 11ஆம் இடத்தி லிருந்து பலன்களைக் கொடுப்பர். சிவராத்திரி, ஆண்டுப் பிறப்பு, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் மலையை வலம் வந்தவர்களுக்கு மேற்சொன்ன பலன் தவறாது நடக்கும். இதனை,

''அருக்க வார மலைவலம் புரிந்தோர்
சோம வாரந் திருமலை வலமாய் வந்தோர்'' (9:20)

''மங்கல தினத்திற் சூழ்வோர்
புந்திக் கெங்கணா யகரைச் சூழ்வோர்'' (9:21)

''மாவியா புத்திற் செய்யமணி வரைவலமாய்ச் சூழ்வோர்
வெள்ளி வாரந் தனில்வலம் புரிந்தோர்'' (9:22)

''உதயமே சனிநாட் சூழ்வோர்க் கொன்பது கிரக நன்றாய்
பதினொரா மிடத்திற் றூய பலன்களைப் பலியா நிற்கு
மதியணி சிவனி ராவும் வருடம்வந் துதிக்குநாளு
மதிகமமா மதிகமாகு மைப்பசி முதலா மூன்றும்'' (9:23)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. மேலும், இந்நூல் உத்தராயண, தட்சிணாயன புண்ணிய காலங்களிலும், மாசி மகத்திலும், அர்த்தோதைய காலத்திலும், சூரிய கிரகணத்திலும், விதி பாத யோகத்திலும் இஷ்ட சித்தியை அடைய விரும்பி வலம் செய்தவர்களுக்குக் கோடிப் பங்குக்கும் அதிகமாகப் பயன் கிடைக்கும் என்பதனை,

''அயனசங் கிராம மாசி மகத்திவர்த் தோத யத்தில்
வெயிலுறுங் கதிரைப் பாம்பு விழுங்குநாள் விதிபா தத்திற்
பயனுற வலஞ்செய் வோர்க்குப் பலன்களிற் கோடி யாகு
மயர்வறத் தினமுஞ் சூழ்வார் பேற்றையா ரறிய வல்லார்'' (9:24)

என்ற பாடலில் காட்டுகின்றது.

பெருந்திணைத் தலைவி தன் காதலுள்ளத் தெழுந்த கருத்துகள் கைகூடுமா என்றும், தன்னைப் பார்க்கத் தான் விரும்பும் திருவொற்றியூர் தியாகப் பெருமான் என்று வருவார் எவ்விடத்தில் என்னைக் கூடுவார் என்றும் சோதிடரை வினவுவதாகப் பத்துப் பாடல்கள் திருவருட்பாவில் அமைந்துள்ளன. இப்பாடல்களின் இறுதி அடி, **'சோதிடம் பார்த்துரைப்பீர் புரிநூல் உத்தமரே'** *(1676-1685)* என்றமைகிறது.

பொதுவாக நல்ல, தீய கோள்கள் எதுவாயினும் தம்முடைய பகைவீட்டை அடையும்போது தீய பலன்களைச் செய்யும். சனிக்கு இடபராசி, சிம்மராசி, மீனராசி ஆகியன பகை வீடுகளாகும். சிம்மராசியில் மகம், பூரம், உத்தரம் ஆகிய நட்சத்திரங்கள் இடம் பெற்றுள்ளன. சனி தன் பகை வீடுகளுள் ஒன்றான சிம்மத்தை அடையும்போது முதலில் மகத்தையும், பின் பூரத்தையும், அதனையடுத்து உத்திரத்தையும் அடையும். பின் அடுத்த இராசிக்குச் சென்றுவிடும். சனி தீய கோளாகவும் இருப்பதால் சிம்மராசியை அடையும்போது தீமையான பலன்களைக் கூடுதலாகச் செய்யும். அதிலும் மக நட்சத்திரத்தைச் சேரும்போது மிகப்பெரிய தீமைகளைச் செய்யும். கோள்கள் பயணிக்கும் நிலையில் தத்தம் நிலைக்கேற்ப எத்தகைய பலன்களைக் கொடுக்கின்றன என்பதைப் புலவர்கள் அறிந்திருந்ததால் மேற்கூறிய செய்தியினை வில்லிபாரதம் *(11ஆம் போர், 40)*, சுந்தரர் தேவாரம் *(54:9)*, தஞ்சைவாணன் கோவை *(48)*, வாயு சங்கிதை *(கடவுள்.70)* முதலான இலக்கியங்களில் எடுத்தாண்டுள்ளனர். இதன்வழி அக்காலப் புலவர்கள் சோதிடமறிந்து அதனைப் பயன்பாட்டு நிலையிலும் பயன்படுத்தி இருக்கின்றனர் என்பது தெரிகிறது.

நளவெண்பாவில் நளன் இடர்ப்பாடுகளை அடைந்ததற்குக் காரணம் சனி அவனுக்குச் சரியில்லாமல் போனதுதான் என்ற கருத்து இடம் பெறுகிறது. சிவனும் கபாலமும் சனிக்கு அஞ்சி, சிவபிரான் மரத்தில் ஒளிந்தது, இராமர் நாடு விட்டு காடு ஏகியது, மனைவியைப் பிரிந்தது போன்ற புராண, இதிகாசங்கள் இவற்றை வலுப்படுத்தும்.

கயிலாசநாதர் சதகம், அறப்பளீசுர சதகம்: போன்ற சதக இலக்கியங்கள், சோதிடப் பலன்கள் பலவற்றைத் தம் நூல்களில் பாடல்களாக எடுத்தியம்பியுள்ளன. வார நாட்களில் விருந்துக்கு உகந்த, ஆகாத நாட்கள், பயணம் போக ஆகும் ஆகாத நாட்கள், பூப்படைவதற்கு ஏற்ற, ஏலாத நாட்கள், உயிர் விடுவதற்கு நல்ல நாள், தோட நாள், சென்ம நட்சத்திர வார பலனும் மாத பலனும் என்றவாறு இன்னும் பலவற்றிற்கு இந்நூல்கள் விரிவாகப் பலன் கூறுகின்றன.

பிறந்த ஆண்டையும், நல்ல கோள்களின் பலனையும் அதாவது தன்னுடைய சாதகம் சிறப்புற அமைந்திருக்கிறது என்பதைக் கூறுவது கெடுதி பயக்கும் இவற்றை மனத்தில் வைத்தலே அறம் என்று அறப்பளீசுர சதகம் (39) கூறுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் பயிர்களின் விளைச்சல் எவ்வாறு இருக்கும் என்பதை அவ்வாண்டு ஆடி மாதம் பிறந்த பின்னர் வரும் ஐந்தாம் தேதி என்ன கிழமையாக அமைகின்றதோ அக்கிழமையை வைத்துப் பலன் கூறப்படுவதை,

ஆடிமா தம்பிறந் தைந்தாந் தினத்திலே
யரியபுத வாரம் வந்தா
லவ்வருட மொரு போக நாடெலா மிகவிளைவு
மவனிமே லிட்ட பயிர்கள்
பாடுள வியாழம்வரி லிருபோக மேவிளைவு
பாரெலாஞ் சுகசீவனம்
பன்னுசுக் கிரனெனில் கதிர்காவி சனியனோ
பயிரொன்றும் விளையாது காண்
நீடுஞா யிறுபயிர்கள் பாழ்திங்க ளொருபோக
நெல்விளை மேசெல் வமாம்
நேர்ந்தவங் காரகன் பனிச்சோள மேவிளையு
நெறியீது குறியென் பர்காண் (அண்.சத.76)

என்ற பாடல் காட்டுகின்றது.

சித்திரைத் திங்களிற் 13 நாட்களுக்கு மேற் புகழ்பெற்ற பரணி நாளில் பெய்யும் மழையும், குற்றமற்ற வைகாசித் திங்களில் முழுமதிக்குப் பிறகு வரும் நாலாம் நாளிற் சரியாக வரும் மழையும், இந்த ஆனியின் தேய்பிறை ஏகாதசியில் ஞாயிறு மறையும்போது மந்தாரத்துடன் பெய்யும் மழையும், ஆடி, ஐந்தாம் நாள் ஞாயிறும், ஆவணி மூலநாள் ஞாயிறு மறைந்த பிறகு பெருமழை பெய்தலும் நேர்ந்தால் உலகில் மிகுந்த விளைவு உண்டாம் என்பது,

சித்திரைத் திங்கள் பதின்மூன்றுக்கு மேல்நல்ல
சீரான பரணி மழையும்
தீதில் வைகாசியிற் பூரனை கழிந்தபின்
சேரும்நா லாநா ளினில்
ஒத்துவரு மழையும், அவ்வானியில் தேய்பிறையில்
ஓங்கும்ஏ காத சியினில்
ஒளிர்பரிதி வீழ்பொழுதில் மந்தார மும்மழையும்
உண்டா யிருந்தாடியில்
பத்தி வருதேதி ஐந்தினில் ஆதிவாரமும்
பகருஆ வணிமூ லநாள்
பரிதியும் மறைந்திடக் கனமழை பொழிந்திடப்
பாரில்வெகு விளைவும் உண்டாகும். (அறப்.சத.79)

என்ற பாடலில் மழைநாள் குறிப்பாக வருகிறது.

பண்டைக் காலம் தொட்டு இன்றுவரை நம்பிக்கை என்பது மக்களது வாழ்வில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் ஒரு நிகழ்ச்சியாக அமைகின்றது. எனவே சோதிடர் மக்களுக்குப் பயன்தரும் என்ற நோக்கில் நம்பிக்கை தொடர்பான பலன்களைச் சோதிடம் பார்க்கும்போது கூறியதாலும், சகுனங்களிலிருந்து வளர்ச்சி பெற்றதாகச் சோதிடம் அமைவதாலும் நம்பிக்கை தொடர்பான பல கூறுகள் சோதிடத்தில் இடம் பெற்றுள்ளன. இச்செய்தி இலக்கியங்களில் பலவிடத்துக் காணப்படுகிறது.

பெண்களின் இடக்கண் துடித்தல் நல்லன வருவதற்கும், வலக்கண் துடித்தல் தீயன நிகழ்வதற்கும் அடையாளம் என நம்பினர் என்பதைச் சிலப்பதிகாரம்,

''கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
உண்ணிறை கரந்தகத் தொளித்துநீர் உகுத்தன
எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன
விண்ணவர் கோமான் விழவுநாள் அகத்தென்'' (5:237-240)

என்றவாறு எடுத்துரைக்கின்றது. இச்செய்தியே இடக்கண் ஆடுதல் ஆடல் மகளிர்க்கு நன்னிமித்தம் (1909) என்றும், சுதஞ்சணனது கண் இடனாடுதல் தீங்கைக் குறிக்கும் என்றும் சீவகசிந்தாமணியில் (1156) வருகிறது. ஆடவர்க்கு இடக்கண் மட்டுமன்றி இடதுதோளும் துடித்தல் தீய நிமித்தம் என்பதை நளவெண்பா,

"இடுக்கண் டருதற் கேது வாகி
இடக்க ணாடலுந் தொடித்தோ டுளங்கலும்
ஆருயிர்க் கிழத்தி யகன்றன ணிவணிலள்" (2:18.32.34)

என்ற அடிகளில் விளக்குகிறது. 'வலந்துடித் துடலுறப் பரிந்து' (வி.பா.1:1.19.3) என்ற அடி ஆடவர்க்கு வலம் துடித்தல் வரவிருக்கும் சுபத்தைக் குறிக்கும் நன்னிமித்தம் என்பதைக் காட்டுகிறது.

பெண்களுக்கும் இடக்கண் மட்டுமன்றி இடது தோளும் துடித்தல் நல்லது என்ற செய்தி,

"ஏதோ இடக்கண் இடதுதோ ளும்துடிக்குது
ஓதாய் வனிதாய்ந்து உற்றமொழி சொல்லும் என்றாள்
மாதர்க்கு இடப்பாகம் மாந்தர்க்குத்தான் வலப்பால்
ஓதற்கு அரியதென உண்மையுள்ள சோதிடர்கள்
ஏற்க உரைப்பதனால் ஏந்திழையே இன்று உமக்குத்
தீர்க்கசுப கல்யாணம் சீராகக் கூடும் என்றாள்"[8]

என்ற பாடலால் தெரியவருகின்றது. இன்றும் இந்த நம்பிக்கை மக்களிடையே நிலவுவதை,

"என் இடது கண்ணும் துடித்தது உன்னைக்
கண்டேன் இந்நாள் பொன்னாள் (பெண்)
என் வலது கண்ணும் துடித்தது - உன்னைக்
கண்டேன் இந்நாள் பொன்னாள் (ஆண்)"
(குமரிக்கோட்டம், பாடல்: வாலி)

என்ற திரைப்படப் பாடல் தெற்றெனக் காட்டுகிறது.

அடுத்து வரும் பகுதியான நாட்குறித்தலில் (7.5) இடம்பெற்றுள்ள பல நிகழ்வுகள் அவரவர் சாதகங்களைக் கொண்டோ, பஞ்சாங்கங்களைக் கொண்டோ பலனறிந்து செயல் பட்டமையைத் தெளிவாகக் காட்டுகிறது. எனவே பலனறிதல் அரசியல் நிகழ்வுகள் ஒவ்வொன்றிலும் இடம்பெற்றிருத் தலையும், பாட்டுடைத் தலைமக்களுக்குச் சாதகம் பார்த்துக் கூறுதல் பரவலாக இருத்தலையும் உணரமுடிகிறது. வெள்ளி தென்திசை வருமாயின் மழையின்மை, கொடிய பஞ்சம், வறுமை ஏற்படுதல், கதிரவன் வேறு திசைகளில் தோன்றுதல், எரிகொள்ளி வீழ்தல், வால்வெள்ளி தோன்றுதல், சனி சிம்மராசியிலுள்ள மகத்தை அடைதல் முதலிய பலன்கள்,

8. நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார் காதல், ப.210

தனிமனிதனுடைய சாதகம் இன்றிப் பொதுப் பலன்களாக அறியப்பட்டமை தெரிகிறது. மேலும், தனி மனிதனுடைய சாதகம் பார்க்கப் படாமல் உலகிற்கு, மன்னருக்கு அழிவு ஏற்படுதல் அறியப் பட்டிருக்கிறது.

இத்தகைய சோதிடப் பலன்கள் பொய்ப்பதில்லை என்பதில் மக்கள் ஆழ்ந்த நம்பிக்கையுடையவர்களாய் இருந்திருக்கின்றனர். இதனை இலக்கியங்களிலும் காண முடிகிறது. சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் துறவுபூண்ட நேரத்தில் 'நீங்கள் அரசுக் கட்டிலில் ஒரு நாள் ஏறப்போகிறீர்கள்' என்று அன்றிருந்த சோதிடர் கூறியதை இளங்கோவடிகள் மறுத்தார். ஆனால் சோதிடர் கூறியபடி ஒருநாள் அரசு கட்டிலில் ஏறித்தீர்ப்பும் கூறினார். அண்ணனுக்கு அரச பதவி இல்லை என்று தெரிந்தவுடன் தனக்கும் அரச பதவி வேண்டாம் என்று துறவு பூண்டும் ஒருநாள் மட்டும் அரசுக் கட்டிலில் ஏறித் தீர்ப்புக் கூறும்படி நடந்ததிலிருந்து சோதிடம் பொய்யாகாது என்பது தெளிவாகப் புரிகிறது. ஆயின் பலன்கள் மேலோட்டமாக, ஆழமான கணிப்பு இன்றிச் சொல்லப்படும்போதே அறுபது விழுக்காடு சரியான பலன்களைத் தந்துவிடுவதால் ஆழமான கணிப்பு மேற்கொள்ளப்படுவதில்லை. சோதிடர் பலருக்கு அறுபது விழுக்காடு பலன்களே நிறைவைத் தருவதாக அமைந்துவிடுகிறது. இளங்கோவடிகள் அரசுக் கட்டிலேறுவார் என்று கூறியதுகூடச் சோதிடர் இச்செய்தியினை ஆழமான கணக்கீட்டிற்கு உட்படுத்தாது கூறியதன் விளைவாக இருக்கலாம். ஆழமாக நோக்கியிருப்பின் அதுசமயம் அரசுக் கட்டிலேறும் வாய்ப்பைவிடத் துறவு மேற்கொள்ளும் வாய்ப்பே மிகுதி என்பது புலப்பட்டிருக்கலாம். இருப்பின் இளங்கோ ஒருநாள் அரசுக் கட்டிலேறியது சோதிடப்பலன் பலித்ததைக் காட்டுகிறது. உள்ள ஆழமான கணிப்பைக் கணிக்கத் தவறும் நிலையில் எத்தனையோ ஆழமான கணக்கீடுகள் கிடைக்காமல் அழிந்தும், சுவடி நிலையில் அழியவும் உள்ள நிலை வருந்தத்தக்கது.

சகாதேவன் மகாபாரதப் போர் தொடங்க அமாவாசை நாளைக் குறித்துக் கொடுக்க, துரியோதனன், அமாவா சையன்று போர் தொடங்கியதற்கு அறிகுறியாகக் 'களப்பலி'

கொடுத்துவிட்டால் அவன் வெற்றி பெறுவது நிச்சயம் என்று எண்ணிய கண்ணன் முதல் நாளே அமாவாசையை வரவைக்கும் நிகழ்வின்வழி கடவுள் அவதாரமாக இருக்கும் திருமாலே சோதிட நிகழ்வுகளுக்கு அஞ்சியமை புலனாகிறது. பாண்டவர்களும், குந்தியும் அரக்கு மாளிகை தீப்பற்றி இறந்துவிட்டனர் என்பதைக் கேட்ட பீஷ்மர், அதனை நம்பாது அர்ச்சுனன் அஸ்தினாபுரத்தின் அரசனாகப் புகழ்பெற்று விளங்குவான் என்று அர்ச்சுனனின் சாதகத்தின் வழி அறியமுடிகிறது. 'நாளும் கோளும் பொய் சொல்லாது சோதிடர் மூடர்களா, சோதிடக்கலை ஒருபோதும் பொய்யாகாது' என்று கூறுவது (ஸ்ரீ கிருஷ்ணா, தொலைக்காட்சித் தொடர், 3.12.95) பீஷ்மர் போன்ற பேரறிவாளர் சோதிடத்தை நம்பியதையும், அந்நம்பிக்கைக் கேற்பப் பாண்டவர் இறக்கவில்லை என்பதையும் காட்டுகின்றன.

"இக்கோட்க ளெழ னோக்கி
யிவையிவையே யாமென்றா
லக்கோட்க ளெழ னோக்கி
யவையவையாக் கண்டிருந்
தெக்கோளு மில்லென்பா
யாண்டெண்ணி யேத்துதியான்
மெய்க்கோளா லென்றியான்
மிகைதெருட்டுந் திறங்காணேன்" (நீல. 298)

என்ற பாடலும் சோதிடத்தின் நம்பகத்தன்மையை உறுதிப் படுத்துகின்றது. அதாவது கணிமாக்கள் முன்னரே இந்தக் கோள்கள் தோன்றுதலை ஆராய்ந்து பார்த்து, இவற்றின் தோற்றத்தாலே இன்னின்ன பயன்கள் உண்டாகும் என்று கூறினால், அந்தக் கோள்கள் அவ்வாறு தோன்றுதலையும் பார்த்து அவற்றின் தோற்றத்தாலே நிகழும் பயனும் அவர் கூறியவை, கூறியவைகளாகவே இருக்கும். கோள்களின் எழுச்சி வீழ்ச்சிகளால் நன்மையும் தீமையும் உண்டாகும் என்பதில் எவ்விதத் தவறுமில்லை. சோதிடக் கூற்றுப் பிழையாதல் அவனுடைய அறிவு மயக்கத்தாலும், மறதியாலும், கணிதப் பிழையினாலுமே நேர்வது.

சாதகம் என்பது பின் நடக்கும் செய்தியை முன்னரே அறிவிப்பது. குந்திக்குப் பிறந்த பாண்டவர் ஐவர்க்கும்

உரியவள் பாஞ்சாலி என்பது மூன் காலத்தில் கூறிய விதி. சொன்ன சோதிடப் பலன் பொய்யாகாது. இவ்விதிப்படி இதுதான் நடக்கும் என்பதை,

"ஆதியிற் குந்தி மைந்தர் ஐவர்க்கும் உரியளா மென்று
ஓதிய விதியினால் நெஞ்சு உலப்புறா உவகை கூர்வாள்
சோதிடம் பொய்யா தென்றுந் தோற்றுவோர் உரியோ ரென்றும்
காதியர் தேற்றத் தேற்றத் தன்மனத் தளர்வு தீர்வாள்"

என்ற நல்லாப்பிள்ளை பாரதம் உணர்த்துகிறது. இங்கு விதியின் வலிமையும், சோதிடப் பலன் பொய்யாகாது என்பதும் தெரிகிறது. போக சரித்திரம், விக்கிரமாதித்தன் கதை போன்ற புராணங்களிலும், மகாகவி காளிதாசனின் சாகுந்தலம் காவியத்திலும் சோதிடத்தின் பெருமை நன்கு விவரிக்கப்பட்டுள்ளன.

இங்ஙனமான செய்திகள் மக்கள் மனத்தில் பேரிடத்தினைப் பெற்று, அவர்தம் வாழ்வியல் செயற்பாடுகளுடன் இரண்டறக் கலந்தமைந்ததோடன்றி அவர்தம் இலக்கியங்களிலும் புகுந்து அதன் நிகழ்வுகளிலும், பாத்திரங்களின் செயல்பாடுகளிலும் பிரித்தறிய இயலா வகையில் கலந்து நிற்பதனைக் காணமுடிகிறது. எனவே, சாதகமும் பலனறிதலும் தொடர்பான இலக்கியச் செய்திகள் முழுமையாகத் தொகுக்கப்பெறின் மக்களின் வாழ்வியலில் சோதிடத்தின் ஆளுமை எந்த அளவு இருந்தது, இருந்து வருகிறது என்பதை அறிதற்கியலும்.

★ ★ ★

இயல் ஐந்து

இலக்கியத்தில் நாட்குறித்தல்

மனித மனம் எப்பொழுதும் நன்மையே விளைய வேண்டும் என்று விழைகிறது. இவ்வுளவியல் பூர்வமான வெளிப்பாடே 'நாள் குறித்தல்' என்ற நிகழ்வுக்கு மூல காரணமாக அமைகிறது. நிலவை எழிலாக்கி நீண்ட தமிழைச் சுவையாக்கி வண்ணமுற அமைந்துள்ள எண்ணறிய பல கலைகளையும் கொண்டுள்ளது தமிழ்நாடு. அத்தகைய கலைகளுள் ஒன்றாகச் 'சோதிடம்' திகழ்கின்றது. இச்சோதிடக்கலை சங்க காலம் தொட்டே இருந்து வருவதைத் தமிழ் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன.

வாழ்க்கையில் நடக்கின்ற எந்த ஒரு செயலாக இருந்தாலும் நன்மையே விளைய வேண்டுமென்று விரும்புகின்றது மனித மனம்; தீமைகள் ஏற்படாமல் இருக்க வேண்டும், தீமைகளில் இருந்து தன்னை முன்கூட்டியே காத்துக்கொள்ள வேண்டும் என்றும் எண்ணுகிறது. அந்த வகையில் ஒரு செயலைச் செய்யும்முன் அது நன்மையில் நிலைக்க வேண்டும் என்று நினைத்து, முன்கூட்டியே 'இன்னநாள்; இன்ன கிழமை; இன்ன மாதம்' என்று மக்கள் திட்டமிட்டுச் செயல்படுத்துகின்றனர். பொதுவாக நல்ல காரியங்களைச் செய்யும்முன் பெரும்பாலும் நாள் குறித்தே செய்கின்றனர். அவ்வாறு செய்யும் போது சோதிடம் பார்த்து, நாள் குறித்து நடைமுறைப் படுத்துகின்றனர். எனவே 'நாள் குறித்தல்' என்பது ஒரு செயலைச் செய்யும்முன் அதற்கேற்ற நாள் பார்த்துச் செயல்படுதல் எனலாம்.

இதிலிருந்து அனைத்துச் செயல்களுக்கும் நன்னாள், தீய நாட்களைக் கூறும் பகுதி சோதிடத்தின் இன்றியமையாத பகுதி என்பது தெரிகின்றது. இவ்வாறு நாளும் கோளும் பார்த்து வினைகளாற்றுவது, பண்டைய நாகரிகங்களிலும் இன்றைய நடைமுறையிலும் உலகின் எல்லாப் பகுதி மக்களிடமும் நிலவியதனை நாகரிகங்களின் வரலாறுகள் உணர்த்துகின்றன. பண்டைய எகிப்தியர் மருந்து

உண்ணவும், விதை விதைக்கவும் நல்ல நாட்கள் என்று சில நாட்களை வகுத்திருந்தனர்[1]. கிரேக்கர்கள் ஒவ்வொரு சிறு செயலுக்கும் நாள், நட்சத்திரம் முதலியன பார்ப்பர். விவசாயிகள் நல்ல நாள் பார்த்துத்தான் விதை விதைப்பர்; அறுவடை செய்வர்; தொழிலாளர்களும் இப்படியே நல்லநாள் பார்த்துத்தான் செய்வர்.[2] மந்திரம், தந்திரம், சோதிடம் முதலியவற்றில் சீனருக்கு பலத்த நம்பிக்கை இருந்தது. சிப்பிகள், ஆமை ஓடுகள் இவற்றை வைத்துக் கொண்டு அவர்களது வருங்காலப் பலன்களைக் கணித்தனர். நல்லநாள் பார்க்கும் வழக்கமும் அவர்களிடம் காணப்பட்டது.[3] ஆசிரியரிடமும் நாள் பழக்கமும், கணிகர் சொல்லிய கணிப்பை ஏற்கும் பழக்கமும் இருந்தன. காலக் கணிகர் சொல்லிய வழி 'நின்-கி-ஈசாக்' (Nin-ggi-Azag) என்ற தெய்வம் பேசுவதாக நம்பினர். வான் மீன்களின் போக்கை ஒட்டி நல்லன அல்லன நிகழும் எனக் கொண்டனர். அதன் பின்னரே ஒற்றரை விடுத்தலும், வெற்றியை நம்பிப் படையெடுத்தலும் மேற்கொண்டனர்.[4] உலகின் பல நாடுகளிலும் இவ்வழக்கம் காணப்படுவதை மேலும் பல வரலாற்று ஆசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை நல்ல நாளும் நல்ல பொழுதும் பார்த்துச் செயல்பட்ட நிலை ஆரியர் வருகையால் ஏற்பட்ட மாற்றமென வரலாற்று ஆசிரியர் உரைப்பர். அக்காலத் தமிழ் மக்கள் நாளும் கோளும் பார்த்தே நல்ல செயல்களைச் செய்யத் தொடங்கினர். இது ஆரியர் வருகையால் ஏற்பட்ட மாறுதலாயிருக்கலாம்[5] என்ற ந.க. மங்கள முருகேசன் கூற்று ஏற்புடையதாகத் தோன்றவில்லை. நாளும் பொழுதும் பார்த்துச் செயல்படும் நிலை நாகரிகமற்ற, நாகரிகமிக்க அனைத்து மக்களிடையேயும் வழக்கிலிருப்பதால் இதனைத் தமிழர் ஆரியரிடமிருந்து கடன் பெற்றுப் பயன்படுத்தினர் என்ற கூற்று ஆய்வுக்குரியது.[6] மனிதன்

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி 1, ப.723. 2. கீரிஸ் வாழ்ந்த வரலாறு - வெ. சாமிநாத சர்மா, ப.171 . 3. பண்டைக்கால நாகரிகங்களின் வரலாறு - கி.ர.அனுமந்தன், ப.212. 4. அற்றைநாள் காதலும் வீரமும்; க.ப. அறவாணன், பக்.286-87. 5. இந்தியச் சமுதாய வரலாறு, ப.169. 6. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.163.

இயற்கையில் நிகழும் சில நிகழ்வுகளைக் கண்டு அஞ்சி நாளும் கோளும் பார்த்துச் செயல்படத் தொடங்கினான். இந்நிகழ்வு உலகின் மக்கள் வாழ்விடங்கள் அனைத்திலும் காணப்படுவதால் தமிழர்களும் நாள், கோள் பார்க்கும் வழக்கினை இயல்பாகவே கைக் கொண்டிருந்தனர் என்ற எண்ணம் தோன்றுகிறது.

நல்ல காரியங்களை அறிந்து நாள் குறித்து நிச்சயித்துத் தொடங்கிச் செயலாற்றிய நிலையினைத் தமிழ் இலக்கியங்களில் பரவலாகக் காண முடிகிறது. 'நாள் செய்வதை நல்லவர் செய்யார்' 'நாளும் கோளும் நல்லது செய்யும்' 'பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது' 'செவ்வாய் வெறுவாய்' என்னும் முதுமொழிகள் இதனை வலியுறுத்துகின்றன. நாம் மட்டுமல்லாது நம் உயிரைப் பற்ற வரும் எமனும் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதைக் 'காலனும் காலம்பார்க்கும்' *(புற.41:1)* எனக் கோவூர் கிழார் குறிப்பிடுகின்றார். 'காலம் பார்க்கும் காலன் போல' *(1:37.205)* என்று பெருங்கதையும் பேசுகிறது.

''நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்
காலங் கண்ணிய'' (பொருள்.89)

என்ற தொல்காப்பியர் கூற்றும், அதற்கு நன்னாள், தீய நாள் என்று எழுதிய இளம்பூரணர் உரையும் பழங் காலத்திலேயே தமிழர் நாள்வழி பலன் பார்த்து வந்தனர் என்பதை உறுதி செய்கின்றது.

ஒரு மனிதனுடைய வாழ்வியல் செயல்பாடுகளை அறிய சாதகத்திலுள்ள நட்சத்திரம், கோள்கள் முதலியன துணை புரியும். இங்ஙனம் தத்தம் செயலின் சாதகமான பலனறிய ஒவ்வொரு செயலைச் செய்யும் போதும் தங்கள் சாதகத்துடன் சோதிடரை அணுக வேண்டி இருக்கும். எனவே மக்கள் இம்முறையைக் காட்டிலும், பொதுவாக நற்பலன் விளைவிக்கின்ற நாட்களை நற்செயலுக்குப் பயன்படுத்தினர். இந்நாட்களை நாட்காட்டி, பஞ்சாங்கத்தின் வழி அறிதலைக் காட்டிலும் சோதிடர் வழி அறிதல் சிறப்பு என்பதை,

''நாள்கூட்டம் முகூர்த்தம் அவற்றோடு நன்றாமக்
கோள்கூட்டம் யோகங் குணனுணர்ந்து தோள் கூட்டல்

உற்றானும் அல்லானும் ஐந்தும் உணர்வானால்
பெற்றநாட் கொள்க பெரிது'' (சிறு 42)

என்ற அடிகள் கூறுகின்றன. எனவே நாட் பொருத்தம், முகூர்த்தம், ஞாயிறு, திங்கள், முதலிய ஒன்பது கோள்களின் நற்சேர்க்கை, அமிர்தயோகம் முதலான யோகம், இவற்றால் உண்டாகின்ற நன்மைகளை ஆராய்ந்து, இவ்வைந்தும் நன்மையாயிருக்கின்ற நாளில் நல்ல செயல்களைச் செய்தால் அது மிகவும் நல்ல முறையில் நடைபெறும் என்று நம்பினர். ஆகவே ஒருவர் தன்னுடைய சாதகத்தை வைத்துப் பார்க்காவிடினும் அடிக்கல் நாட்டுதல், காது குத்துதல், புதுமனை புகுவிழா முதலிய செயல்களைச் செய்யும் போது சோதிடரை அணுகி நல்ல நாள் அறிந்து செயல்பட்டமை தெரிகின்றது. நல்லநாள் பார்க்கும் பழக்கம் மக்களிடையே காணப்பட்டாலும் நாள் குறித்தலைப் புரோகிதர் (ஐயர், அந்தணர்) மூலம் கேட்டுச் செயல்பட்டனர் என்பதை,

''தலைஇய நற்கருமஞ் செய்யுங்கா லென்றும்
புலையர்வாய் நாள்கேட்டுச் செய்யார் - தொலைவில்லா வாய்சொல்
அந்தணர்வாய்ச் சொற்கேட்டுச் செய்கஅவர்
என்றும் பிழைப்ப தில'' (92)

என்ற ஆசாரக் கோவைப்பாடல் உணர்த்துகின்றது. அந்தணர், வள்ளுவர் போன்ற குறிப்பிட்ட பிரிவினரிட மிருந்து சோதிடம் இன்று கல்விநிலை வளர்ச்சியால் சாதியடிப் படையின்றி அனைவருக்கும் உரிய தொழிலாக வளர்ச்சி மாற்றம் பெற்றுள்ளதற்குக் காரணம் சோதிடத்திலுள்ள கணக்கிடும் முறையே எனலாம். இம்முறை ஒரு நம்பகத் தன்மையை ஏற்படுத்துவதால் படித்தவர்களும் இதில் ஈடுபடுகின்றனர்.

திருமணம்

'மடியில் கண்விழித்து மரணத்தில் கண் மூடும்வரை' நன்மையையே விழையும் மக்கள் எல்லா நிலைகளிலும் நல்ல நாள் பார்த்தே செயல்பட்டுள்ளனர். தமிழர் பிறப்பு முதல் இறப்பு வரை தங்கள் வாழ்க்கையில் செய்யும் செயல்களை நாள், கோள் பார்த்தே செய்து வந்தனர் என்பதை இலக்கியங்கள்வழி அறிய முடிகின்றது. அவ்வகையில்

திருமணம் செய்யும் வேளையில் எவ்வாறு நாள் கோள் பார்த்தனர் என்பதைக் கீழ்வரும் இலக்கியச்சான்றுகள்வழி அறியலாம். நல்லநாள் பார்க்கும் இயல்பு எல்லா நிலையிலும் பின்பற்றப்பட்டாலும், திருமண முறையில் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. பெண் பார்க்கச் செல்ல, பெண்ணைப் பேசி முடிக்க, திருமணத்தை உறுதிப்படுத்த, திருமணச் சடங்குகளை நிகழ்த்த என்று பல நிலைகளிலும் நல்ல நாள் பார்க்கப்பட்டுள்ளது. இதனை,

''நடுநாள் வருதல் அஞ்சுதும் யாமென
வரைந்து வரல் இரக்குவ மாயின் நம்மலை
நன்னாள் வதுவை கூடி நீடின்று
நம்மொடு செல்வர்மன் தோழி'' (நற்.125:5-8)

''நல்லாய்,
நன்னாள் தலைவரு மெல்லை நமர்மலைத்
தந்நாண்தாந் தாங்குவா ரென்னோற் றனர்கொல்'' (கலி.39:80-82)
''வதுவை நாளால் வைகலு மஃதியா'' (கலி.75:11)

என்ற பாடல்கள் காட்டுகின்றன. நல்லநாளில் வதுவை செய்தல் மரபென்பதைக் கலித்தொகை குறிப்பாலுணர்த்து கின்றது.

நல்லநாள் கேட்டுக் கொண்டு தாமதமில்லாமல் வந்தால் இப்பெண்ணை அடைவது உறுதி என்ற பொருளில் வரும்,

''நாள்கேட்டுத் தாழாது வந்தால் நீ எய்துதல் வாயால்''
(திணைமாலை. 150:46)

என்ற அடிகள் பெண் கேட்கச் செல்பவர்கள் நல்ல நாள் பார்த்து அந்நாளிலே புறப்படுவர் என்பதைப் புலப்படுத்துகிறது. இத்தகைய கருத்துகளை இலக்கியங்களில் காண முடிந்தாலும்,

''கல பறிச்சாப்லயும் ஆச்சு
பொண்ணு பாத்தாப்லயும் ஆச்சு''

என்று மக்களிடையே வழங்கி வரும் பழமொழியின் உட்பொருளைக் காணும் போது நாள், கோள் எதுவும் பார்க்காமல், தங்களது அன்றாடப் பணிகளின் போதே திருமண உடன்பாடுகளையும் செய்து கொண்டனர் என்பது புலனாகிறது.

திருமணம் நிகழும் மணமக்கள் இருவருக்கும் திருமணப் பொருத்தம் இருத்தல் வேண்டும் என்ற மரபு அன்றிலிருந்து இன்று வரை கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது. இன்று நடைமுறையிலுள்ள திருமணப் பொருத்தம் பார்த்தல் பண்டும் இருந்தது என்பதற்குத் தொல்காப்பியச் சூத்திரம் சான்றாக உள்ளது. இருப்பினும் அக்காலத்தில் பார்க்கப்பட்ட திருமணப் பொருத்தத்திற்கும், இக்காலத்தில் பார்க்கப்படும் திருமணப்பொருத்தங்களுக்கும் வேறுபாடு காணப்படுகிறது.

'பிறப்பே குடிமை' எனத்தொடங்கும் சூத்திரம் முதற்பொருத்தமாகப் பிறப்பைக் கூறுகிறது. பிறப்பு என்பது ஈண்டு குலத்தைக் குறித்தது எனலாம். 'காம வாயில்' என்பது யோனிப் பொருத்தமாக இடமுண்டு. குடிக்கு ஏற்ற ஒழுகலாறும், வயதும், தோற்றமும், இரு குடும்பப் பொருளியல் நிலையும் நோக்கப்பட்டன எனலாம். இவை அனைத்தும் பொருந்தியிருப்பது உலகில் அருமை. பிற பொருத்தங்கள் இல்லாவிட்டாலும், பிறப்பு ஒத்திருக்க வேண்டும் என்பது அடிப்படையாக இருந்திருக்கலாம். ''எல்லாப் பொருத்தங்களும் கூடியவர் எதிர்பட்டுக் காதல் கொண்டனர் என்பது இலக்கிய மரபாகும்''.[7]

தொல்காப்பியர் பிறப்பு முதலான பத்துப் பொருந்திய குணங்களையும், நிம்பிரி முதலான பத்துப் பொருந்தாக் குணங்களையும் குறிப்பிட்டுள்ளதை அறியும் போது திருமணம் எத்தகைய கட்டுப்பாடுள்ள பாதையின் வழியே கொண்டு செல்லப்படுகின்றது என்பதை அறிகிறோம்.

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்பர்'' (கற். 4)

என்ற தொல்காப்பிய நூற்பா சமுதாயத்தில் ஏமாற்றுதல் என்பது தோன்றிய பின்னர் திருமணத்திற்குச் சடங்குகள் வகுக்கப் பட்டதை உணர்த்துகின்றது. இங்ஙனம் திரு மணங்கள் சடங்குகளோடு நடத்தப்படுகின்ற போது நல்ல நாள் பார்த்து நடத்துதல் என்ற போக்கு உருவாகி இருக்கும்.

முதியவர்களைப் பெண் வீட்டிற்கு அனுப்பிப் பொருத் தங்கள் சரியாக இருப்பின் மணம் பேசி முடித்தனர் என்பதனை,

---

7. தமிழர் நாகரீகமும் பண்பாடும், அ. தட்சிணாமூர்த்தி, ப.48

"தண்டுடைக் கையர், வெண்தலை சிதலவர்'

என்ற வரிகள் வெளிப்படுத்துகின்றன. திருமணப் பொருத்தம் சரியாக அமைந்தபின் சோதிடர் திருமணத்திற்கு நல்ல நாள் குறித்துக் கொடுக்க, அந்நாளில் திருமணம் முடித்தனர் என்பதை,

"பல்லாரறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க மெல்லியற்
காதன் மனையாளும்' (நால. 86)
"நாள்ஆய்ந்து வரைதல்அறம்" (திணைமாலை. 52)
"இருபெருங் குரவரு மொருபெரு நாளான்
மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்ந்துழி" (சிலப். 1:40-41)
"பெருகுங் கணியிற் கணிபேசிய பேதினாளிற்" (சீவக. 1063:3)
"வெற்ற வேந்தன் கொற்றப் பெருங்கணி
கூறிய முழுத்தங் குன்றுத லின்றி" (பெருங். 244-45)
"கணி மொழிந்த நாளிற் கடிமணமுஞ் செய்தார்" (நள.1:72)

என்ற பாடல் அடிகள் காட்டுகின்றன. மணம் புரிந்துகொள்ள இப்பொழுது நல்ல முகூர்த்தம் என்று தலைவன் கூறியதாகத் தலைவிக்குத் தோழி கூறுவது,

"முத்தோர் முறுவலாய் நாமணம் புக்கக்கா
லிப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய
வக்கடவுண் மற்றக் கடவுள்" (கலி.93:10-13)

என்ற அடிகளின் வழி பெறப்படுகின்றது.

திங்களும் உரோகிணியும் சேரும் போது திங்கள் சோதிட விதிப்படி 'உச்சன்' ஆவதால் நன்மைகளைக் கூடுதலாகப் புரியும். அந்நாள் திருமணம் நிகழ்த்துதற்குரிய நல்ல நாள் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவி வந்ததைக் கீழ்க்காணும் பாடலடிகளால் உணரமுடிகிறது.

"சகட மண்டிய துகள்தீர் கூட்டத்து
வதுமை மண்ணிய மகளிர்" (அக.5-8)
"கனையிருள் அகன்ற கவின்பெறு காலைக்
கோள்களால் நீங்கிய கொடுவெண் டிங்கள்
கேடில் விழுப்புகழ் நாள்தலை வந்தென" (அக். 86)
"வானூர் மதியம் சகடயை வானத்துச்
சாலி யொருமீன் றகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடக்
தீவலஞ் செய்வது" (சிலப். 1:50-53)

சீவக சிந்தாமணியில் வெள்ளிக்கிழமையும், திருதியையும் பெற்ற உத்திரட்டாதி நாளில் சிம்மலக்ன நேரத்தில் திருமணம் நடைபெற்றதைக் காணமுடிகிறது.

"மீனத்திடை நாள் கிழமை வெள்ளி சயைபக்கம்
கானத்திடை வேங்கையெழக் கண்ணினர்க ளன்றே" (590.18)

என்ற வரிகள் நாள், இலக்னம் ஆகியன கூடுதலாகக் குறிக்கப் பெற்றுள்ளன என்பதைச் சுட்டுகின்றன.

திருமண நிகழ்ச்சிகளில் ஒன்றான "காப்புக் கட்டுதல்" என்ற சடங்கும், கணி கூறிய நல்ல நாளிலே நடைபெற்றது என்பதையும்,

"கணிபுனைந் துறைத்த நாளாள் கண்ணிய கோயி றன்னுள்
மணிபுனை மகளிர் நல்லார் மங்கல மரபு கூறி
அணியுடைக் கமல மன்ன வங்கைசேர் முன்கை தன்மேற்
றுணிவுடைக் காப்பு கட்டிச் சுற்றுபு தொழுது காத்தார்" (1344)

என்ற சீவகசிந்தாமணிப்பாடல் வெளிக்காட்டுகிறது.

நடுவணதாகிய கடலையுடையவனாகிய வருணனும் வியாழனும், தன்னோடு நட்புடையனாகிய வெள்ளி பெயர்ந்து போய் தனக்குரியதாகிய விசும்பிடத்தே திங்களுக்கு அருகில் நின்றான். ஆதலால் கணி மணவேள்வி நிகழ்தற்குரிய முழுத்தம் இஃதென்று வேள்வியா சானுக்குணர்த்தினார் என்பதை,

"ஆயிடை நடுக்கட லுளாஎமர ராசா
னேயுடைய னாயசுர மந்திரியெ முந்தான்
போயுடைவி சும்பின்மதி யும்புகுது கின்றான்
மேயுடைய ணிந்தகணி வேலையிது வென்றான்" (சூளா.8:272)

என்ற வரிகள் காட்டுகின்றன. அதாவது வெள்ளி திங்கள் அருகில் வந்த நாளைத் திருமணம் நிகழ்தற்குரிய முகூர்த்தமாகக் குறித்திருக்கின்றனர் என்பது தெரிகின்றது. சுக்கிரன் களத்திர காரகன். ஆதலின் சுக்கிரன் சூரியனோடு சேரும்போது சுக்கிராஸ்தமனம் விவாகம் செய்யக்கூடாது என்ற இக்குறிப்பு சீவக சிந்தாமணி (834)யில் உள்ளதாக உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார்.

திருப்புல்லாணி எம்பெருமான் மீதும் பதுமாசனித் தாயார் மீதும் பாடிய கிளைப்பாட்டு என்ற நூலில் திருமணத்திற்கு நல்லநாள் பார்த்தலை,

''பங்குனி யாறாந்திரு நாள்முகூர்த்தம் வைத்தனர்-இந்தப்
பதினா லுலகத்தோரும் வந்து மொய்த்தனர்'' (37)

என்ற அடிகள் காட்டுகின்றன.

"உறையூர் நாச்சியார் வரலாற்றை விரித்துக் கூறி வடமொழியிற் செய்யப்பட்ட 'லட்சுமி காவியம்' என்ற நூலில் நாச்சியாரின் திருமணக் காலம் பங்குனி உத்திரமாகக் கூறப்பட்டுள்ளது. தடாதகைப் பிராட்டியாரின் திருமண நாள் ஆவணி அவிட்டமாகக் கொள்ளப்படுகிறது. அந்நாள் இன்றும் மதுரையில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது."[8]

மேற்கண்ட சான்றுகள் வழி சங்ககாலம் முதல் மக்கள் திருமணம் செய்ய நல்ல நாள் பார்த்துச் சோதிடம் பார்த்துச் செயல்பட்டு வந்தனர் என்பதை அறியலாம். தொடக்க காலத்தில் பொருத்தம் பார்த்தலும் நாள் குறித்தலும் மக்களிடையே வழக்கில் இருந்திருக்காது. கால வளர்ச்சியினாலும், சமூக மாற்றத்தினாலும் இவ்வழக்கு மக்களிடையே பரவி இருக்கக்கூடும். அதுவே காலம் செல்லச் செல்ல நன்மையில் நாட்டம் கொண்ட மக்களால் பின்பற்றப்பட்டு இன்று வரை செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இமயவனின் புத்திரி உமாதேவி உமையவளுக்கும், இறைவன் ஈசனுக்கும் திருமணம் முடிவாகிறது. தேவி பிறந்தது பூர நட்சத்திரம். ஈசன் அவதரித்தது திருவாதிரை. இந்த இரண்டு நட்சத்திரங்களுக்கும் பொருத்தம் பார்த்து திருமண நாளையும், முகூர்த்த நேரத்தையும் சப்தரிசிகள் குறித்தனர் என்று 'அருணாசலப் புராணம்' கூறுகிறது.

''பொருத்ததோ ருவகை யாகிப்
பிறைமுடி யன்பேர் நாளிற்
பொருத்தமு நாளுந் தேர்ந்து
முனிவரைப் புகழ்ந்து போற்றி
விருத்தியார் வரவு நாளுங்
குறித்திறை விடுத்தா னென்றோர்
பரித்தகங் கையினாற் கிந்தப்
படியெலாம் பணிந்து சொன்னார்'' (1:62)

---

8. வைணவத்தின் ஆழ்வார்கள் கால நிலை, டாக்டர் குலசேகரன், ப.119.

புணர்ச்சி

வாழ்க்கையின் முக்கிய கட்டமாக திருமணத்தைக் கருதி நாள் கோள் பார்த்த மக்கள் மணம் நிகழ்ந்தபின் கணவன் மனைவியிடையே ஏற்படும் புணர்ச்சியையும் முக்கிய நிலையாகக் கருதி வந்தனர். எனவே மணமக்கள் புணர்ச்சி கொள்வதற்கும் பெரியோர் நல்ல நாள் பார்த்துள்ளனர். தொல்காப்பியர் காலத்திலேயே முகூர்த்தம் பார்த்தல் என்ற வழக்கு இருந்துள்ளது. ஓரையும் நாளும் பார்த்துக் கூடுதல் வேண்டும் என்று கற்புக் காலத் தலைமக்களுக்கு அறிவுறுத்திய தொல்காப்பியர் அதிலிருந்து களவுக் காலத் தலைமக்களுக்கு விலக்கு அளித்திருப்பதனை,

''மறைந்த வொழுக்கத் தோரையும் நாளும்
துறந்த வொழுக்கம் கிழவோற் கில்லை'' (தொல். கள:44)

என்ற நூற்பாவில் காண முடிகிறது. களவுக் காலத்தில் நாள், நேரம் பார்த்துக் கூடுதல் பெரும் இடர்ப்பாடுக்குரியது என்பதனாலும், கற்புக் காலத்திலேதான் குழந்தை பிறத்தல் என்ற நிகழ்வு நடைபெறுவதாலும், கற்புக் காலத்திற்கு மட்டும் கூடும் நேரம் நன்றாக அமைய வேண்டும் என்ற கருத்து அக்காலத்தில் இருந்திருக்கிறது.

உச்சிப் பொழுதிலும், நடு இரவிலும், மாலையும், காலையும், திருவாதிரை, திருவோணம், அட்டமி, பிறந்த நாள், அமாவாசை, பௌர்ணமி ஆகிய நாட்களிலும் மனைவியோடு புணர்தல் கூடாது என்பதை,

''உச்சியம் போழ்தே டிடையாமம் ஈரந்தி
மிக்க இருதேவர் நாளோ டுவாத்திதி நாள்
அட்டமியும் ஏனைப் பிறந்த நாள் இவ்வனைத்தும்
ஒட்டார் உடனுறைவின் கண்'' (ஆசா.43)

என்ற பாடல் சுட்டுகின்றது.

மனைவியைச் சேரும்போது வளர்பிறையின்பின் ஆறு நாட்களிலும், தேய்பிறையின் முன் ஆறு நாட்களிலும் கூட வேண்டும். யோகியர்கள் வளர்பிறையில் ஆறு நாட்களும், தேய்பிறையில் சூரியனுக்கு உரிய 9 நாட்களிலும் 1,8,13 அமாவாசை நீங்கலாக மற்ற ஐந்து நாட்களும் ஆக 11 நாட்களும் கூட நன்னாட்களாகும் எனத் திருமந்திரம் கூறுகிறது (1900-1937).

மங்கையின் உடற்கூறு அமைப்பின்படியும் இயற்கையின் தாக்கத்தின் படியும் வளர்பிறை, தேய்பிறை இவற்றைக் கணக்கிட்டு நாள் குறித்து உறவு கொள்ளவில்லையென்றால் கருத்தரித்துப் பிறக்கும் குழந்தைகள் பாதிக்கப்படும் என்ற அறிவியல் உண்மையை அனுபவத்தால் உணர்ந்து இவ்வாறு மக்கள் பின்பற்றி வந்தனர் என்று அறிய முடிகிறது. இம்முறை சாந்தி முகூர்த்த கல்யாணம் என்ற வகையில் இன்றும் நல்ல நாள், நேரம் பார்த்து நடத்தப்பட்டு வருகிறது.

கருத்தரிக்க நல்ல நாள்

சித்த மருத்துவ நூல்கள் கருத்தரிப்பதற்குரிய நல்ல நேரம், நாள் முதலியவற்றை விரிவாகக் கூறுகின்றன. முதலிரவு அன்று நல்ல நாள் நேரம் பார்க்கப்படும் நிலை போலவே ஒவ்வொரு குழந்தையும் உருவாகும் நாளும் நேரமும் நல்லதாக அமைக்கப்படும் நிலை உருவாகுமானால் நல்ல தலைமுறை உருவாகி சமுதாயம் சீர்பட வாய்ப்பு அமையும். இரண்டு கோள்கள் ஒன்றுசேரும் நேரத்தில் ஒரு பெண் கருத்திரிக்கின்ற போது குழந்தை ஒப்பற்ற ஞானியாக விளங்குவான் என்பதை அறிந்திருந்த பராசுர முனிவர் யமுனை ஆற்றைக் கடக்கும் காலத்து, கோள்களின் கூட்டு நிலையை அறிந்து படகோட்டியாக வந்த மச்சகந்தியை அணைய அக்கருவால் வியாச முனிவர் தோன்றினார் என்பதை, வில்லிபாரதத்தின் வழி (ஆதிபருவம்,6) அறியமுடிகின்றது.

எந்தெந்த நாட்களை நீக்கி, எந்தெந்த நாட்களில் கூடினால் நன்மக்கள் பிறப்பர் என்பதை அண்ணாமலை சதகமும் (70) கூறுகின்றது.

> ''காலற்ற உடலற்ற தலையற்ற நாளிற்
> கோலக்குய மடைவார் தமைக்கூடின் மலடாவர்
> மாலுக்கொரு மனைமாளிகை கோலினது பாழாம்
> ஞாலத்தவர் வழிபோகினும் நலமொய் திடாரே''

என்ற சோதிடப் பாடல் காலற்ற, உடலற்ற, தலையற்ற நாட்களில் சாந்தி முகூர்த்தம், மனை முகூர்த்தம், யாத்திரை ஆகாது என்பதை உணர்த்துகிறது.

குழந்தை உருவாகின்ற நேரம் நல்லதாக அமைய வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டே புணர்ச்சியின் போது நல்லநேரம் பார்த்தல் என்ற இயல்பு தமிழர் களிடையே அக்காலந் தொட்டே இருந்து வந்தது. குழந்தை உருவாகும் நேரம் நல்லதாக அமையும் போது, அக் குழந்தை பிறக்கும் நேரமும் நல்லதாக இருக்கும் என்று நம்பினர். குழந்தை உருவாகும் நாள், நல்ல நாளாக இருக்க வேண்டும் என்பதற்காகப் புணர்ச்சியின் போது நல்ல நாளாகப் பார்த்துக் கூடுவது என்பது போன்ற முயற்சிகளை மேற் கொண்டாலும் நடைமுறையில் குழந்தை நல்ல நேரத்தில் தான் உருவாயிற்று என அறுதியிட்டுக் கூறுதல் என்பது இயலாததாக உள்ளது. அத்துடன் குழந்தை பிறக்கின்ற காலத்தையும் மிகச் சரியாகக் கூற இயலாததால் நடைமுறையில் தீமை தரும் கோள்களில் குழந்தை பிறக்கின்ற வாய்ப்பு ஏற்படும் போது நேரம் தள்ளிப் பிறக்க வேண்டும் என்றோ முன் கூட்டியே பிறக்க வேண்டும் என்றோ உற்றார் உறவினர் விரும்புவதைக் காண முடிகிறது. இப்போக்கினையே பெரிய புராணத்தில் கோச்செங்கணான் வரலாற்றில் காண முடிகிறது. கோச்செங்கணான் பிறக்கின்ற கால கட்டத்தில் இன்னும் சிறிது நேரம் தள்ளிக் குழந்தை பிறந்தால் மிகப் புகழ் பெற்று விளங்குவான் என்று சோதிடர் கூற, குழந்தை பிறக்கும் நேரத்தை ஒரு நாழிகையளவு பிறவாமல் தள்ளிப் போட வேண்டும் என்பதற்காகக் கோச்செங்கணானின் தாயின் கால்களை உயரத் தூக்கிக் கட்டி வைத்திருந்தனர். பிறக்கின்ற போது தேவைக்கு அதிகமாய் ஒரு நாழிகையளவு கர்ப்பப் பையில் இருந்ததால் சிவந்த கண்களுடன் பிறந்து, அதனால் கோச்செங்கணான் என்ற பெயர் பெற்றான் என்பதை அறிய முடிகிறது (பெரிய. 68 : 4205, 4206). இந்நிகழ்ச்சியால் சோதிடத்தில் தமிழக மக்கள் கொண்டிருந்த அறிவும் ஆர்வமும் புலப்படுகிறது.

பிள்ளையைத் தொட்டிலில் கிடத்தல்

குழந்தை பிறந்த பிறகு ‘தொட்டிலில் போடுதல்’ என்ற சடங்கு நிகழ்த்தப்படுகிறது. அதனையும் நல்ல நாள் நேரம் பார்த்தே செய்து வந்தனர். இதனை,

''நல்ல நேரம் நாளும் பாத்து
அழகு மணி தொட்டி கட்டி
அழகு மணி தொட்டிலிலே
கண்ணுறங்கு கண்மணியே''[9]

என்ற நாட்டுப் புறப்பாடல் காட்டுகின்றது. ''பிள்ளை பிறந்த 10, 12, 16, 32 ஆம் நாள் ஆதல் சுபக்கிரகம் உதயமாகப் பஞ்சாங்க யோகம் நன்றாக, ஊர்த்துவ முகராசி நட்சத்திரங்களிலே பிள்ளையைத் தொட்டிலில் ஏற்றல் வேண்டும்'' என்று அபிதான சிந்தாமணி (ப.900) குறிப்பிடுகின்றது.

திருப்புல்லாணி எம்பெருமான் மீதும் பதுமாசனித் தாயார் மீதும் பாடிய கிளைப்பாட்டு என்ற சிற்றிலக்கிய நூலில், நல்ல நாளில் குழந்தையைத் தொட்டிலிலிட்டனர் என்பதை,

''முகூர்த்தமிட்டு மங்கையரை கூப்பிட விட்டார்-அவர்கள்
முற்றும் வார விட்டுப்பெண்ணைத் தொட்டிலிட்டார்'' (24).

பெயர் சூட்டு விழா

பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும் பொழுது நல்ல நாள் பார்த்தே செய்துள்ளனர் என்பதைக் கீழ்வரும் பாடல் வரிகள் கூட்டுகின்றன. தன் மகள் மணிமேகலைக்குக் கோவலன் நல்ல நாளில் பெயர் சூட்டினான் என்பதை,

''விஞ்சையிற் பெயர்த்து விழுமந் தீர்த்த
எங்குல தெய்வப் பெயரீங் கிடுகென
அணிமே கலையா ராயிரங் கணிகையர்
மணிமேகலையென வாழ்த்திய ஞான்று'' (15:36 - 39)

என்று சிலப்பதிகாரம் கூறுவதிலிருந்து அறிய முடிகிறது. இச்செய்தியை மணிமேகலையிலும் காண முடிகிறது.

''திரையிரும் பௌவத்துத் தெய்வமொன் றுண்டெனக்
கோவலன் கூறியிக் கொடியிடை தன்னையென
நாமஞ் செய்த நன்னாள்'' (7:33-35)

பெயர் வைக்க நல்ல நாள் குறித்தனர் என்பதை மக்கள் இலக்கியங்களிலும் காண முடிவதை,

9. நாட்டுப்புறப் பண்பாட்டியல், ப.52.

"பொன்னான பேரு வைக்க
நாளும் குறிச்சிடுவேன்"[10]

என்ற வரிகள் காட்டுகின்றன. இன்றும் 16 ஆம் நாளில் பெயர் வைக்கும் விழா பலவிடங்களில் நடத்தப்பட்டு வருகிறது. தொல்பழங்காலந்தொட்டு பிறந்த நட்சத்திரத்தின் பெயர் சூட்டிக் கொள்வது வழக்காகக் காணப்படுகிறது. சங்க இலக்கியங்களில் ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார்; மாமூலன் முதலிய பெயர்கள் 'மூலம்' என்ற சொல்லோடு சேர்ந்து காணப்படுகிறது. பரணர், உருத்திரனார் என்ற பெயர்களும் நட்சத்திரத்தின் பெயர்களைக் கொண்டு அமைகிறது. இன்றும் கார்த்திகேயன், ஆதிரையன், ரோகிணி, ரேவதி முதலிய நட்சத்திரப் பெயர்கள் குழந்தைகளுக்குச் சூட்டப்படுதலை நடைமுறையில் காண முடிகிறது

பிறந்த நாள்

பிறக்கின்ற நாள்படி சாதகம் கணிக்கின்ற வழக்கம் பழங்காலம் முதல் இன்று வரை மக்களிடையே உள்ளது. ஒருவரது பிறந்த நாள், நேரம், ஆண்டு முதலியவற்றை வைத்து அவருக்கு ஏற்படும் நற்பலன், தீயபலன் அறியப்பட்டது. சிறப்பாக அவரது நட்சத்திரத்தைக் கொண்டு, இப்பலன் பார்க்கப்பட்டது. ஒருவர் பிறக்கும் நாளில் விண்ணகத்தில் திங்கள் நின்ற இடத்திலிருக்கின்ற மீனே அவருடைய நட்சத்திர (நாள்மீன்) மாகின்றது. இந்த நட்சத்திரத் திற்கேற்பவே அவர்களது வாழ்வில் நல்லவை, கெட்டவை விளையும்.

"மதிசேர் நாண்மீன் போல நவின்ற
சிறுபொன் நன்கலம்" (புற.160)

ஒருவர் பிறந்த நட்சத்திரம் என்ன என்பதைத் தெரிந்து வைத்து இருந்தனர். இதனை மாங்கிழார் பாண்டியன் நெடுஞ்செழியனை வாழ்த்தும் போது நின்று நிலைப்பதாக நினது நாளாகிய மீன்; நில்லாது பட்டுப் போவதாக நின் பகைவருடைய நாளாகிய மீன் என்று பாடுகிறார். இதனை,

10. நாட்டுப்புறப் பண்பாட்டியல், ப.70

''நின்று நிலைஇயர் நின்நாண்மீன் நில்லாது
படாச் செலீஇயர் நின்பகைவர் மீனே'' (புற.24:24-25)

என்ற வரிகள் காட்டுகின்றன.

பிறந்த நட்சத்திரம் எது என்று அறிந்ததோடு மட்டுமன்றி அவிட்டம், பரணி, மகம் முதலிய நட்சத்திரங்களில் பிறத்தல் சிறப்பு என்ற நம்பிக்கை உடையவர்களாய் இருந்தனர். பரணி நாட் பிறத்தல் சிறப்பு என்பது,

''தரணி காவலன் சச்சந்த னென்பவன்
பரணி நாட்பிறந் தான்பகை யாவையும்'' (சீவக. 1813)

என்ற அடிகளால் தெரிகின்றது. பரணி பிறந்தநாள் தரணியாள்வான் என்ற பழமொழியும், பரணியான் பாரவன் என்ற உரையும் (நன்.150. மயிலை) இதனை உறுதிப் படுதுத்துகின்றன. 'பரணி' என்னும் சிற்றிலக்கிய வகையின் பெயர் பரணி நட்சத்திரத்தோடு தொடர்புடைய பெயராகவும் கொள்ளப்படுகின்றது. மன்னன் யானை பலவற்றைக் கொண்டு காலனை அடுத்தலுக்கும், காளிக்குப் பேய்கள் கூழ் சமைத்துப் படைத்தலுக்கும் உரிய நன்னாளாகவும், யானை பிறந்த நாளாகவும் பரணி நாள் கொள்ளப்பட்டது.

''ஆண்ஒப்பார் இவன்நேர் இல்லை காண்திரு
ஓணத்தான் உலகு ஆளும் என்பார்களே'' (திவ். பெரியாழ். 1:1.3)

என்ற கூற்றுப் பரணியைப் போலவே திருவோண நட்சத்திரத்தில் பிறப்பதும் உலகாளக்கூடிய அளவுக்குச் செல்வாக்குத் தரும் என்பதைக் காட்டுகிறது.

ஓண நாளில் பிறந்தவர்கள் வாழ்வில் உயர்நிலையினை அடைவர் என்ற கருத்து வழக்கில் நிலவுகிறது. ஓண நாளில் பிறந்தவன் என்பதாலும் மக்கள் மனத்தில் சிறப்பான இடத்தினைப் பெற்று இருக்கலாம். இலக்கியங்களிலும் கண்ணன் பிறந்த ஓண நாள் சிறப்பிக்கப்படுவதைக் (பெரியாழ். 2:4.2) காண முடிகிறது.

பண்டைய தமிழகத்தில் மன்னர்களே தமது பிறந்த நாளைக் கொண்டாடியதாக இலக்கியங்கள் தெரிவிக்கின்றன. பிறந்த நாள் 'பெருமங்கலம்' என்ற சொல்லால் குறிப்பிடப் படுவதை,

"சிறந்த நாளினிற் செற்றம் நீக்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங் கலமும்" (தொல். பொரு. புறத். 30)

என்ற நூற்பா காட்டுகின்றது. மன்னர்கள் தமது பிறந்த நாளில் செற்றம் விடுத்து, தன்னுடைய துணைவர்க்கும் பிறர்க்கும் தக்க பரிசுகள் தந்து பாராட்டுவர். இங்ஙனம் மன்னர் கொண்டாடும் பிறந்த நாள் 'வெள்ளணி நாள்' எனவும் கூறப்படும். 'பெரும் பெயர் நலநாள்' என்பது நன்னனுடைய பிறந்த நாள் விழாவைக் குறிப்பிடுவதை,

"பேர்இசை நன்னன் பெரும்பெயர் நல்நாள்
சேரிவிழாவின் ஆர்ப்பு எழுந்தாங்கு" (மதுரைக். 618-619)

என்ற அடிகள் காட்டுகின்றன. சேரன் செங்குட்டுவனது வெள்ளணி நாளைக் குறிப்பிடுவதனை,

"குடவர் கோமான் வந்தான் நாளைப்
படுநுகம் பூணாய் பகடே மன்னர்
அடித்தளை நீக்கும் வெள்ளணியாம் எனும்
தொடுப்பு ஏர்உழவர் ஓதைப் பாணியும்" (சிலப். 27:227-230)

என்ற அடிகள் கூறுகின்றன.

பிறந்த நாள் விழாவை வெள்ளணி நாளென்பர் (மணி.29:9-10 உ.வே.சா. ப.327).

ஒருவர் பிறந்த நேரத்திற்கு ஏற்றாற் போலவே அவர்களுடைய உடல் நலமும் அமைந்திருக்கும் என்பது பொதுவாகக் கருதப்படுகின்றது. 'பிணியுற்றவர்க்குப் பிறந்த நாள் ஆகாது' என்ற செய்தி தொன்று தொட்டு நம்பப்பட்டு வருகின்றது. முத்தொள்ளாயிரத்தில்,

"பிணி கிடந்தார்க்குப் பிறந்த நாள் போல
அணியிழை அஞ்ச வருமால் - மணியாளை
மாறன் வழுதி மணவா மருள்மாலைச்
சீறி ஓர்வாடை சினந்து" (1560)

எனவரும் பாடல் வரிகள் இக்கருத்தை வலியுறுத்தும். நோயுற்றவர்களுக்கு மட்டுமின்றி அனைவருக்கும் அந் நாளில் சிறு விபத்து, காயம், வீண் அலைச்சல் போன்றன ஏற்பட வாய்ப்பு மிகுதி. ஐதிகப் பரம்பரையில் பிறந்த சான்றோர் பலர் இன்றும் பிறந்த நட்சத்திரத்தன்று ஆறு, கடல்,

அல்லது பெரிய நீர்த் தேக்கங்களில் நீராடி, தர்ப்பணம் முதலிய சடங்குகளைச் செய்து வருவதுண்டு.

"நீ பிறந்த திருவோணம் இன்று நீராட வேண்டும்" (பெரி. 2:4.2)

என்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது.

மாதந்தோறும் இவ்வாறு செய்ய இயலாதவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை தாங்கள் பிறந்த நட்சத்திரத்தில் இந்த ஐதிக முறைகளைச் செய்து ஏழை எளியவர்க்கு உணவளிப் பர். இம்முறையே நாகரிக வளர்ச்சியால் பிறந்த நாள் விழா ஆகி அதாவது மன்னர்கள் மட்டுமன்றி மக்களும் கொண்டாடும் விழா ஆகி இனிப்பு முதலியன வழங்கப்படுகிறது. பிறருடைய வாழ்த்துகளும், சடங்குகளும், தீமைகளைக் குறைக்கும் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது.

"புவிகா வலன்றன் புண்ணிய நன்னாட்
சிவிறியுங் கொம்புஞ் சிதறு விரை நீரும்" (சீவக.327)

என்பதற்கு உரைகாரர் உ.வே.சா. ஒருவன் சீவித்திருக்குங் காறும் அவன் பிறந்த நட்சத்திரத்திலும், இறந்த பின்பு அவன் இறந்த திதியிலும், சிறப்புச் செய்ய வேண்டுமென்பது தரும நூற்றுணிபு என்று கூறுவது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

பிறந்த நட்சத்திரத்தைக் கொண்டும், ஆங்கில மாத, தமிழ் மாதக் கணக்கின்படியும், பிறந்த தேதியைக் கொண்டும், பிறந்த நாளை மக்கள் கொண்டாடி வருகின்றனர். மரபுவழிச் செய்திகளை நன்கு உணர்ந்தவர்களும், அவர்கள் வழி வந்தவர்களும் நட்சத்திரக் கணக்கின்படி பிறந்த நாள் கொண்டாடி வருகின்றனர். தமிழ் மரபின் மீது பற்றுடை யவர்கள் தமிழ் மாதக் கணக்கின்படி பிறந்த நாள் கொண்டாடி வருகின்றனர். நவீன நாகரிகத்தில் பற்றுடையவர்கள் ஆங்கில மாதக் கணக்கின்படி பிறந்த நாள் கொண்டாடி வருகின்றனர். இவ்வழக்கு பரவலாகக் காணப்படுவதால் இன்றைய சமுதாயத்தில் பலரும் ஆங்கிலக் கணக்கின்படியே பிறந்த நாள் கொண்டாடி வருகின்றனர். சிலர் நட்சத்திரக் கணக்கின்படி கோவிலுக்குச் சென்று வழிபடுதல் முதலான செயல்களைச் செய்துவிட்டு, ஆங்கில மாதக் கணக்கின்படி நண்பர், உறவினர்களுடன் சேர்ந்து விருந்து முதலிய நிகழ்ச்சிகளை நடத்துதலும் உண்டு.

பூப்பு

ஒரு குழந்தை பிறந்த நேரத்திற்குக் கணிக்கப்படும் சாதகம் எப்படி அதன் வாழ்வில் நிகழும் பலன்களை அறிய உதவுகின்றதோ, அதேபோல் ஒரு பெண் பூப்பு அடையும் நேரத்தை வைத்துக் கணிக்கப்படும் சாதகமும் அவளது வாழ்வில் நிகழவிருக்கும் பலன்களை அறிய உதவுகின்றது. ஒரு பெண் பூப்பு அடைந்த போது உள்ள இலக்னம், இராசி, நட்சத்திரம், திதி, யோகம், கரணம் முதலியவற்றிற்குப் பொதுப் பலன்களும், பூப்புச் சாதகத்தில் ஒன்பது கோள்களும் நின்ற நிலையைக் கொண்டு, துல்லியமான அவர்களுக்கே உரிய சிறப்புப் பலன்களும் அறியப்படுகின்றன.

பெண்ணிற்குத் திருமணம் நிகழ்ந்த பிறகு அவளது கணவன் சாதகத்தினைக் கொண்டே சிலர் பலன் பார்ப்பர். குழந்தை பிறந்த பிறகு குழந்தையின் சாதகத்தைக் கொண்டே தாய்க்குப் பலன் பார்ப்பர். தற்காலத்தில் பூப்புச் சாதகம் அதிகமாகப் பயன்படுத்தப்படுவதில்லை. பூப்பு எய்தியதை உறவினர்களுக்கோ, சமுகத்துக்கோ வெளிப்படுத்தாமல் மறைக்கவும் தலைப்படுகின்ற சூழல் இன்று சில இடங்களில் நிலவுகிறது. பூப்புச் சடங்கின் முக்கியத்துவம் குறைந்தது போலவே பூப்புச் சாதகத்தின் முக்கியத்துவம் தற்காலத்தில் குறைந்துள்ளது. பிறந்த நாள் சாதகத்தைக் கொண்டே பெரும்பாலான திருமணங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. பெண்கள் ஞாயிறு, செவ்வாய், சனிக்கிழமைகளில் பூப்படைதல் தீமை பயக்கும், மற்ற கிழமைகள் நலம் பயக்கும் என்பதை,

''அருக்கனுக் கதிரோகி யாவள்; நற் சோமனுக்
கானகற் புடைய ளாவாள்;
அங்கார கற்குவெகு துக்கியா வாள்; புந்தி
அளவில் பைங் குழலி பெறுவாள்;
திருத்தகு வியாழத்தின் மிக்கசம் பத்தினொடு
சிறுவரைப் பெற்றெ டுப்பாள்;
சீருடைய பார்க்கவற் கதி போக வதியுமாம்;
திருவுமுண் டாயிருப்பாள்;
கருத்தழிந்து எழில்குன்றி வறுமை கொண்டு அலைகுவாள்
காரிவா ரத்தி லாகில்;
களபலை மடமாதர் புட்பவதி யாம்வார
காலபலன் என்றுரை செய்வார்''. (அறப்.சத.69)

என்ற பாடல் காட்டுகின்றது.

பெண்கள் பூப்படையும்போது அவர்களுக்குரியதாக அமையும் நட்சத்திரங்களைக் கொண்டு அண்ணாமலை சதகம் பலன் கூறுவதை,

''மன்னுமச் சுவினியிற் புட்பவதி யாயிடின்
மகிழ் நனுக்கே தோடமாம்
வான்பரணி நாணல்ல மைந்தருன் டாங்கை
மருவுகார்த் திகைமலடியா
முன்னுரோ கணிதீர்க்க மங்குலிய முடையளா
முலவுமான் றலை தலைவனுக்
குயிர்சுக மளிப்படிரு வாதிரை வெறுப்பு மான
முடையளாம் புனர்பூச நாள்
பொன்னெழில் சுகந்தரும் பூசஞ் சிறப்புடையாள்
பொலியுமா யிலியமைந்தர்
பூத்தொழியு மகமுரிய புருடன்மே லதிகாமி
பூரமைந் தர்களானியாம்
உத்திரம் பதிவிரதை யுத்தமேன் மேற்செல்வ
முண்டாயிடுஞ் சித்திரை
யோங்கிய நலந்தரும் பாங்குறு சுவாதிசுக
முற்றிடுநீ தனிவிசாகம்
மத்திமந் தலைவனுக் கல்லல்புன் நோய் கேட்டை
மறுபுருட னிச்சை மூலம்
வாழ்வுபால் பாக்கியம் பூராட மமைகெடு
மாமூர்த்தி ராடஞானப்
பத்தியுறு மோனநற் பொருளா மவிட்டம்
பசும் பொனாள் சதைய நிதிபோம்
பகரும் புரட்டைமல டுத்திரட் டாதிமிடி
படுமிரே வதி நடலையாம்
அத்தந் துகிர்ச் செறி மடந்தையர்கள் பூத்தபல
னருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னுற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத் தேவனே'' (77, 78)

என்ற பாடல்கள் வெளிக்காட்டுகின்றன. எனவே உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, இரேவதி, அசுவினி, பரணி, கார்த்திகை, உரோகிணி, மிருகசீரிடம் ஆகிய பன்னிரெண்டில் பூப்பு அடைவது உத்தமம். திருவாதிரை, புனர்பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், விசாகம் ஆகிய ஏழும் மத்திமம். அஸ்தம், சித்திரை, சுவாதி ஏனைய ஆறும் நன்றன்று என்ற சோதிடச் செய்தியினை ஒத்த கருத்தாக இப்பாடல்கள் அமைகின்றன.

பெண்கள் மேடம், இடபம், கடகம், சிம்மம், விருச்சிகம், தனுசு, மகரம் ஆகிய இராசிகளில் பூப்படைதல் சிறப்பன்று மற்றவை சிறப்புடைத்து என்பதை,

"வறுமைதப் பாதுவரும் மேடத்தில்; இடபத்தில்
மாறாது விபசாரி ஆம்;
வாழ்வுண்டு போகமுண் டாகும் மிதுனம் கடகம்
வலிதினிற் பிறரை அணைவாள்;
சிறுமை செயும் மிடிசேர்வள் மிருகேந் திரற்கெனில்
சீர்பெறுவள் கன்னி யென்னில்;
செட்டுடையள் துலையெனில்; பிணியால் மெலிந்திடுவாள்
தேளினுக் குத்தனுசு எனில்
நெறிசிதைவள் பூருவத் தபரநெறி உடையளாம்;
நீள்மகரம் மான மிலளாம்
நிறைபோக வரிகும்பம் எனில்; மீனம் என்னிலோ
நெடியபே ரறிவு டையளாம்
அறிவாளர் மடமாதர் தமையறி இராசி பலன்
அதுவென்பர் அருமை மதவேள்" (அறப்.சத.70)

என்ற பாடல் சொல்லுகிறது.

வேளாண்மை

உழவுத் தொழில் செய்கின்றபோது மக்கள் நல்ல நாள் பார்த்து விதை விதைத்துப் பயிரிட்டனர் என்பது இலக்கியச் சான்றுகள் வழி பெறப்படுகின்றன. நிலத்தில் வித்திடுவதற்கும், நிலத்தில் விளைந்த பயனைத் துய்ப்பதற்கும் நல்ல நாள் பார்த்துச் செயல்பட்டதனை,

"கருகங்கட் கேழ லுழுத பூமி
நன்னாள் வருபதம் நோக்கிக் குறவர்
உழாஅது வித்திய பருஉக்குரற் சிறுதினை
முந்துவிளை யாணர் நாட்புதி துண்மார்." (168:4-7)

என்ற பாடலில் புறநானூறு தெரிவிக்கிறது.

முதன் முதலில் உழத் தொடங்குமுன் நல்ல நாளில் உழுதல் 'நாள் ஏர் இடுதல்' எனப்படும். சோதிடர் கூறிய நல்ல நாளில் நாளேர் கட்டினர் என்பதை,

"ஏரும் பலவிதையும் ஏர்க்கால் முதலான
சீரும் அழகக் குடும்பன் செய்தி பெறச் சொல்லியபின்

ஆரும் பரவும் அழகர் பண்ணை யான்கேள்வி
கூறும் முகிழ்த்தம் குடும்பனுடன் சொன்னானே'' (முக்கூடற். 112)

என்ற பாடல் கூறுகின்றது. சிறந்த ஒளி நூற் பயிற்சியுடைய வேதியர்கள் உழுவதற்குரிய நல்ல நாளாக ஏழாம் பக்கமும் புதன் கிழமையும் சோதி நட்சத்திரமும் தைத்துலக்கரணமும் தவறாத சுபயோகமுமாகிய தகுந்த ஐந்து திறங்களும் பொருந்திய வேளையை மேன்மையான துலா ஒரை முகிழ்த்ததைக் குறித்தனர் என்பதை,

''சத்தமி புதன்சோதி தைதுலக் கரணம்
தவறாத சுபயோகந் தருபஞ் சாங்கம்
மெத்தநன் றெனப்பார்த்து மேலான வேதியர்கள்
மிக்கதுலா முகிழ்த்தம் விதித்தா ரின்று
பத்தர்பணி முக்கூடல் பரமனார் அழகர்தம்
பண்ணைக்கே ரிடவேணும் பள்ள என்றே
உத்தாரம் பண்ணைக் காரன் உரைத்தான்
உரையைக் கேட்ட உடனே குடும்பன்
ஏர்கொண் டுழச்சென் றானே'' (மேலது.113)

என்ற பாடல் வெளிக்காட்டுகின்றது. விதையூன்ற, வேர்க்கிழங்கிட, மரங்கொடிகளூன்ற நல்ல நாள் பார்த்தனர் என்பதை,

''ஓணமா திரைபூச சதையமு வுத்திர
முரோகணி யவிட்ட மிவைதா
மொன்பானு மேனோக்கு நாண்மனை டோப்பு விதை
யூன்றிடவு மிக்க நன்றாம்
வேண்டும் பூரமும் பரணி கார்த்தி கைமகம்
விசாகமா யிலிய மூலம்
விளங்குமிவ் வொன்பதும் வையகந் தன்னிலே
வேர்க்கிழங் கிடு நாட்களா
மூனுமான் றலைக்கேட்டை சோதிசித் திரையனுட
மோங்கஸ்த மிருபூசமு
முயரிரே வதியொடி வொன்பது மரங் கொடிக
ளூன்றுதற் குரிய நாளாங் (64)

என்ற பாடல் விளக்குகின்றது.

வித்திடுவதற்கு நாட்பார்க்க உதவும் பாம்பு வடிவான ஒரு சோதிடச் சக்கரத்திற்குப் பணிச் சக்கரம் என்று பெயர் (யாழ் - அக). ஆடு, மாடு வாங்க நல்ல நாள், ஆகாத நாட்களைக் கயிலாசநாதர் சதகம் கூறுவதனை,

''சித்திரை மகத்தினோ டுத்ரபூ சத்திலுஞ்
சேர்ந்த ரோகிணி தன்னிலுஞ்
செப்பவிட் டத்திலு முத்திரா டத்திலுந்
திகழ்த்தி ரட்டாதியோ
டொத்தவில் வெட்டுநட் சத்திரந் தன்னிலே
யுலகுளோ ரெலர்க ளுந்தா
முயர்புரவி மாடாடு கானடை யிடிமையொ
டொட்டைமுத லிவைக ளெல்லா''
மெத்தனைகொள் கினும்வருட மொன்றிலே மாயுமென்
றியம்பினார் சோதி டத்தி
லிதமாக யாவர்களு நற்றினந் தன்னிலவை
யெய்திடின் மிக்க நன்றாங்'' (83)

என்ற பாடலில் காட்டுகின்றது. இதன் வழி சித்திரை, மகம், உத்திரம், பூசம், உரோகிணி, அவிட்டம், உத்திராடம், உத்திரட்டாதி ஆகிய எட்டு நட்சத்திரங்களுக்குரிய நாள் வரும் நாட்களில் கால்நடைகளை வாங்குதல் நன்றன்று என்பதை உணர்த்துகின்றது. நடைமுறையிலும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் விதைத்தல், அறுவடை செய்தல் முதலான நிகழ்வுகளை நல்லநாள் நேரம் பார்த்துச் செய்தலைக் காண முடிகிறது. விவசாயத்தில் மட்டுமன்றித் தொழில் துறையில் ஈடுபட்டுள்ள பலரும் தங்கள் தொழிலைத் தொடங்குவதற்கு இன்றியமையாத மாற்றங்களையும் வளர்ச்சிக்கான நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கு நல்ல நாள் பார்ப்பதை வழக்காகக் கொண்டுள்ளனர்.

விழா

மக்கள் ஒன்றுகூடி, கொண்டாடி மகிழும் விழாக்களும் நாள், கோள் பார்த்தே செய்யப்பட்டு வந்திருக்கின்றன. நல்ல நாளும் நல்ல கோள்களின் சேர்க்கையும் கூடி வரும் நேரத்தில் விழாக்களைத் தொடங்குகின்றனர். சோதிடர் குறித்துக் கொடுத்த நாட்களில் விழாக்கள் நடத்தப்பட்டன என்பதை,

''சமயக் கணக்கரும் தந்துனிறை போகிய
அமயக் கணக்கரு மகலா ராகி'' (மணி.1:13-14)

என்ற அடிகள் காட்டுகின்றன.

இந்திர விழா நடக்கின்ற பொழுது அவ்விழா முடிகின்ற வரையிலும் சோதிடர் அவ்வூரை விட்டு நீங்காமல்

இருந்துள்ளனர். விழா தொடங்கிய நாளிலிருந்து விழா முடிகின்ற நாள் வரையிலும் சோதிடரின் ஆலோசனைகள் தேவைப்பட்டு இருக்கின்றன என்பது புலனாகிறது. ஆதலால் விழா தொடங்கும் போதும், இன்றியமையாத நிகழ்ச்சிகளின் போதும் மட்டுமன்றி ஒவ்வொரு சிறு நிகழ்ச்சிகளுக்கும் சோதிடம் பார்த்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. கோவில் கட்டும் போதும், போர் முதலான நிகழ்ச்சிகளில் ஈடுபடும் போதும் சோதிடரை உடன் வைத்திருந்தனர் என்ற செய்தியையும் அறிகின்ற பொழுது சோதிடம் மக்களது வாழ்வில் மட்டுமன்றிப் பொதுவாழ் விலும் பேரிடத்தை வகுத்துள்ளது என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

பொதுவாக விழாக்களும் பண்டிகைகளும் குறிப்பிட்ட மாதம், திதி நட்சத்திரங்களை முதலாகக் கொண்டு அமைக்கப்படுகின்றன. கந்தசஷ்டி, கோகுலாஷ்டமி, தை அமாவாசை, நரக சதுர்த்தி (தீபாவளி), நாக சதுர்த்தி, பௌர்ணமி, மகாளய அமாவாசை, ரிஷிபஞ்சமி, விஜயதசமி, வைகுண்ட ஏகாதசி, பிருகாமநவமி முதலியன திதிகளை முன்னிட்டு வருவன. ஆடிப்பூரம், ஆவணி அவிட்டம், கார்த்திகைத் தீபம், கிருத்திகை, கிருஷ்ண ஜெயந்தி, தைப்பூசம், பங்குனிஉத்திரம், பரணிதீபம், மாசிமகம், வரலட்சுமி விரதம், வைகாசிவிசாகம் முதலியன நட்சத்திரங்களை முன்னிட்டு வருவன. விழாக்களைப் பெரும்பாலும் மதி நிறைந்த வளர்பிறை நாட்களில் தொடங்கியுள்ளனர். கார்த்திகைத் தீபவிழா முழுமதி நாளில் தொடங்கியதை,

''மழைகால் நீங்கிய மாக விசும்பிற்
குறுமுயன் மறுநிறங் கிளர மதிநிறைந்து
அறுமீன் சேரு மகலிருள் நடுநாள்
மறுகுவிளக் குறுத்து மாலை தூக்கிப்
பழுவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுட னயர'' (அக.141:6-11)

என்ற பாடல் குறித்துள்ளது.

உவா நாளில் கடல் பொங்கி ஆரவாரம் செய்வதால், அந்நாளில் பரதவர் மீன் வேட்டைக்குச் செல்வதில்லை என்பதும், அந்நாளைத் தங்களது தெய்வத்தைப் பரவுவதற்கு

ஏற்ற நாளாகக் கருதினர் என்பதும் கடியலூர் உருத்திரங் கண்ணனாரின் பட்டினப்பாலையால் தெரியவருகின்றது. உவா நாளில் கடல் பொங்கி ஆரவாரிப்பதை நேரில் காண்பதோடு அதனை அறிவியலும் மெய்ப்பிக்கிறது.

''சினைச் சுறவின் கோடு நட்டு
மனைச்சேர்த்திய வல்லணங்கினான்
மடற்றாழை மலர்மலைந்தும்
பிணர்ப்பெண்ணைப் பிழிமகிழ்ந்தும்
புன்றலை யிரும்பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாயிரும் பனிக்கடல் வேட்டஞ் செல்லாது
உளுவுமடிந் துண்டாடியும்'' (பட்.86-93)

'பௌர்ணமியன்று பூமி மீதுள்ள நீரைச் சந்திரன் அதிக பட்சமாக ஈர்க்கின்றது. அதன் விளைவால் பெரிய அலைகள் கிளம்புகின்றன'.

இந்திர விழா முழுமதி நாளில் தொடங்கியதனை இரட்டைக் காப்பியங்கள் பேசிச் செல்கின்றன.

''சித்திரை சித்திரைத் திங்கள் சேர்ந்தென
வெற்றிவேன் மன்னற் குற்றத்தை யொழிக்கெனத்
தேவர் கோமா னேவலிற் போந்த
காவற் பூதத்துக் கடைகெழு பீடிகைப்
புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து
துணங்கையர் குரவைய ரணங் கெழுந்தாடிப்
பெருநில மன்ன னிருநில மடங்களும்'' (சிலப்.5:64-7)

மணிமேகலா தெய்வம் மணிமேகலைக்கு மந்திரம் கொடுத்த நிலையில் புத்தனுடைய ஞானத்தினை அறிதற்கு ஏற்ற சிறந்த நாளாகக் கருதப்பட்டமை,

''மந்திரங் கொள்கென வாய்மையி னோதி
மதிநாண் முற்றிய மங்கலத் திருநாள்'' (மணி.10:82-83)

என்ற அடிகளால் தெரியவருகிறது. இன்றும் நமது விழாக்கள் அனைத்தும் நிறைமதியை ஒட்டிய நாட்களிலேயே அமையக் காண்கிறோம்.

வட இந்தியாவில் பௌர்ணமி நாளை விழாவுக்குரிய நாளாகக் கருதுவதும், உலக மக்களின் நல்வாழ்விற்காகத் துறவு பூண்ட மனிதப் புனிதர்களின் பிறந்த நாளாக பௌர்ணமி நாளைக் கருதும் நிலையும்[11] அறிதற்கு ஏற்ற நாளாகப் பௌர்ணமியைக் கருதிய நிலையோடு ஒப்பிடக் கூடியதாக அமைகிறது.

பௌர்ணமியன்று நல்லறிவாளர் கொம்பால் பல் துலக்கார், மரம் வெட்டார், குரவர் சொற் கடத்தல் செய்யார். இவ்வறிவுரைகளை மீறியவர் எடுத்த விரதத்தைச் சரியான முறையில் முடிக்க முடியாத குறைபாட்டினை உடையர் என்று ஆசாரக்கோவை கூறுவதனை,

''குரவருரை யிகந்து செய்யார் விரதங்
குறையுட யார்தீர மறவர் நிறையுவா
மேற்கோலுந் தின்னார் மரங்குரையார் என்பதே
நல்லறி வாளர் துணிவு'' (17)

என்ற பாடல் காட்டுகிறது.

உறையூரில் பங்குனி நிறைமதி நாளாம் உத்திரத்தில் பெருவிழா நடந்ததை, 'பங்குனி முயக்கம்' (1379) என அகநானூறு குறிப்பிடுகின்றது. சித்திரை மாதம் சித்திரை நாளில் இந்திர விழாவும், வைகாசி விசாகம் எனப் புத்த தேவனுக்குரிய நாளும், மாயோனுக்குரிய ஆவணி மாத நிறைமதி நாளில் நடத்தப்பெறும் ஓண விழாவும், மார்கழி மிருகசீரிடத்தில் வரும் நிறைமதியோடு அடுத்துவரும் சிவனுக்குரிய ஆதிரை விழாவும், மார்கழி மதி நிறை நாள் பாவை நோன்பு தொடங்கும் காலமும், தை மாதம் பூர்ணமையில் வரும் தைப்பூசமும், காமநோன்பும், மகநாளில் கடலாடு விழாவும் என்பன போன்றவை நிறைமதி நாளில் பல விழாக்கள் நடைபெற்றிருப்பதைக் காட்டுகின்றன. திருமங்கை மன்னர் பிறந்தருளிய கார்த்திகைப் பௌர்ணமி ஆண்டு தோறும் பெருவிழாவாகத் திருநகரி என்ற ஊரில் கொண்டாடப்பட்டு வருகிறது.

---

11. Ancient Indian Rituals and their social contents, N.N. Bhatta Charrya, P.125

ஆதிரையை அவனுக்குரிய நட்சத்திரமாகத் தமிழ் உலகு கொண்டாடி வருகிறது. இச்சிறப்புச் கருதியே 'ஆதிரை முதல்வன்' (8:6) எனப் பரிபாடலும், 'அரும் பெறல் ஆதிரையான்' (150:20) எனக் கலித்தொகையும் விளம்புகின்றன. திருவாதிரைத் திருநாளன்று சிவனைத் தொழுதமையும், தைந் நீராடல் அல்லது அம்பா ஆடல் என்ற பெயரில் மகளிர் கொண்டாடி வந்த பாவை நோன்பு திருவாதிரை நாளில் தொடங்கப்பட்டமையும் சங்க இலக்கியங்களிலிருந்து அறிய முடிகிறது. பக்தி இயக்க அடியார்களும் திருவாதிரை நாளினைச் சிவனுக்குகந்த நாளாக ஏத்திப் பாமாலை பாடுவதைத் தேவாரப் பதிகங்களில் காண முடிகிறது. 'ஆதிரை நாயகன்' (திருஞா.தேவா.213:), 'ஆதிரை நாள் ஆதரித்த அம்மான்' (மேலது 292:1), 'ஆதிரை நாள் உகந்தான்' (மேலது 4:6), 'ஆதிரை நாளர்' (மேலது 32:5), 'ஆதிரை நாளாய் அமர்ந்தார்' (மேலது 234:6), 'ஆதிரையன்' (சம்.தேவா.1:105.1), 'ஆதிரை நாளினான்' (மேலது 286:11) இன்றளவும் குற்றாலம், சிதம்பரம், திருவாரூர், பேரூர், மதுரை போன்ற சைவத் திருத்தலங்களில் திருவாதிரைத் திருநாளில் பூசைகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ் நாட்டில் திருவாதிரை விழா கொண்டாடப்பட்டு வரும் சிவத் தலங்களுள் திருவாரூர் சிறப்பிடம் பெறுவதாகத் திருத்தொண்டர் புராணத்தில் சேக்கிழார் கூற்று அமைகின்றது.

'திருவாரூர் கொண்டருளிய பெருமானின் திருவாதிரை விழாவினைக் கண்டு மகிழ்ந்து உளம் களிப்பால் நிறைவதின்றி, அதன் சிறப்பை அடியேன் எங்ஙனம் எடுத்தியம்பிட இயலும் (பெரிய.21:235) என அவர் வியந்து நிற்கின்றார். சிதம்பரத்திலுள்ள நடராசப் பெருமான் திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருவாதிரை விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருவதைக் காண முடிகிறது. புரட்டாசித் திங்கள் உரோகிணி விண்மீன் நாளில் திருநாளைப் போவாராகிய நந்தனார் கனகசபையில் வந்து கற்பூரச் சோதியாய் சிவன்கழல் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது. தில்லைவாழ் அந்தணர்களின் வேண்டுகோளினை ஏற்று தில்லை திருக்கோபுர வாயில் முன்னே சிவனது திருவருளோடு செந்தீயினுள் புகுந்து அந்தணராய் வெளிப்பட்டுத் தில்லை

அந்தணர்கள் கை தொழ இறையருளில் கலந்தார் என்பது பெரியபுராணம் (*18:31-36*) தரும் செய்தி. 'நந்தனார்க்குத் திருவாதிரைத் திருநாளில் தில்லை நடராச சுவாமி கோயிலில் இறைவன் காட்சி அளிப்பதாய் திருவருள் வழங்கிடும் விழா இன்றும் நடைபெற்று வருகின்றது. பெரியபுராணத்தில் புரட்டாசி மாதம் உரோகிணி நட்சத்திரத்தில் நந்தனார் இறைவனோடு இணைந்ததாகச் செய்தி காணப்படுகிறது. நடைமுறையில் திருவாதிரைத் திருநாளில் நந்தனார்க்கு அருள் வழங்கும் விழா கொண்டாடப்பட்டு வருகிறது. இக் கால வேறுபாடு ஆய்வுக்குரியதாகக் காணப்படுகிறது.

திருவோண நட்சத்திரத்தைத் திருமாலுக்குகந்த நட்சத்திர மாகப் பண்டைத் தமிழர் கருதினர். 'மாயோன் மேய ஓண நன்னாள்' (591) என மாயோனுக்குரிய நாளாகவே ஓண விண்மீன் வரும் நிறைமதி நாளை மதுரைக் காஞ்சி குறிப்பிடுகிறது.

இன்று ஆவணி அவிட்டம் எனச் சுட்டப்படும் ஒன்றே பண்டு ஓண நாளாகக் கருதப்பட்டது. ஆவணி மாதத்தே திருவோண நட்சத்திரத்தில் வர வேண்டிய பௌர்ணமியை அடுத்த அவிட்ட நாளிலும் வரக்கூடியது என்பதும் அப்போது அவ்விரண்டு நட்சத்திரங்களும் சடங்கு, விழா முதலியன நடத்தற்கு உரியவையாம். அந்தணர் முதலியோர் ஆண்டுக்கொருமுறை புதுப் பூணூல் தரித்துப் புரியும் 'சிராவணச் சடங்கு' நிறைமதி நாளான ஆவணியோணத்துக்கு உரியதே. ஆயினும் அஃது அடுத்து அவிட்ட நாளிலும் நிகழ்வதும் அதனால் ஆவணியவிட்டம் என்றும் அச்சடங்கு பெயர் கொண்டு வழங்குவதும் இங்கே ஒப்பிடத்தக்கன.[12] இந்நாட்களிலேயே அந்தணர் புதுப் பூணூல் அணிவதையும் மறு பூணூல் அணிவதையும் மரபாகக் கொண்டு ஒழுகுவதை இன்றும் காண முடிகிறது.

வளர்பிறையும் தேய்பிறையும் (சுக்கிலபட்சமும் அமர பட்சமும்) தமிழர் நலம் வேண்டும் செயல்களை வளர் பிறையிலும் வளர்ச்சி வேண்டாதவற்றைத் தேய்பிறையிலும் செய்யும் இயல்பினை வழக்கில் கொண்டிருக்கக் காண்கிறோம். இன்றைய தமிழரின் நடைமுறை வாழ்வில்

---

12. கட்டுரை மணிகள், மு.இராகவையங்கார், ப.29.

விதைத்தல், நடுதல், விழாக்கள், திருமணம் ஆகியவற்றை வளர்பிறையிலும், வேண்டாத மரங்களை வெட்டுதல் நகங் குறைத்தல் ஆகியவற்றைத் தேய்பிறையிலும் நிகழ்த்தும் வழக்கத்தினைக் கொண்டிருக்கின்றனர்.[13]

மார்கழி நோன்பாகிய தைந் நீராடல் வளர்பிறையில் தொடங்கியதனை,

''ஞாயிறு காயா நளிமாரிப் பிறகுளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை யாதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்கப்
பிரிநூ லந்தணர் பொலங்கல மேற்ப'' (பரி.11:76-79)

என்ற அடிகள் காட்டுகின்றன. சங்க கால மகளிர் கொண்டாடி வந்த தைந் நீராடல் பக்தி இயக்க காலத்தில் மார்கழி நீராடல் எனப் பெயர் பெற்றாலும் அந்நீராடலும் திருவாதிரை நாளில்தான் தொடங்கியது என்பதனை,

''மார்கழித் திங்கள் மதிநிறைந்த
நன்னாளாய் நீராடப் போதுவீர் போதுமினோ'' (1)

என்ற ஆண்டாள் திருப்பாவை வரிகள் உணர்த்துகின்றன.

வழிபாடு

தெய்வ வழிபாட்டில் குறிப்பிட்ட காலத்தில் வழிபாடு செய்யப்படுதல் வேண்டும் என்ற குறிப்புகளை இலக்கியங்களிலும் காண முடிகிறது. தேவியை வழிபட்டு நல்ல காலம் பார்த்துச் செயல்பட்டமையை,

''ஐப்பசி மதிய முன்ன ரட்டமி பக்கப் பின்னர்
மைப்பட லின்றி நின்ற மங்கலக் கிழமை தன்னிற்
கைப்பலி கொடுத்து தேவி கழலடி பணியிற் காளாய்
மெய்ப்பலி கொண்டு நெஞ்சின் விரும்பின ளுவக்கு மென்றாள்''
(யசோ.136)

என்ற பாடல் காட்டுகின்றது. எனவே ஐப்பசி மாதத்து பௌர்ணமிக்கு முன்னதாகிய பக்கத்தில் எட்டாம் நாளுக்குப் பின்வரும் செவ்வாய்க் கிழமைகளில் தேவியை வழிபட்டுப் பூசை செய்ய அப்பூசையை ஏற்ற தேவி தீங்கு வராமல் காத்து மகிழ்விப்பாள் என்பது தெரிகிறது.

---

13. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், ப.39

"ஐப்பசி மாதத்துச் சுக்கிலபட்சத் தட்டமிக்குப் பின்வரும் மங்கல வாரத்தில் தேவிக்குப் பலியிட்டுப் பூசை செய்தனர் என்று வடமொழிச் சுலோகமொன்று கூறப்படுவது இக்கருத்தை வற்புறுத்துகின்றது".[14] நடைமுறையில் தெய்வ வழிபாடுகள் பலவும் குறிப்பிட்ட காலத்தில் வழிவழியாகச் செய்யப்பட்டு வருவதைக் காண முடிகிறது.

ஏகாதசி நன்னாளில் விரதம் மேற்கொள்வதனால் ஏற்படும் பலன் பற்றி எம்பிரான் சதகம் (49:1-3) கூறுகின்றது. அத்துடன் இந்நூல் பொங்கல் படைக்க நன்னாளையும்,

"மகரத்திற் சூரியன் வந் துதித்த காலில்
வந்திக்க விந்திரனை நோக்கிப் பொங்கல்
மிகவிட்டு கயிலைமலை போலே வைக்க
விளையாட்டா யத்தனையும் நீயே யுண்ணக்
.... குன்றை
எடுத்து மழைதடுத் தனையே யெம்பிரானே" (81:1-3)

என்ற பாடலில் கூறுகின்றது.

விழாக்கள் மக்கள் மகிழ்விற்காகவும், ஒற்றுமை உணர்விற்காகவும் கொண்டாடப்படுவதாகக் கருதப்பட்டாலும், அத்தகைய விழாக்கள் கொண்டாடப்படுவதற்குத் தேர்ந்தெடுக் கப்பட்ட நாட்கள் வானியலுடன் மிக நெருங்கிய தொடர் புடையவையாகக் காணப்படுவதை அறிய முடிகிறது. பண்டிகைகள் பலவும் பஞ்சமி, சட்டி, அட்டமி, தசமி, ஏகாதசி, அமாவசை, பௌர்ணமி முதலான திதிகளில் அமைந்துள்ளன. நட்சத்திரங்களின் பெயர்களைக் கொண்டு பண்டிகைகள் அமைவதைக் காணமுடிகிறது. அவற்றுள் பல மாதத்தின் பெயர்களுடன் இணைந்து காணப்படுவதையும் பார்க்க முடிகிறது.

மந்திரச் சடங்கு

வேதங்களின் சாரமாக மந்திரங்கள் அமைகின்றன. 'வேதம் ஓதி வெள்ளுடைப் பூண்' என்று வேதத்தின் சிறப்பைச் சுட்டுவர். ஒழுக்கத்தைக் கூர்மைப்படுத்தும் மந்திரங் களைச் சோதிடர் நன்முறையில் அறிந்திருப்பின் மக்க ளுக்கு நன்மை பயக்கும் வகையில் ஆழ்ந்த கருத்துக்களை,

---

14. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை உரை, பக்.128.

ஒழுக்க முறைகளைச் சொல்ல முடியும். மந்திரச் சடங்குகள் செய்கிற போதும் செய்கிற காரியம் நிறைவேற வேண்டும் என்பதற்காக நல்ல நாள் பார்த்துச் செய்யப்படுகிறது. பௌர்ணமி, அமாவாசை, வெள்ளிக்கிழமை, புதன் கிழமை போன்றவை மங்களச் சடங்குகள் செய்யவும்; கார்த்திகை, நவமி, அட்டமி, செவ்வாய்க்கிழமை போன்றன அமங்கலச் சடங்குகள் செய்யவும்; ஞாயிறு, வியாழன், சனி ஆகியன கிரகப் பரிகாரச் சடங்குகள் செய்யவும் வழக்கில் பயன்படுத்தப்படுகின்றன. சித்ரா பௌர்ணமி, வைகாசி விசாகம், ஆடி அமாவாசை, தைப் பூசம், மாசி மகம், சிறப்பான உத்திரம் ஆகிய நாட்கள் மிகவும் சிறப்பான நாட்களாக இருப்பதால் முக்கியமான மந்திரச் சடங்குகள் இந்நாட்களில் செய்யப்படுகின்றன. இன்றும் அமாவாசை திதியானது ஏவல், பில்லி, சூனியம், வசியம், கும்பு ஆகிய தீமைகளைச் செய்ய மந்திரவாதிகளால் பயன்படுத்தப் பெறுகிறது.

பழங்காலத்தில் வெறியாட்டு எனும் மந்திரச் சடங்குகள் செய்ய நேரம் இன்றியமையாததாகக் கருதப்பட்டு இரவு நேரத்தில் நிகழ்த்தப்பட்டது (அக:22:10-11). இரவு நேரம் நடமாட்டம் ஒடுங்கி இயற்கையான அமைதி ஏற்படுகிறது. இவ்வமைதி இரவு நேரங்களுக்கு ஒரு வலிமையையும் அச்சமூட்டும் தன்மையையும் அளிக்கின்றது. பேய், பூதங்கள், தெய்வங்கள் நேரடியாகப் பங்கேற்க வேண்டும் என்பதற்காகவே இரவு நேரங்களில் மந்திரச் சடங்குகள் செய்யப்படுகின்றன. இரவு நேரங்களில் செய்யப்படும் மந்திரச் சடங்குகளுக்கு வலிமை அதிகம் என்பதும், நாளும், நேரமும் மந்திரச் சடங்குகளுக்கு அதிக வேகத்தைக் கொடுக்கின்றன என்பதும் மக்கள் நம்பிக்கை.

வீடு, அரண்மனை கட்டுதல்

மக்களின் அடிப்படைத் தேவையாக விளங்கும் வீட்டைக் கட்டும் போதும் மக்கள் திட்டமிட்ட முறையில் செயல்படுகின்றனர். சிந்துவெளி நகர அமைப்பு இக்கலையின் தொன்மைக்குச் சான்றாகிறது. வாழ்க்கையில் சில துன்பங்கள் ஏற்பட்டால் அதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று

சிந்திக்கின்ற மனித மனம், அதற்குரிய காரணங்கள் பலவற்றுள் 'வாழும் வீடு சரியில்லை; கட்டியதில் ஏதோ குறையுள்ளது' என்று காரணம் கற்பித்துக் கொண்டு துன்புறுகின்றது. கட்டி முடித்திருக்கும் வீட்டிலும் மாற்றங்களைச் செய்ய முற்படுகிறது.

வீட்டைச் சொந்தமாய்க் கட்டுவதற்கு முன்பு கால நேரம், நாள், நட்சத்திரம் போன்றவற்றைப் பார்த்து, நீள அகலம், உயரம், கட்டுமானப் பணிகளுக்கான பொருட்கள் போன்றவற்றை 'மனையடி சாஸ்திரம்' என்ற அடிப்படையில் அமைத்து வீடு கட்டி அதில் முறைப்படி மனை முகூர்த்தம் செய்து குடி புகுந்தால் வளமான வாழ்க்கை வாழலாம் என்ற நம்பிக்கை மக்களிடை நிலவுகிறது. வீடு தொடர்பான ஒவ்வொரு சிறு செயல்களைச் செய்வதற்கும் பின்பற்ற வேண்டிய சோதிட விதி முறைகளை மனை நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

எடுத்துக்கொண்ட செயல் இனிதே முடிய விரும்பி அந்தச் செயலையும் இறைவனை வழிபட்டுத் தொடங்குவது தமிழர் மரபு. வீடு கட்டத் தொடங்குவோர் வாஸ்து புருசன் என்ற நிலத் தேவதையை வணங்கித் தொடங்க வேண்டும் என மனைநூல்களில் கூறப்படுகின்றன. வாஸ்து எனப்படும் சமஸ்கிருதச் சொல்லுக்கு வீடு, பூமி, வீடு கட்டக்கூடிய மனை, இடம் அல்லது வாழுமிடம் என்று பொருள்.

வாஸ்து உறங்கும் மாதங்களில் வீடு கட்டத் தொடங்கக் கூடாது. வாஸ்து எழுந்திருக்கும் மாதம், நாள், நாழிகை அறிந்து அந்த நேரங்களில் வீடு கட்டத் தொடங்க வேண்டும்.

ஆனி மாதம், புரட்டாசி மாதம், மார்கழி மாதம், பங்குனி மாதம் ஆகிய மாதங்களில் வாஸ்துபுருசன் தூக்கத்திலிருந்து எழுந்திருப்பதில்லை. சித்திரை மாதம் 10ஆம் தேதி வைகாசி 21ஆம் தேதி, ஆடி, ஐப்பசி மாதங்களில் 11ஆம் தேதி ஆவணி மாதத்தில் 6ஆம் தேதி, கார்த்திகை மாதம் 8ஆம் தேதி, தை மாதம் 12ஆம் தேதி, மாசிமாதம் 20ஆம் தேதி ஆகிய தேதிகளில் வாஸ்து புருசன் தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வார். வாஸ்து புருசன் எழும் நாட்களை,

''சித்திரைக்கு ஈராறு தாம்துலாம் எட்டினில்
செய்கார்த்தி கைப்பத்தினில்
சீர்ஆடி பதினொன்று சிங்கம்ஆறு உயர்மாசி
தேதிஇரு பத்திரண்டில்
வைத்தவை காசியிரு பானொன்றாம் நாளின்
வாஸ்துஎழு கின்றதினமாம்'' (கயி.சத.67)

என்ற பாடல் சுட்டுகின்றது. மனை நூல்கள் இதனை மேலும் விளக்கமாக நாழிகை உட்பட நுணுக்கமாக எடுத்துக் கூறுகின்றன. மனை நூல் *10, 11, 12, 19* ஆகி ய அடிகளில் அகல நீளம் வைத்து வீடு கட்ட, அறையமைக்க, வாசல் விட வேண்டும் என்ற மனைநூல் விதியை,

''வையகந் தன்னிலே புதுமனை யெடுப்பவர்
மகராச ராக வாழ்வார்
பத்தடிகள் பதினொன்று பனிரண்டோ டேழடிகள்
பார்த்த கலம்வைக்க நன்றாம்
பாருலகி லிவ்வாறு செய்தலை யென்றுயான்
பழமொழிப் படிசெப்பினேன்'' (61)

என்ற பாடலில் கயிலாச நாதர் சதகம் கூறுகின்றது.

பரணியுடன் கூடிய ஞாயிறு, சித்திரையுடன் கூடிய திங்கள், உத்திரத்துடன் கூடிய செவ்வாய், அவிட்டத்துடன் கூடிய புதன், கேட்டையுடன் கூடிய வியாழன், பூராடத்துடன் கூடிய வெள்ளி, இரேவதியுடன் கூடிய சனி மனைகோல ஆகாத நாட்கள். இந்நாட்களை விட்டு விட்டு நல்ல நாட்களாகத் தேர்ந்தெடுக்கும்போது அந்த நாளில் மழை, தூறல், கிரகணம், அட்டமி திதி, சூன்யதிதி, இராகு காலம், எமகண்டம், கரிநாள் ஆகியவை இருக்கக் கூடாது. சுபஓரையைப் பார்த்துத் தொடங்க வேண்டும். முக்கியமாகக் காலற்ற, உடலற்ற, தலையற்ற நட்சத்திரங்களை மனைகோல விலக்க வேண்டும்.

மனைகோல ஆகும் – ஆகாத நாட்களை அறப்பளீசுர சதகம் *(67)* கூறுகின்றது. சித்திரைத் திங்களில் வீடு கட்டினாலும் குடி புகுந்தாலும் செல்வம் உண்டு. வைகாசித் திங்களில் அதனினும் நன்மையே. ஆனித் திங்களிலே தான் சிவபெருமான் முப்புரத்திற்கு நெருப்பிட்டது. ஆகையால் ஆனி ஆகாது. இராமன் மனைவி சிறை சென்ற ஆடித்திங்கள்

சிறப்புடையது அன்று. ஆவணித் திங்கள் நலம் பொருந்தும். புரட்டாசித் திங்கள் இரணியன் இறந்தது. ஆகையால் தகாது. ஐப்பசித் திங்களில் உயர்வு உண்டு. கார்த்திகைத் திங்களில் நன்மை உண்டு. பெரிய பாரதச் சண்டை வந்த காலமான மார்கழித் திங்கள் தகாது. தைத் திங்களில் மேன்மை யுண்டாகும். வானவர் தலைவனான சிவபிரான் நஞ்சுண்ட தாகிய மாசித் திங்களில் தகாது. நீ காமனை எரித்த பங்குனித் திங்களும் தகுமோ என்பது அறப்பளீசுர சதகம் தரும் விளக்கம்.

ஆவணி, கார்த்திகை, மாசி மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் குடிபுக வேண்டியிருப்பின் மற்றப் பொருத்தங்கள் நன்றாக இருப்பின் மாதத்தால் வரும் தோடம் நீங்கும். இருப்பினும் தை, பங்குனி, வைகாசி தவிர்த்தல் நல்லது. புரட்டாசி எனில் வீடு கட்டத் தொடங்கக் கூடாதேயொழிய வீட்டுமனை வாங்கலாம். இரட்டைப்படை மாதங்களைத் தவிர்த்து, ஒற்றைப்படை மாதங்களில் வீடு கட்ட, குடிபுக நன்மை தரும். இத்தகைய மனைநூல் விதிமுறைகள் சதக இலக்கியங்களில் விரிவாக இடம் பெற்றுள்ளன. வீடு கட்டுகையில் பார்க்க வேண்டிய சாத்திரம், எந்தெந்த மாதங்களில் வீட்டைக் கட்டத் தொடங்குவது, வாஸ்து எழுகின்ற நாளில் எப்படி நடந்து கொள்வது, எத்தனை அடியில் வீடு கட்டுவது இவற்றால் விளையும் பலன் என்பன பற்றியெல்லாம் கூறப்பட்டுள்ளன.

என்னென்ன கிழமைகளில், திதிகளில், நட்சத்திரங்களில், இராசிகளில், இலக்னங்களில் வீடு கட்டலாம், கட்டக்கூடாது என்பன போன்ற விதிமுறைகள் மனை நூல்களில் கூறப்படுகின்றன. ஒவ்வொருவருடைய இராசிக்குரிய சூன்ய மாதத்தில் மனை வாங்கவோ, வீடு கட்டத் தொடங்கவோ, புதுமனை புகவோ கூடாது. சான்றாக மேட ராசியில் பிறந்தவர்கள் சித்திரை மாதத்தில் எந்தக் காரியத்திலும் ஈடுபடக் கூடாது என்பது விதி. அதுபோல் ஒவ்வொருவரும் தங்கள் இராசிக்கு ஏற்ற சூன்ய மாதம் அறிந்து விலக வேண்டும்.

திருமணத்திற்குப் பத்துப் பொருத்தங்களுக்கும் மேல் பார்ப்பது போலவே மனை நூல்களில் வீடு கட்டுதற்குக் கருப்பம், வரவு, செலவு, பிறப்பு, நாள், திதி, நட்சத்திரம்

இலக்னம், அதிர்ஷ்டம் என்ற பதினாறு பொருத்தங்கள் கூறப்பெறுகின்றன. அவற்றில் எட்டுப் பொருத்தங்களுக்கு மேல் வருமாறு வீட்டின் அளவினை அமைத்துக் கொள்ளும் வழிமுறைகள் மனை நூல்களில் கூறப்பட்டுள்ளன. நான்கு சால் நீளமுள்ள முழக்கோலால் மனையில் வீடு கட்ட அமைக்கும் பாகத்தின் நீள அகலங்களை அளந்து, அளந்து வந்த நீள அகலங்களைப் பெருக்கி வரும் தொகை, குழியாகக் கொள்ளப்பட்டு, அக்குழிகளை அடிப்படையாகக் கொண்டு இப்பதினாறு பொருத்தங்களும் பார்க்கப்படுகின்றன.

பொதுவாக வளர்பிறையில் மனை கோல்வதே நன்று. இருப்பினும் தேய்பிறையில் பிரதமை, துவிதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி ஆகிய திதிகளோடு யோகமான நட்சத்திரமுடைய நாட்களில் முகூர்த்தம் செய்யலாம்.

புதுமனை புகுவிழா (கிரகப் பிரவேசம்) செய்யப் புறப்படும்போது செய்பவருடைய இடத்திலிருந்து சூல திசையாக இருக்கக் கூடாது. புதுமனை புகுவிழாவிற்கு ஏற்ற திதிகள், நட்சத்திரம், இலக்னம், மாதம் அறிந்து செயல்பட வேண்டும்.

நடைமுறையில் மக்கள் ஓரளவிற்கு மேற்கூறியவற்றைக் கடைப்பிடிக்கின்றனர். சோதிடத்தில் நம்பிக்கை இல்லாத வர்களும் மனை கோலத் தொடங்கும்போது, மனை புகும்போது நல்ல நேரத்தையே தேர்ந்தெடுக்கின்றனர். மனைகட்டத் தொடங்கும்போது நல்ல நேரத்தை வீடு கட்டுபவர் கவனிக்காது விட்டாலும் வீடு கட்டும் ஆசாரி அதில் முழுக் கவனத்துடன் இருக்கிறார். அவரவர் இராசிக்கு ஏற்ற சோதிடப் பலன்களைப் பார்த்து வீடு கட்டுதல் என்பது நடைமுறையில் மிகுதியாகக் காணப்படவில்லை. அடுக்கு மாடி வீடுகள் கட்டப்பட்டுக் குடியேறுகின்ற இன்றைய கட்டட அமைப்பில் தனித்தனியே சாதக அமைப்பிற்கு ஏற்ற வகையில் வீடு கட்டுதல் என்பது இயலாததாகி விடுகிறது.

அரண்மனை கட்டுதல்

அக்காலத்து மாளிகைகளும், மண்டபங்களும் நாள் குறிக்கப் பெற்று நாழிகை பார்த்துக் கட்டப்பட்டன. கண்ணகி என்னும் பத்தினிக்குக் கோயில் கட்ட மன்னவருடன் சென்ற

வல்லவருள் அரண்மனைச் சோதிடரும் ஒருவர் என்று சிலம்பு கூறுகின்றது (28:233-224). மண்டபம் ஒன்றைக் கட்டுவதற்குரிய நல்ல காலம் பற்றிச் சோதிடர் வகுத்துரைத்த முகூர்த்தத்தைச் சீவக சிந்தாமணி (590) தெரிவிக்கின்றது. மாளிகைகளும், மண்டபங்களும் கட்டடக் கலை நூல் அறிந்த புலவர்களால் நாள் குறிக்கப் பெற்று நாழிகை பார்த்து, நேரறி கயிறிட்டு திசைகளையும், அத்திசைகளில் நிற்கும் தெய்வங்களையும் நோக்கி அமைக்கப்பட்டன. இதனை,

> ''விரிகதிர் பரப்பிய வியன்வாய் மண்டிலம்
> இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கோ
> பொருதிறஞ் சாரா அரைநாள் அமையத்து
> நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
> தேஎங் கொண்டு தெய்வம் நோக்கி
> பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்து'' (நெடு.73-78)

என்ற அடிகள் காட்டுகின்றன. சித்திரை பத்தாம் நாள் முதல் இருபதாம் நாள் முடிய நிகழும் நாட்களில் யாதாமொரு நாள் பகல் பதினைந்து நாழிகையளவில் ஞாயிறு நிலத்தின் நடுவண் இயங்கும். அப்போது இரண்டு கோல்கள் தென்புறம் ஒன்று வடபுறம் ஒன்றாக ஒன்றற் கொன்று, சிறிது தூரத்தில் நிற்குமாறு விட்டு, வேறு இரு கோல்கள் நெடுமட்டமாக அல்லது படு மட்டமாக, ஊன்றிய கோல்களின்மேல் படும்போது அவற்றின் நிழல்கள் காலையில் ஒன்றை விட்டு ஒன்று அகன்று நிற்கும். பொழுது செல்லச் செல்ல, ஞாயிறு உயர உயர, இவ்விரு நிழலும் குறுகிக் கொண்டே வரும். சரியான நண்பகலில் இவ்விரு நிழலும் ஒன்றின் மேல் ஒன்று பொருந்தி ஒரே நிழலாகத் தோன்றும். ஞாயிறு இறங்க இறங்க நிழல்கள் அகன்று அகன்று செல்லும். இந்நிழல்களின் நிலையாலும், அவற்றின் இடைவெளியைக் கொண்டும் பொழுது காண்பர். இங்ஙனம் கோல்களின் நிழல் வடக்கினாதல், தெற்கினாதல் சாய்தலின்றி அக்கோல்களிலேயே அடங்கி நிற்றலை ஆராய்ந்து திருமுறைச் சார்த்து செய்திருப்பது இப்பாடலின் வழி தெரிகின்றது. மார்ச் 21ஆம் நாள் சூரியன் உச்சிக்கு வருவதும், நேராகத் தன் கிரணங்களை வீழ்த்துவதும், இன்றைய வானியலார் கண்ட உண்மை. இதனை அன்றே அறிந்திருந்தனர் என்பது இதன் வழி பெறப்படுகின்றது.

வீடு கட்டுதற்கு மனை நூல்கள் பல சோதிட விதிமுறைகளைக் கூறுவதுபோலக் கிணறு அமைப்பதற்குப் பல சோதிட விதிமுறைகளைக் 'கூவ நூல்கள்' கூறுகின்றன. கூவ நூல் ஒவ்வொரு கோள்களுக்கும் ஏற்ப அதனுடைய ஊற்று பற்றிய விபரத்தைத் தருகின்றது; இராசிகளைக் கொண்டு தொடுகுறி முறை கையாளப்படுகிறது; ஒவ்வோர் இராசிக்கும் உரியதான உறுப்பு குறிக்கப்பட்டு அதன்படி நீரின் தன்மை அறியப்படுகின்றது. கிரகராசிப் பலன்களை வைத்து நீருள்ள இடம், இல்லாத இடம் அறியப்படுகிறது. கிணற்றினைச் சித்திரை, வைகாசி, ஆனி மாதங்களில் வெட்டத் தொடங்கினால் நல்ல நீர் கிடைக்கும். ஆடியும் ஆவணியும் மத்திமமாக அமையும். சோதி, மூலம், பரணி, ஓணம் ஆகிய நான்கு நட்சத்திர நாட்களும் பொருந்தா நாட்கள். அனுடமும் கேட்டையும் நோய் தரும். சோதியும் விசாகமும் மரணம் தரும். ஓணமும் சதயமும் அவனை விட்டுச் செல்லச் செய்யும். கும்பம், மீனம், மேடம் நன்று. இம்மூன்றும் அல்லாத பிறவற்றால் மனை பாழாகும். மனைக்குக் கிழக்கிலோ, மேற்கிலோ கிணறு தோண்டுவது நல்லது. பரணி, கிருத்திகை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம் ஆகிய நட்சத்திரங்கள் கிணறு தோண்ட உகந்தவை[15] என்பன போன்ற செய்திகள் கிணறு வெட்டும்போது நாள், கோள் பார்த்துச் செயல்பட்ட மையைக் காட்டுகிறது.

மக்கள், தங்களின் அடிப்படைத் தேவையாக விளங்கும் வீட்டைக் கட்டும்போது திட்டமிட்ட முறையில் செயல்பட்டு வருகின்றனர். வீடு தொடர்பான ஒவ்வொரு சிறு செயல்களைச் செய்வதற்கும் பல சோதிட விதி முறைகள் மனை நூல்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கிணறு வெட்டுவது தொடர்பான செய்திகள் கூவநூலில் கூறப்பட்டுள்ளன.

பயணம்

நமது வாழ்க்கையில் எந்தச் செயலைக் கருதியாகிலும் பயணத்தை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுவது

---

15. கூவ நூல், பக். 18-25.

உண்டு. எச்செயலுக்காகப் பயணம் செய்ய நேரிட்டாலும் விரும்பினாலும் நாள், திதி, நட்சத்திரம், யோகம், வாரசூலை, இராசி, இலக்னம் என்ற ஏழுவகை விதிகளைப் பின்பற்றுதல் வேண்டும் என்கிறது சோதிடநூல். முக்கியமான பயணங்களுக்கு இவற்றைக் கடைப்பிடித்து ஒழுகுவதால் போகும் காரியத்தில் வெற்றியும் கிட்டும், நலமும் ஏற்படும் என்பது இதன் அடிப்படையாகிறது.

திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களும், வளர்பிறைத் திதிகளும் (2, 3, 5, 7, 10, 11, 13, 15 ஆகிய திதிகள்) பயணத்துக்கு ஏற்றவை. பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயிலியம், மகம், பூரம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி ஆகிய இவை தவிர்த்த நட்சத்திரங்கள் பயணத்திற்கு ஏற்றவை. இதனை,

''ஒன்பதொ டொன்றோடெழு பதினெட் டோடாறு
முடனாய நாள்களவை தாம்'' (2.85:2)

என்று சம்பந்தர் தேவாரத்தில் காண முடிகிறது. தலைமகன் பிரிவை ஆற்றாத தலைவி நீர் எம்மைப் பிரிந்தால் நும்மை நாளும் புள்ளும் விலக்குமென்று கூறுவதை ''நாளும் கோண்மீன் தகைத்தலுந்தகைமே'' (கலி.5:9) என்ற அடி காட்டுகின்றது.

அமிர்த யோகமும், சித்த யோகமும் பயணத்துக்கு ஏற்றவை. எந்தத் திசையில் பயணம் செய்கிறோமோ அந்தத் திசையில் சூலமில்லாமல் இருப்பது நல்லது. குறிப்பிட்ட திதிகளுக்கு, கிழமைகளுக்கு குறிப்பிட்ட திசை பாதிப்பை ஏற்படுத்துவது சூலம் என்று கூறப்படுகிறது. இதனை வார சூலை என்றும் கூறுவர். திங்கள், சனி கிழக்கும்; செவ்வாய், புதன் வடக்கும்; ஞாயிறு வெள்ளி மேற்கும் சூலம். இத்திக்குகளில் பயணம் செல்லக் கூடாது என்பதைத் திருமந்திரம்,

''வாரத்திற் சூலம் வரும்வழி கூறுங்கால்
நோரொத்த திங்கள் சனிக்கிழக் கேயாகும்
பாரொத்த சேய்புதன் உத்திரம் பானுநாள்
நோரெத்த வெள்ளை குடக்காக நிற்குமே'' (797)

என்ற பாடலில் கூறுகிறது. அத்துடன் சூலத்தில் செல்லுவதால் உண்டாகும் நன்மை, தீமையைக் கூறுமிடத்து,

"தெக்கண மாகும் வியாழத்துச் சேர்திசை
அக்கினி சூலமு மாமிடம் பின்னாகில்
துக்கமும் இல்லை வலமுன்னே தோன்றிடின்
மிக்கது மேல்வினை மேன்மேலு விளையுமே" (798)

என்று கூறுகின்றது. அதாவது வியாழக்கிழமை சூலதிசை தெற்கு. சூலம் இடப்பக்கமாகவும் பின்பக்கமாகவும் இருபக்கப் பயணம் செல்வது நன்மை. வலப்பக்கமும் முன்பக்கமும் இருக்கும்போது சென்றால் பயணத்தில் தீய விளைவுகள் உண்டாகும் என்று கூறுகின்றது.

பயணம் செய்வதற்கு உரிய நாள், ஆகாத நாள் ஆகியன பற்றிக் கயிலாச நாதர் சதகம்,

"அங்கார கன்னிந்தரி சனிதிங்கள் தெற்குமே
லதின்மேற்கு புந்தி குருவா
மாதிவா ரம்வெள்ளி வடதிசை சென்றவர்க்
காகாத காரிய முமாந்
தங்கியிடு பரிதியொடு வெள்ளியிற் கீழ்த்திசைத்
தானேகி லதிக பகையாஞ்
சன்மிதிப்பு மேற்றிசைச் சென்றிடிற் காரியந்
தானகன் றோடி விடுமே" (76)

என்ற பாடல் கூறுகின்றது.

"மேடம், இடபம், கடகம், துலாம், தனுசு, சிம்மம் ஆகியன பயணத்திற்கு உரிய இராசிகள். இதனை, அண்ணாமலை சதகம்,

"மேடலக் கினமதனி லூர்ப்பயண மாகாது
வீறிடப நலமுள்ளதாம்
மதினத்தி லேசெல்லும் காரியமெ திர்ப்படு
மென்கடக மரசர் சேவை
நாடருஞ் சிங்கத்தி லாதாய மாங்கன்னி
நளிர்சுரங் காணுந் துலாம்
நற்பொருள் கிடைக்கும் விருச்சிகம் பணியினா
னலிவுட னடுக்க முண்டாங்
கோடுறுந் தனுசுசத் துருஜயம் மகரமது
கொடிபய மாங்கும்பமோ

கொடியர்தண் டனைசெய்து மீனமழை யாற்பயங்
கொண்டயாத் திரை செய்கால'' (94)

என்ற பாடலில் கூறுகின்றது. இத்துடன் இராசிப்படி சந்திராட்டம நாட்களும் (கோச்சாரப்படி சந்திரன் எட்டுக்கு வருவது) தவிர்க்கப்பட வேண்டும். பிரயாண இலக்னத்திற்கு ஐந்தாம் இடம் சுத்தமாக இருக்க வேண்டும். இங்ஙனம் பயணம் மேற்கொள்வதற்கு நாள், திதி, நட்சத்திரம் முதலியன கடைப்பிடிக்கப்பட்டாலும் சூலம் பார்ப்பதை இன்றும் மக்கள் வழக்கில் மிகுதியாகப் பின்பற்றுகின்றனர்.

இதனால் வியாழக் கிழமைகளில் சென்னையிலிருந்து தெற்கே செல்லும் இரயில்களிலும், புதன், வியாழன், அதிகாலையில் தெற்கே இருந்து சென்னைக்கு வந்து சேரும் இரயில்களிலும் கூட்டம் இருப்பதில்லை. மதுரை மாவட்டத்தில் சில மலைச் சாதியார் திங்கள் கிழமைகளில் சூரியோதயத்துக்கு முன்பும், செவ்வாய்க் கிழமைகளில் நடுப்பகலுக்குப் பின்னரும், வியாழன் சிற்றுண்டி நேரத்திற்குப் பின்னரும், வெள்ளிக் கிழமைகளில் சூரியோதயத்துக்குப் பின்னரும் பயணம் புறப்படுவதில்லை.[16] மக்கள் முக்கியமான எந்தச் செயலையும் இராகு காலத்தில் தொடங்குவதில்லை. இன்றும் பலர் இராகு காலம், எமகண்டம் போன்ற நேரங்களில் தம் சிறு சிறு பயணங்களைக் கூடத் தொடங்குவதில்லை.

சூலத்தில் பயணம் செய்தே ஆகவேண்டும் என்ற சூழ்நிலைகள் ஏற்படுமானால், அமிர்த யோகத்தில் புறப்பட வேண்டும். அதாவது புதன் வடக்கே செல்ல வேண்டுமெனில் சூரியன் தோன்றி 1/4 நாழிகை (15 விநாடி) சென்றபின் 5 விநாடிக்குள் புறப்பட வேண்டும். திங்கள், சனிக் கிழமைகளில் செல்ல நண்பகல் 15 நாழிகை கழித்தும், வெள்ளி, ஞாயிறு, மேற்கில் செல்ல இரவில் 15 நாழிகைக்கும், வியாழன் தெற்கில் செல்ல சூரியன் மறைவதற்கு ஒரு நாழிகைக்கு முன்னதாகவும் புறப்பட்டுச் செல்லுதல். இந்த அமிர்த யோகக் கடிகையில் புறப்பட்டுச் சென்றால் வார சூலை பாதிக்காது என்பது சோதிடச் செய்தி.

மேலும் வாரசூலை தோடம் அந்தக் கிழமை முழுவதும் அச்சூல திசையில் நிற்பதில்லை. திங்கள், சனி, கிழக்கில்

---

16. மரபும் பண்பாடும், சோமலெ ப.69.

எட்டு நாழிகை, வியாழன் தெற்கில் 20 நாழிகை, வெள்ளி, ஞாயிறு மேற்கில் 12 நாழிகை, செவ்வாய், புதன் வடக்கே 16 நாழிகை ஆகிய நாழிகைகளில் மட்டும் அந்தத் திசைகளை நோக்கிப் பயணம் செய்யக் கூடாது. சூலத்தில் பயணம் ஏன் கூடாது என்பதை ஆராய்ந்தால் அந்தந்தக் கிழமைகளில் அந்தந்தக் கோள்களின் சக்தி அதிகமாக இருக்கும் (ஞாயிறு-சூரிய சக்தி, திங்கள். சந்திர சக்தி). அந்தந்த ஓரையே முதலில் அன்று தொடங்கும்.

ஞாயிறு எனும் சூரியனை நீச்சமாக்கும் துலாராசி இருக்கும் மேற்கிலும், புதனை நீச்சமாக்கும் மீனராசி இருக்கும் வடகிழக்கிலும், வெள்ளி எனும் சுக்கிரனை நீச்சமாக்கும் கன்னிராசி இருக்கும் தென் மேற்கிலும், சனியை நீச்சமாக்கும் மேடராசி இருக்கும் கிழக்குத் திசையிலும் பயணம் செய்யலாகாது. அந்தந்தக் கிழமைகளில் அந்தந்தத் திசைகளில் நற்செயலுக்காகப் பயணம் செய்தால் மனம், யுக்தி இவை திடமாக இராது; தோல்வி, நட்டம், வருத்தம் ஏற்படலாம்.

அதே சமயம் சந்திரன் உச்சமாகும் இடப ராசியின் கிழக்கை நோக்கித் திங்கட் கிழமையிலும், வியாழன் உச்சமாகும் கடகராசியின் தெற்கை நோக்கி வியாழக் கிழமையிலும், செவ்வாய் உச்சமாகும் மகரராசியின் வடக்கை நோக்கி செவ்வாய்க் கிழமையிலும் செல்வது சூலம். (அதிக சக்தி ஆபத்து என்பதால்). மனோ தத்துவ உடல் தத்துவப் பரிகாரமாக வடக்கே செல்லும்போது சூலமாவதால் புளிச் சுவையான தயிரும், மேற்கே போகும்போது இன்சுவையான வெல்லமும், தென் திசையாயின் நல்லெண்ணையும் வட திசையாயின் பாலும் சாப்பிட்டு விட்டுப் பயணம் செல்லலாம் என்கிறது சோதிடம்.

மனித மூளையின் உத்தரவுகள் நரம்புகளின் வழியே உடலின் பல பாகங்களுக்குப் பௌதீக இராசாயன சமிக்கைகள் வழி வந்து செயலாகின்றது என்கிறது அறிவியல், ‘சூல திசைகளால் உடலில் ஏற்படும் அறிவியல் எதிர் மாறுதல்கள் சூலப் பரிகாரத்தால் சரியாகி விடுமா? என இந்தியச் சோதிட விஞ்ஞான கவுன்சில்’ (சென்னை) ஆராய்கிறது.[17]

---

17. அஞ்சல் வழி சோதிடவியல் பட்டய பாடம். தாள் 3:1 பக்.93-94.

எதிர்வரும் பாதிப்புகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகின்ற மன இயல்பு மக்களுக்கு இருப்பதால், நல்ல நேரம், நல்ல நாள் பார்த்துப் பயணத்தைத் தொடங்குகின்றனர் என்பது தெரிகிறது.

வாணிபம் செய்ய நாள் பார்த்தல்

தொழில் மனித வாழ்க்கையைச் சிறக்கச் செய்வதால் தான், 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று சொல்லப் படுகிறது. தொழில் சிதையின், வாழ்க்கை வளமுற அமையாது. வாணிபம் என்பது, ஒரு தொழில். எனவே இவ்வாணிபத் தொழிலின் வளர்ச்சி கருதி இதனைச் செய்ய நல்ல நேரம் பார்த்திருக்கின்றனர். எனவே, வாணிகர்கள் கடல் வழியாக வாணிகப் பயணம் தொடங்குமுன் நல்ல கால நிலையை ஆராய்ந்து புறப்பட்டனர். அது மட்டுமன்றி நன்னாளாகிய இரேவதி நட்சத்திரத்தில் குருராசியில் தனுசுலக்னத்தில் மரக்கலத்தில் ஏறினர். இதனை,

''மோதுபடு பண்டமுனி யாதுபெரி தேற்றி
மாதுபடு நோக்கினவர் வாட்கண்வடு வுற்ற
தாதுபடு தார்கெழிய தங்குவரை மார்பன்
கோதுபட லில்லக்குறி கொண்டெழுந்து போந்தான்'' (499)

''அரசனைக் கண்டு கண்ணுற் றவர்களை விடுத்துநன் னாள்
இரேவதி வியாழ வோரை யிருஞ்சிலை முளைப்ப வேறிக்
கரைகட லழுவ நீந்திக் காற்றினுங் கடுகி யைஞ்ஞா
றுரையுடைக் காதமோடி யோசனை யெல்லை சார்ந்தே'' (506)

என்ற சீவகசிந்தாமணிப் பாடலடிகளில் காணமுடிகின்றது.

அரசியலும் சோதிடமும்

முடி சூட்டுதல்

அரசாங்க நிகழ்ச்சிகளில் சோதிடம் பார்த்துச் செயல்பட்டதைப் பரவலாகக் காண முடிகிறது. 'அரசவைச் சோதிடர்' என்பவர் அரசாங்கத்தில் பெரும் மதிப்பிற்குரிய பணியில் இருந்தார் என்பதும், அரசாங்கத்தில் சோதிடம் பெற்றிருந்த இன்றியமையாத இடத்தினைப் புலப்படுத்துகிறது. இச் சோதிடர் மன்னர் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலுக்கும், மன்னர் பிறந்த நட்சத்திரத்திற்கேற்ப நாளும் கோளும் பார்த்து நன்னாளினைக் குறித்துக் கொடுத்தனர். மன்னர்கள் தம் ஆட்சி சிறப்புற்று வீழ்ச்சியின்றித் தொடர

வேண்டும் என்பதற்காக முடி சூடும்போது நல்ல நாள் பார்த்துச் சூட்டிக் கொண்டுள்ளனர். முடி சூட்டுதலுக்கு நல்ல நாள் பார்த்தமையைக் 'கம்ப ராமாயணம்' குறிக்கின்றது. இராமன் முடி புனைவதற்குரிய காலம் வந்துவிட்டது என்று சோதிடர் கூறினர் என்பதை,

கணிதநூ லுணர்ந்த மாந்தர்
காலம்வந் தடுத்த தென்னப்
பிணியற நோற்று நின்ற
பெரியவன் விரைவி னேகி
மணிமுடி வேந்தன் றன்னை
வல்லையிற் கொணர்தி யென்னப்
பணிதலை நின்ற காதற்
சுமந்திரன் பரிவிற் சென்றான் '' (2:3-82)

என்ற அடிகள் காட்டுகின்றன.

போர்

மன்னர்கள் போருக்குப் புறப்படும்முன் நல்ல நாள் பார்த்தே புறப்பட்டுள்ளனர். தமக்கு வெற்றியே கிடைக்க வேண்டும் என்பதால் இவ்வாறு செய்திருக்கலாம். எனவே பேரரசர்கள் போருக்குக் கிளம்பும் முன்பும், வெற்றி பெற்ற பின் நாடு திரும்பவும் போன்ற முக்கியமான சூழ்நிலைகளில் சோதிடத்தைப் பின்பற்றினர். எனவே அரண்மனைக் கணியர்களைக் கொண்டு போர் புரிதற்கு நல்ல நாள் பார்த்து அந் நல்ல நாளில் போருக்குப் புறப்படுவது வழக்கம். நல்ல நாளிலேயே போருக்குப் புறப்பட முடியவில்லை எனில் அந்நாளில் தன் குடையையும், வாளையும் கோட்டை வாயிலுக்கு வெளியே போக்கிவைப்பது வழக்கம். அதாவது போருக்குப் புறப்படுவதற்கு முன் நல்ல நாளிலே குடையையும், வாளையும் செல்ல வேண்டிய திசையில் எடுத்து சென்று பெயர்த்து வைத்தல் மரபு. வாள் நாள் கோள், குடைநாள்கோள் என இவற்றைத் தொல்காப்பியர் குறிப்பிடுவதை,

''குடையும் வாளும் கோள்அன்றி
மடையமை ஏணிமிசை மயக்கமுங் கடைஇச்
சுற்றமர் ஒழிய வென்றுகைக் கொண்டு
முற்றிய முதிர்வும்'' (பொரு.69:1-4)

என்ற நூற்பா கூறுகின்றது.

'சோதிட வருடனே கூட்டி நல்ல நாளிலே குடையைப் புறவீடு விட்டான்'[18] என்ற அடி இதனை உறுதிப்படுத்துகின்றது.

கரிகால் வளவன் வடதிசை மன்னரை வெல்லக் கருதி வடநாடு சென்ற காலத்து வாளும், வெண் கொற்றக் குடையும், முரசும் நல்ல நாளிலே செல்ல விடுத்தான் என்பதனை,

''செருவெங் காதலிற் றிருமா வளவன்
வாளுங் குடையு மயிர்க்கண் முரசும்
நாளொடு பெயர்த்து நண்ணார் பெறுகவிம்
மண்ணக மருங்கினென் வலிகெழு தோளெனப்
புண்ணியத் திசைமுகம் போகிய வற்றாள்''. (5:90-94)

என்ற *சிலப்பதிகார* அடிகள் காட்டுகின்றன.

கண்ணகிக்குக் கற்கால் கொண்டுவர வடநாடு செல்லச் செங்குட்டுவன், கணி குறித்த நாளில், 'வாளும் குடையும் வடதிசை பெயர்க்க' *(26:33)* என ஆணையிட அவ்வாறே செய்தமையை,

''மறமிகு வாளும் மாலை வெண்குடையும்
புறநிலைக் கோட்டப் புரிசையுள் புகுத்தி'' (26:44-45)

என்ற அடிகளில் *சிலப்பதிகாரம்* காட்டுகின்றது.

இதேபோல மன்னவன் தன் ஆக்கம் கருதி, குடிப்புறம் காத்து ஓம்புதற்கு எடுத்த தன் வெண்கொற்றக் குடையினைத் தனக்கு ஏற்ற நாளும் கோளும் பார்த்து மேற்கொண்ட செய்தியையும், பகைவர் அழிவு கருதி அதற்கு ஏற்ற நாளும், கோளும் பார்த்துத் தன்படை வாளினைக் கொண்டான் என்ற செய்தியையும்,

''நாளும் புள்ளும் நயத்தகு நன்னிலைக்
கோளும் ஓரையும் கொண்ட நிமித்தமும்
ஆளும் மாந்தரின் ஆய்ந்து கொண்'' (*சீவக*.1775)

என்ற அடிகள் காட்டுகின்றன.

மன்னன் சோதிடரைக் கொண்டு போர் புரிவதற்குத் தக்க காலத்தைத் தேர்ந்தெடுத்தான் என்பதை,

---

18. புறப்பொருள் வெண்பாமாலை, *4, 8* உரை.

"ஆறிரு மதியினுங் காருக வடிப்பயின்று
ஐந்து கேள்வியும் அமைந்தோன் எழுந்து
....
திருமலர்த் தாமரைச் சேவடி பணியும்
முழுத்தம் ஈங்கிது" (சிலப்.26:25-26; 29-30)

என்ற அடிகளால் அறிய முடிகின்றது.

சோதிடர் மன்னர்க்குப் பழுதறு நாள், பழுதற்ற பொழுதினைக் குறித்துக் கொடுத்தனர். கணித நூல் பழகினார் உரைத்த நல்ல நாளிலும், நேரத்திலும் குலோத்துங்கன் புறப்பட்டான் என்பதனை,

"அழகின்மே லழகுபெற அணியனைத்தும்
அணிந்தருளிக் கணித நூலிற்
பழகினார் தெரிந்துரைத்த பழுதறு நாட்
பழுதற்ற பொழுதத்து ஆங்கே" (280:49)

என்ற கலிங்கத்துப் பரணிப் பாடல் காட்டுகின்றது. மன்னன் போருக்குப் புறப்படும் நாள் பெரும்பான்மை பரணி நாளாக இருக்கும்.

சோதிட வல்லுநனான சகாதேவன், துரியோதனன் போரில் வெற்றிபெற மார்கழி (தனுர்) மாதத்தில் அமாவாசை நாளில், இரவில் களபலி கொடுக்க வேண்டும் என நல்ல வேளை குறித்துத் தருகின்றான் என்பதை,

"என்றலு மவனு மாங்கோ ரியந்திர வெகின மூர்ந்து
சென்றன னவனுங் கேட்டுச் சிலையில் செங்கதிரைத் திங்கள்
ஒன்றிய பகலி ராவிற் களப்பலி யூட்டி னல்லால்
வென்றிட லரிதென் றிட்டான் கிளைஒரை வேறிடாதன்"
(வி.பா.4)

என்ற பாடல் காட்டுகின்றது.

பாண்டவர் குமாரனான அரவானைப் பலியிடும்படி பகைவர்க்குக் கொடுத்துவிட்டான் என்பதை அறிந்து கண்ணன் அமாவாசைக்கு முன் நாளாகிய சதுர்த்தி நாளான இன்றைக்கே அமாவாசை ஆகட்டும் என்று முனிவர்க்குச் சொன்னான். அவர்களும் அமாவாசைக்குரிய சடங்குகளைச் செய்ய, சந்திர சூரியர்களாகிய சுடர்கள் ஒன்று சேர்ந்து இது நேர்ந்தது என்ன காரணம் என்று சிந்திக்க, அவர்கள் ஒன்று சேர்ந்த அந்நாளே அமாவாசை ஆயிற்று என்பதை,

"கொடுத்தனன் பலிக்குத் தன்னை குமரனென் றறிந்து குன்றம்
எடுத்தவன் நிதிபன் னான்கி னிடையுவா வின்றா கென்று
தொடுத்தநூண் முனிவ ரோடுஞ் சொல்லினன் சுடர்க டம்மில்
அடுத்ததிங் கென்னை யென்ன லன்றது வாய்தன்றே." (வில்.பா.4)

என்ற பாடல் காட்டுகின்றது. எனவே போரில் வெற்றி பெற நல்ல நாள் பார்த்தனர் என்பதும், விண்ணில் ஏற்படும் நிகழ்வுகளால் சோதிடம் சொல்லப்படுகிறது என்பதும் 'சோதிடம் பொய்க்காது' (நீல.298) என்பதும் தெரிய வருகின்றது.

அறச்செயல்

'தன்சூள் பொய்ப்பின் அறம் செய்யும் நாள் இல்லாது கழிக' (குறு.137) என வஞ்சினமுரைப்போர் கூறுவது அறம் செய்வதிலுள்ள ஈடுபாடும், இரப்போர்க்கு ஈயாமல் கழியும் நாள் கெட்ட நாள் என்று நம்பிய திறமும் பண்டைத் தமிழருக்கிருந்தமை வெளிப்படுகின்றது. தன் நன்மை கருதி பிறர்க்கு அறம் செய்தலை மேற்கொள்ளும் போது நல்லநாளில் செய்தனர் என்பதை,

"அறுமீன் கெழீஇய அறஞ்செய் திங்கள்" (நற்.202)

என்ற அடி உணர்த்துகின்றது. கார்த்திகை மீன்களோடு கூடிய அறம் செய்தற்கமைந்த முழுத்திங்கள் விளங்கும் நாள் என்பது இதன் பொருள். கார்த்திகை நாளும் முழுமதியும் கூடிய நாள் கார்த்திகைத் திங்கள், மறுநாள் தொடங்குவது மார்கழித் திங்கள். அஃது ஆதிரை நாளும் முழுமதியும் கூடிய நாளொடு நிறைவுறும். முழுத் திங்களில் அறஞ் செய்தலும், நோன்பு மேற்கோடலும் தமிழர் மரபு.

மக்கள் அறச் செயல்களைச் செய்யும்போதும் அதனால் விளையும் புண்ணியம் முழுவதுமாகக் கிடைக்க வேண்டும் என்பதால் நல்ல நேரம் பார்த்து அறம் செய்துள்ளனர்.

நீராடுதலும் புத்தாடை உடுத்தலும்

நீராடுதல்

அன்றைய காலத்தில் இயற்கையின் பாதிப்பிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள விரும்பிய அரசர்கள் நீர் நிலைகளில் நீராடுமுன் நல்ல நேரத்தில் நீராடி வந்துள்ளனர்.

கணிகள் நீராடுதற்குரிய நல்ல முகூர்த்தம் வந்தமையை அறிவிக்க அரசன் முதலியோர் நீராடச் சென்றமையை,

''பெருநீ ராட்டணி பெட்கும் பொழுதெனச்
செம்பொற் படத்துப் பேறுவலித் திருந்த
மங்கலக் கணிகண் மாதிர நோக்குப்
புரைமீன் கூடிய பொழுதியல் கூற'' (பெருங்.1:39.4-7)

என்ற இப்பாடல் உணர்த்துகின்றது. இந்நிலை பொது மக்களிடம் இருந்திருக்க வாய்ப்பில்லை. இருப்பினும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கச் சில நாட்களை ஒதுக்கி, நல்ல நாட்களையே பயன்படுத்துகின்றனர்.

ஞாயிறு எண்ணெய் தேய்த்துக் குளித்தால் அழகு போகும்; திங்கள் எனில் மிகுந்த பொருள் கிடைக்கும்; செவ்வாய் துன்பம்; புதன் சிறந்த அறிவு வரும்; வியாழன் அறிவு கெடும்; வெள்ளி சேர்த்து வைத்த பொருள் அழியும்; சனி செல்வம் ஆயுள் உண்டு. தகாத நாட்களில் எண்ணெய் தேய்த்து முழுக நேர்ந்தால் ஞாயிறு அலரிமலரும், செவ்வாய் நல்ல மண்ணும், வியாழன் பசிய அறுகம்புல்லும், வெள்ளி அறுப்பொடியும் எண்ணெயுடன் சேர்தது முழுகினால் நன்று என்று கூறும் அறப்பளீசுர சதகம்' (50) மன்னர் மட்டுமன்றி மக்களும் எண்ணெய் தேய்த்துக் குளிக்க நல்ல நாட்களையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதனை உணர்த்துகிறது.

புத்தாடை உடுத்தல்

நகை, புத்தாடை அணிய ஸ்திர ராசியைத் தேர்ந் தெடுத்தல் வேண்டும். உபயராசியும் உகந்ததே. ஆனால் சரராசி கூடாது. அதாவது சரராசிகளான மேடம், கடகம், துலாம், மகரம் ஆகியவற்றைப் பயன்படுத்தக் கூடாது. அமாவாசை, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி, அட்டமி போன்ற திதிகளில் புத்தாடை வாங்கவும், அணியவும் கூடாது என்பன போன்ற சோதிடச் செய்திகளும் இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. புத்தாடை அணியும் கிழமை பற்றி அறப்பளீசுவர சதகம் (64) பின்வருமாறு கூறுகிறது.

புத்தாடை உடுத்தற்கு ஞாயிறு, வியாழன், வெள்ளி ஆகிய நல்ல நாட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். தீய

நாட்களான திங்கள், செவ்வாயில் புத்தாடை அணிதல் தீமை பயக்கும்; புதன் விரைவில் கிழிந்து, வெற்றியை நீக்கும்; சனி வாழ்க்கையைப் போக்கி மரணத்தை உண்டாக்கும். ஆடை உடுக்க நாள், நட்சத்திரம் (75) சவரத்திற்குரிய நாள், (93) சவரத்திற்காகாத நாள் (94) முதலியவற்றைக் கயிலாச நாதர் சதகம் கூறுகின்றது.

இசைப்போட்டி

உரோகிணி யூர்ந்த மதியையுடைய வியாழக் கிழமையிலேயே சீவகனுக்கும் தத்தைக்கும் இசைப்போட்டி நிகழ்த்தச் சோதிடர் நல்ல நாள் குறித்தார் என்பதை,

''மண்ணிட மலிரவெங்கும் மாந்தரும் வந்து தொக்கார்
ஒண்ணிறவு ரோணி யூர்ந்த வொள்மதி யொண்பொ னாட்சித்
தெண்ணிற விசும்பி னின்ற தெளிமதி முகத்து நங்கை
கண்ணியவீணைவாட் போர்க்கலாமின்றுகாண்டு மென்றே'' (620)

''பசுங்கதிர்க் கடவுள் யோகம் பழிப்புற நுனித்து வல்லான்
விசும்பிவர் கடவு ளொப்பான் விரிச்சிக னறிந்து கூற
அசும்பு தேனலங் கலைம் பாலரிவையொ டாய்ந்து நாய்கன்
விசும்பு போன் மாந்தரார விழுநிதி சிதறி னானே'' (621)

என்ற பாடல்களில் சீவகசிந்தாமணி காட்டுகின்றது.

பரிசில் பெறுதல்

ஒருவரைக் காணச் சென்று, செயல் நடைபெற வில்லையெனில் 'எல்லாம் என்னுடைய நேரம்' 'இன்று எனக்கு நேரம் சரியில்லை' என்று தன்னையே நொந்து கொள்ளும் மக்களைப் பார்க்கின்றோம். சங்க காலத் தமிழரும் கொடாதார் பழிக்காமல் புள்ளையும் பொழுதையும் பழித்துள்ளனர் என்பதனை,

''புள்ளும் பொழுதும் பழித்த லல்லதை
உள்ளிச் சென்றோர்ப் பழியலர்'' (புற.204)

என்ற அடிகள் காட்டுகின்றன. இரவலர் பரிசில் பெறா நிலையிலும், புரவலரைப் பழியாது தாங்கள் புறப்பட்டு வந்த பொழுது, எதிர்வந்த புள்நிமித்தம், புறப்பட்ட நேரம், முகூர்த்தம் ஆகியவற்றைப் பழித்துள்ளனர்.

நாள் நன்றாக இல்லாதபோது புறப்பட்டுச்சென்று, திறனற்ற சொற்களைக் கூறினாலும் மலையமான் திருமுடிக்காரி வாரிவழங்குவான் என்பதை,

''நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிகு பெயர்குந ரல்லர்'' (புற.124)

என்ற அடிகளில் கபிலர் காட்டுகின்றார். இங்கு மன்னனின் சிறப்பை வெளிப்படுத்துதற்காகப் புலவர் இங்ஙனம் கூறிருப்பினும் நல்ல நேரம் பார்த்துச் செயல்களைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருப்பதால்தான் நாள் நன்றாக இல்லையெனினும் வாரி வழங்குவான் என்ற உணர்வைப் புலவர் வெளிப்படுத்துகின்றார்.

வேதம் ஓதுவதற்குதவாத காலம்

புனிதமான ஒன்றாகக் கருதப்படும் வேதம் ஓதுவதற்கு நல்ல நாள் பார்த்துப் பின்பற்றிய மக்கள், வேதம் ஓதுவதற்கு உதவாத நாட்கள் எனச் சில காலத்தைக் கணித்துச் செயல் பட்டுள்ளனர்.

''அட்டமியும் ஏனை உவாவும் பதினான்கும்
அப்பூமி காப்பார்க் குறுகண்ணும் மிக்க
நிலத்துளக்கு விண்ணதிர்ப்பு வாலாமை பார்ப்பார்
இலங்கு நூல் ஓதாத நாள்'' (ஆசா.47)

குருவிடம் அறிவுரை பெறுதற்கு உகந்த நாட்கள்

குருவிடம் பாடங் கேட்டு அறிவுரை பெறுதற்கு, கேட்டதை மனத்தில் இருத்துதற்கு உதவும் என்ற நோக்கில் நல்ல நேரம் பார்த்துப் பாடம் கற்று இருக்கின்றனர். ஜூன் மாதம் பள்ளிக்கூடங்கள் தொடங்கினும், இடையில் விசயதசமியில் மாணவர்களைச் சேர்த்து ஜூன் மாதம் சேர்ந்த மாணவருடனேயே படிக்க விடுகின்றனர். இங்ஙனம் விசயதசமி நாளில் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்த்தல் நாள் பார்த்தல் என்ற உள்ளுணர்வின் ஊடுருவலால் ஏற்பட்டதைக் காட்டுகிறது.

''சோதி, விசாகந் தொடர்ந்திரு தேள்நண்டு
ஓதிய நாளே உணர்வது தானென்று

நீதியுள் நீர்மை நினைத்தவர்க் கல்லது
ஆதியும் ஏதும் அறியகி லானே'' (1694)

என்ற திருமந்திரப் பாடல் உணர்த்துகின்றது.

தியானம்

வளர்பிறை பிரதமை முதல் சட்டி வரை (1, 6ஆம் நாள்) ஆறு ஆதாரங்களிலும், சப்தமி (7), நவமி (9), ஏகாதசி (11), திரையோதசி (13) ஆகிய திதிகளில் வலப்பக்கமாகவும் தியானிக்க வேண்டும் என்று திருமந்திரம் கூறுவதை,

''அறிந்த பிரதமையோ டாறு மறிஞ்சு
அறிந்தவச் சத்தமி மேலிவை குற்றம்
அறிந்தவை யொன்றுவிட் டொன்றுபத் தாக
அறிந்து வலமது வாக நடவே'' (1291)

என்ற பாடல் செப்புகின்றது.

மேலும் இந்நூல் ஆறு ஆதாரங்களிலும் பன்னிரண்டு இராசிகளும் பொருந்தத் தியானித்தால் ஒளியும், ஒலியும் நிறைந்து தோன்றி அகமுகத் தியானத்தில் இராசிச் சக்கரம் நிலைபெறும் என்கிறது. எனவே தியானம் செய்கிறபோது நல்ல நாட்களில் சில முறைப்படி செய்ய வேண்டும் என்பது தெரிகிறது.

யோகாப்பியாசம்

யோகம் போன்றே தியானத்திற்கும் நாள், நட்சத்திரம் பார்த்துள்ளனர். பிறந்த கிழமை, பிறந்த நட்சத்திரம், பிறந்த நட்சத்திரத்திலிருந்து ஒன்று, இரண்டு, மூன்று, எட்டு ஆக இந்த நாட்கள் யோகாப்பியாசத்திற்கு ஆகாத நாட்கள் என்பதை,

''திருந்து தினமத் தினத்தி னோடுநின்
றிருந்தறி நாளொன் றிரண்டெட்டு மூன்று
பொருந்திய நாளொடு புக்கறிந் தோங்கி
வருந்துத லின்றி மனைபுக லாமே!'' (திரு.743)

என்ற பாடலின் வழி அறிய முடிகிறது.

ஆசாரக் கோவை கிழக்கு நோக்கி உண்ணக் கூடாது (20), படுக்கும்போது வடக்கிலும், கோணத் திசைகளிலும் தலை வைத்துப் படுத்தல் கூடாது (30), பகலில் தெற்கு நோக்கியும் இரவில் வடக்கு நோக்கியும் இருந்து மலசலம் கழித்தல் ஆகாது (33) என்று கூறுகிறது.

மருத்துவம்

மருத்துவத்தில் மருந்துச் சரக்குகளைத் திரட்ட, சரக்குகளைச் சுத்தி செய்ய, மருந்து செய்யத் தொடங்க, மருந்து கொடுக்க, மருந்து உட்கொள்ள என்ற பல நிலைகளில் நல்ல நேரம் இன்றியமையாததாகச் செயல் பட்டிருக்கின்றது. புள்ளிருக்கு வேளூர் எனும் திருத்தலத்திலுள்ள வைத்தீஸ்வரன் பிணி தீர்க்கும் ஆற்றலுடை யவன் என மக்கள் போற்றுகின்றனர். இன்றும் இத்தலம் செல்லும் பிணியாளர்களுக்குத் 'திருச்சாத்துருண்டை' எனும் மருந்து அளிக்கப்படுகிறது. பலரும் அதனை உண்டு நலம் பெறுகின்றனர்.

இதனைச் செய்து உண்ண விரும்புவோர் சுக்கில பட்சத்தில், நல்ல நாழிகையில் அங்க சந்தான தீர்த்தத்தில் நீராடி, நடுவிலுள்ள மிருத்திகையை எடுத்துப் புதுப் பாத்திரத்தில் வைத்து, ஆலயத்திற்கு வந்து விபூதி குண்டலத்திலுள்ள விபூதியையும் சித்தாமிர்த தீர்த்த நீரையும் அதனுடன் கலந்து பஞ்சாக்கரம் செபித்துக் கொண்டே பிசைந்து, முத்துக்குமாரர் திருமுன்பு உள்ள குழியம்மியிலிட்டு அரைத்துக் கடுகளவாக உருண்டைகள் செய்து, அம்மையார் திருவடியில் வைத்து அருச்சித்த பின்னர், முறைப்படி இறைவழிபாடியற்றி உருண்டையைச் சித்தாமிர்த தீர்த்தத்தோடு நியமனமாகக் கலந்து உண்ண வேண்டும். அவ்வாறு உண்போர் தீராத வினைகளெல்லாம் தீர்ந்து முத்தியின்பம் அடைவர். இதன்வழி மருந்து செய்ய, உண்ண நல்ல நாள் நேரம் பார்க்கப்பட்டமை தெரிகிறது.

சுவடி

சுவடிகள் பொதுவாக நல்ல நேரத்தில் எழுதத் தொடங்கி, நல்ல நேரத்திலேயே எழுதி முடிக்கப் பெற்றிருக்கின்றன.

---

19. புள்ளிருக்கு வேளூர்த் தலவரலாறு, பக்.6, 7.

ஆனால் பெரும்பான்மையான சுவடிகளில் சுவடி எழுதத் தொடங்கிய காலம் குறிப்பிடப்படவில்லை. ஆனால் சுவடி எழுதி முடிக்கப் பெற்ற காலம் பல சுவடிகளில் இடம் பெறுகின்றது. எழுதத் தொடங்கின காலம், முடிக்கப் பெற்ற காலம் இரண்டும் சுவடியின் இறுதியில் குறிக்கப் பெற்றிருப்பதை, 1103 வருஷம் சர்வசித்து வருஷம் தை மாதம் 7 ஆம் தேதி வெள்ளிக் கிழமை தொடங்கி எழுதினது. மேற்படி வருசம் மாசி மாதம் 12ஆம் தேதி வெள்ளிக்கிழமை மேற்படி அகராதி எழுதி நிறைவேறியது. இந்த அகராதியை நான் 1104 வருஷம் மேற்படி மாதம் 19ஆம் தேதி வெள்ளிக்கிழமை... முதல் பிழை பார்த்து உயிர்எழுத்து, உயர்மெய் எழுத்து, இதுகளில் மொழிக்கு முதல் எழுத்துகளும் நூதனம் எழுதி 1104 வருஷம் பங்குனி மாதம் 14ஆம் தேதி வெள்ளிக்கிழமை எழுதி முடிந்தது.[20]

இதில் சுவடி எழுதத் தொடங்கியது, முடிந்தது, எழுதியவர் நூதனமாக அகரவரிசைப்படுத்தியது போன்ற வற்றிற்கு வெள்ளிக் கிழமையையே பயன்படுத்தியிருப்பது கவனிக்கத் தக்கது. எழுதத் தொடங்கிய சுவடியை முடிக்கவும் நல்ல நாள் பார்த்து அந்நாளில் முடித்திருக்கின்றனர்.

பிரசோற்பத்தி வருஷம் தை மாதம் 29ஆம் தேதி நவமியும் அனுஷமும் கூடின சுபதினத்தில் எழுதி நிறைந்தது.[21]

சாலியான சகாப்தம் 1676க்கு மேற்செல்ல நின்ற ஸ்ரீமுக வருஷம் சித்திரை மாதம் 24ஆம் தேதி கிருஷ்ணபட்சம்.... பண்டாரம் திருச்சிற்றம்பலக் கோவையார் எழுதி முடித்தான்.[22]

இங்ஙனம் இலக்கியக் கருவூலங்களாகவும், வரலாற்று மூலங்களாகவும் விளங்குகின்ற சுவடிகள் நல்ல நேரத்தில் எழுதத் தொடங்கி நல்ல நேரத்தில் முடிக்கப் பெற்றுள்ளன.

தீய நாள் இயல்பும் விளைவும்

இயற்கைப் பாதிப்புகளை முன்கூட்டியே அறிவித்துத் தீமைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக் கூறும்

20. திருச்சிற்றம்பலக் கோவையார், சுவடி.டி.1173. 21. திருச்சிற்றம்பலக் கோவையார், சுவடி.டி.1174. 22. திருக்கோவையார், சுவடி. டி.1173.

அறிவியலாளர்களைப் போன்றே சோதிடர்களும் தீய நாட்களை முன்கூட்டியே கணித்துக் கூறி, அதன் பாதிப்புகளிலிருந்து பாதுகாத்துக் கொண்டு செயல்பட நமக்கு அறிவுறுத்துகின்றனர்.

நல்ல செயல்களுக்கு மட்டுமன்றி பின்னால் வரப்போகின்ற தீமைகளிலிருந்து தங்களை ஓரளவு பாதுகாத்துக் கொள்வதற்கும், தீய நிகழ்ச்சிகள் நடக்கப் போகின்றன என்பதற்கும் கூட இலக்கியச் சான்றுகள் இருக்கின்றன. கோள்களின் நிலைகளில் மாற்றம் ஏற்பட்டால், குறிப்பாக வடதிசை நோக்கிப் போய்க்கொண்டிருக்கின்ற வெள்ளி, தென்திசை வருமாயின் மழையின்மை, கொடிய பஞ்சம், வறுமை வந்துறும் என்பதைப் பட்டினப்பாலை, பதிற்றுப்பத்து, மதுரைக் காஞ்சி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பல இலக்கியங்கள் காட்டுகின்றன.

''வெள்ளி தென்புலத் துறைய விளைவயற்
பள்ளம் வாடிய பயனில் காலை'' (புற.388)

வெள்ளி தெற்கே வருவது மட்டுமல்லாமல் கதிரவன் வேறு திசைகளில் தோன்றுதலும், எரிகொள்ளி விண்ணில் தென்படுதலும் வீழ்தலும் (புற.41), வால்வெள்ளி தோன்றுவதும், சனி மீன் புகைவதும் (புற.117), சனி சிம்ம இராசியிலுள்ள மக நட்சத்திரத்தை அடைவதும் (சுந்.தேவா.7.54.9) தீயகுறிகளாகக் கொள்ளப் பெற்றிருந்தன. இதனால் உலகில் வறுமை, துன்பம், இறப்பு ஏற்படும்.

பங்குனி மாதம் முதற் பதினைந்தில், கார்த்திகை நாளில், உத்திரம் உச்சியிலிருந்து சாய, மூலம் எழ, மிருக சீரிடம் மறைய ஒரு மீன் வடக்கும் கிழக்கும் போகாமல் இடைநடுவே தீப்பரக்க விழுந்ததன் விளைவாக விழுந்த ஏழாம் நாள் அப்போது மன்னனாக இருந்த யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை இறப்பான் என்று கூடலூர் கீழார் கூறியவாறு அம்மன்னன் இறந்தான். இதனை,

''ஆடியல் அழற் குட்டத்து
ஆரிருள் அரையிருளின்
முடப்பனையத்து வேர்முதலா
கடைக்குளத்துக் கயம்காயப்

பங்குனிஉயர் அழுவத்து
தலைநாண்மீன் நிலைதிரிய
நிலை-நாண்மீன் அதன் எதிர்பு பொங்கி
ஒரு-மீன் விழுந்தன்றால் விசும்பினானே'' (புற.229)

என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது. இங்கு இராசிச் சக்கர அடிப்படையில் கணக்கிட்டு மன்னரின் இறப்பு அறியப்பட்டிருக்கிறது. தனி மனிதனுடைய சாதகம் பார்க்கப் படாமல் மன்னனுக்கு அழிவு என்று அறிந்த திறனும், வானியற் புலமையும் வெளிப்படுகின்றது. சோதிடப் பலன்களை வானத்தைப் பார்த்து அறிந்திருக்கின்றனர். இன்று சோதிடக் கலையின் வளர்ச்சி காரணமாக நூலறிவே போதுமானதாக அமைந்து, வானத்தைப் பார்த்தறிவது தேவையற்றதாகி விட்டது.

இறப்பு

பிறப்பும் இறப்பும் மனிதனுக்குள் இயற்கையாக ஏற்படக் கூடிய ஒன்றாக இருந்தாலும் மனிதன் இறந்த நாள் கூட, நல்ல நாளாக இருக்க வேண்டும். அவ்வாறு நல்ல நாளில் இறக்கின்றவர் சொர்க்கம் அடைவர் என்றும், இறந்தவரின் குடும்பத்திற்குத் தீமைகள் ஏற்படாது என்றும் நினைத்த மக்கள், இறந்தவர் நல்ல நாளில் இறந்தாரா தீய நாளில் இறந்தாரா என்பதைத் தாமாகவும் சோதிடரைக் கேட்டு அறிந்தும் செயல்பட்டிருக்கின்றனர்.

ஒருவர் இறக்கும்போது நல்ல நேரத்தில் இறக்கா விட்டால் தோடம் என்று கருதியதை,

''உத்திரட் டாதிபூ ரட்டாதி ரேவதி
யுரோகிணி யவிட்ட சதைய
மொருவருட தோடந்தா னுற்றபஞ் சமியிலே
யோராறு மாத தோடஞ்
சித்திரை புனர்பூச முத்திரங் கிருத்திகை
செய்ய மான்றலை விசாகஞ்
சித்திதரு முத்ராட மிவ்வேழு மேமூன்று
திங்கள் வரையுந் தோஷமாம்
நந்துமூ லங்கேட்டை யாகுமிரு நாட்களு
நாற்பது தினந் தோஷமாம்
நலமாக மேற்கண்ட நட்சத்தி ரந்தவிர
நன்றதா மற்ற நாட்கள்
கத்தனே யுலகிலுயிர் செத்த நாட் டோஷமிது.'' (கயி.சத.82)

என்ற பாடல் காட்டுகின்றது. ஒருவர் இறந்த போது உத்திரட்டாதி, பூரட்டாதி, இரேவதி, உரோகிணி, அவிட்டம், சதயம் ஆகிய நட்சத்திரங்களுள் ஒரு நட்சத்திரம் அன்றைய தினத்திற்குரியதாக இருப்பின் ஓர் ஆண்டு தோடம்; அந்நட்சத்திர நாளில் பஞ்சமி திதி அமையுமானால் ஆறு மாதம் தோடம். சித்திரை, புனர்பூசம், உத்திரம், கிருத்திகை, மான்றலை, விசாகம், உத்திராடம் இவ்வேழிலொன்று இறப்பு நாளில் அமையுமானால் மூன்று மாதங்கள் தோடம். மூலங் கேட்டையாகில் 40 நாள் தோடம். இந் நட்சத்திரங்கள் தவிர்த்த ஏனைய நட்சத்திரங்களில் உயிர் விடின் அவை நல்ல நாட்கள் என்பது இப்பாடல் தரும் பொருளாக அமைகிறது.

மார்கழி திருவாதிரை நாளிலோ ஏகாதசி அன்றோ உயிர் நீப்பது ஒரு பேறாகக் கருதப்படுகிறது. சனி இறந்தால் நன்றன்று. அவிட்டம் முதல் இரேவதி வரையுள்ள நட்சத்திரங்களில் உயிர் நீத்தவர்களைப் பாதத்தில் இறந்ததாகச் சொல்வதுண்டு. இதனால் ஏற்படும் கெடுதல்களைப் போக்க வீட்டின் ஒரு சிறு பகுதியைப் பிரித்துப் புதிய கற்களை வைத்துக் கட்டுவது, பிணத்தைக் கொண்டு போகப் புதிதாக ஒரு வாயிலை உடனே ஏற்படுத்துவது, வீட்டின் ஒரு பகுதியைத் திருத்தி அமைப்பது, கோழியைப் பிணத்துடன் புதைப்பது முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றை மேற்கொள்வர். இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வது அல்லது எரிப்பது முதலிய சடங்குகளைக் குளிகை காலத்தில் செய்வதில்லை.[23]

இங்ஙனம் நற்செயல்களுக்கு மட்டுமன்றித் தீய நிகழ்வுகளுக்கும் நாள் நேரம் பார்க்கப்படுகின்றது.

"செங்கதிரோன் வாரநாள் பரணி கூடில்
செழுமதியிற் சித்திரைசேய் உத்தி ராடம்
பொங்குபுதன் அவிட்டம் பொன்வாரங் கேட்டை
புகழ்பூரா டம்காரி ரேவதியிந் நாளில்
மங்கையரை மணம்புணரில் விதவை யாகும்
மனையெடுக்கின் பாழ்வழியிற் போகிற் சாவாம்
செங்கயர் கண்ணார் பூத்தால் மலடி யாவர்
சிறு குழவி பெறின்மரிக்கும் திண்ணந் தானே".[23]

---

23. மரபும் பண்பாடும், சோமலெ, பக்.71,88, 112.
24. மனைநூல், ப.148

புணார்ச்சிக்கு, வீடு கட்ட, பயணம் செல்ல, பூப்பு எய்த, குழந்தை பிறக்க ஆகாத நாட்களை இப்பாடல் சுட்டுகின்றது. சூரிய உதய கால முதல் உச்சி வேளை வரை ஏறத்தாழ பகல் ஒரு மணிவரை சோதிடம் சொல்ல வேண்டும்; மாலை நேரங்களில், நடு நிசியில், அட்டமி, நவமி, அமாவாசைகளில் கூடாது என்பதால் 'காலம் நேரம் தவறிச் சோதிடம் சொல்லாதே' என்று கூறப்படுகிறது. எனவே சோதிடம் கூறுவதற்கும் நாள் பார்க்கப்பட்டிருக்கிறது என்பது தெரிகிறது.

திருமணம், மாங்கல்யம், சீமந்தம், உபநயனம், குழந்தைக்குப் பெயர், முடியெடுக்க, காதுகுத்த, கல்வி தொடங்க, குரு சாந்தி செய்ய, பூச்சூட்ட, நிலம், வீடு வாங்க, கிணறு, குளம் தோண்ட, புதுவீடு கட்ட, புதுமனை புக, உழவு செய்ய, விதை விதைக்க, அறுவடை செய்ய, கால்நடை வாங்க, பிரயாணம் செய்ய, ஆடை, ஆபரணம் வாங்க, அணிய, கோடியுடுக்க, புது வாகனமேற, தேவ பிரதிஷ்டை செய்ய முதலான செயற்பாடுகளுக்குச் சோதிட நூலில் நல்ல நட்சத்திரம், திதி, இலக்னம் ஆகியன கூறப்பட்டுள்ளன. இவற்றுள் பலவற்றுக்கு நாள் பார்த்தலை இன்றும் நடைமுறையில் மக்கள் கொண்டுள்ளனர்.

நல்ல நேரங்களில் முக்கியப் பணிகளைச் செய்தால் முழுப்பலன் உண்டு என மக்கள் நம்புவதால் அன்றாட வாழ்வில் இதனைக் கடைப்பிடித்து ஒழுகுகின்றனர். காட்டாக, வாங்கிய துணி நீடித்து அமைய, சாயம் போகாமல் போட்ட பணம் வீணாகாமல் இருக்க, அந்த ஆடையை அணியும்போது தோற்றப் பொலிவு பளிச்சென்று இருக்க நல்ல நாள், நேரம் அவசியம் என்பதை நம்புகின்றனர்.

அதேபோல் விருந்துக்கு அழைத்தாலும், விருந்துண்ணச் சென்றாலும் வளர்பிறைகளில் திங்கள், புதன், வெள்ளி, சனி ஆகிய கிழமைகளைத் தேர்ந்தெடுப்பின் உறவு வளரும் நட்பு தொடரும் எனவும் நம்புகின்றனர்.

பொதுவாக மரண யோகம், கரிநாள் ஆகியவற்றைக் கவனித்து, அதன்பின் நட்சத்திரம், திதி, இலக்னம் ஆகியவற்றைக் கவனித்து, அதை அடுத்துச் சிறப்பு விதிகளான

இலக்னத்துக்கு இத்தனையாவது இடங்கள் சுத்தமாக இருக்க வேண்டும் என்பதையும் கவனித்து, அதன்பின் தான் நல்ல நேரத்தை முடிவு செய்கின்றனர். நாட்காட்டியில் நல்ல நேரம் போடுவது பொதுவான அடிப்படையில்தான். சிறப்பு விதிகளை இது கருத்தில் கொள்ள இயலாது. எனவே சிறப்பு விதிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும். திருமணம் போன்றவற்றிற்கு ஜென்மம், அனுஜென்மம், திரிஜென்மம் என்று கூட நட்சத்திரத்தைக் கவனிக்க வேண்டும். நல்ல முகூர்த்த நாளாக உள்ள நாள், குறிப்பிட்ட மணமக்களுக்குப் பொருந்தாததாக இருக்க வாய்ப்புண்டு. எனவே நாட்குறித்தல் மேலோட்டமாக இல்லாமல், செயல்களின் முக்கியத் துவத்திற்கு ஏற்பப் பார்க்கப்படல் வேண்டும்.

நல்ல காரியத்திற்குத் திதியைக் காட்டிலும் கிழமை, கிழமையை விட நட்சத்திரம், நட்சத்திரத்தை விட இலக்னம் பலமுடையது எனக் கருதப்படுகிறது. இவை அனைத்தும் நல்ல முறையில் அமையச் செய்வது சிறப்பானதாகக் கருதப்படுகிறது.

சூரிய உதய காலத்தையும், அஸ்தமன காலத்தையும் 'கோதுளி லக்னம்' என்று கூறுவர். இந்த இலக்னத்திற்குத் திதி, கிழமை, நட்சத்திரம், யோகம், கரணம் போன்றவற்றால் எந்த தோடமும் ஏற்படாது.

வார நாட்களில் திங்கள், புதன், வியாழன், வெள்ளி ஆகியவை நற்செயல் செய்ய உகந்தவை. ஞாயிறும் உகந்ததாகவே இருக்கும். செவ்வாய், சனி உகந்தவை அல்ல. நல்ல நாட்களில் கரிநாள், பிரதமை (பாட்டிமை), படுபட்சி நாட்கள், சந்திராட்டம நாட்கள், இராகு காலம், எமகண்டம் ஆகியவை உகந்தவை அல்ல.

ஒவ்வொரு வார நாட்களிலும் இராகு, கேது நீங்கலாக மற்ற கோள்கள் ஆட்சி செய்யும் நேரங்கள் உள்ளன. இதனை ஓரை என்பர். கோள்களின் தன்மைக்கேற்ப ஓரைகளில் நல்லவை, தீயவை என இரண்டு விதமாகப் பார்த்துள்ளனர். நல்ல ஓரையில் எந்த ஒரு செயலையும் செய்ய அது நன்மையாகும். அதனால் நல்ல ஓரை நடக்கும் நேரங்களிலேயே செயலில் ஈடுபடுவதை அக்காலந்தொட்டே

நடைமுறைப்படுத்தி வருகின்றனர். ஒரு கோளின் ஓரை என்பது 2½ நாழிகை அல்லது 1 மணி நேரம் கொண்டது. இது சூரிய உதயத்திலிருந்து தொடங்கி, ஒவ்வொரு மணி நேரத்திற்கும் ஒரு கோளின் ஓரையாக நடக்கும்.

பொது நிகழ்ச்சிகளாக இருந்தாலும், தனி நபரின் வாழ்வியல் நிகழ்ச்சிகளாக இருந்தாலும் யாவும் 'நாளும் கோளும்' பார்த்து நடத்தப்பட்டு வந்துள்ளன. சோதிடத்தில் நம்பிக்கை இல்லாதவர்களும், சோதிடத்தைப் பயன்படுத்த வேண்டும் என்ற சிந்தனை அற்றவர்களும்கூடத் திருமணம், புதுமனை புகுதல் போன்றவற்றிற்கு நல்ல நாட்களையே தேர்ந்தெடுக்கின்றனர்.

தொல்பழங்காலந் தொட்டு இன்றுவரை மக்கள் தம் வாழ்வில் மேற்கொண்ட பெரு நிகழ்ச்சிகளுக்கும் சிறு நிகழ்ச்சிகளுக்கும், நாளும், கோளும் பார்த்துச் செயல்பட்டு வருவதை அவர்களது வாழ்வியல் வழியும், இலக்கியங்கள் வழியும் அறிய முடிகிறது. இதன்வழி சோதிடம் மக்கள் வாழ்வில் வகுத்த இன்றியமையாத இடத்தினையும், சோதிடங்களுக்குச் சமுதாயத்தில் இருந்த மதிப்பினையும் அறிந்து கொள்ள முடிகிறது.

அந்தணரிடம் இன்றும் நாள் பார்க்கும் வழக்கு அதிமாகக் காணப்படுகிறது. இவர்களது பழக்க வழக்கங்களின் தாக்கத்தால் நாள் பார்த்துச் செயல்படும் வழக்கு மக்களிடையேயும் பெருகியுள்ளதைக் காண முடிகிறது. வர்க்க பேதங்களின்படி நோக்கும்போது, அந்தணர்களிடம் இவ்வழக்கு மிக அதிகம். வணிகர், வேளாளர் முதலியோரிடம், அவர்தம் கிடைச் சாதியினரிடம், தலித் இனத்தினரிடம் இத்தகைய வழக்குகள் அருகியே காணப்படுகின்றன. இப்படி நல்ல நாள் பார்த்துச் செயல்கள் செய்யப்பட வேண்டுமா என்று பார்க்கும் பொழுது நாளும், கோளும் நல்லனவற்றைச் செய்யும் ஆற்றல் உடையன என்பதை இலக்கியங்கள் காட்டுகின்றன.

திருஞான சம்பந்தர் பாண்டியனைத் திருத்த பாண்டி நாட்டுக்குப் புறப்படுகிறார். அருகிலிருந்த அப்பர் தேவரீருக்கு இப்போது கோள்கள் வலியில. ஆதலால் இவ்விடத்துக்கு எழுந்தருளுவது ஒண்ணாது என்று வேண்டுகிறார். சம்பந்தரோ அக்கோள்களின் தீங்கினைப் போக்க 'கோளறு பதிகம்' பாடிப் புறப்படுகிறார்.

''வேயுறு தோளி பாங்கன்
ஏனுளமே புகுந்ததனால்
ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி
சனி பாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்ல நல்லவை நல்ல நல்ல'' (கோளறு.1)

என்பது இப்பதிகப் பாடல். மேலும்,

''ஏனுளமே புகுந்தவதனால்
ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட்டொடாறு
முடனாய நாள்களவை தாம்
அன்பொடு நல்ல நல்ல'' (கோளறு.2)

என்னும் அடிகளில் பயணத்திற்கு ஆகாத நட்சத்திரங்களைக் கூறி, இறைவன் என் உள்ளத்தில் இருப்பதனால் அவையும் எனக்கு நல்லவையாகும் என்று கூறிப் புறப்படுகிறார்.

அருணகிரி நாதரும் தமது கந்தர் அலங்காரத்தில்,

''நாளென் செயும்வினை தானென் செயும் எனை நாடி வந்த
கோளென் செயும்கொடுங் கூற்(று) என் செயும்கும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே' (38)

என்ற பாடலில் 'நாளும் கோளும் தம்மை ஒன்றும் செய்யா' என உறுதியாகக் கூறுகிறார். முருகப் பெருமானின் திருவடிகளும், சிலம்பும், சதங்கையும், தண்டையும், ஆறு திருமுகங்களும், பன்னிரு தோள்களும், இத்தோள்களின் மீதுள்ள கடம்ப மலர் மாலையும் எனக்கு முன் வந்து காட்சி தருமாகில் தீய நட்சத்திரங்கள் என்னை என் செய்ய வல்லன. என்னுடைய தீவினைதான் என்னை எங்ஙனம் துன்புறுத்த வல்லது (என்னைத் துன்புறுத்தத் தேடிவரும்), தீய கோள்கள் தாம் என்னை எவ்வாறு துன்புறுத்த வல்லன என்று கேட்கிறார். அத்துடன் கந்தர் அந்தாதியில் ''சேயவன் புந்தி பனிப்பானு'' (48) எனத் தொடங்கும் பாடலிலும் இக்கருத்தை வலியுறுத்துகிறார். இறைவனைத் தினமும் வழிபட்டுச் சன்மார்க்கத்தில் நின்றவர்களை நாளும் கோளும் வந்தடையாது என்பதைத் திருமந்திரமும்,

''ஆளும் மலர்ப்பதந் தந்த கடவுளை
நாளும் வழிபட்டு நன்மையுள் நின்றவர்

கோளும் வினையும் அறுக்குங் குரிசிலின்
வாளும் மனத்தொடும் வைத்தொழிந் தேனன்றே'' (2952)

என்ற பாடலில் கூறுகின்றது. மேலும் திலகவதியார் திருநாவுக்கரசர் சைவத்தை விட்டுப் பிற சமயத்தை அடைந்ததற்குக் காரணம் கோள்களால் வந்தடைந்த வினை என்று கருதுவதிலிருந்தும் கோள்களின் தாக்கம் நம்மையடைகிறது என்பது பெறப்படுகிறது. இதனைக் ''கோளுறுதீ வினைமுந்தப் பரசமயங் குறித்தற்கு (தேவா.திரு.45) என்ற வரி காட்டுகின்றது.

இறையருள், பற்று, வழிபாடு முதலியன இருப்பின் நாளும் கோளும் நம்மை ஒன்றும் செய்துவிட முடியாது என்று இச்சான்றோர்கள் உறுதியாக நம்பியமை புலப்படுகிறது. நாளும் கோளும் நன்மையையும், தீமையையும் தரத்தக்க வலிமையுடையன என இவர்கள் நம்பியதால் தான், இறைப்பற்று அதைக் காட்டிலும் வலிமை பொருந்தியது என்று நம்பி நாள், கோள் பற்றிய அச்சத்தை விலக்க முற்பட்டிருக்கின்றனர். ஆதலால் நாளும் கோளும் நன்மையும் தீமையும் தரத்தக்கன என்ற கருத்தில் இவர்கள் ஏற்புடையவர்களே என்பது தெளிவாகிறது.

இதுகாறும் பார்த்தவற்றிலிருந்து எந்தச் செயலைச் செய்தாலும் தனக்கு நன்மை விளைய வேண்டும் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்ட மனிதன், சிறு செயல்களைச் செய்கின்ற போதும் அச்செயல்கள் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கில் நாள், நேரம் முதலானவற்றைக் கருத்தில் கொண்டு செயல்பட்டிருக் கின்றான் என்பது தெளிவாகிறது. அங்ஙனம் செய்த செயல்கள் நன்மையைக் கொடுக்கவே தொடர்ந்து நாள்குறித்து, காலம் கணித்துச் செயல் பட்டிருக்கிறான். ஒட்டு மொத்தமாக நோக்குகின்ற போது, மனித மனம் பாதிக்கின்ற நிலையில், காரண காரியமின்றி வாழ்வில் துன்பங்கள் வந்த நிலையில், அவற்றைத் தாங்க இயலா நிலையில், தன்னுடைய செயல்கள் வெற்றியடையா நிலையில், பலவிதச் சிக்கல்களிலிருந்து அறிவு பூர்வமான செயல்பாடுகளினால் மீள முடியா நிலையில் தன்னை மீறிய சக்தியை நாடி சிந்தை செல்ல, தன் துன்பங்களுக்குக் காரணம் 'தனது சாதகமே'

என்ற முடிவிற்கு வருகிறான். அத்தகைய சூழலில் துன்பத்தில் இருந்து ஒரு காலத்தில் விடுபடுவோம் என்ற நம்பிக்கையைத் தருவதும் சாதகமே. எனவே அவன் இறந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் ஏற்பட்ட பெருந்துன்பங்களுள் அகப்பட்டு ஒய்ந்து விடாமல் தன்னம்பிக்கையுடன் வாழ்நாளைக் கழிக்கின்றான். ஒரு சிலர் நாளும் கிழமையும் தன்னைப் பாதிக்காது என்ற கருத்தில் வாழ்ந்து வந்தாலும் அவர்களும் துன்ப நேரத்தில் அவற்றை நாடி மன அமைதி கொள்வதையும், ஒருசிலர் நாளும் கிழமையும் மனத்தைப் பொறுத்தது எனத் துணிந்து வாழ்ந்து வருவதையும் நடைமுறை வாழ்க்கையில் காண முடிகின்றது.

பொதுவாக மனிதனுக்கு உளவியல் பூர்வமான தாக்கம் ஏற்படுகின்ற போது நம்பிக்கை உருவாகிறது; அந்த நம்பிக்கையின் விளைவாகச் சோதிடம் பார்த்து நாள் குறித்து செயல்பட முற்படுகிறான். எதிர் விளைவுகளை எதிர் கொள்ளும் மேம்பாடு தன்னிடம் ஏற்படுகிறபோது அவனது மனம் ஒரளவு இவற்றிலிருந்து விலகிச் செயல்படுகிறது.

★ ★ ★

இயல் ஆறு

சோதிடமும் நாட்டுப்புறவியலும்

சோதிடத்தில் நாட்டுப்புறப் பாடல்களும் பழமொழிகளும்

கலை, இலக்கியம் இரண்டையுமே வாய்மொழியாகவும், ஏட்டிலக்கியமாகவும் வழங்குவது மரபு. முன்னோர் தம் பட்டறிவு, அவருடைய நுண்மான் நுழைபுலம் வாயிலாக வெளிவந்த கருத்துக் கருவூலங்கள் ஆகியவற்றின் பெட்டகமாக ஏட்டிலக்கியம் திகழ்கிறது. சோதிடமும் ஏட்டிலக்கியத்தில் இடம் பெற்ற கலைகளில் ஒன்றே. அதே சமயம் வாய்மொழியாகவும் இடம் பெற்றிருக்கும் பாங்கு இப்பகுதியில் சுட்டப் பெறுகின்றது. மனக்குறை என்பது கல்லாருக்கும் கற்றோருக்கும் பொதுவானதே. மனத் தெளிவு என்பது அவர்கள் பட்டறிவால் பெறப்பட்டதே. அவ்வகையான பட்டறிவின் வெளிப்பாடே நாட்டுப்புறப் பாடல்களும், பழமொழிகளும். முந்தையது தனிமனிதன் ஆய்ந்து அறிந்து பழகி மேற்கொண்டது; பிந்தையது தனி மனிதச் சிந்தனையில் முகிழ்த்தது. இவற்றில் சோதிடக் கருத்துகள் ஊடுருவியுள்ள பாங்கு எடுத்துரைக்கப்படுகின்றது.

நாட்டுப்புறப் பாடல்களில் சோதிடம்

வாய்மொழி வாயிலாக மக்களிடையே வழிவழியாகப் பரவி, அவர்தம் எண்ணங்களிலும் செயல்களிலும் நிரம்பி நிற்பது மக்கள் இலக்கியங்கள். மக்களது உளம் சார்ந்த கொள்கைகளையும், நிகழ்வுகளையும், நம்பிக்கைகளையும் பழக்க வழக்கங்களையும் தெளிவாகப் புனைவுகளின்றி நாம் அறிய வேண்டுமானால் அதற்கு ஏட்டிலக்கியங்களை விடவும் அதிக அளவில் உதவி செய்வது மக்கள் இலக்கியங்களே. அவ்வகையில் சோதிடஞ் சார்ந்த மக்களது உளக் கொள்கைகளை அறிய உதவும் வகையில் விளங்கும் சில நாட்டுப்புறவியல் பாடல் செய்திகளை இங்குக் காணலாம். அறிவியல் வல்லுநர்களால் வானியலில் இன்று கண்டறியப்படுகின்ற உண்மைகள் நம் மக்களது வாழ்வியல் பாடல்களில் காண முடிகிறது.

"நாலு வேதமுங் கால்க ளாகவே
கனிய சாந்தி ராதித்த ரெண்டையும்
கட்டி னாரதைப் பலகை யாகவே
பலகை யாகவுஞ் சட்ட மாகவும்
பக்க மீன்களை நிலைக ளாகவும்
அலகை யும்பல வான மீனையும்
ஆக ராசிகள் பன்னி ரெண்டையும்
உலகை யாளவே கயிறு கொக்கியே
உடனு தவினான் விசுவ கர்மனும்" (265-273)

எனவரும் முத்தாரம்மனின் கதைப்பாடலில் கதை நாயகிக்கு முத்து என்று பெயர் சூட்டித் தொட்டிலில் இட்ட போது தொட்டிலைச் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், 12 இராசிகள் ஆகியவற்றைக் கொண்டு கட்டியதாகக் கூறி இருப்பது அவர்தம் வானியல் அறிவின் ஆழத்தைப் புலப்படுத்துகிறது. இங்ஙனம் புனையப்பட்ட பாடலை மக்கள் பொருளுணர்ந்து மகிழ்ந்தனர் என்பதால் இத்தகைய வானியல் சிந்தனையை மக்கள் யாவரும் பெற்றிருந்தனர் என்பதும் தெளிவு.

120 ஆண்டுகளுக்குமுன் தமிழகத்தில் ஏற்பட்ட தாது வருடப் பஞ்சம் என்னும் பஞ்சத்தில் சிக்கித் துன்பத்தில் உழன்ற மக்களின் வேதனையை விளக்கும் வகையில் அமைந்த பாடலொன்று காணப்படுகிறது.

"பூரணமாகவே தாது வருஷமும் பிறந்ததுவே
பஞ்சமும் அப்போதே காரணமாகத் தொடர்ந்ததுவே
கன்னி மாதத்தில் ஓர்மழை பேயவும்
கண்டெடுத்த ஒருபுதையலைப் போலவே
தானியம் விதைத்தார்கள் தாது வருஷத்தில்
சீமையில் மழைமாறி பூச்சியமாகவே
தீய்ந்து பயிரெல்லாம் காய்ந்ததையா
கார்த்திகை மாதத்தில் முக்கால் வள்ளம் கூட
காண முடியாமல் நாங்களும் தெம்பற்றோம்"[1]

தாது வருடப் பஞ்சம் தோன்றிய காரணத்தால் தொடக்கத்தில் பெய்த மழை பின்பு நின்றுபோக விளைச்சலின்றிப் பயிரும் மக்களும் வாடியதைக் காண முடிகிறது.

---

1. தமிழ்நாட்டுப் பாடல்கள். பக்.87-88

வீடு குடி புகும்போது நல்ல நாள், நேரம் பார்த்து அந்நேரத்தில் அடுப்பினைப் பற்ற வைத்துப் பால் காய்ச்சி, விளக்கு ஏற்றிப் பின்னர் குடிபுகுதலைத் தமிழர் மரபாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றனர். இதனை,

> ''சுகித்த மறையோர்களு முகிழ்த்தமது நாள் பார்த்துத்
> துலங்கி முத்தம்மன் குடியிருந்தனர்.''[2]

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது. கதைப்பாடலைத் தொடங்கும்போது மக்கள் நாள், நேரம் பார்த்துத் தொடங்கியுள்ளனர் என்பதைக் கீழ்வரும் பாடலடிகளால் அறிய முடிகிறது.

> ''சீர்வளரெண் ணூற்றெழுபத் தேழாமாண்டுத்
> திகழ்பிர மாதிவருசங் கார்த்திகை மாதம்
> பார்வளர்நா யறுதிருவோ ணத்தில் பூருவ
> பஞ்சமியில் குருவுதைய மமுர்த யோகம்
> கார்வளருங் குழலிசிவ காமி சோமி
> கங்கைநங்கை மங்கைசெங்கைக் கல்விச் செல்வி
> ஏர்வளரும் பட்டபுரம் முத்துத் தாய்க்கு
> இசைத்தமிழ்க் கதையைவில்லி லியம்பு வோமே.''[3]

மக்கள் வாழ்வியலில், இன்ன கிழமையில் இன்ன காரியத்தைச் செய்ய வேண்டும் அல்லது செய்யக் கூடாது என்ற கோட்பாடுகளைக் கொண்டு விளங்குகின்றனர். செவ்வாய்க் கிழமை அமங்கல நாளாகக் கருதப்படுகிறது. அன்று முடி வெட்டினால் வறுமை வரும் என்று நம்பப்படுகிறது. செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் துணி தைத்தல் கூடாது. ஞாயிற்றுக் கிழமையில் வெளியூருக்குச் செல்லுதல் கூடாது. வெள்ளியன்று கடன் கொடுத்தல் கூடாது. புதன் கிழமை இறப்பு நிகழ்ந்தால் நல்லது. சனியன்று எண்ணெய் தேய்த்துக் குளித்தல் நல்லது. புதன்கிழமை பணம் கிடைத்தல் நல்லது என்பன போன்றவை அவற்றுள் சிலவாம்.

இவ்வகை நம்பிக்கைகளை மூட நம்பிக்கைகள் என்று முற்றிலும் ஒதுக்கிவிட முடியாது. ஏனெனில் சில நேரங்களில் வானியல் அமைப்புக்கு ஏற்ற உண்மையை இவை மறை முகமாகப் புலப்படுத்துவனவாகவும் காணப்படுகின்றன. காட்டாக வெள்ளிக்கிழமை அன்று வீடு, வாசல் முதலியவற்றை

---

2. முத்தாரம்மன் கதை, வரி. 2001-2002. 3. மேலது. 5-12.

நீரிட்டுக் கழுவி, தலைக்குக் குளித்து, பூசை செய்யும் வழக்கு நிலவிவருகிறது. அந்நாளில்கதிர்களின் வீச்சு அதிகமாக இருக்கும் என்றும் அதன் ஆற்றலைக் குறைப்பதற்கே இவ் வழக்கு மேற்கொள்ளப் படுகிறது என்றும் இன்று அறிவியல் வல்லுநர்கள் ஆய்வு செய்து கூறுகின்றனர். இவ்வுண்மையை அறிந்தோ, அறியாமலோ மக்கள் அதற்கேற்பத் தம் செயற்பாடுகளை அமைத்துக் கொண்டுள்ளதைக் காண முடிகிறது.

''வெள்ளிக் கிழமையிலே வீடு பூரா மெழுகுணுண்டி
ஆடி அமாவாசையிலே ஆண்டவனைக் கும்பிடணும்
கார்த்திகை தீபாவளியில் கடவுளை நீ கும்பிடணும்'' [4]

குழந்தை பிறந்தவுடன் சாதகம் எழுதும் வழக்கு இருந்துள்ளது என்பதை,

''பஞ்சு மெத்தை மேலிருந்து - நம் ஐயா
பஞ்சாங்கம் பார்க்கையிலே
எழுத்து நூறு என்று சொல்லி எழுதினார் பஞ்சாங்கம்
வயசுநூறு என்று சொல்ல வாசிச்சார் பஞ்சாங்கம்'' [5].

என்ற பாடல் வரிகளிலிருந்து தெரிகிறது. சாதகம் எழுதிய தோடு பலனைக் குடும்பத்தாருக்கு எடுத்துக் கூறியமை தெரிகிறது. ஆயுசு நூறு என்று குறிப்பிட்டு இருப்பதன் மூலம், ஆயுள், வாழ்நாள் நிகழ்வுகள் முதலானவை அறியப்பட்டமை புலனாகிறது. மேலும் சோதிடரைச் சிறப்பான நிலையில் வைத்து, மரியாதை கொடுத்து அழைத்தனர் என்பதைப், 'பஞ்சு மெத்தை மேலிருந்து நம் ஐயா' என்ற அடிகள் புலப்படுத்துகின்றன. ஒருவனுடைய வாழ்நாளில் இன்பம் துன்பம் இரண்டும் ஏற்படுவதை மக்களால் ஏற்க முடிகின்றது. நீண்ட ஆயுள் அமைய வேண்டுமென்பதில் விருப்புடையவர்களாய் இருந்திருக் கின்றனர் என்பதனைப் பலன் கூறும் போது ஆயுள் பற்றிய செய்தி வெளிப்படுவதன் வழி அறிய முடிகிறது. மேலும் சோதிடர் பஞ்சாங்கத்தின் உதவியுடன் சோதிடம் பார்ப்பதால் பஞ்சாங்கக்காரர் என்று இன்றும் அழைக்கப்படுகிறார்.

4. நாட்டுப்புற இயல், ப. 252. 5. நாட்டுப்புறப்பாடல்கள் சமூக ஒப்பாய்வு, ப.181.

கதைப்பாடல்களில் சோதிடத்தைச் 'சாஸ்திரம்' என்றும் சோதிடரைச் 'சாஸ்திரி' என்றும் குறிப்பிடுவதைக் காண முடிகிறது. சோதிடரை முனிவர் என்ற பொருள்படும் 'ரிசி' என்ற சொல்லால் அழைக்கப்படுதலையும் மக்கள் இலக்கியங்களில் காணமுடிகிறது. 'முகிழ்த்த மிட்டுச் சோதிரிசி' என்பதில் சோதிரிசி சோதிடரைக் குறிக்கின்றது. இச்சோதிடர் பஞ்சாங்கச் சோதிடன் என்றழைக்கப்படுவதைப் 'பஞ்சாங்கச் சோதிரிசி'[6] என்ற சொல்லாட்சி காட்டுகின்றது.

பிறக்கின்ற குழந்தையின் சாதகம் சில நேரங்களில், தான் பிறந்த குடியினை அழித்துவிடும் என்ற நம்பிக்கையினை மக்களிடம் பரவலாகக் காணமுடிகிறது. அரசு குடும்பங்களில் பிறந்த குழந்தையால் அரசுக்குக் கேடு வரும் என்று சோதிடர் கூறிவிட்டால், அக்குழந்தையைக் காட்டில் கொண்டு சென்று விட்டு விடுவர் என்று கூறும் போக்கில் அமைந்த பல கதைப் பாடல்களைக் காண முடிகிறது. மதுரை வீரன் கதைப்பாடலில் கதைநாயகனாக மதுரை வீரனின் சாதகம் அவர் பிறந்த குடியினை அழித்துவிடும் என்று சோதிடர் கூற, அதனை நம்பிய அரச குடும்பத்தாரும் குழந்தையைக் காட்டில் விட்டு விடுகின்றனர்.

சோதிமான் என்பவன் மகவு வேண்டித் தவமியற்றிப் பெண்மகவு பெற்றுச் சோதிடரால் இந்த மகளின் பிறப்பு, நாட்டிற் கரிட்டமென வறிந்து பெட்டியிலிட்டு ஆற்றில் விட்டனன். மகவடங்கிய அப்பேழை மயனிடம் கிடைக்க, பேழையைத் திறந்த மயன் மகவிருப்பது கண்டு, 'தீர்க்க சுமங்கலியாக' என் ஆசிர்வதிக்கக் கேட்ட மகவு நான் கன்னிகை என்று கூறி, தன் கதை கூற, அவள் மயன் தன் தவத்தால் மாங்கல்யத்துடன் சந்திரமதியெனப் பிறக்க என அவ்வாறே அம்மகவு தீக்குளித்து மதிதயன் குமரியாய் பிறந்து அரிச்சந்திரனை மணந்தாள்.[7] என்ற செய்தி, சோதிடர் கூறத் தவத்தால் பெற்ற குழந்தையையே ஆற்றில் விட்டதைக் காட்டுகிறது. 'கோவலன் கதை' என்ற கதைப்பாடலிலும் கண்ணகி பிறந்த போது சோதிடர் இக்குழந்தையால் உனக்கும் நாட்டிற்கும் அழிவு என்று பாண்டிய மன்னனிடம்கூற, அவன் குழந்தையைப் பெட்டியில் வைத்து ஆற்றில் விடுவதாக வருகின்றது.

---

6. முப்புராதி அம்மன் கதைப்பாடல், ஆ. தசரதன், ப.35
7. அபிதான சிந்தாமணி, ப.754.

மேற்கூறியவற்றின்வழி சோதிடரின் வாக்கின்மேல் மக்கள் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கை புலனாகிறது.

ஒருநாட்டு மன்னனான வேட்டுமாராசனுடைய மகன் வெங்கல மகாராசன் செங்கோட்டைப் புளியரையின் திருத் தேவியின் மகளான லட்சுமியாரம்மையை மணம் புரிந்து கொள்ள விரும்பி, புளியரைக் கோட்டைக்குத் திருவோலை அனுப்புகிறான். செய்தி அறிந்த அந்நாட்டு மன்னன் சோதிடனை வரவழைத்துப் பஞ்சாங்கத்தில் 'அட்டமங்கலப் பொருத்தம்' கண்டு தன்னுடைய சம்மதத்தைத் தெரிவிக்கின்றான். சோதிடர் பொருத்தம் பார்க்கும் முறையையும், அவர் சோசியன் என்று அழைக்கப்படுதலையும், அவருக்கிருந்த செல்வாக்குக் காரணமாக அவரது தகுதிக்கேற்ற பொருள் வழங்கப்படுதலையும்,

''சோசியனை வரவழைத்து சொற்பொருத்தம் கேட்கலுற்றாரே
அரசனுரைத்தமொழி கேட்டபொழு தேதான்
அகம்மகிழ்ந்து அங்கிருந்த அரசன்மந் திரிமார்கள்
விரைவினு டன்சோசி யன்தன்னை வரவழைத்து
வேந்தனுடன் முன்பிலொரு வேதியனும் வந்தான்
ஆதிமறை யோன்கேட்ட வகைகளெல் லாம்கொடுத்து
அட்டமங் கலம்பொருத்தம் கிட்டவந்து கேட்டார்
வேதியனார் தரைமெழுகி மேல்வரையும் கீறி
வேழமுக வானபிள்ளை யாரையும்முன் வைத்தார்
வைத்துவிட லைகடலை வாய்த்தநிரை நாழி
வாகுவர தட்சணையும் வாங்கியவர் வைத்து
கொந்தரளிப் பூவுமிட்டு தீபமது காட்டி
குறித்துநிலை தோறும்நன்றாய் இரத்தினப்பால் பரப்பி
பக்திபிர வாகுமென்ற நான்குகிரக மதுவும்
பன்னிரெண்டு ராசிக்கும் வீடுநிலை யதுவும்
மிக்கநவக் கிரகமும்கோள் ஒன்பதுவும் நீக்கி
மிக்கநட் சத்திரம் இருபத்தேழாகவும் வகுத்து
மேடமி டபம் மிதுனம் கற்கடகம் சிங்கம்
மிக்கநல்ல கன்னிதுலாம் விருச்சிகம்தனுசு மகரம்
கடகும்ப மீனமது பன்னிரெண்டாம் வீட்டில்
குடியிருக்கும் பேருடைய குறிப்பதுவும் அறிந்து
சந்திரன்செவ் வாய்சுக்கிரன் வியாழன்குரு புதனும்
தங்கள்தங்கள் வீடுவிட்டு தட்டுமாற வில்லை
இந்தவகைச் சாத்திரங்கள் இணங்கி இருந் ததினால்

இருபேர்க்கும் பூப்பொருத்தம் உண்டுதம்பி ரானே (70-94)
வேதியனார் பொருத்தமதை விரைவுடனே விளக்கி
வேதியர்க்கு வேண்டியதோர் வெகுமானம் கொடுத்து'' (105, 106)

என்ற அடிகளில் இலட்சுமியம்மன் தவநிலை என்ற கதைப் பாடல் காட்டுகிறது. மேலும், இந்நூலில் திருமணப் பொருத்தம் பார்த்த சோதிடர் நல்ல நாளும் குறித்துக் கொடுப்பதை, 'நாள் குறித்து தேதிவைத்து நாழிகையுமெழுதி' *(103)* என்றவடி உணர்த்துகின்றது.

இக்கதையில் சோதிடர் இருவரது சாதகப் பலனையும் சோதித்துத் திருமணப் பொருத்தம் வருகிறது, இருவரும் சிறப்புடன் வாழ்வர் என்று கூறியபோது, குழந்தைப்பேறு தாமதமாகும் என்பதையும் சுட்டத் தவறல்லை என்பதை,

''மங்கிலியம் பொனிருப்பு சங்கிலிபோ லிருக்கும்
வாழ்வுஉண்டு வேறெயொரு தாழ்வுகள் வராது
காதலிக்குமண முடித்துக்கொண்டருள வேணும்
கண்டத்திலே நின்றசனி இன்றுவிட்டுப் போறான்
பூதலத்தில் வாழ்வுண்டு லட்சியம்மை தனக்கு
புத்திரனைப் பெற்றெடுக்க மெத்தநாள் செல்லும்'' (97-102)

என்ற அடிகள்வழி அறியமுடிகிறது. திருமண இசை வினையும், பொருத்தம் பார்த்து முகூர்த்த நாள் குறித்த குறிப்பினையும் தூதுவன் வெங்கலமாராசனிடம் சேர்ப்பிக்க அவன், பின்வருமாறு,

''பஞ்சாங்கக் காரனையும் அழைத்துப்பலன் கேட்டு
நல்லபலன் வேறுமொழி சொல்லவேண்டா மென்று
நாட்பொருத்த முமிட்டு முகூர்த் தோலையும் கொடுத்து
சிந்தையுடன் எழுதிவந்த திருநீட்டைக் கண்டு
சிறப்புடனே வெங்கலமா ராசனவர் தாமும்
சீக்கிரத்திற் கலியாணப் பந்தலிடவேணு மென்றாரே'' (123-128)

என்ற அடிகளில் கூறுவது திருமணப் பொருத்தம் வந்தால்தான் திருமணங்களை நிகழ்த்த முன்வந்திருக்கின்றனர் என்பதைக் காட்டுகிறது. அத்துடன் சோதிடர், சோசியன் என்றழைக்கப்படுவதோடு, பஞ்சாங்கக் காரன் என்றழைக்கப் பட்டமையும் தெரிகிறது.

குழந்தைக்குப் பெயரிடும் போது அக்குழந்தையின் பிறந்த நட்சத்திரத்தினைப் பெயராக இடும் வழக்கு மக்களிடையே ஆங்காங்கே காணப்படுகிறது. 'சித்திர புத்திர நயினார் கதை' என்ற கதைப்பாடலில் சித்திரை மாதத்தில் பிறந்த குழந்தைக்குச் சித்திர புத்திரர் என்று பெயரிட்டுள்ளதிலிருந்து இவ்வழக்கினை அறிய முடிகிறது.

திருவாணையார் அரசிக்கு மகள் பிறந்தபோது (புருஷாதேவி) சாதகம் எழுதியுள்ளனர் என்பதையும், சாதகம் எழுதிய சோதிடருக்குப் பரிசளித்துள்ளனர் என்பதையும் பெண்ணரசியர் கதையில் வரும்,

"சோதிட னாலே தானறிந்து சுறுக்காய்ச் சாதகமும் வருத்தி
சோதிடற் குப்பரி சீந்தனுப்பி தோகைக் கரசியுந் தானிருந்தாள்"
(168-169)

என்ற அடிகள் காட்டுகின்றன. இக்கதைப் பாடலில் மேலும் பல சோதிடச் செய்திகள் பயின்று வருகின்றன. இந்நூலில் 'கோள்' (*904, 907, 1207*) என்ற சொல்லாட்சியும், சோதிடரைக் குறிக்கும் கணிகையான் (*1168*), கணியான் (*897, 904, 1166, 1173, 1174, 1176, 1179, 1181, 1185,1238, 1244, 1271*), சோதிடர் (*899, 900, 903, 916*), சோதிடன் (*1202, 1204, 1205,1208, 1225, 1347, 1349, 1351,1353,1371, 1373, 1377*) என்ற சொல்லாட்சிகளும் இடம் பெற்றுள்ளன. மாந்திரிகத்திற்கும் சோதிடம் தேவை என்பதையும் இக்கதைப் பாடல் காட்டுகிறது.

பொதுவாக ஒருவருக்கு மாந்திரிகத்தின்வழி நன்மை விளைவிக்க வேண்டுமெனில் சாதகத்திலுள்ள கோள் அமைப்பு நல்ல நிலையிலும், தீமை விளைவிக்க வேண்டுமெனில் தீய நிலையிலும் இருத்தல் வேண்டும். இவ்வடிப்படை சரியாக அமையும்போது செய்யப்படும் மாந்திரீக வேலைகள் செம்மையுற அமையும். இக்கதையில் மன்னர் சோதிடரை அழைத்து வந்து தனது சாதகத்தைக் கொடுத்து அதுசமயம் தமக்குச் சாதக அமைப்பு எவ்வாறு உள்ளது என்று சோதிடரிடம் கேட்டுப் பலனறிகின்றார். பலன் கூறிய சோதிடர் சோதிடக் குறிப்புகளின் உதவியுடன் மாந்திரிகம் செய்து துர்த்தேவதைகள் நாட்டில் ஏற்படுத்திய துன்பங்களை நீக்குகின்றார்.

இங்ஙனம் அரசரின் சாதகத்தை வைத்துப் பலன் அறிந்ததையும், பலன் அறியும்போது இலக்னத்தில் இருந்து தொடங்கிக் கோள்களை அமைத்துப் பலன் பார்த்ததையும், சாதகத்தை வைத்து மட்டும் பலன் கூறாமல் சோளிகளைப் (பரல்) போட்டுப் பார்க்கும் ஆரூட முறையில் பலனறிந்ததையும் பின்வரும் அடிகள் காட்டுகின்றன.

"நன்றெனவே சோதிடனும் நாள்பார்த்து வீடமைத்து
கிரகமதைத் தான்நிறுத்தி கெணிதமுடை கணியானும்
பரல்பரத்திப் பாண்டியன் பலனதோ சொல்லலுற்றான்" (903-905)
"கேடுபல துண்டாகும் கிரகமதின் பலன் பார்த்தால்" (907)
"பாங்குட னிட்டுக் கிரகங்களைச்
சரியாக வேநிறுத்தி - பலன்
தானே யுரைக்கிறான் சோதிடனும்" (1207-1208).

இன்றும் வழக்கில் ஒருவருக்குச் செய்வினை செய்து வைக்க வேண்டுமென்றால் அவருடைய முடி, நகம், காலடி மண், உடல் அழுக்குத் துணி, புகைப்படம், பெயர், இராசி இவற்றுள் ஒன்றைக் கைப்பற்றுவர்.

தனது எதிரிக்குச் செய்வினை செய்பவர், எதிரியின் அழிவுக் காலத்தினை அவரது சாதகத்தினைக் கொண்டு கணித்தறிந்து, அக்காலத்தில் அவருக்குச் செய்வினை செய்வார். மாந்தி எனும் கிரகம் உச்ச நிலையில் இருந்தால் சாதகருக்கு அழிவுக் காலம் நெருங்கி விட்டது எனக் கண்டு கொள்வார். மந்திரத்தின் வாயிலாக ஒருவருக்குப் பில்லி, சூன்யம், ஏவல் போன்றவற்றைச் செய்பவர்கள் இம்மாந்தியைக் கணித்தறிந்த பின்னர் தம் வேலையைத் தொடங்குவர். இதனால் மந்திரம் எனும் சொல் 'மாந்தி' எனும் கிரகத்தின் அடிப்படையாகப் பிறந்தது எனக் கருதவும் வாய்ப்புண்டு. பில்லி, சூன்யம் செய்வதற்குச் சாதகங்கள் பயன்படுகின்றன என்பதால் பெரும்பாலும் சோதிடரே இந்த வேலைகளில் ஈடுபட்டிருப்பதைக் கள ஆய்வின் போது காண முடிந்தது. ஒருவனுக்கு அழிவுக் காலம் இல்லையெனில் அவனைப் பில்லி, சூன்யம், ஏவல் செய்வினை போன்றவற்றால் ஒன்றும் செய்ய முடியாது[7] என்ற நம்பிக்கையையும் காண முடிகிறது.

---

7. மக்கள் வாழ்வில் மந்திரச் சடங்குகள், ப.62.

இங்ஙனம் நற்செயல்களுக்கு மட்டுமன்றித் தீய செயல்களுக்கும் சாதகம் பார்த்துச் செயல்பட்டனர் என்பதை அறிய முடிகிறது.

குழந்தையைத் தொட்டிலில் இட, பெயர் வைக்க நல்ல நாள், நேரம் பார்த்தனர் என்பதை முறையே,

''நல்லநேரம் நாளும் பாத்து
அழகுமணி தொட்டிகட்டி
அழகுமணி தொட்டிலிலே
கண்ணுறங்கு கண்மணியே''.[8]
''பொன்னான பேரு வைக்க நாளும் குறிச்சிடுவேன்''[9]

என்ற பாடலடிகள் காட்டுகின்றன.

தம்பதியருக்குத் தோடம் இருந்தால் குழந்தை பிறக்காது என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவி வந்ததைக் காணமுடிகிறது.

''அல்லிப் பனங்குருத்து அருச்சுனருக்கு மாலையிட்டு
அருச்சுனர்க்குங் கூட அரசுமுதல் இல்லையிண்டு
அடியா புலம்பறதும் அரமணையே வாடுறதும்
அருச்சுனர்மே தோசமுண்டு அடியாளோட குத்தமுண்டு
அருகே இருந்தார் சொல்லையே''[10]

என்ற பாடலில் காண முடிகிறது. குழந்தைப் பேறு இல்லையெனில் ஆணைவிடுத்துக் குறையைப் பெண்ணின் மீது ஏற்றிப் பேசுவது இன்றும் நடைமுறையில் உள்ளது.

நாள் நேரம் முதலானவை முறையாகப் பார்க்கப்பட்டு நடத்தப்பட்ட திருமணத்தில் எதிர்பாராத விதமாகத் தன் கணவனை இழந்து விட்ட பெண்,

''தாலிக்கு அரும்பெடுத்த தட்டானும் கண்குருடோ
சேலைக்கு நூலெடுத்த சேணியனும் கண்குருடோ
பஞ்சாங்கம் பார்க்க வந்த பார்ப்பானும் கண்குருடோ
எழுதினவன்தான் குருடோ எழுத்தாணி கூர்இல்லையோ''[11]

என்று பாடுவதிலிருந்து திருமணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன்பு நடத்தும் பொன்னுருக்கு என்ற நிகழ்வின் போது, நல்ல நேரம்பார்த்தே தட்டான் பொன்னை உருக்கித் தாலி செய்வார்

---

8. நாட்டுப்புறப் பண்பாட்டியல், ப.52. 9. மேலது, ப.70.
10.நாட்டுப்புறப் பாடல்கள் சமூக ஒப்பாய்வு, ப.183.

என்பதையும், திருமணத்திற்குப் புடைவை நெய்யும் நெசவாளி நல்ல நேரம் பார்த்தே திருமணப் புடைவையை நெசவு செய்யத் தொடங்குவர் என்பதையும், சோதிடர் குறித்துக் கொடுத்த நாளிலேயே திருமணம் நடைபெறும் என்பதையும் அறிந்து கொள்ள முடிகின்றன.

இங்ஙனம் மேற்கொள்ளப்பட்ட செயல்கள் யாவும் நன்றாகவே இருந்தாலும், 'இன்னார்க்கு இன்னார் என்று எழுதி வைத்தவன் தவறாக எழுதி வைத்த காரணத்தால் என்வாழ்வு இடையிலேயே முடிந்து போய்விட்டதா' அல்லது அவன் எழுத்தாணி கூர் இன்றி மழுங்கி இருந்ததால் என் நிலை அவல நிலையாக மாறிப் போயிற்றா என்று கேட்பதன் மூலம், நல்ல நாள் நேரம் பார்த்துச் செய்தாலும் அதற்கு மேல் 'விதி' என்ற ஒன்று எவ்வழியில் செயல்படுகிறதோ அவ்வழியிலேயே வாழ்வு அமையும் என்ற கொள்கையை மக்கள் கொண்டிருந்தது புலனாகிறது.

திருமணம் செய்து கொள்ளும் மணமக்களுக்குச் சாதகப் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்து வைத்தனர். எதிர்பாராதவிதமாக அத்திருமணம் தோல்வியில் முடியும் போது, பஞ்சாங்கம் பார்த்து நாள் குறித்த சோதிடன் முன்பே அறிந்து இதனைக் கூறவில்லையே என்று கூறுவதைப் பரவலாகக் காணமுடிகிறது.

"மாலைக் கிரமிண்டு மருளாளி(சாமியாடி) சொல்லலையே
சீமைக் கிரமிண்டு செவகாரன்(கோடங்கி) சொல்லலியே"[12]
"செம்மக் கிரகமிண்டேன்
செவலோகம் கிட்ட எண்டேன்"[13]

என்ற பாடல் வரிகளில் உயிர்க்கு இறுதியாகும்படி சென்மக் கிரகத்தின் தன்மை அமைந்திருந்தது என்று கூறுவதைக் காணமுடிகிறது. சாதகரின் இலக்ன பாவத்தின்படி இறப்பு அருகே இருந்து இருக்குமோ, அதன் காரணமாக சிவலோகம் அடைந்திருப்பாரோ நான் அறியேன் என்று புலம்புகிறாள்.

இந்த அடிப்படையிலேயே அழகிய குழந்தை ஒன்று சிறு வயதிலேயே மடிந்துவிட்டால், 'அழகை எழுதினவன் ஆயுசை

11. மேலது, ப.182

எழுதலையே' என்று வருந்திப் பாடுவதைக் காண முடிகிறது. ஆதலால் மக்கள் நாள், நேரம் முதலானவற்றைப் பார்த்துச் செயல்பட்டாலும் விதியின் வழியில் தான் வாழ்வின் பாதை செல்லும் என்று நம்பியதை அறிய முடிகிறது.

திருட்டுத் தொழில் புரிபவனும், பெண்ணின் அணிகலன் களில் ஒன்றாகிய கங்கணம் என்ற காப்பு வளையைத் திருடுவது இல்லை. கள்ளரும், களவானியும் கழற்றாத இக்கங்கணத்தை சாதகக் கோள்களின் அமைப்பினால் ஏற்பட்ட இடர்ப்பாடு காரணமாகக் கழற்றும் நிலை ஏற்படுகிறது என்பதை,

"கள்ளன் களவாணி களட்டாத கங்கணமே
காலக் கிரகத்துக்கு - நான்
கழட்டி வக்கச் சம்மதிச்சேன்"[14]

என்ற பாடல் காட்டுகின்றது. காலம் மாறும் போது கோள்களில் எங்ஙனம் மாறுபாடுகள் ஏற்படுகின்றன என்பது இவர்களுக்குத் தெரியாதெனினும் துன்பம் நேரும் போது அதற்குக் காலக்கிரக அமைப்புகளே காரணம் என்று நம்பிக்கை கொண்டிருந்ததை அறிய முடிகிறது. அவர்தம் அன்றாடப் பேச்சில் காலக் கொடுமை, காலக்கிரகம் என்ற சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன. இவற்றின் வழி திருமணம் செய்யும் பொழுது மணமகனுக்குக் கோள்நிலை சரியில்லை எனில் அவன் யாரை மணம் செய்தாலும் அந்தப் பெண் விதவையாகி விடுவாள் என்பது தெரிகிறது.

தனது கணவன் இறந்து விட்டால் அதற்குச் சாதகத்தில் திருமணப் பொருத்தமின்மையே காரணம் என்று கருதுவதை,

"தாலிப் பொருத்தமில்லே
தாய்மாமன் சொந்தமில்லே
மிஞ்சிப் பொருத்தமில்லே
முதமாமன் சொந்தமில்லே
மாலைப் பொருத்தமில்லே
மாமன்மார் சொந்தமில்லே" (அகமுடையார்)[15]

என்ற பாடலில் காண முடிகிறது. இதில் 'தாலிப்பொருத்தம்' பார்ப்பதிலுள்ள நம்பிக்கை புலப்படுகிறது.

---

12. நாட்டுப்புறப்பாடல்கள் சமூக ஒப்பாய்வு, ப.181. 13. மேலது, ப.181. 14. மேலது, ப.182

சடங்கு முறைப்படி எங்குச் சென்று இறைவழிபாடு செய்தாலும் அவ்வழிபாட்டின் மூலம் ஒரு சாதகருக்குக் கோள்களினால் ஏற்பட்ட இன்னல்கள் குறையுமே தவிர, முற்றிலும் அகன்று விடாது என்பதை,

''நாலு சருவங் கொண்டு நடுச்சருவம் தீர்த்தங் கொண்டு
நடந்தேன் திருப்பதிக்கு நாலு லட்சம் சன்னதிக்கு
நடந்ததிலே குத்தமில்லே நாளிட்ட தோசமில்லே
மூன்று சருவங் கொண்டு .... மூர்த்தமிட்ட தோசமில்லே''[16]

என்ற பாடல் காட்டுகின்றது. கோள்களுக்கு இறைச் செயலை ஒத்த ஆற்றல் உண்டு என்றும், நான் செய்ததில் எந்தத் தவறுமில்லை என்றும், நாளிடமும் நேரத்திலும் தான் குற்றம் என்றும், துன்பத்திலிருந்து தப்ப முடியாத நிலையில் நல்ல நாளும், நேரமும் மட்டும் நற்பலனைத் தந்துவிடாது என்றும் மக்கள் நம்புகின்ற திறம் புலப்படுகிறது.

சோதிடர் மருத்துவ அறிவும் பெற்றுத் திகழ்ந்ததால் மரணத் தருவாயிலுள்ள ஒருவர்க்கு மருத்துவம் பார்க்கச் சோதிடரை அழைத்துக் காட்டும் பழக்கம் காணப்படுகிறது. ஏனெனில் சோதிடர் நாடி பார்த்து நோயாளியின் நிலையைக் கூறுவதோடு, கணக்குப் போட்டுப் பார்த்து நோயாளியின் ஆயுள் நிலையையும் கூற முடியும். எனவே, சோதிடரை மருத்துவம் பார்க்க அழைத்தனர் என்பதை,

'அழைச்சு வந்து சோசியரை
கையைப் புடிச்சு
கைநாடி பாக்கையிலே
நாடி கொரச்சலும்பான்
நன்னாடி கம்மியும்பான்'

என்ற அடிகள் உணர்த்துகின்றன. மேலும் ஒருவர்க்கு மரணம் உறுதியென்ற நிலையிலும், நாடித்துடிப்பு முறையாக இல்லை என்று குறிப்பாலுணர்த்தும் பண்புடையோர் சோதிடர் என்பது பெறப்படுகின்றது.

மக்களின் செயற்பாடுகள், அவர்தம் மகிழ்வுகள், துன்பங்கள் முதலானவற்றைச் சுட்டும் வாழ்வியல் பாடல்களிலுள்ள சோதிடஞ் சார்ந்த சில நம்பிக்கைகள், செயற்

---

15. மேலது, ப.182.16 மேலது, ப. 182

பாடுகள் கண்டறியப்பட்டு, அவற்றின் வழி மக்களிடம் அக்கலை பெற்றுள்ள செல்வாக்கு இங்குக் குறிப்பிடப் பட்டது. இவை மட்டுமன்றி சோதிடத்தின் செயற்பாடு இன்னும் பல நிலைகளில் நாட்டுபுற மக்களிடையே விரிவாக்கம் பெற்றிருக்கின்றன. சிறுசிறு நிகழ்வுகளுக்கும் நாள், நேரம் பார்த்தமைக்கான பாடல்கள் பரவலாகக் கிடைக்கின்றன. கணிதத்தை அடியாகக் கொண்டு, பஞ்சாங்கம் பார்த்த சோதிடர் பார்ப்பனராக இருக்கின்றனர். இவர்களிடம் மட்டுமன்றி சாமியாடி, கோடங்கி, வள்ளுவன் போன்றோரிடமும் சோதிடம் கேட்கின்றனர். இன்றும் நாட்டுப்புறங்களில் கோயிலில் உள்ளவர்களிடமும், சந்நியாசிகளிடமும் சோதிடம் கேட்டலும், கோடங்கியடிப் பவனிடமும், சாமியாடியிடமும் குறிகேட்டலும் வழக்கில் உள்ளன. பொதுவில் ஆன்மிக உணர்வுடைய பல சாதியினைச் சேர்ந்தவர்களும் கிராமங்களில் சோதிடம் பார்த்துப்பலன் கூறுகின்றனர். நாட்டுப்புற மக்களிடையே சோதிடம் ஆழமாக வேரூன்றி இருப்பதை இதன் வழி அறிய முடிகிறது.

பழமொழிகளில் சோதிடம்

மக்கள் உள்ளத்தில் தேங்கி நிற்கும் அனுபவங்களின் வெளிப்பாடான செறிவான சொற்றொடர்களே பழமொழிகள். இவை வழிவழியாக மக்களிடையே வாழ்ந்தும் வழங்கியும் வருவன. இத்தகைய பழமொழிகளின்வழி மக்களின் உள்ள உணர்வுகளை அறிந்துகொள்ள இயலும். இவை மக்களின் நம்பிக்கை, எதிர்பார்ப்பு, அச்சம் முதலானவற்றைப் புலப்படுத்துவதுடன் சோதிடம் பற்றிய நம்பிக்கைகள் பலவற்றையும் எடுத்தியம்பும் வகையில் அமைந்துள்ளன.

''இளமை சோதிடம் முதுமை வைத்தியம்''
''பால சோதிடம் விருத்த வைத்தியம்''

என்ற பழமொழிகளுக்கு இருமுறைகளில் பொருள் கொள்ளப்படுகிறது. இளம் வயதில் எதிர்காலத்தைப் பற்றி அறிந்துகொண்டு அதற்குத் தக்க வகையில் வாழ்க்கையை அமைத்து நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்ளவும், முதுமையில் உடல் தளர்ச்சி ஏற்படும்போது வைத்தியரிடம்

சென்று நோயைக் குணப்படுத்திக் கொள்ளவும் வேண்டுமென்று இப்பழமொழிகள் பொருள் தருகின்றன. மற்றொரு முறையில் இளம் சோதிடரும், வயோதிக வைத்தியரும் தொழிலில் நிபுணர்களாக இருப்பர் என்று இப்பழமொழிகளுக்குப் பொருள் கூறுவாரும் உண்டு. முதலில் கூறப்பட்ட பொருளே இப்பழமொழிக்கு மிகுதியும் ஏற்புடையதாகக் காணப்படுகிறது.

''இரவில் எது செய்தாலும் அரவில் (இராகு காலம்) செய்யாதே'' என்ற பழமொழி மிகச்சிறு நிகழ்வாயினும் தொடங்கும் நேரம் இராகுகாலமாய் இருத்தல் கூடாது என இன்றும் பலர் கருதுகின்றனர் என்பதைக் காட்டுகிறது. திருமணம் தொடர்பான நிகழ்வுகளிலும் சோதிடம் பெரும்பங்கு வகிப் பதால் திருமணம் குறித்த பழமொழிகள் பல எழுந்துள்ளன. ''சாத்திரம் பார்த்துப் பெண்ணைக்கொள்; கோத்திரம் பார்த்துப் பெண்ணைக் கொடு'' என்ற பழமொழி காட்டாய் அமைகின்றது.

கோள்கள்

வானில் சுழலும் கோள்களின் செயற்பாடுகளே மனித வாழ்வில் நன்மையையும், தீமையையும் உண்டாக்குகின்றன என்ற கருத்து மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது. இந்த அடிப்படையில் அமைந்த பல பழமொழிகள் மக்களிடையே நிலவி வருகின்றன.

குரு

குரு நன்மையைச் செய்யக்கூடியவன். குருவால் பலவித நன்மைகளும் விளையும் என்பதில் மக்கள் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர்களாய் இருக்கின்றனர் என்பதை,

''அகப்பட்டவனுக்கு அட்டமத்திலே சனி;
ஓடிப்போனவனுக்கு ஒன்பதில் குரு''
''ஒரு புத்திரன் ஆனாலும் குரு புத்திரன்''
''இராகு திசையில் வாழ்ந்தவனுமில்லை
ராஜா திசையில் கெட்டவனுமில்லை''
''காரணகுரு காரியகுரு''
''குரு பார்க்கக் கோடி நன்மை''
''வேதம் பொய்த்தாலும் வியாழன் பொய்க்காது''

என்ற இப்பழமொழிகள் காட்டுகின்றன. கோச்சாரப்படி 2,5,7,9,11 ஆகிய இடங்களில் குரு இருப்பின் நற்பலன் நடைபெறும் என நம்பப்படுகிறது. ஆனால், சாதகத்தில் குரு நல்ல நிலையில் அமையவில்லையெனில் குருதசை நற்பலன்களை விளைவிக்காது.

> ''பத்தாம் வீட்டைப் பார்ப்பான் பதவியைக் கொடுப்பான்
> பத்தில் பார்ப்பான் பதவியைத் தொலைப்பான்''

என்ற பழமொழியின் முதலடி, சாதகத்தில் பத்தாம் வீட்டைப் பார்க்கும் நல்ல கோள் பதவியைக் கொடுக்கும் என்பதைக் காட்டுகின்றது. கோச்சாரப்படி குரு ஒருவனுடைய இராசிக்குப் பத்தாம் வீட்டில் வந்து தங்கும்போது அவனுக்கு நன்மையைச் செய்யாது. குறிப்பாக அவனது தொழிலில் பாதிப்பை ஏற்படுத்தும். சோதிட விதிப்படி பத்தாம் இடம் தொழில் வீடாக அமைவதால் குரு அங்கு வரும் போது தொழிலில் கஷ்டநஷ்டங்களை ஏற்படுத்துவான் என்ற சோதிடச் செய்தியே இரண்டாமடியாக மலர்ந்துள்ளது.

'வியாழன் கூடினால் விவாகம் கூடும்' என்ற பழமொழி குருபலம் இருந்தால்தான் திருமணம் நடக்கும் என்பதைக் காட்டுகிறது. இன்றும் வழக்கில் பலர் குரு 2,5,7,9,11 ஆகிய இடங்களில் உள்ளபோதே திருமணம் செய்ய முன்வருகின்றனர். இவ்விடங்களில் குரு இல்லாதபோது திருமண நிகழ்வுக்கு வாய்ப்பு ஏற்படினும் 'குருபலம்' இல்லையென்பதற்காக வாய்ப்புகளைத் தட்டிக் கழிக்கின்றனர். ஆயின் தசாபுத்தி திருமண வாய்ப்பை ஏற்படுத்தும் நிலையில் அமையின் குருபலம் இல்லாது இருப்பினும் திருமணம் நிகழ வாய்ப்பு உண்டு. தசாபுத்தி, குருபலம் இரண்டும் அமைய நிகழும் திருமணத்தினால் இல்லறம் மிகச் சிறக்கும் என்ற பொருளை உட்கொண்டு, குருபலம் ஒன்றை மட்டும் கருத்தில் கொண்டு திருமணத்தைத் தட்டிக் கழிக்கும் நிலை தவிர்க்கப்படுதல் வேண்டும்.

சனி

சனி ஓர் இராசியைக் கடப்பதற்கு இரண்டரை ஆண்டுகளும், 12 இராசிகளையும் கடப்பதற்கு முப்பது ஆண்டுகளும் ஆகின்றன. சனி வட்டம் முப்பது ஆண்டுகள்

என்பதால், 'முப்பது வருசம் வாழ்ந்தவனும் இல்லை, முப்பது வருசம் கெட்டவனும் இல்லை' என்ற பழமொழி எழுந்துள்ளது.

பிறந்த இராசியில், இராசிக்கு 12இல், இராசிக்கு இரண்டில் என்ற மூன்று இடங்களில் சனி கோச்சாரப்படி நிற்பது 7½ ஆண்டுச் சனி எனப்படுகிறது. இந்த ஏழரைச் சனி பிறப்புக்குப் பிறகு முதல் சுற்று வரும்பொழுது 'மங்குசனி' எனவும், இரண்டாம் சுற்று வரும்போது 'பொங்குசனி' எனவும், மூன்றாம் சுற்று வரும்போது 'மரணச்சனி' எனவும் கூறப்படுகின்றது. நான்காவது சுற்று சனி வரும்போது உயிருடன் இருப்பது அரிதாகவே உள்ளது. பொதுவாக மங்குசனி துன்பம் தரும், பொங்குசனி நன்மை தரும், மரணச்சனி இறப்புக்குச் சமமான கண்டத்தை ஏற்படுத்தும்.

''பொங்குசனி போய் மங்குசனி வந்தது
மங்குசனிபோய் குங்குசனி வந்தது''

என்பது இது தொடர்பான பழமொழி.

''ஆறே முக்காலும் அரையுங் காலும்
பிடித்து அவனை ஆட்டுகிறது''
''ஏழரை நாட்டுச் சனியனை
இரவல் வாங்கின கதை''

என்பன போன்ற பல பழமொழிகள் ஏழரை நாட்டுச் சனியின் மூலம் மக்கள் அடையும் பெருந்துன்பத்தை விளக்குவதாய் அமைகின்றன.

பிறந்த இராசிக்கு எட்டில் சனி வருவது 'அட்டமத்துச் சனி' எனப்படும். இதுவும் மிகுந்த துன்பத்தைத் தரும் என மக்கள் நம்பியதைக் கீழ்க்காணும் பழமொழிகள் காட்டுகின்றன.

''அட்டமத்துச் சனி அழுதாலும் விடாது''
''அட்டமத்துச் சனி கிட்ட வந்தது போல''
''அட்டமத்துச் சனி நட்டம் வரச் செய்யும்''
''அட்டமத்துச் சனி பிடித்தது,
பிட்டத்துத் துணியையும் உரிந்துகொண்டது''
''அட்டமத்துச் சனி பிடித்தாலுங்
கெட்டிக்காரத்தனம் போகவில்லை''
''அட்டமத்துச் சனியை வட்டிக்கு வாங்கினாற் போல''
''இட்டம் அற்ற முனியன் அட்டமத்துச் சனியன்'

''இராசாவின் (குரு) பலமிருந்தால்
அட்டமத்துச் சனி என்ன செய்யும்''

சனியானது ஒரு மனிதனைத் துன்பத்தின் எல்லைக்கே கொண்டுசெல்லும் ஆற்றல் உடையது என்ற நம்பிக்கை மக்களிடையே காணப்படுகிறது. 'சளி பிடித்ததோ சனி பிடித்ததோ' எனும் பழமொழி சளியின் தொல்லையைச் சனியின் கோளாற்றுக்கு ஒப்பிடுவதாக அமைகிறது. சளிநோய் நுரையீரல் கோளாறினால் வருவது. இந்நோய்க்கு இதுவரை எந்த மருத்துவ முறையிலும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நோய் வந்தால் மூன்றுநாள் கட்டாயம் இருக்கும் என்று அகத்தியர் முதல் ஆங்கில மருத்துவர் வரை கூறுகின்றனர். இருக்கும் மூன்று நாட்களிலும் இந்நோய் உண்டாக்கும் தொல்லை பொறுத்துக்கொள்ள இயலாதது. ஓயாத தும்மல், மூக்கில் நீர் ஒழுகல், இருமல், மண்டைவலி, காய்ச்சல் போன்ற தொல்லைகள் சளித் தொல்லையால் சங்கிலித் தொடர்போல் வருவன. எனவேதான் இதன் தொல்லையைச் சனிக்கோளால் ஏற்படும் துன்பத்திற்கு ஒப்பிடுவர். ஒன்பது கோள்களில் சனிக்கோள் பிடித்து விட்டால் ஓயாத தொல்லைகள் அடுக்கடுக்காக வந்து அல்லல்படுத்தும். ஏழரை ஆண்டுகள் இதன் தொல்லை நீடிக்கும். எனவே தான் 'ஏழரை நாட்டுச் சனியன் பிடித்து விட்டதா' என்று கேட்பர். அதுபோல மூன்று நாட்கள் இருந்தாலும், சளித்தொல்லை வந்துவிட்டால் ஏழரை நாட்டுச் சனியன் பிடித்ததுபோல் இருக்கும் என்பதனை மேற்கண்ட பழமொழியாக வடித்து விட்டனர் நாட்டுப்புறமக்கள்[18].

வறுமை, மன அமைதியின்மை, வாழ்வின் நிலையின்மை முதலிய அனைத்துத் துயரினையும் வழங்கும் ஆற்றல் சனிக்கு உண்டு என்பதைக் கீழ்க்காணும் பழமொழிகள் வாயிலாக அறியமுடிகிறது.

''இற்றோம் இளைத்தோ மென்றிரக்கப் போனாலும்
என் சனி என்னை விடவில்லை''
''சனி ஒழிந்தது; சங்கடந் தீர்ந்தது;
''சூரியனைக் கிரகணம் பிடித்ததுபோல் என்னைச் சனி பிடித்தது''

18. தமிழ் இலக்கியத்தில் சித்த மருத்துவம், ப. 519.

''சனியன் பிடித்தவளுக்குச் சந்தைக்குப் போனாலும்
புருசன் அகப்படமாட்டான்''
''சனியன் பிடித்தவனுக்கு
சந்தையிலும் கந்தை அகப்படாது''
''பிச்சைக்காரன் சோற்றிலே சனி புகுந்தது போல''
''பிச்சை குடிலிலே சனிசுவரன் புகுந்தது போல''

'சாகிறவன் சனியனுக்குப் பயப்படுவானா' என்பது சனி இறப்பைத் தருமளவு கொடியது என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றது. இத்தகைய துன்பங்களுக்குட்பட்ட மனிதன் அதனை விட்டு நீங்கும் விருப்புடன், அதன்மீது வெறுப்புக் கொண்டு,

''சங்கட சனியனே சடுதியில் விட்டுத்தொலை''

என்று கூறுவதைக் காணமுடிகிறது. துன்பத்தைத் தானாகத் தேடிக்கொள்பவனைச் சாடும்போது சனி தொடர்பான பல பழமொழிகள் பயன்படுத்தப்பெறுகின்றன.

''சாலை வழியே போகிற சனியனைச்
சாயங்காலம் வீட்டுக்குவா என்றானாம்''
''சனியனை அடிமடியில் கட்டியது போல''
''போன சனியனை தாம்பூலம்
வைத்து அழைத்தது போல''

சனி தீமையை மிகுதியாகத் தரவல்லது என்று மக்கள் நம்பியபோதும், அந்தச் சனி நன்மையும் தரவல்லது என்பதையும் அறிந்து வைத்திருக்கின்றனர். சனி நன்மை, தீமை இரண்டுக்கும் உரியது. இரண்டையும் சமமாகச் செய்யவல்லது என்பதை,

''சனீஸ்வரனைப் போல் கொடுப்பாரும் இல்லை
கெடுப்பாரும் இல்லை''

சனி பிடித்தால் எந்தப் பரிகாரம் செய்தாலும் அதனுடைய தொல்லையிலிருந்து முழுமையாக விடுபட முடியாது என்பதை,

''காசிக்குப் போனாலும் சனி விடாது''
''மாட்டைப் பிடித்த சனியன்
கொட்டகையைச் சுட்டால் போமா'
''ராமேசுவரத்துக்கு காசிக்கு போயும்
சனீசுவரன் தொலையவில்லை'

என்ற பழமொழிகள் காட்டுகின்றன. இப்பழமொழிகள் கோச்சாரச் சனியின் பாதிப்பாக மக்கள் கருதுவனவற்றைப் புலப்படுத்துகின்றன.

இங்ஙனம் சனி தொடர்பாக வழக்கில் 100க்கும் மேற்பட்ட பழமொழிகள் வழங்குகின்றன சனி மிகுதியான துன்பத்தைத் தரும் என்ற எண்ணப் பாக்கிலே இவற்றுள் பல பழமொழிகள் அமைகின்றன. ஆயின் சாதக அமைப்புகள் நல்ல நிலையில் இருந்து நடக்கும் தசாவும் புத்தியும் நன்மை தரக்கூடியதாக இருக்குமானால் மேற்கூறிய கோச்சாரச் சனி துன்பத்தைத் தராது, அல்லது துன்பத்தைக் குறைக்கும்; உழைப்புக்கு ஏற்ற பலனைத் தரும்.

சுக்கிரன்

'குட்டிச் சுக்கிரன் குடும்பத்தைக் கெடுக்கும்' என்ற பழமொழி குழந்தைப் பருவத்தில் வரும் சுக்கிர தசா தீமையை ஏற்படுத்தும் என்பதைக் காட்டுகிறது. ஒரு குடும்பத்தில் கடைசியாகப் பிறக்கக்கூடிய குழந்தை (ஆண், பெண்)க்கு மட்டுமே இது பொருந்தும். பரணி, பூரம், பூராடம் ஆகிய நட்சத்திரங்களில் ஏதாவது ஒன்றில் பிறந்தால் அக்குழந்தைக்குச் சுக்கிர தசாகுழந்தைப் பருவத்திலேயே நடைபெறும். வெள்ளி தெற்கே வரின் மழை வருமென்பது இலக்கியங்களில் பரவலாகக் காணப்படும் செய்தி. இதனை,

"தெற்கே போன வெள்ளி வடக்கே வந்தால் மழை"

என்ற பழமொழி காட்டுகிறது. வெள்ளிக்கு எதிரில் போதல் கூடாது என்பதை,

"வெள்ளி எதிரில் போனாலும் போகலாம்
வெள்ளாளன் எதிரில் போகக் கூடாது"

என்ற பழமொழி காட்டுகிறது. மேற்கூறியவை சுக்கிரன் பற்றிய வழக்கிலமைந்த பழமொழிகள். மக்கள் சுக்கிர தசாவில் செல்வம், சுகம், இன்பம், வசதிவாய்ப்பு ஆகியவை அமையுமென நம்புகின்றனர். ஆனால் சாதகத்தில் சுக்கிரன் அமைந்துள்ள நிலையைப் பொறுத்துத்தான் சுக்கிரதாசப் பலன்களும் அமையும்.

"இராகுவைப்போல கொடுப்பவனும் இல்லை;
கேதுவைப் போல கெடுப்பவனும் இல்லை"

இராகு நன்மையையும், கேது தீமையையும் தருவன என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவி வருகிறது. நல்ல கோளுடன் சேரும்போது நன்மையை விளைவிக்கின்ற இராகு, தீய கோளுடன் சேரும்போது தீமையைத் தரும் என்பதை மக்கள் உணர்ந்திருந்ததை 'இராகு கொடுத்தாலும் கொடுப்பான், கெடுத்தாலும் கெடுப்பான்' என்ற பழமொழி காட்டுகிறது.

நட்சத்திரம்

கோள்கள் பற்றிய சிந்தனை மட்டுமன்றி நட்சத்திரங்களைப் பற்றிய நம்பிக்கைகள் மக்களின் வாழ்க்கையில் பெரிதும் இடம்பெற்றுள்ளன. இங்ஙனம் மக்கள் வாழ்வோடு பின்னிப் பிணைந்துள்ள இச்சோதிடத்தில் நம்பிக்கையுள்ள, ஒருவரே கூடப் பெண்ணுக்கோ, ஆணுக்கோ சாதகம் இல்லையெனில் பெயர்ப் பொருத்தத்தை வைத்து மணம் செய்விக்க முன்வருகிறார். ஆனால் சமுதாயத்தில் ஊறிக்கிடக்கும் சில சோதிட மரபுகள் தென்படின், மணம் செய்விக்க முன்வருவதில்லை.

பெண்ணின் நட்சத்திரத்தை அடிப்படையாகக் கொண்ட பல நம்பிக்கைகள் மக்களிடையே நிலவி வருவதால் இவ்வடிப்படையில் மக்கள் செயல்படுவதைப் பல இடங்களில் காணமுடிகிறது. மூலம் மாமனாருக்கு, ஆயில்யம் மாமியாருக்கு, கேட்டை, விசாகம் மூத்த மைத்துனருக்கு ஆகாது. விசாகம், சித்திரை, திருவாதிரை, ஆயில்யம், கேட்டை, சதயம், மூலம், கிருத்திகை, பூசம், பூராடம் ஆகியன கணவனுக்கு ஆயுள் பாதிப்பையோ, அல்லது வருவாய்ப் பாதிப்பையோ ஏற்படுத்தும். சுவாதி, மூலம், ஆயில்யம், கேட்டை, விசாகம் ஆகியவை ஆணுக்கு நல்லன; பெண்ணுக்குக் கெட்ட நட்சத்திரங்கள். இது ஆணுக்கும் கெட்ட நட்சத்திரமே என்ற கருத்தும் உண்டு.

"ஆண்மூலம் அரசாளும், பெண்மூலம் நிர்மூலம்"
"காலம் போன காலத்தில் மூலம் வந்து குறுக்கிட்டது போல"
"மூலத்துப் பெண் மாமியார் மூலையிலே"
"அகதி பெறுவது பெண்பிள்ளை அதுவும் வெள்ளி பூராடம்"

"அவளும் அநாதை பிறந்ததும் பூராடத்தில்"
"பூராடத்து அப்பன் ஊராடான்"
"பூராடத்திலே பிறந்தவனுக்கு நூல் ஆகாது"
"பூராடம் நூலாடாது"
"பூராடம் போராடும்"
"கெட்ட குடிக்கு கேட்டை பிறந்தது"
"கேட்டை கோட்டை கட்டி வாழும்"
"கேட்டை நட்சத்திரம் ஏட்டனுக்கு (மூத்தவன்) ஆகாது"
"கேட்டை மனக்கோட்டை கட்டி வாழும்"
"கேட்டை நாலும் ஈட்டி போல"
"கேட்டை மூட்டை செவ்வாய்க்கிழமை"
"ஆயில்யத்தில் மாமியார் ஆசந்தியிலே"
"அவிட்டத்தில் பிறந்த தங்கச்சியை அந்நியத்தில் கொடுத்தல் கூடாது"

என்பன நட்சத்திரங்கள் பற்றி மக்களிடையே அமையும் நம்பிக்கை சார்ந்த பழமொழிகளாகும்.

மூலநட்சத்திரத்தில் பிறந்த பெண்களைத் திருமணம் செய்தால் கணவனின் தந்தையைக் கொல்லும். ஆண்மூல நட்சத்திரத்தில் பிறந்தால் அரசாளுவான் என்று கூறுவதைச் சோதிடர் டி. மாரிமுத்து கீழ்வரும் ஆதாரத்துடன் மறுக்கிறார் (*தினகரன், 14.1.94*).

"1000 பெண்மூல நட்சத்திர சாதகங்களை ஆராய்ந்து பார்த்ததில் 70 விழுக்காடு மாமனாரைக் கொன்றதாகவோ, கெடுத்துள்ளதாகவோ தெரியவில்லை. 1000 ஆண்மூல சாதகங்களைத் திரட்டி ஆராய்ந்து பார்த்ததில் 70 விழுக்காடு செல்வச் செழிப்புடன் வாழ வைத்துள்ளது என்பதாகத் தெரியவரவில்லை.

"இலக்னத்துக்கு மூன்றாமிடம் மாமனார் நிலையைக் கணிக்க உதவும். இந்த இடம் ஆட்சி, உச்சம், நட்பு, பெற்று இலக்னத்துக்கு மறையாமல் அமர, மூன்றாமிடத்தை நற்கோள்களான குரு, வளர்ச்சந்திரன், சுக்கிரன், புதன் பார்க்க மாமனாரை யோகமடையச் செய்துவிடும். ஆண்,பெண் எந்தச் சாதகமாயினும் இலக்னத்துக்கு மூன்றாமிடத்தைச் சனி, செவ்வாய், இராகு, சூரியன், போன்ற தீயகோள்கள் இலக்னத் தீயதுகளாகிப் பார்க்க, மூன்றாமதிபதி நீச்ச அஸ்தமனமாகி 27 நட்சத்திரத்தில் எதில் பிறந்தாலும் மாமனார் இறப்பார் அல்லது வீழ்வார்.

''அதுபோல கடக, ஆயில்ய நட்சத்திரத்தில் பிறந்தால் கணவனின் தாயான மாமியாருக்கு ஆகாது என்பர். ஆனால் பெண் ஆண் சாதகங்களில் இலக்னத்துக்குப் பத்தாமிடத்தை இலக்ன சுபர்களாகி, குரு, சந்திரன், புதன், சுக்கிரன் நோக்க, சந்திரன் ஆயில்ய நட்சத்திரத்தில் நிற்கும்போது பிறந்தால் மாமியார் நல்ல வளமுடன் வாழ்வார். அஸ்தமன, கிரகண, நீச்சமின்றிப் பத்தாமிடாதிபதி ஆட்சி, உச்ச, நட்புடன், இலக்ன கோண கேந்திரமுறப் பெண்ணின் மாமியார் வளமுடன் நலம் பெறுவார். வேறுபல சாதகக் காரணங்கள் இன்றி, சந்திரன் நின்ற நட்சத்திரம் மட்டும் ஏனைய எட்டுக் கோள்களின் ஒப்புதல் இன்றி எதையும் முடிக்க முடியாது. எனவே ஊருக்கு ஓரிரு மூலநட்சத்திரப் பெண் சாதகங்களுக்கு வேண்டுமானால் மாமனார் இறந்திருக்கலாம். ஆயின் இத்தகைய காரணங்களினால் மூலத்தில் பிறந்த சுமார் 15 கோடிப் பெண்கள் சபிக்கப்படுகின்றனர். வெகு தாமதத் திருமணத்தால் பிறந்த வீட்டிலும் கஷ்டப்படுகின்றனர். இப்படி 15 கோடி பெண்களில் சுமார் அரைக்கோடிப் பெண்களாவது இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட வேண்டியுள்ளது. பெண் இனத்தையே இந்தச் சோதிடம் பாதிக்கின்றது. அரசும், பல்கலைக் கழகமும் 10,000 மூலநட்சத்திரப் பெண் சாதகங்களை ஆராய்ந்து உண்மையை வெளியிட்டால் இனிப் பிறக்கும் பெண்களையாவது பாதிக்காமல் இருக்கும்.

''மேலும், இந்நட்சத்திரத்தில் பிறந்தால் மட்டும் தோடம் வந்தவிடாது. குறிப்பிட்ட நட்சத்திர பாதங்களில் அந்நட்சத்திரம் அமைந்தால் மட்டுமே தோடம் ஏற்பட வாய்ப்பு உண்டு. மூலம், ஆயில்யம், கேட்டை ஆகியவற்றில் முதல் பாதத்தில் பிறந்தாலும், விசாகம் எனில் 4ஆம் பாதத்தில் பிறந்தாலும் மட்டுமே தோடம். இதுபோன்ற கருத்துகளின்படி, நட்சத்திரங்களினால் குறைபாடுகள் ஏற்படினும் பிற கோள் அமைப்புகள் சாதகத்துக்கு வலிமை ஏற்படுத்துமெனில், இப்பாதிப்புகள் நிகழாமல் போகவும், பாதிப்புகள் வெகுவாகக் குறையவும் வாய்ப்புகள் உண்டு என்பது தெரிகிறது.''

சாதகத்துக்கு வலிமை இருக்கும்போது, நட்சத்திரப் பொருத்தம் அமையவில்லையெனினும் திருமணம்

செய்யலாம். ஆனால் சாதக வலிமையில்லையெனில், நட்சத்திரப் பொருத்தம் வலுவாக அமைந்தும் பலனில்லை. ஏனெனில் தீய பாதிப்புகள் நிகழ வாய்ப்பு ஏற்படும். நட்சத்திரப் பொருத்தம் நன்கு அமைதல் மிகவும் சிறப்பு என்ற நோக்கில் மட்டுமே இதனைக் கையாளவேண்டும். ஆனால் நம்மில் பலர் சாதக வலிமையை விடுத்து, நட்சத்திரப் பொருத்தத்தை மட்டுமே வைத்து மணமுடிப்பதால்தான் திருமணங்களில் குறைபாடுகள் நிகழ்கின்றன.

மகம்

மகத்தில் பெண்ணும், பூராடத்தில் ஆணும் பிறத்தல் சிறப்பு என்பதை, 'மகத்தில் மங்கை; பூராடத்தில் புருசன்' என்ற பழமொழி காட்டுகின்றது. 'மகத்துப்பெண் அகத்துக்கு அதிசயம்', 'மகத்துப்பெண் சகத்தில் கிட்டாது' என்பனவும் இக்கருத்திற்கு ஒப்ப அமைகின்றன. ஆனால் 'மகம் மன்னன் ஆவான்' என்பது ஆணிற்கு மகம் சிறப்பு என்பதையும், 'மகத்தில் பிள்ளை செகத்தில் இல்லை' என்பது இருவருக்கும் மகம் சிறப்பு என்பதையும் காட்டுகின்றன. 'மறந்த சடங்கை மகத்தில் விடு' 'மறந்த திதியை மகத்தில் கொடு' என்ற பழமொழிகள் இறந்தோர்க்குச் செய்யப்படும் திதி சடங்கு ஆகியவற்றிற்கு 'மகம்' உகந்தது என்பதைக் காட்டுகின்றது.

> **''உத்திராடத்தில் ஒரு பிள்ளையும்,**
> **ஊர் வாரியில் ஒரு நிலமும்''** (கொல்லையும்)
> **''உத்திராடத்தில் ஒரு பிள்ளையும்**
> **ஊர் ஓரத்தில் ஒரு காணியும்''**

என்ற பழமொழிகள் ஊர் ஓரத்தில் உள்ள நிலத்திற்கு எப்படி எல்லா நீரும் தானாகவே வந்து சேருகின்றதோ அதேபோல் உத்திராடத்தல் பிறந்த பிள்ளை எப்படியும் பிழைத்துக் கொள்வான் என்பதைக் காட்டுகிறது. 'உத்திரத்தில் ஒரு பிள்ளையும் ஊர்க்கோடியில் கொஞ்சம் நிலமும் இருந்தால் போதும்' என்ற பழமொழியைப் பார்க்கும்போது உத்தரம், உத்திராடம் என்ற பொருள் வேறுபாடு அறியாத நிலையில் தவறு ஏற்பட்டிருக்கும்போல் தெரிகின்றது. இதனை வலியுறுத்தும்வண்ணம் 'உத்திரத்தில் ஒரு பிள்ளை உறவுக்கெல்லாம் தொல்லை' என்ற பழமொழி அமைகிறது.

எனவே உத்திராடம் என்பதுதான் உத்திரம் எனத் தவறாக வழங்கப்பட்டிருக்கிறது. அஸ்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தொட்டது துலங்காது என்றும், இவர்கள் குலம் பாதிப்புறும் என்றும் நம்பிக்கை நிலவி வருதலை,

''ஹஸ்தம் கைவைத்த இடம் பஸ்பம்''
''ஹஸ்தத்தின் அப்பன் தெருவிலே''

என்ற இப்பழமொழிகள் காட்டுகின்றன.

''திருவாதிரைக்கு ஒருவாய் களி, திருப்பிக்கேட்டால் செருப்பால் அடி''
''திருவாதிரை ஒருவாய்க்களி; திருவாய் திறந்து ஒரு வாக்களிக்கும்''
''திருவாதிரைக்களி தினமும் அகப்படுமா''

என்ற பழமொழிகள் திருவாதிரை விழாவன்று திருவாதிரைக்களி இறைவனுக்குப் படைக்கப்பட்டுப் பிறர்க்கும் வழங்கப்படுதலைக் காட்டுகின்றது. திருவாதிரையன்று மழை பெய்தல் நாட்டிற்கு நலம் பயக்கும் என்பதை, 'திருவாதிரை மழை இல்லாவிடில் திருப்பி மழை காண்பது அரிது' என்ற பழமொழி காட்டுகிறது. இங்ஙனம் திருவாதிரை சிறப்பானதாகக் கருதப்பட 'தில்லு முல்லு திருவாதிரை' என்ற பழமொழி எந்நிலையில் எழுந்தது என்பது சிந்தித்தற்குரியது. இதேபோல் 'திருவாதிரையில் போன பொருள் திரும்பி வருகிறது' (கண்டிப்பு), பிறந்த நாளும் திருவாதிரையும் (அடிபடுதல்), ''மிளகு பொடியோடே திருவாதிரை; வேண்டா வெறுப்பும் திருவாதிரையும்'' என்பனவும் எழுந்த சூழல் பற்றிய விளக்கத்திற்குரியன.

'இருந்தால் ஓணம்; இல்லாவிட்டால் ஏகாதசி' என்பது உணவு வஞ்சனையின்றிக் கிடைக்கும் காலம் பண்டிகை நாளான ஓணத்திற்கும், பட்டினியால் வாடும் காலம் ஏகாதசி விரதத்திற்கும் ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளன.

''அவிட்டம் தவிட்டுப் பானையெல்லாம் தனம்''
''அவிட்டத்தில் பிறந்தவள் தவிட்டுப் பானையைத்
தொட்டாலும் தங்கம் இருக்கும்''
''பரணி அடுப்புப் பாழ் போகாது''
''திருவோணத்தான் உலகாள்வான்''

என்ற பழமொழிகள் அவிட்டம், பரணி, திருவோணம் ஆகியன நல்ல நட்சத்திரங்களாகக் கருதப்படுவதைக் காட்டுகின்றன.

'சதயத்திற்குச் சொந்தப் புத்தியும் கிடையாது; சொல் பேச்சு கேட்பதும் கிடையாது' என்ற பழமொழி இந்நட்சத்திரத்தின் பண்பை விளக்குவதாக அமைகிறது. 'சோதி (சுவாதி) பிறவாதா? சம்பா விளையாதா?' என்பதில் நெல் விளைச்சலுக்குரிய நட்சத்திரம் சுவாதி என்பது தெரிகிறது. இந்நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு ஒரு குழந்தை பிறத்தலே அரிது என்பதால் 'குடும்பக்கட்டுப்பாடு நட்சத்திரம்' என்றழைக்கப்படுகிறது.

வழக்கிலுள்ள இப்பழமொழிகள் எழுந்த சூழல் காரணமாய்ச் சில முரண்பட்ட கருத்துகளுக்கும், மேலோட்டமான சிந்தனைகளுக்கும் இடம் தருகின்றன.

இராசி

இராசிக் கூட்டத்தில் நன்றாக அமைந்த கோள், நவாம்சக் கட்டத்தில் கெட்டு இருப்பின் நற்பலன் விளையாமல் தீய பலனை ஏற்படுத்தும் என்பதை, "ராசி இருக்கு அரசாள; அம்சம் இருக்கு கழுதை மேய்க்க' என்ற பழமொழி காட்டுகின்றது. நன்மை, தீமை என்ற இரண்டையும் கலந்து தருவனவாய்ச் சோதிடப் பலன்கள் அமைகின்றன என்பதனை, 'இடபராசி கொடுக்கிறது, மேடராசி கெடுக்கிறது' என்ற பழமொழியும், தொட்டதற்கெல்லாம் சோதிடம் பார்த்தல் கூடாது என்பதை, 'எதற்கும் மீனமேசம் பார்க்காதே' என்ற பழமொழியும் காட்டுகின்றன.

திதி

நட்சத்திரம், கோள் இராசி இவற்றைக் காட்டிலும் திதியின் பயன்பாடு மிகுதி என்பதைத் 'திதி' தொடர்பாக எழுந்துள்ள பழமொழிகள் உணர்த்துகின்றன. ஒவ்வொரு திதியையும் அனுசரித்து மக்கள் தங்களது செயல்களைச் செய்துள்ளனர். 'திதி' தொடர்பான பழமொழிகளுள் சில இங்குக் காட்டாய் அமைகின்றன.

அட்டமியும், நவமியும் கல்விகற்றல் போன்ற நற்செயல்களுக்கு உகந்த நாட்களாகக் கொள்ளப்படவில்லை என்பதை, 'அஷ்டமி நவமிக்கு ஆசான் ஆகாது', 'அஷ்டமி, நவமியிலே தொட்டது துலங்காது' என்ற பழமொழிகள் காட்டுகின்றன.

எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கு மக்கள் கிழமை மட்டுமன்றி திதியையும் பார்த்துள்ளனர் என்பதை, 'தசமி எண்ணெய் தந்தால் தேய்த்துக் கொள்ளலாம், ஏகாதசி எண்ணெய் இருந்தால் தேய்க்கலாம், துவாதசி எண்ணெய் தந்தாலும் கூடாது' என்ற இப்பழமொழி காட்டுகின்றது.

ஏகாதசி மரணம் முத்தியைத் தரும் என்று நம்பிய திறம், 'ஏகாதசி மரணம் முத்தி என்று நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகிறதா' என்ற இப்பழமொழியால் வெளிப்படுகின்றது. ஏகாதசியில் இறப்பின் அடுத்த திதியான துவாதசியே அடக்கம் செய்வதற்குச் சிறந்ததாகக் கருதப்பெற்றதை 'ஏகாதசி மரணம் துவாதசி தகனம்' என்ற இப்பழமொழி உணர்த்துகின்றது.

'அமாவாசைக்கும் அப்துல் காதருக்கும் என்ன தொடர்பு' என்ற பழமொழி இந்துக்களுக்கும், இசுலாமியர்களுக்கு மிடையே பழக்கவழக்கங்களில் வேறுபாடு மிகுதி என்பதையும், இநதுக்களைப் போல் இசுலாமியருக்கு இத் 'திதி' முக்கியமானதல்ல என்பதையும் காட்டுவதுபோல் அமைகிறது. ஆயின் முன்னோர்க்குத் திதி கொடுத்தல், வழிபாடு முதலான சடங்குகளில் விழாக்களில் அமாவாசைத் திதி சிறப்பானதாக இந்துக்களுக்கு இருத்தல் போலவே, இசுலாமியருக்கும் இத்திதி குறிப்பிடத்தக்க ஒன்றாகவே நடைமுறையில் இருக்கின்றது.

நாம் நாட்காட்டி வழியாக ஆங்கில மாத நாட்களையும், தமிழ் மாத நாட்களையும் தெரிந்துகொள்கிறோம். ஆனால் இசுலாமியருக்கு ஒவ்வொரு மாதத் தொடக்கமும் அமாவாசைத் திதியில்தான் தொடங்குகிறது. அனைத்துத் திங்களின் முதல்நாளும் 'அமாவாசையாகத்தான் இருக்கும். ஓர் அமாவாசை தொடங்கி மறு அமாவாசை வரும்வரை நாட்களை ஒன்று, இரண்டு என எண்ணிவரும் அவர்கள், மறு அமாவாசை வந்தவுடன் அடுத்த மாதம் தொடங்கி விட்டதாகக் கணக்கிடுகின்றனர்.

மேலும் அமாவாசை முதல் நாளாக அமைய அமாவாசை அன்றும், அடுத்த நாளும் பிறை தெரியாமல் மூன்றாம் நாள் பிறை தெரிவதால் அப்பிறை 'மூன்றாம் பிறை' எனப்படுகிறது. இப்பிறை தெரிந்த அன்றுதான் அவர்கள் ஆண்டுதோறும் ரம்ஜான் பண்டிகையினைக் கொண்டாடு

கின்றனர். எனவே இசுலாமியர் வாழ்விலும் பயன்பாட்டுச் சிறப்பும், இன்றியமையாமையும் உடையதாகவே 'அமாவாசைத் திதி' விளங்குகின்றது.

மூன்றாம் பிறையன்று சந்திரனைப் பார்த்தால் நலம் அளிக்கும் என மக்கள் நம்புவதால் இன்றும் பிறை பார்த்தல் என்பது வழக்கிலுள்ளது. மூன்றாம் பிறை நிலா பங்குனியிலும் சித்திரையிலும் தென்கோடு உயர்ந்தும், வைகாசி முதல் மார்கழி வரையுள்ள எட்டு மாதங்களும் வடகோடு உயர்ந்தும், தையும் மாசியும் சமனாகவும் இருக்க வேண்டும். இப்படி இருப்பின் மூன்றாம் பிறை உலகிற்கு நன்மை அளிக்கும். இவ்வாறு இல்லை எனில் பஞ்சமும் கலகமும் ஏற்படும். மக்கள், ஆள்வோர் மடிவர். இதனை,

"மீன்ஆடு தெற்குயர மிக்கெட்டு மேவடக்காம்
தான்மகர கும்பஞ் சரியாக மானே கேள்
சொன்னபடி சோம விரானெனிலோ கோன்மடிவன்
அன்ன மரிதாய் விடும்"

என்ற அபிதான சிந்தாமணியிலுள்ள வெண்பா (ப.1341) காட்டுகிறது. ஆனால் நான்காம் பிறை நன்மையற்றது என்று கருதுவதை, நாலாம் பிறை பார்த்தால் நாய் அலைச்சலாய்த் தான் முடியும்' என்ற இப்பழமொழி காட்டுகிறது.

கோள், நாள், இராசி, திதி மட்டுமன்றிக் கிழமை, மாதம் தொடர்பான பழமொழிகளும் வழக்கில் மிகுந்துள்ளன. 'வெள்ளி, ஞாயிறு மேற்கே சூலம்', 'வியாழன் தெற்கே சூலம்', சனிப் பிணம் துணை தேடும்', 'திங்கள் துக்கம் திரும்பி வரும்', 'ஞாயிறு நாய் பட்ட பாடு', 'செவ்வாய் முடி வெட்டினால் தரித்திரம், செவ்வாய் நகம் வெட்டினால் தரித்திரம்' என்பவை கிழமை தொடர்பான பழமொழிகளுக்கும் 'ஆனியில் அடிகோலாதே கூனியில் குடிபோகாதே', 'ஆடிப்பிள்ளை தேடிப் புதை' (ஆடி மாதம் பிள்ளை வேண்டாம்) என்பவை மாதம் தொடர்பான பழமொழிகளுக்கும் காட்டுகளாய் அமைகின்றன.

சித்திரை மாதத்தில் பிறந்த குழந்தைகள் தாம் துன்புறுவதோடு, தந்தைக்கும் துன்பத்தை ஏற்படுத்துவர் என்பதனை,

"சித்திரை தந்தை பிச்சைக்காரன்"
"சித்திரை அப்பன் தெருவிலே"
"சித்திரை சீரழிவு"
"சித்திரை மாதத்தில் செல்வன் பிறந்தால்
சீரும் சிறப்பும் கெடும் ஆன குடிக்கு அனர்த்தம்"

என்ற பழமொழிகள் காட்டுகின்றன. சித்திரை மாத வெப்ப மிகுதியால் பிறக்கின்ற குழந்தைக்கும், தாய்க்கும் உடலில் பல இன்னல்கள் ஏற்படும் என்ற அறிவியல் கருத்தும் சித்திரை மாதம் குழந்தை பிறத்தல் கூடாது என்பதில் வெளிப்படு வதைக் காணமுடிகின்றது.

இதனை அடியொற்றியே ஆடியில் கூடி சித்திரையில் குழந்தை பிறத்தலைத் தவிர்க்க ஆடி மாதத்தில் கணவன் மனைவியர் கூடாமல் இருந்திருத்தல் கூடும். பிற்காலத்தில் பின்பற்ற இயலாத சூழல் உருவாகின்றபோது அவை பற்றிய உண்மை அறிவு மறைந்துபோய் திருமணமான முதல் ஆடி மாதம் மட்டும் மணமக்களைப் பிரித்து வைத்தலைக் காணமுடிகின்றது. 'ஆடிக்கழைக்காத மாமியரைத் தேடிப்பிடித்தடி' என்பது இது தொடர்பான பழமொழியாகும். இன்றும் சித்திரை மாதத்தில் பிறந்த குழந்தைகளுக்கு முதல் மூன்று ஆண்டுகள், சித்ரா பௌர்ணமியன்று பொங்கல் படைத்துப் பரிகாரம் செய்யப்படுதல் 'சித்திரபுத்திரப் பொங்கல்' என்று சொல்லப்படுகிறது. சித்ரா பௌர்ணமியில் பெண் பிறத்தல் கூடாது என்ற கருத்தும் நிலவுகிறது.

ஆடிமாதம் மணமக்களைப் பிரித்தல், சித்திரை மாதம் பிறந்த தோடம் நீங்கப் பரிகாரம் செய்தல் என்பனவற்றை நோக்கும்போது சித்திரை மாதம் பிள்ளை பிறத்தலை மக்கள் விரும்பவில்லை என்பதைத் தெளிவாக்குகிறது. இருப்பினும் மேலுள்ள நான்கு பழமொழிகளுள் முதல் மூன்று பழமொழிகள் சித்திரை மாதத்தைக் குறிக்கின்றனவா, சித்திரை நட்சத்திரத்தைக் குறிக்கின்றனவா என்பதில் தெளிவில்லை.

ஆடியில் கூடுதல் கூடாது என்பதைப் போன்றே நல்ல நேரத்தில் கூடுகின்ற குழந்தை நல்லாற்றலுடன் விளங்கும் என்ற அடிப்படையில் கணவனும் மனைவியும் நல்ல நேரத்தில் கூட வேண்டும் என்றிருந்த முறை மாறி சாந்தி முகூர்த்தத்தன்று மட்டும் நல்ல நாள் பார்த்தல் என்று மாறியிருக்கலாம்.

சோதிட விதிகளைப் பின்பற்றி வாழ்க்கையை நன்முறையில் அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற உணர்வுடன் பண்டைத் தமிழர் செயல்பட்டிருக்கின்றனர். ஆயின் அவற்றை வாழ்வியலில் கடைப்பிடித்தல் என்பது எளிதாக இல்லாத நிலையில் எதற்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்நோக்கங்கள் மறைக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டு, அவை வெறும் சடங்குகளாக, மரபின் எச்சங்களாக உலவுகின்றன. முதல் குழந்தை தவிர பிற குழந்தைகள் சித்திரையில் பிறத்தலைத் தடுத்ததற்கான முயற்சிகளும், கருத்தரிப்பதற்கு முதலிரவு தவிர்த்த பிறநாட்கள் நல்லதாக அமைய வேண்டுமென்ற முயற்சிகளும் இன்று வழக்கில் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயின் பின்பற்ற வேண்டும் என்ற உணர்வு தொடக்க காலம் முதல் வெளிப்படுவதால் இவை தொடர்பான சரியான விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பெறின் மக்கள் நன்மக்களைப் பெற வேண்டும் என்பதில் பெரிதும் கவனமுடையவர்களாய் இருப்பர். நல்ல நேரம் என்று குறிப்பிடும் காலத்தில் வானிலிருந்து வரும் கதிர்களின் வீச்சு நன்மை பயப்பதாகவும், தீய நேரம் என்று குறிப்பிடும் நேரத்தில் கதிர்களின் வீச்சு தீமை பயப்பதாகவும் இருப்பதை இன்று அறிவியல் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

இருகோள்களுக்குள் தொடர்பு ஏற்படும்போது இரண்டும் நல்லவையாக இருப்பின் தீய பலனும், இரண்டும் தீயவையாக இருப்பின் நல்ல பலனும் ஏற்படும் என்ற சோதிட விதி மக்களிடையே பழமொழியாக நிலவுவதை, 'உச்சனை உச்சன் பார்த்தால் பிச்சைக்காரன்', 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்', 'நீசனை நீசன் பார்த்தால் ஈசன்' என்ற பழமொழிகள் காட்டுகின்றன.

'பஞ்சமத்தில் பாம்பு இருந்தால் மாமன் பஞ்சாய்ப் பறப்பான்' என்ற பழமொழி, பெருங்காற்றில் எப்படிப் பஞ்சு ஒட்டாமல் பறக்குமோ அப்படியே இந்தச் சாதகத்துக்குரியவருடன் அவரது மாமனுடைய உறவுநிலை ஒட்டுதலின்றிக் காணப்படும் என்பதைச் சுட்டுகிறது. 6இல் இராகு இருப்பவர்களுக்கு மாமன் உறவு நல்லபடியாக இருக்கும். இங்ஙனம் மக்கள் சோதிடப் பலன்களையும் பழமொழிகளாக உலவ விட்டிருப்பது அவர்களிடையே சோதிடம் எந்த அளவு வேரூன்றியுள்ளது என்பதையே காட்டுகின்றது.

சோதிடத்தில் ஒரு குறிப்பிட்ட தேதியில், சூரியக் கிரகணமோ அல்லது சந்திர கிரகணமோ ஏற்படும் என்று வெளியிடப்படுகிறது. அதுபோல் குறிப்பிட்ட காலத்தில் கிரகணம் ஏற்படுகிறது. இதனால்தான் 'சாஸ்திரம் பொய் என்றால் கிரகணத்தைப் பார்' என்று சொல்லப்படுகிறது. பஞ்சாங்கப்படி, கணக்குப் போட்டு ஒவ்வோர் ஆண்டும் உலகிற்குத் தெரியும் கிரகணம் இது என்றும், தெரியாத கிரகணம் இது என்றும் வெளியிடுகின்றனர். பஞ்சாங்கத்தில் ஏற்படும் சந்திரகிரகணம், சூரியக் கிரகணம் போன்றவை அறிவியல் முறைப்படி ஆராயும் வானவியலில் கூறுவதுபோல் ஒத்துள்ளது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது. 'பஞ்சாங்கம் கிழிந்தாலும் நட்சத்திரம் அழியாது' என்ற பழமொழி எந்த ஒரு காரணத்தினாலும் சோதிடத்தை இல்லாமல் செய்ய முடியாது என்பதைக் காட்டுகிறது.

